வேக்குபீல்டு பாதிரியார்

ஆசிரியர்

ஆலிவர் கோல்டுசுமித்து

தமிழாக்கம்

திருமதி சரோசினி பாக்கியமுத்து

தமிழ்நாட்டு அரசின்
சிறப்பிலக்கிய மொழிபெயர்ப்பு வெளியீடு-8

வேக்குபீல்டு பாதிரியார்

ஆசிரியர்
ஆலிவர் கோல்டுசுமித்து

தமிழாக்கம்
திருமதி சரோசினி பாக்கியமுத்து

தமிழ்நாட்டுப்
பாடநூல் நிறுவனம்
சென்னை

First Edition — 1984
Number of Copies — 2000

© Government of Tamilnadu

THE VICAR OF WAKEFIELD
Oliver Goldsmith

Tamil Translation
Tmt. SAROJINI PACKIYAMUTHU

Price : Rs. 14-50

Printed on 70 GSM imported paper

Printed at :
Print House (Makkal Kural), Madras - 600 024

பொது முன்னுரை

தமிழில் உள்ள பேரிலக்கியங்களை உலகமொழிகளிலேயும் உலகமொழிகளிலே உள்ள பேரிலக்கியங்களைத் தமிழிலேயும் பெயர்ப்பதன்வழி, தமிழக இலக்கியப் பாங்கு, பண்பாட்டினை உலகத்தவரும் உலகப் பாங்கினைத் தமிழக மக்களும் அறிந்து பயன்பெற வேண்டுமெனும் நன்னோக்குடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் சிறப்பிலக்கிய மொழிபெயர்ப்பு எனும் இத் தனிப் பெருந் திட்டத்தை உருவாக்கினார்கள். தமிழ்நாடு கல்வியமைச்சர் மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் அவர்கள் இத் திட்ட நிறைவேற்றத்தில் நேரிடும் செலவு எவ்வளவாயினும் தமிழ்நாடு அரசு அதனை உவந்து ஏற்றுக்கொள்ளுமெனப் பன்முறை அறிவித்துள்ளார்கள். இத் திட்டத்தை நிறைவேற்றுதற்கு 8-5-78-ல் மாண்புமிகு நீதிபதி டாக்டர் எஸ். மகராஜன் தலைமையில் கீழ்க்காணும் நான்கு உறுப்பினர்களைக்கொண்ட வல்லுநர் குழு ஒன்றைத் தமிழ்நாடு அரசு நியமித்தது :

1. தமிழ்வளர்ச்சி இயக்கக இயக்குநர் திரு. கொண்டல் சு. மகாதேவன் அவர்கள் செயலுறுப்பினர். (இவர் இரண்டாண்டுகள் செயலுறுப்பினராக இருந்தார். அவரையடுத்துத் தமிழ்வளர்ச்சி இயக்குநராக இருந்த டாக்டர் மா. நன்னன் அவர்கள் செயலுறுப்பினராக இருந்தார். இப்போது திரு. சு. செல்லப்பன் அவர்கள் செயலுறுப்பினர்.)

2. உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் அவர்கள் உறுப்பினர்.

3. சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்மொழித் துறைத் தலைவர் டாக்டர் சி. பாலசுப்பிரமணியன் அவர்கள் உறுப்பினர்.

4. சாகித்ய அகாதமியின் தென்மண்டலச் செயலர் டாக்டர் சி. ஆர். சர்மா அவர்கள் உறுப்பினர்.

மேற்கண்ட வல்லுநர்குழு உலகத்திலுள்ள பல பல்கலைக்கழகங்களோடு தொடர்புகொண்டு உலகமொழிகளிலே தமிழாக்கத்திற்குத் தகுதியான பேரிலக்கியங்கள் எவை என்பதை அறிந்து, தமிழ் இலக்கியங்களில் எவற்றை அயல்மொழிகளில் மொழிபெயர்க்கலாம் என்பதையும் தெரிவுசெய்தது; மொழிப் புலமையும் எழுத்தாற்றலும் பெற்றுள்ள அறிஞர்களைத் தேர்ந்தெடுத்துப் பேரிலக்கியங்களை மொழியாக்கம் செய்யும் பொறுப்பை அவர்களிடம் ஒப்படைத்தது. ஆங்கிலம், தமிழ் ஆகிய இருமொழிகளிலும் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு மொழிபெயர்க்கும் வல்லமை பெற்றவர் பலர் இருந்தபோதிலும் பிரெஞ்சு, ஜெர்மன, டச்சு, இத்தாலியன், பெர்சியன், ஸ்பானிஷ், ரஷ்யன் முதலிய மொழிகளில் உள்ள பேரிலக்கியங்களைத் தமிழாக்கம் செய்வதற்கோ, தமிழ்ப் பேரிலக்கியங்களை மேற்சொன்ன மொழிகளில் மொழியாக்கம் செய்வதற்கோ, வல்லமைபெற்ற அறிஞர்கள் கிடைப்பது மிகவும் அரிதாக இருக்கிறது. அத்தகைய அறிஞர்கள் அரசுடன் தொடர்புகொண்டு மொழியாக்கம் செய்ய முன்வருவார்களேயானால், அவர்களுக்கு ஆர்வம் ஊட்டி அவர்களோடு ஒத்துழைக்க அரசு தயாராக இருக்கிறது. பத்தாம் நூற்றாண்டு முதல் பதின்மூன்றாம் நூற்றாண்டுவரை பிரெஞ்சு நாட்டினர் அயல்மொழிகளில் உள்ள நூல்களையெல்லாம் தம் மொழியில் பெயர்த்ததன் பயனாக இன்று பிரெஞ்சு இலக்கியம் வலுவும், நுட்பமும், மென்மையும் பெற்று உலக இலக்கியங்களிலேயே முதலிடம் பெற்று நிற்கிறது. வின்சுலோ கூறியபடி, தமிழ்க் கவிதை கிரேக்கக் கவிதையைக்காட்டிலும் மிக்க துல்லியத்தையும் மெருகையும் பெற்றிருந்தபோதிலும், தமிழ் உரைநடை வேண்டிய அளவு முன்னேறவில்லை. தமிழ்நாடு அரசு தீட்டியுள்ள இந்தத் திட்டத்தின் விளைவாக வெளிவரப்போகின்ற இதைப்போன்ற நூல்கள் எதிர்கால இலக்கியப் படைப்புகளுக்குப் புத்துயிரும் புத்தார்வமும் நல்கும் என்று நம்பலாம்.

சு. செல்லப்பன்
தமிழ்வளர்ச்சி இயக்குநர்
குறளகம்
சென்னை-600 108

நூல் அறிமுகம்

ஆலிவர் கோல்டுசுமித்து என்பவர் அயர்லாந்தில் லாங்போர்டு சரகத்தில் பல்லகுமோர் என்னும் இடத்தில் 1728-ல் பிறந்தார். இவர் ஒரு சிறந்த ஆங்கில நூலாசிரியரும் தத்துவமேதையும் ஆவார். இவர் பல ஆங்கிலக் கவிதைகள், புதினங்கள், கட்டுரைகள் எழுதியவர். ஆயின், அவர் காலத்தில் அவருடைய படைப்புகளை ஆதரிப்பவர் யாருமின்றி வறுமையிலேயேதான் தம் கடைசிக் காலம்வரை கழிக்கநேர்ந்தது. இந்த வேக்குபில்டு பாதிரியார் என்னும் நூல் 1766-ல் முதலில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. அதற்கான தொகை இவருக்கு மிகக் குறைந்த அளவிலேயே வழங்கப்பட்டது இந் நூலைத் திருமதி சரோசினி பாக்கியமுத்து அவர்கள் தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார்கள். இதனைத் தமிழக மக்கள் பெரிதும் விரும்பி வரவேற்பார்கள் என்பது திண்ணம்.

சு. செல்லப்பன்
தமிழ்வளர்ச்சி இயக்குநர்
குறளகம்
சென்னை-600 108

1

[அகத்திலும் புறத்திலும் ஒற்றுமை பல கொண்ட வேக்குபீல்டு குடும்பத்தினரின் வர்ணனை.]

திருமணம் புரிந்து பிள்ளைகுட்டிகளை நிறையப் பெற்று வளர்க்கின்ற ஒருவன், மக்கட் பெருக்கத்தைப்பற்றிப் பேசிக் கொண்டு பிரமசாரியாகக் காலம் கழிப்பவனைக் காட்டிலும் நாட்டுக்கு நல்ல தொண்டு செய்கின்றான் என்பதுதான் என்றுமே என் கருத்து. ஆகவேதான் பாதிரிப்பணி தொடங்கிய ஓராண்டுக் கெல்லாம் நான் பெண் தேடித் திருமணம் செய்துகொண்டேன். நான் என் மனைவியைத் தேர்ந்தெடுப்பதில் எந்தக் கொள்கையைக் கடைப்பிடித்தேனோ, அதே கொள்கையைத்தான் என் மனைவி தன் கலியாண உடையைத் தேர்ந்தெடுப்பதிலும் கையாண்டாள். அதாவது, பகட்டான தோற்றத்தில் மயங்காமல், உழைக்குந் திறனை மனத்தில்கொண்டே செயல்பட்டாள்.

சுற்றுவட்டாரக் கிராமப்புற நற்குடிப் பெண்டிரில் என் மனைவியே சிறந்தவள்; நல்ல குணசாலி. எந்த ஆங்கிலப் புத்தக மானாலும்—அங்கங்கே எழுத்துக் கூட்ட நேர்ந்தாலும்—படித்து விடுவாள். ஆனால், வீட்டுக் காரியங்களில்தாம் அவளுக்குத் திறமை அதிகம். ஊறுகாய் போடுவது, உணவுப் பொருள்களைப் பதனப்படுத்துவது முதலியவற்றை நன்றாய்ச் செய்தாள். சமையலில் யாரும் அவளை எளிதில் மிஞ்சிவிட முடியாது. வீட்டு நிர்வாகத்திலும் தான் கெட்டிக்காரி என்று அவள் அடிக்கடி பெருமையாகச் சொல்லிக் கொண்டாலும் அது சற்றுச் சந்தேகத்துக்குட்பட்ட விஷயமே. ஏனெனில், எங்கள் பொருளா தார நிலை அப்படியொன்றும் அதிகமாக முன்னேற்றம் காணவில்லை.

எது எப்படியானாலும் நாங்கள் இருவரும் மிக நேசமாக இருந்துவந்தோம். நாளடைவில் எங்கள் அன்பு வளர்ந்தது. நாங்கள் ஒருவர்மேலொருவர் கோபம் கொண்டதில்லை. உலகத் தின்மீதும் எங்களுக்குக் கோபம் எதுவும் கிடையாது. எழில் பொங்கும் கிராமப்புறத்திலும் அருமையான அயலார் நடுவே அழகானதொரு வீட்டில் நாங்கள் வசித்துவந்தோம்.

நாளெல்லாம் நல்ல கிராமியப் பொழுதுபோக்குகளில் 'நேரத்தைச் செலவிட்டோம்; செல்வந்த அயலார் வீடுகளுக்குச் சென்று வருவதிலும் ஏழைகளின் துயர்களைத் துடைப்பதிலும் ஈடுபட்டோம். புரட்சி வந்துவிடுமோ என்ற அச்சமில்லை; போருக்குப் புறப்பட வேண்டுமோ என்ற பயமில்லை; எங்கள் வீரமெல்லாம் குளிர் காயும் கணப்பங்கரையில்தான்; எங்கள் பயணமெல்லாம் கிராமத்தைச் சுற்றித்தான்.

எங்கள் வீடு வீதிமேல் இருந்ததால் வழிப்போக்கர்களும் அன்னியர்களும் அடிக்கடி வந்து போவார்கள்; எங்கள் நெல்லிக்காய் மதுவை ருசித்துவிட்டுச் செல்வார்கள். எங்கள் வீட்டு நெல்லி மது பிரசித்திவாய்ந்தது. எனக்குத் தெரிந்து இதுவரை யாருமே அதைக் குறைகூறியதில்லை. பலர் உறவு சொல்லிக்கொண்டும் வந்தனர்; நாற்பது தலைமுறை தள்ளிய உறவைக்கூடச் சொன்னார்கள்! குலமரபு பதிவு ஏட்டைப் பார்த்துவிட்டு வந்ததுபோல அவ்வளவு நிச்சயமாய்ச் சொன்னார்கள். அவர்களை உறவு என்று ஏற்றுக்கொள்வதில் எங்கள் பெருமை ஒன்றும் கூடிவிடாது. அப்படித்தான் இருந்தது அவர்களில் பலரது தோற்றம். குருடரும், நொண்டியும், முடமுமாக இருந்தனர். ஆனால், 'என் மனைவியோ, 'நாம் ஒரே இரத்தமல்லவா? எல்லோரும் ஒன்றாக மேசையில் அமர்ந்து சாப்பிடவேண்டும்' என்று சொல்லுவாள். அவர்கள் மிக்க மகிழ்ச்சியடைவார்கள். அதிதி ஏழையாக இருந்தால் எளிய உபசாரத்திலும் உளங்கனிந்து விடுவான். இது ஒரு வாழ்க்கை உண்மை. எங்கள் அதிதிகளும் அப்படித்தான். செல்வந்தர்களாக இல்லாவிடினும் மலர்ந்த முகத்தோடு இருந்தார்கள். வண்ணமலர்களும் வண்ணத்துப் பூச்சிகளும் தங்கள் பல்வேறு வண்ணங்களால் நம் மனத்தைக் குளிர்விக்கின்றன அல்லவா? அதுபோல நானும் அந்தப் பெரிய அதிதிகளின் மலர்ந்த முகங்களைக் கண்டு பூரித்துப்போவேன்.

இப்படி வருகின்ற உறவினர்களில் யாராவது ஒழுக்கமற்றவரா யிருந்து தொல்லைகள் தந்தால் அவர்களை ஒரேயடியாய் அனுப்பி விட நான் ஒரு தந்திரம் செய்வதுண்டு. அவர்கள் விடைபெறுகையில் ஒரு சவாரி அங்கியை அல்லது ஒரு சோடி சப்பாத்துகளை, சமயங்களில் விலைகுறைந்த குதிரையைக்கூட அவர்களுக்கு இரவலாகக் கொடுப்பேன். நான் எதிர்பார்த்தபடியே நடக்கும். அவற்றைத் திருப்பிக் கொடுப்பதைத் தவிர்க்க அவர்கள் திரும்ப வராமலே இருந்துவிடுவார்கள். இப்படித் தொல்லை தந்தவர்களை அனுப்பியிருப்போமே தவிர மற்றப்படி வழிப்போக்கரையோ அண்டியிருக்கும் ஏழைகளையோ விரட்டிவிட்டோமென்று

வேக்குபீல்டு குடும்பத்தைபற்றி இதுவரை ஒரு பழிச்சொல்லும் எழுந்தது கிடையாது.

இவ்வாறாகப் பல ஆண்டுகள் இன்பமாகக் கழிந்தன. அவ்வப்பொழுது சிற்சில தொல்லைகள் நேர்ந்தனவுமுண்டு. அப்படி நேரிடவில்லையெனில், இறைவன் அருளும் நன்மைகளை மனிதன் மதிப்பதுதான் எங்ஙனம்? எங்கள் பழத்தோட்டத்தில் பள்ளிச் சிறுவர் புகுந்து திருடுவர். என் மனைவியின் விருந்துச் சமையலைப் பூனை தின்றுவிட்டு ஓடும். கோயிலில் நான் பிரசங்கம் நிகழ்த்துகையில் மிக உருக்கமான கட்டத்தில் பார்த்து, நிலப்பிரபு தூங்கி விடுவார். என் மனைவி செய்த வணக்கத்துக்கு அவர் மனைவி சரியான பதில் வணக்கம் செய்யாது போவாள். ஆனால், இவ்வற்பத் தொல்லைகள் ஏற்படுத்திய மனச்சங்கடம் வெகு விரைவில் மறந்துபோகும். நாலைந்து நாள்கள் கழித்து நினைத்துப் பார்த்தால், 'இதற்கா இப்படி எரிச்சல்பட்டோம்?' என்று எங்களுக்கே ஆச்சரியமாக இருக்கும்.

மித வாழ்வின் தோன்றல்களாகிய எங்கள் குழந்தைகளை நாங்கள் சொகுசு வாழ்க்கையில் பயிற்றுவிக்காததால் அவர்கள் ஆரோக்கியமாக வளர்ந்தனர். என் குமாரர் திடகாத்திரமாகவும் செயலாற்றலோடும், குமாரத்திகள் அழகாகவும் மலர்ச்சியோடும் இருந்தனர். என் முதுமையின் ஆதரவாக—நம்பிக்கையாக—ஒளிரும் அச் சிறு வட்டத்தின் நடுவே நான் நிற்கையில் எனக்கு ஆபன்சுபர்க்குப் பிரபுவின் கதை நினைவுக்குவரும். அந்தக் கதையாவது: இரண்டாம் ஹென்றி மன்னன் ஜெர்மனி தேசத்தின்மீது முன்னேறிக்கொண்டு வந்தபோது அங்குள்ள பெரும் பிரபுக்களெல்லோரும் தங்கள் தங்கள் அரும் பொருள்களைக் கொண்டுவந்து அவனிடம் சமர்ப்பித்தனராம். ஆபன்சுபர்க்குப் பிரபுவோ தமது முப்பத்திரண்டு பிள்ளைகளையும் கூட்டிவந்து அரசர் முன்பாக நிறுத்தி, தாம் வழங்கக்கூடிய மிகப் பெரிய காணிக்கை அவர்கள்தாம் என்றாராம். எனக்கு ஆறு பேர்தாம் என்றாலும், நானும் அவரைப் போலவே அவர்களை என் நாட்டுக்கு அளிக்கும் மிகச் சிறந்த பரிசாகவே கருதினேன். ஆகவே, நாடு எனக்குக் கடன்பட்டிருக்கின்றது என்பதுதான் என் துணிபு.

எனது மூத்த மகன் ஜார்ஜ். எங்களுக்குப் பத்தாயிரம் பவுன் விட்டுச்சென்ற அவனது மாமாவின் பெயரை அவனுக்கு வைத்தோம். இரண்டாவது பெண். கிரிசலா என்று எனது அத்தையின் பெயரை அவளுக்கு இடவேண்டுமென்று எனக்கு ஆசை. ஆனால், அவள் கருவிலிருந்தபோது என் மனைவி நவீன நாவல்கள்

பல படித்துவந்தமையால் அவளுக்கு ஒலிவியா என்று பெயரிட வேண்டுமென்று கட்டாயமாகச் சொல்லிவிட்டாள். அடுத்த ஓர் ஆண்டுக்குள் பிறந்த பெண்குழந்தைக்கு எப்படியும் கிரிசலா என்ற பெயரைச் சூட்டிவிடுவதென்று நான் பிடிவாதமாக இருந்தேன். ஆனால், ஒரு செல்வந்த உறவினள் அவளுக்கு ஞானத் தாயாக இருக்க விரும்பியதால், அவள் உத்தரவுப்படியே அவளுக்கு சோபியா என்று நாமகரணமாயிற்று. ஆகவே, வீட்டில் இரு நவீனப் பெயர்கள் நுழைந்துவிட்டன. ஆனால் உள்ளதைச் சொல்லுகிறேன், எனக்கு அதில் சம்மதமே கிடையாது. அடுத்தது மோசே. அப்புறம் பன்னிரண்டாண்டு இடைவெளிக்குப் பின்னர் மேலும் இரண்டு மகன்களைப் பெற்றோம்.

என் குழந்தைகள் என்னைச் சூழ இருக்கையில் எனக்கு மகிழ்ச்சி கரைபுரண்டோடும்; என் மனைவியின் பெருமையோ சொல்லி முடியாது.

வீட்டுக்கு வருகிறவர்கள்,

அவளிடம், 'திருமதி பிரிம்ரோசு அம்மா! நாட்டிலே உங்கள் பிள்ளைகளுக்கு இணையாக வேறு யாருமே இல்லை' என்பார்கள்.

அவளும், 'ஆமாம், ஆண்டவன் அவர்களுக்கு அழகு கொடுத்திருக்கிறான். ஆனால் குணமும் வேண்டாவா ? குணத்தை வைத்துத்தானே அழகு !' என்பாள்.

அப்புறம் குழந்தைகளை அழைத்துக் காண்பிப்பாள். உள்ளதைச் சொல்லவேண்டும். அவர்கள் மிகவும் அழகாகவே இருந்தார்கள். வெளித்தோற்றத்தைப் பிரமாதப்படுத்துகிறவனில்லை நான். ஆனால், உலகத்திலே மக்கள் பொதுவாக அதையன்றோ பெரிதாக நினைத்துப் பேசுகின்றனர். ஆகையால்தான் நானும் அதைப்பற்றிக் குறிப்பிட வேண்டியதாகின்றது.

ஒலிவியாவுக்கு இப்போது வயது பதினெட்டு. மதுமங்கை ஹெபிதேவியை ஓவியங்களில் பார்க்கிறோமே அப்படி இருந்தாள் அவள்! ஒளிவு மறைவில்லாத கலகலப்பான பேச்சுடன், பார்த்தவுடன் எவரையும் தடுமாற வைக்கிறதுபோலொரு தோற்றத்துடன் இருந்தாள். சோபியாவின் கவர்ச்சி அப்படிப் பார்த்தவுடன் ஈர்க்கும் தன்மையுடையதன்றாயினும், அவளது அழகு ஒருவித நிச்சயத் தன்மையுடன் இருந்தது. மெலிதான அடக்க

மான வனப்புடன் இருந்தாள். ஒருத்தி ஒரேயடியில் வீழ்த்தப் பட்டவளானால் அடுத்தவள் படிப்படியாக வெற்றிகரமாக முன்னேறக்கூடியவள்.

ஒரு பெண்ணின் குணத்தை அவளது முகலட்சணம் நிர்ணயிக்கிறது என்று கூறலாம். எனது பெண்களைப் பொறுத்த வரையில் அது என்னவோ உண்மைதான். ஒலிவியா பல காதலர்கள் வரவேண்டுமென்று விரும்பினாள். சோபியா ஒருவன் வேண்டுமென்று எண்ணினாள். பிறரை மகிழ்விப்பதில் ஒலிவியா வரம்புமீறிய ஆர்வம் காட்டினாள். சோபியாவோ பிறர் மனம் நொந்துவிடாமலிருக்கத் தன் திறமைகளையும் மறைத்து அடக்கினாள். நான் சந்தோஷமாக இருக்கும் வேளைகளில் மூத்தவளின் கலகலப்பு எனக்கு மேலும் மகிழ்வூட்டியது. நான் கருத்துடன் இருந்த வேளைகளில் இளையவளின் நல்லறிவு எனக்கு இதமளித்தது. ஆனால், அதுவேதான் அவர்களது தனிப் பெருங் குணம் என்று சொல்லிவிடுவதற்கில்லை. சில வேளைகளில் இவர்கள் தங்கள் குணநலன்களைப் பரஸ்பரம் மாற்றிக்கொண் டார்களோ என்றுகூடத் தோன்றும். இழவு உடை தரித்துக் கொண்டால் ஒலிவியாவின் தளுக்கு மினுக்குக் குறைந்து, பேதை போல் காட்சியளிப்பாள். புதிய ரிப்பன் செட்டை அணிந்து கொண்டால் தங்கைக்காரிக்கு எங்கிருந்தோ ஓர் உல்லாச பாவம் வந்துவிடும்.

என் பெரிய மகன் ஜார்ஜ் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் பயின்றுவந்தான். கல்விசார்ந்த தொழில் ஏதேனுமொன்றில் அவன் அமரவேண்டும் என்பது என் மனக்கிடக்கை. இரண்டா மவன் மோசேக்கு வீட்டிலேயே ஒரு கதம்பக் கல்வி நடந்தது. பொருள்சார்ந்த தொழிலில் அவன் ஈடுபடவேண்டுமென்பது என் விருப்பம்.

உலகமறியாச் சிறுவர்களது குணவியல்புகளை நுணுக்கமாக விவரிக்க முயல்வது வேண்டாத காரியம் என்றே தோன்றுகிறது. பொதுவான ஒரு குடும்ப முத்திரை அவர்கள் எல்லோர்மீதும் பதிந்திருந்தது. ஒட்டுமொத்தமாகச் சொன்னால் அவர்கள் எல்லோருமே தாராள குணமும், கள்ளங்கவடின்றி எதையும் நம்பும் இயல்பும், எளிமையும், பிறர் மனம் நோகப்பொறாத வர்களுமிருந்தனர்.

2

[குடும்பம் வறுமையை எதிர்நோக்குகிறது. நல்லவரைப் புடமிட வறுமை பயன்படுகின்றது.]

குடும்பத்தின் பொருளாதார நிருவாகம் பொதுவாக என் மனைவியின் மேற்பார்வையில் நடந்துவந்தது. ஆன்மிகக் காரியங்களை முற்றிலுமாக நானே கவனித்துவந்தேன். உலகாயத விஷயங்களில் நான் அக்கறையில்லாதவனாகவே இருந்தேன். கோயில் மானியத்தில் ஆண்டுக்கு முப்பது பவுன் வருமானம் வரும். திருச்சபைப் பாதிரிமாரின் விதவை - திக்கற்றோர் நிதிக்கு அதை 'மேடோவர்' செய்துவிடுவேன். ஏனெனில், எனக்குச் சொந்தமாக வருவாய் உண்டு. சம்பளம் வாங்கிக்கொள்ளாமல் குருத்துவப் பணி செய்ததில் எனக்கு ஒரு மனநிறைவு இருந்தது. துணைப் பாதிரி வைத்துக்கொள்ளவும் நான் சம்மதிக்கவேயில்லை. ஏனெனில், சபையின் ஒவ்வோர் உறுப்பினருடனும் நேரடித் தொடர்புகொள்ள நான் விரும்பினேன். அவர்களது தனிப் பிரச்சினைகளை அறிந்து அவர்களுக்கு இதோபதேசம் செய்வேன். திருமணமான ஆண்கள் ஒழுக்கமாக வாழவும் பிரமசாரிகள் திருமணம் செய்துகொள்ளவும் நான் வலியுறுத்தி வந்தேன். நான் பல ஆண்டுகளாக இச் செய்தியைச் சொல்லி வந்ததால் 'வேக்ஃபீல்டின் மூன்று தேவதைகள்' என்று ஒரு சொற்றொடர் உண்டாகிவிட்டது. 'பாதிரிக்குப் பெருமை தேவை; இளைஞருக்கு மனைவியர் தேவை; மதுக்கடைக்கு வாடிக்கை தேவை' என்று பழமொழியாகிவிட்டது.

திருமணம் என்பது எனக்கு மிகவும் பிடித்த விஷயம். தாம்பத்திய மகிழ்ச்சிபற்றிப் பல பிரசங்கங்கள் எழுதினேன். அதுதவிர இன்னொரு கொள்கையையும் நான் விடாப்பிடியாக வற்புறுத்தி வந்தேன். விஸ்டான் என்பாருடைய கொள்கை அது. அதாவது, ஆங்கிலிக்கன் திருச்சபைப் பாதிரியானவர் மனைவி இறந்த பிறகு மறுமணம் செய்துகொள்ளக்கூடாது என்பதாகும். இந்த ஏகதாரக் கொள்கையில் நான் மிக உறுதியாக நின்றேன். இது குறித்து ஏராளமான நூல்கள் வெளிவந்திருந்தன. நானும் நீண்டகாலமாக இந்தச் சர்ச்சையில் ஈடுபட்டிருந்து சில துண்டுப்

பிரசுரங்கள் எழுதி வெளியிட்டிருந்தேன், அவை விற்கவேயில்லை. 'அதனாலென்ன? இம்மாதிரிப் பொருள் சிறுபான்மையினரை மாத்திரம்தான் ஈர்க்கக்கூடியது' என்று என்னைத் தேற்றிக் கொள்வேன். நான் அந்தக் கொள்கையை விடாப்பிடியாய்ப் பற்றிக்கொண்டிருந்தது என் பலவீனம் என்று என் நண்பர்கள் சிலர் நினைத்தார்கள். என்ன பரிதாபம்! என்னைப்போல் அவர்கள் அந்தப் பொருள்குறித்து ஆழ்ந்து சிந்திக்கவில்லையே; அதுபற்றிச் சிந்திக்கச் சிந்திக்க அது மேலும்மேலும் முக்கியமானதாக எனக்குத் தோன்றலாயிற்று. விஸ்டானைவிட நான் ஒரு படி மேலே போய்விட்டேன். அவர் தமது மனைவியின் கல்லறையின்மேல் 'வில்லியம் விஸ்டானின் ஒரே மனைவி' என்னும் வாசகத்தைப் பொறிப்பித்திருந்தார். நானோ உயிரோடிருந்த என் மனைவிக்கு வாசகம் எழுதினேன். அவளது நிதானம், சிக்கனம், பணிவு (இறுதிவரை) இவைபற்றிச் சிலாகித்து அழகாக எழுதுவித்து நேர்த்தியாகச் சட்டம் கட்டிக் கணப்புக்குமேலே தொங்கவிட்டேன். அதனால் பல பயன்கள் விளைந்தன. அவள் எனக்கு ஆற்ற வேண்டிய கடமைகளை அவளுக்கும், நான் ஒழுகவேண்டிய கற்பு நிலையை எனக்கும் அது உணர்த்திவந்தது. மேலும் நற்பெயர் பெறவேண்டுமென்ற ஆசையைத் தூண்டியதோடு, இறுதி நாளை யும் என்றும் மனத்திலிருத்த அது உதவிவந்தது.

இவ்வாறு அடிக்கடி திருமணம்பற்றிய பரிந்துரைகள் பேசக் கேட்டு வந்ததாலோ என்னவோ என் மூத்த மகன், கல்லூரிப் படிப்பு முடிந்ததுமே, அருகில் வசித்த 'உல்மாட்டு' என்ற குருவின் மகளின்மீது தன் கவனத்தைச் செலுத்தத் தொடங்கினான். அந்தப் பாதிரியார் திருச்சபையில் மதிப்பான பதவி வகிப்பவர். மகளுக்குப் பெருஞ்செல்வம் தரவல்லவர். செல்வி அரபெல்லா உல்மாட்டு என்ற அந்தப் பெண்ணும் நல்ல அழகி என்று என் இரு மகள்கள் தவிர மற்ற எல்லாப் பெண்களாலும் ஒப்புக்கொள்ளப் பட்டவள். அவளின் இளமையும், ஆரோக்கியமும், கவடின்மையும் கண்ணாடி நிகர்த்த அவள் மேனியழகை அதிகரித்துக் காட்டின. அறிவுக் களையோடு கூடிய அவளது குளிர்ந்த பார்வை, முதியோரின் கவனத்தையும் ஈர்த்துத் தம்மீது நிறுத்திவைக்க வல்லதாயிருந்தது.

நான் என் மகனுக்கு நல்லபடியாக ஒரு வருவாய் ஏற்பாடு செய்து தரமுடியும் என்பதை உல்மாட்டும் அறிவார். ஆகவே, அவரும் இந்தச் சம்பந்தத்தை எதிர்க்கவில்லை. எனவே, சம்பந்தி யாகப் போகின்ற இரு குடும்பங்கள் எப்படிப் பழகுமோ அவ்வாறு நாங்கள் நெருக்கமாக, இசைவாகப் பழகினோம். மணம்

நிச்சயமான நாளுக்கும் மணவினைக்கும் இடைப்பட்ட காலப் பகுதி, வாழ்க்கையிலேயே மிக இனிய பகுதி என்பதை நான் அனுபவத்தில் அறிந்திருந்தமையால், அக் காலவரையை நீட்டிப் பது எனக்குச் சம்மதமாகவே இருந்தது. மணமக்கள் இருவரும் தினமும் சந்தித்துப் பல பொழுதுபோக்குகளில் சேர்ந்து ஈடுபட்டனர். அதனால் அவர்களது காதல் தீவிரமாகியது.

பெரும்பாலும் அதிகாலையிலேயே எங்கள் வீட்டில் சங்கீதம் ஒலிக்கத் தொடங்கிவிடும். அப்புறம் வெயில் இருந்தால் வேட்டைக்காகச் சவாரி கிளம்புவது உண்டு. காலைச் சாப்பாட் டுக்கும் மதிய உணவுக்கும் இடைப்பட்ட வேளையில் பெண்கள் அலங்காரம் செய்துகொண்டோ நூல்கள் படித்துக்கொண்டோ இருப்பார்கள். புத்தகத்தில் ஒரு பக்கம் படித்ததும் நிலைக் கண்ணாடி முன்னின்று தங்கள் உருவத்தைப் பார்ப்பர். கண்ணாடி காட்டுவதுதான் பேரழகு என்பதைத் தத்துவஞானிகள் கூட ஒப்புக்கொள்ளுவர். மதிய உணவு என் மனைவியின் தலைமையில் நடைபெறும். புலால் உணவுகளைத் தானே துண்டம் செய்து பரிமாறுவதுதான் அவளுக்கு விருப்பம். அவள் அம்மா அப்படித்தான் செய்தாளாம். இந்தச் சந்தர்ப்பங்களில் ஒவ்வொரு பதார்த்தத்தின் வரலாற்றையும் எடுத்துச் சொல்லு வாள். சாப்பிட்டானதும் பெண்கள் அறையைவிட்டு வெளியேறு வதைத் தடுக்க நான் மேசையை அகற்றும்படி உத்தரவிட்டு விடுவேன். சில சமயங்களில் சங்கீத வாத்தியாரின் உதவியோடு பெண்கள் இனிமையாகக் கச்சேரி நடத்துவார்கள். பின்னர் உலாவப் போதல், தேநீர் அருந்துதல், கிராமிய நடனங்கள் ஆடுதல் என்று பொழுதுபோகும்.

சீட்டாட்டம் எனக்குப் பிடிக்கிறதில்லை. ஆனால், அவ்வப் போது நண்பர் உல்மாட்டுடன் சில்லறைக் காசு வைத்து நான் தாயக்கட்டம் ஆடுவதுண்டு. நான் கடைசியாக அவருடன் ஆடியபோது நடந்த நிகழ்ச்சி பின்வந்த அனர்த்தத்தைக் குறிக்கத்தான்போலும்! பகடையில் நாலு விழும் என்று நம்பிக்கையுடன் சுழற்றி விசிறிய ஐந்து தடவைகளிலும் தொடர்ந்து ஒன்றும் இரண்டும் மாறிமாறி விழுந்தன.

இப்படியாகச் சில மாதங்கள் கழிந்தன. மணமக்கள் மணவினையை மிகவும் விரும்பியதாகத் தோன்றியது. ஆகவே, அந் நன்னாளைக் குறித்தோம். அதற்கான ஆயத்தங்களைச் செய்வதில் என் மனைவி ஓடியாடிப் பரபரத்தாள். என் பெண்கள் அவளை ஓரக்கண்ணால் பார்த்துக்கொண்டிருந்தார்கள். நானோ அச்சமயத்தில் துண்டுப் பிரசுரம் ஒன்று எழுதி வெளியிடுவதில்

என்து முழுக் கவனத்தையும் செலுத்திக்கொண்டிருந்தேன். பொருள், அந்தப் பழைய எனக்குப் பிடித்தமான ஏகதாரக் கொள்கைதான். கருத்தும் நடையும் மிகச் சீராக அமைந்துவிட்ட அக் கட்டுரையை என் படைப்புகளிலேயே தலைசிறந்ததாகக் கருதினேன். ஆகவே, மிகப் பெருமையுடன் நான் அதை என் நண்பர் உல்மாட்டுக்குப் படிக்கக் கொடுத்தேன். அவர் அதை வியந்து பாராட்டுவார் என்பதில் எனக்குச் சந்தேகமே இருக்க வில்லை. ஆனால், அவர் என் கொள்கையோடு அடியோடு மாறுபடுகிறவர் என்பதைக் காலந்தாழ்ந்தபிறகே கண்டுகொள்ள நேர்ந்தது. மாறுபடாமல் என்ன செய்வார்? மூன்று முறை கலியாணம் செய்து தாரமிழந்திருந்த அவர் அப்பொழுது நான்காம் முறையாகத் திருமணம் செய்துகொள்ளும் எண்ணத் தோடு அந்த எதிர்கால மனைவியோடு இப்பொழுது பழகி வருகின்றாராம் என்று கேள்விப்பட்டேன். எனவே, கட்டுரை குறித்து எங்கள் பேச்சு நிரம்பக் காரசாரமாய்ப் போய்விட்டது. சம்பந்தம் முறிந்துவிடுமோ என்ற கட்டத்தையும் எட்டுகிற அளவு சூடேறிவிட்டது. எனவே, அப்போதைக்கு அதை நிறுத்திவைத் தோம். ஆனால், மீண்டுமொருநாள் தர்க்கம் கிளம்பிவிட்டது. அது கலியாணத்துக்கு முந்திய நாள். பேச்சு விரிவாகி வாதம் கடுமை யாயிற்று. வழக்கவிரோதமான கொள்கை என்று அவர் வாதாடி னார். நான் மறுத்தேன். அவர் பதில் சொல்ல, நான் அதை எதிர்க்க எங்கள் பேச்சுச் சூடுபிடிக்கத் தொடங்கிற்று.

அப்பொழுது அங்கு வந்து இதைக் கவனித்த என் உறவின ரொருவர் என்னைத் தனியே வெளியே இட்டுக்கொண்டு சென்றார். அவர் முகத்தில் கவலை படர்ந்திருந்தது. எனக்கு அறிவுரை கூறத் தொடங்கினார். குறைந்தபட்சம் என் மகனின் திருமணம் நடந்து முடியும் வரையிலாவது நான் சர்ச்சையை வளர்த்தக் கூடாது என்றார். நான் கோபமாகப் பதில் கூறினேன்: 'அதெப்படி முடியும், எதற்காகக் கொள்கையை விட்டுக் கொடுக்கிறது? இந்தக் கோமாளி மனிதர் இன்னொரு கலியாணஞ் செய்துகொள்ளப் போகிறாராம். இந்தக் கலியாணம் எப்படி நடக்கிறதென்று பார்த்துவிடுவோம். என் சொத்தை விட்டாலும் விடுவேனேயன்றி இந்த வாதத்தை நான் விடுவதாயில்லை!' என் நண்பர் சொன்னார்: 'சரி, சொத்துப் பேச்சை நீரே தொடங்கிவிட்டீர். அதை எப்படிச் சொல்வது என்றுதான் நான் இதுவரை தயங்கிக் கொண்டிருந்தேன். உமக்கு இப்பொழுது சொத்து எதுவும் கிடையாது. இப்பொழுதுதான் செய்தி வந்தது. உம் பணத்தை வைத்திருந்த வணிகர் இலண்டனிலிருந்து ஓடி விட்டாராம். செல்லாக்காசும் இல்லாமல் திவாலாகிப் போனத

னாலே மறைந்துவிட்டாராம். கலியாணம் முடியும்வரை இந்த அதிர்ச்சிச் செய்தியைச் சொல்லாமல் மறைத்துவிடலாம் என்று நான் எண்ணியிருந்தேன். ஆனால், நீர் இங்கே பெரிய சண்டை போட்டுக் கொண்டிருக்கிறீர். செய்தி, உமது சினத்தைக் குறைக்கலாமென்றெண்ணி இப்பொழுது சொல்லிவிட்டேன். நீர் இதை இப்பொழுது யாரிடமும் மூச்சுவிட வேண்டா; கேள்விப் படாததுபோலவே பாவித்துக்கொள்ளும். அதுதான் விவேகம். அந்தப் பெண்ணின் ஐசுவரியமும் உங்கள் மகனுக்குச் சேரும்வரை இதைத் தெரிந்ததாக நீங்கள் காட்டிக்கொள்ளக் கூடாது.'

'சரி, அப்படியா விஷயம்? இருக்கட்டும். நீர் சொல்வது உண்மையாகவிருந்து அதன் காரணமாக நானொரு பிச்சைக் காரனானால்கூடப் பாதகமில்லை. அதற்காகவேண்டி நான் ஓர் அயோக்கியனாக மாட்டேன். என் கொள்கையையும் நான் விட்டுக்கொடுக்கப் போவதில்லை. நான் இப்பொழுதே போய் என் சொத்து சம்பந்தப்பட்ட உண்மை நிலவரத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்தப் போகின்றேன். சர்ச்சையிலோவெனில் நான் இதுவரை ஐயோ பாவமென்று அந்தக் கிழவருக்கு விட்டுக் கொடுத்தே வாதிட்டேன். இனிமேலோ அவரை விடப்போவ தில்லை. அவர் கலியாணஞ் செய்வதைப் பார்த்துவிடுவோம்!'

செய்தியை அறிந்ததும் இரு குடும்பத்து உறுப்பினர்களுக்கும் வெவ்வேறு உணர்ச்சிகள் உண்டாயின. அதையெல்லாம் விவரித்து எழுத முடியாது. ஆனால், இதனால் மணமக்கள் இருவருக்கும் நேர்ந்த மனவேதனையே மிக அதிகம். (ஏற்கெனவே இந்த நிச்சயதார்த்தத்தை ரத்துசெய்து விட்டாலென்ன என்ற நோக்க முடையவராயிருந்த திரு உல்மாட்டு, பேரிடி போன்ற இந்தச் செய்தியைக் கேள்வியுற்றதும் அப்படிச் செய்யுமாறு உடனே தீர்மானம் பண்ணிவிட்டார். உலகியல் விவேகத்தைப் பூரண மாகப் பெற்றிருந்தார் அவர். எழுபத்திரண்டு வயதில் அந்தக் குணம் ஒன்றுதான் விஞ்சி நிற்கும்போலும்!)

3

[ஒரு பயணம். நன்றுந் தீதும் பிறர் தர வாரா.]

நாங்கள் கேள்விப்பட்ட கெட்ட செய்தி பொய்யாக இருக்காதா, விஷமிகள் கட்டிவிட்ட கதையாக இருக்காதா, நம்பிக்கைக்கு இடமிருக்காதா என்றெல்லாம் தவித்தோம். ஆனால், பட்டணத்திலிருந்து எங்கள் ஏஜென்டு அனுப்பிய கடிதம், செய்தி முழுவதும் உண்மை என்று உறுதிப்படுத்தியது. என் வரையில் எனக்கு இது பேரிழப்பாகத் தெரியவில்லை. கல்வி எனக்கொரு மனப்பக்குவத்தைக் கொடுத்திருந்தது. இந்தத் திடீர் வீழ்ச்சியைத் தாங்கிக்கொள்ள வேண்டியிருந்த என் குடும்பத்தினரைக் குறித்தே நான் கவலையுற்றேன்.

ஆயினும் இரண்டு வாரங்கள்வரை அவர்களை ஆறுதல்படுத்த நான் முயலவில்லை. காலத்துக்கு முன்பே தேற்ற முயல்வது அவர்களது துயரத்தைக் கிளறிவிடுமென அறிந்திருந்தேன். பிழைப்புக்கு என்ன செய்யலாம் என்பதையே நான் தீவிரமாகச் சிந்தித்துக்கொண்டிருந்தேன். அப்பொழுது சற்றுத் தொலைவில் இருந்ததும் பதினைந்து பவுன்கள் வருமானமுள்ளதுமான ஒரு கிராமத்துச் சபையில் பாதிரிப்பணி செய்யுமாறு என்னிடம் சொல்லப்பட்டது. அங்கே என் கொள்கைகளையும் இடைஞ்சலில்லாமல் காப்பாற்றிக்கொள்ள வாய்ப்பிருந்ததால் நான் மகிழ்வுடன் இசைந்தேன்; ஒரு சிறிய பண்ணை வைத்து நடத்தி என் வருவாயைப் பெருக்கிக்கொள்ளவும் தீர்மானித்துக்கொண்டேன். எனவே, என் சொத்தில் மீந்ததைச் சேகரிக்க முற்பட்டேன். பதினாலாயிரம் பவுன் பெறுமான அந்தச் சொத்தில் கடன்கள் கொடுத்துத் தீர்ந்ததுபோக எஞ்சியது நானூறு பவுன்களே எனத் தெரிந்தது.

இந் நிலையை என் குடும்பத்தினர் உணர்ந்து அதற்குத் தகுந்தவாறு எளிமையாக நடந்துகொள்ள வேண்டுமென்பது எனக்கு மிகவும் முக்கியமாகப் பட்டது. ஏழைமையின் பீற்றல் பெருமை நகைப்புக்கு இடந்தரும் என்பதை நன்குணர்ந்திருந்த நான் அவர்களிடம் சொன்னேன் :

'குழந்தைகளே, நாம் விவேகமாக நடந்திருந்தால்கூட இந்த இன்னலை நாம் தவிர்த்திருக்க முடியாது என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனால், அதன் கொடுமையான விளைவுகளை நமது விவேகத்தால் இனித் தடுக்கமுடியும். என்னருமைக் குழந்தைகளே, நாம் இப்போது ஏழைகள். அந்த ஏழைமை நிலைமைக்கு ஏற்றவாறு வாழப் பழகிக்கொள்வதே சிறப்பாகும். நமது ஆரவார வாழ்க்கைமுறைகளை அறவே விட்டுவிடவேண்டும்; அவற்றை நினைத்து ஏங்கக்கூடாது. சக்திக்கு மீறி வாழ்வதாலேயே பலர் தங்கள் வாழ்க்கையை நரகமாக்கிக்கொள்கின்றனர். எளிமையாக மனத் திருப்தியுடன் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். ஏழைகளின் வாழ்க்கை பெரும்பாலும் குதூகலமாகவே இருக்கின்றது. நாமும் உயர்குடிப் பிறப்பாளர் என்ற வேடத்தைக் களைந்துவிட வேண்டும். நம்மிடம் எஞ்சியுள்ள செல்வமே நமது மகிழ்ச்சிக்குப் போதுமானதாக உள்ளது. அதைக்கொண்டு திருப்தியுடன் வாழ்ந்தால் வறுமையிலும் நமக்கு மனநிம்மதி இருக்கும்.'

மூத்தவன் படிப்பாளியாதலால் அவனை இலண்டனுக்கு அனுப்பித் தன் பிழைப்புக்கும் எங்கள் ஆதரவுக்கும் வழிதேடிக் கொள்ளச் செய்யுமாறு முடிவுசெய்தேன். வறுமையின் மிகப் பெரிய கொடுமை இம்மாதிரிக் குடும்பத்திலே பிரிவு உண்டாக்குவது தான். நாங்கள் பிரியவேண்டிய நாளும் வந்தது. அவன் தாயும் உடன்பிறந்தாரும் கண்ணீரோடும் முத்தங்களோடும் அவனுக்கு விடை கொடுத்தனர். என்னிடம் ஆசிபெற வந்தபோது நான் அவனுக்கு ஐந்து கினியைக்[1] (நான் வழங்கக்கூடிய செல்வமெல்லாம் அவ்வளவாகத்தான் இருந்தது) கொடுத்து அவனை மனப்பூர்வமாக ஆசீர்வதித்துச் சொன்னதாவது :

''என் மகனே, நீ இன்று இலண்டனுக்கு நடந்துசெல்லப் போகின்றாய். பிரசித்தி வாய்ந்த உன் மூதாதை ஹூக்கரும் அப்படிச் சென்றவர்தாம். அவர் புறப்பட்டபோது பிஷப் ஜூவெல் அவருக்கு அளித்த அதே கைத்தடியை நான் உனக்குத் தருகின்றேன். அதை உன் குதிரை வாகனமாக நினைத்துக் கொள். இதோ இந்த வேதாகமத்தையும் கொண்டு செல். உன் வழித்துணை அதுதான். அதிலுள்ள இரண்டு வசனங்களை நினைவில் வை. அவையிரண்டும் பத்தாயிரம் பொன்னுக்குச் சமானமாகும். 'நான் இளைஞனாயிருந்து முதிர்ந்தவன் ஆனேன். ஆயினும் நீதிமான் கைவிடப்பட்டதையும் அவன் பிள்ளை சோற்றுக்கு இரந்து திரிந்ததையும் கண்டதில்லை.' இந்த வரிகள் உனக்கு

[1] கினி 21 ஷில்லிங்கு பெறுமான தங்க நாணயம்.

ஆறுதலளிக்கும். போய் வா, மகனே. உன் பயணம் வாய்க்கட்டும். எப்படி இருப்பினும் நான் ஆண்டுக்கு ஒருமுறை உன்னைப் பார்க்கவேண்டும். மனத்தைத் திடமாக வைத்துக்கொள்'' என்று சொல்லி விடை கொடுத்தேன். இவ்வாறு வாழ்க்கையரங்கிலே அவனைக் குதிக்கச் செய்தபோது எனக்கு அச்சமோ ஐயமோ இருக்கவில்லை. ஏனெனில், அவனது நேர்மையையும் மான உணர்வையும் நான் நன்கறிந்திருந்தேன். தோல்வியோ வெற்றியோ விளைவு எதுவானாலும் தன் பங்குக்கு விழுந்த கடமையை அவன் செவ்வனே செய்துமுடிப்பான் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை.

அவன் போனதும் நாங்கள் புறப்படவேண்டிய நாளும் நெருங்குவதை உணர்ந்தோம். பழகிய மனிதரையும் அமைதி நிறைந்த சூழலையும் விட்டுப் பிரிவது எங்களுக்கு மிகுந்த துக்கமாக இருந்தது. மனவுறுதியுடன் இருக்க முயன்றாலும் அவ்வப்பொழுது கண்ணீர் வருவதைத் தடுக்க இயலவில்லை. இதுவரை நாங்கள் பத்து மைலுக்குமேல் எங்கேயும் சென்றதில்லை. இப்பொழுது நாங்கள் போகவேண்டிய இடமோ எழுபது மைல் தொலைவிலிருந்தது. அதுவும் கவலையைத் தந்தது. நாங்கள் பயணம் தொடங்கியதும் எங்கள் ஏழை எளிய நண்பர்கள் சில மைல் தூரம் எங்கள் பின்னால் வந்தனர். அது எங்கள் வேதனையை அதிகரித்தது.

ஒரு நாள் பயணம் முடிந்து இரவில் ஒரு கிராமம் வந்தடைந்தோம். எங்கள் இலக்கைச் சேர மேலும் முப்பது மைல் இருந்தது. அன்றிரவை அந்தக் கிராமத்தின் ஓரமாகவிருந்த சத்திரத்தில் கழிப்பதெனத் தீர்மானித்தோம். சத்திரத்தில் ஓர் அறை கிடைத்தது. இரவுச் சாப்பாட்டின்போது என் வழக்கப்படி, சத்திரக்காரரையும் எங்களுடன் உண்ணும்படி அழைத்தேன். அவர் அருந்தும் மதுவின் விலையும் எங்கள் கணக்கில் சேரும்.

அவருடன் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தேன். நாங்கள் போகவேண்டிய இடமும் அதன் சுற்றுப்புறமும் அவருக்கு நன்கு பழக்கமாகவிருந்தன. அந்த வட்டாரத்து நிலப்பிரபு தாரன் ஹில்லையும் அவருக்குத் தெரிந்திருந்தது. அவரும் அண்மையிலேயே வசிப்பதாகச் சொன்னார். அவரைப்பற்றிப் பேசியதில் மேலும் சில விஷயங்கள் அறிந்துகொண்டோம். சிற்றின்பத்தைத் தவிர்த்து அவர் வேறு எதிலும் நாட்டமில்லாதவராம். பத்து மைல் சுற்றுவட்டாரத்தில் எந்தப் பண்ணையிலும் அவர் தொடாத பெண்ணே இல்லையாம்; எப்பேர்ப்பட்ட கற்புக்கரசி

யானாலும் மயக்கிவிடுவாராம். பின்னர் ஏமாற்றுவாராம். இதைக் கேட்டு என் மனம் வேதனையுற்றது. ஆனால், என் இரு பெண்மக்களைப் பொறுத்தவரையில் இச் செய்தியின் பாதிப்பு வேறுவிதமாக இருந்தது. அவர்கள் முகங்கள் சற்றுப் பிரகாச மடைந்தன! வீழ்த்தி வெற்றி சிறக்க ஒருவன் கிடைக்கப் போகின்றான் என்று எண்ணியிருக்கவேண்டும். என் மனைவியும் அவ்வாறே உவப்படைந்ததாகப் பட்டது. என் பெண்களின் கவர்ச்சி ஒழுக்கம் இரண்டிலும் அவளுக்கு நம்பிக்கை இருந்தது.

அவரவர் இப்படியெல்லாம் நினைத்துக்கொண்டு உட்கார்ந் திருந்தபோது சத்திரக்காரரின் மனைவி உள்ளே வந்தாள். இரண்டு நாள்களாக அங்குத் தங்கியிருந்த ஒரு கனவானின் நடவடிக்கை மிக விநோதமாக இருக்கிறதாம். அதைத் தன் கணவரிடம் தெரிவிக்கத்தான் வந்திருந்தாள். சத்திரக் கணக்கைத் தீர்க்கத் தம்மிடம் பணம் இல்லை என்கிறாராம்! இதைக் கேட்டதும் சத்திரக்காரருக்கும் மிக வியப்பாக இருந்தது.

'பணமில்லையா! நம்பமுடியவில்லையே! நேற்றுக்கூடத் தண்டக்காரரிடம் மூன்று கினியைத் தூக்கிக் கொடுத்தாரே. நேற்று ஒரு பாவப்பட்ட சிப்பாய் ஒரு நாயைத் திருடிவிட்டான். அவனைச் சாட்டையால் அடித்து ஊர்வலமாய்க் கூட்டிக்கொண்டு போனார்கள். அதைப் பார்த்த இவர் தண்டக்காரனுக்கு மூன்று கினி கொடுத்து அந்தச் சிப்பாயை விடுவித்து அனுப்பினார்' என்று சத்திரக்காரர் என்னிடம் விளக்கமாகச் சொன்னார்.

சத்திரக்கார அம்மாவோ தான் சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொன்னாள். ஆகவே, நடந்ததை அறிய அவர் எழுந்து அவளோடு போனார். அந்தத் தர்மவானைக் காண எனக்கும் விருப்பம் உண்டாயிற்று. நான் அதைச் சத்திரக்காரரிடம் தெரிவித்ததும் அவர் போய் அந்த மனிதரை அழைத்துக்கொண்டு எங்கள் அறைக்கு வந்தார். அந்தப் புதிய மனிதருக்குச் சுமார் முப்பது வயதிருக்கும். முகத்தில் சிந்தனைத் திரைகள் விழத் தொடங்கியிருந்தன. ஆடைகள் பழையனவாய் நைந்திருந்தன. ஆனால், உடற்கட்டு நேர்த்தியாயிருந்தது. ஆசாரபீடிகையான பேச்சு எதையும் அவர் ஊக்குவிக்கவில்லை. அதை அவர் வெறுத்த தாகத் தோன்றிற்று. பேச்சு, சுருக்கமாக ஒருவித வறட்சி யுடனிருந்தது. சத்திரக்காரர் வெளியே சென்றதும், நான் அவரிடம் ஒரு கனவான் இந் நிலைக்கு ஆளாகிவிட்டதற்காக வருத்தம் தெரிவித்து, அவருக்குப் பணவுதவி செய்யச் சித்தமாக இருப்பதாகவும் சொன்னேன்.

'நான் அதை மனப்பூர்வமாகப் பெற்றுக்கொள்கிறேன் ஐயா' என்றார் அவர். தொடர்ந்து, 'இருப்பு அறியாமல் கையில் இருந்த எல்லாவற்றையும் செலவிட நேர்ந்துவிட்டது. ஆனால், அதனால்தான் உங்களைப்போன்ற மனிதர்களும் இன்னும் உலகத்தில் இருக்கின்றார்கள் என்பதை நான் அறிந்துகொண்டேன். எனக்குப் பேருதவி செய்கின்ற தங்கள் முகவரியை நான் முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். அப்பொழுதுதான் காலந் தாழ்த்தாமல் நான் அதைத் திருப்பித்தரமுடியும்.'

நான் என் பெயரையும், அண்மையில் எனக்கு நேர்ந்த இடுக்கணையும், நான் போகின்ற ஊரையும் எல்லாவற்றையுமே அவரிடம் சொன்னேன். அவர் சொன்னார்:

'என் அதிர்ஷ்டம் அதிகரித்துக்கொண்டு போகின்றது. நான் இதை எதிர்பார்க்கவில்லை. ஏனெனில், நானும் அங்கேதான் போகின்றேன். வெள்ளம் காரணமாகப் பாதை தடைப்பட்டதால் இரண்டு நாள் இங்கே தங்க நேர்ந்தது; பயணம் தாமதமாயிற்று. ஆனால், இப்பொழுது பாதை சீராகிவிட்டதாகத் தெரிகிறது.'

அவரோடு சேர்ந்து பயணம்செய்யும் வாய்ப்புக் கிடைத்தது பற்றி நான் என் மகிழ்ச்சியைத் தெரிவித்தேன். என் மனைவியும் பெண்களும் அவ்வாறே தெரிவித்துக்கொண்டார்கள். எங்களுடன் சேர்ந்து இரவு உணவு அருந்துமாறு அவரை விரும்பினோம் அவரது உரையாடல் இன்பம் பயப்பதாகவும் அறிவு புகட்டுவதாகவும் அமைந்திருந்தது. ஆயினும், மறுநாள் பயணத்தை நினைத்து, நெடுநேரம் பேசிக்கொண்டிருக்காமல் சீக்கிரமே தூங்கச் சென்றுவிட்டோம்.

மறுநாள் காலையில் எல்லோருமாகச் சேர்ந்து கிளம்பினோம். என் குடும்பத்தினர் குதிரை மீதமர்ந்து வந்தனர். 'திரு. பருச்செல்' என்றழைக்கப்பட்ட எங்கள் புதிய தோழர் வீதியையொட்டிய நடைபாதையில் நடந்துவந்தார். எங்கள் குதிரைகள் சீரில்லாததால் எங்களைத் தனியேவிட அவருக்கு மனமில்லை என்று சொன்னார். வெள்ளம் இன்னும் வடியாததால் நாங்கள் எங்களுக்கு ஒரு வழிகாட்டியைக் கூலிக்கு அமர்த்தினோம். அவன் குதிரைகளுக்கு முன்னாலும், திரு. பருச்செல்லும் நானும் பின்னாலும் வந்துகொண்டிருந்தோம். பயண அலுப்புத் தெரியாதிருக்க நாங்கள் இருவரும் தத்துவ விசாரணையில் இறங்கினோம். அவருக்கு அதில் ஈடுபாடிருந்தது. ஒரு விஷயம்தான் எனக்குச் சற்று வியப்பைத் தந்தது. அவரோ என்னிடம் கடன்பட்டவர். ஆனால் அவரது பேச்சுத் தோரணையோ ஒரு புரவலரைப்

போலிருந்தது! தம் கருத்துகளை விட்டுக்கொடுக்காமல் அழுத்தந் திருத்தமாய்ப் பேசினார். வழியிலே தென்பட்ட பெரும் பிரபுக் களின் மாளிகைகளை எல்லாம் எனக்குக் காண்பித்தார். அவை இன்னின்னாருடையவை என்பதையும் சொல்லிக்கொண்டு வந்தார்.

மிக நேர்த்தியான மாளிகையொன்று சற்றுத் தூரத்தில் தெரிந்தது.

'அது திரு. தாரன்ஹில்லுடையது. அந்தக் கனவானுக்கு இளவயதுதான். ஏகப்பட்ட வருமானம் வருகிறது. எல்லாம் அவர் மாமா சர் வில்லியம் தாரன்ஹில் பிரபுவுக்குச் சொந்த மானது. அவர் பெரும்பாலும் இலண்டனில்தான் வசித்து வருகின்றார். செலவுக்கு ஏதோ கொஞ்சம் எடுத்துக்கொண்டு மற்றதை மருமகனுக்கே விட்டுவிடுகின்றார்.'

திரு. தாரன்ஹில்தாம் எனக்கு நிலப்பிரபுவாக வரப் போகிறவர். பெரும் பிரபு சர் வில்லியம் தாரன்ஹில் பிரபலமான பிரமுகராதலால் அவரைப்பற்றி ஏற்கெனவே கேள்விப்பட்டிருந் தேன். ஆனால், அந்தப் பெரியவருக்கு எங்கள் நிலப்பிரபு மருமகன் உறவு என்பது இவர் சொல்லித்தான் தெரிந்தது. ஆகவே, வியப் படைந்தேன். என் வியப்பைத் தெரிவித்துவிட்டு மேலும் பேசினேன்.

'சர் வில்லியம் தாரன்ஹில் தருமவான் என்று கேள்விப்பட் டிருக்கின்றேன். ஒழுக்கமும் உதாரகுணமும் நிரம்பியவர் என்று சொல்லுகின்றார்கள். ஆனால், சற்று விநோதமான மனிதராமே! தனிப்பட்ட போக்கு உள்ளவராம்; கொடையிலோ வள்ளல் என்று பெயர் வாங்கியிருக்கின்றார்.'

அந்தப் பெரும் பிரபுவைப்பற்றி அவருக்கு நிறையத் தெரிந் திருந்தது. பேசத் தொடங்கிவிட்டார். 'கொடைக்கும் அளவு வேண்டுமன்றோ? இவரது கொடை வரம்புமீறிப் போய்விட்டது. அதுவும் இளமையிலே கேட்கவேண்டா. தானப்பெருக்கமும் அதையொட்டிய நடவடிக்கைகளும் மிக அதிகம். ஆனால், மனித னுக்கு நல்ல நோக்கமும் இருந்தது. வீரம், கல்வி இரண்டிலும் பெயர் வாங்கிவிட வேண்டுமென்ற ஆசை இருந்தது. படையிலே சேர்ந்து புகழ் கிடைத்தது. கல்வித் துறையிலும் அறிவாளி களிடையே நல்ல பெயர்தான். ஆனால் மனிதனுக்கு ஒரு பலவீனம் உண்டு; முகஸ்துதியிலே மயங்கிவிடுவார். முகஸ்துதி செய்வோரும் இப்படிப்பட்டவர்களைத்தாமே சூழ்ந்து கொள்கின்றனர்!

அவர்கள் அவரை அளவுக்குமீறிப் புகழ்ந்து நாசமாக்கி விட்டனர். ஆகவே, பொது மக்களுக்கு அவர்மேலிருந்த நல்லெண்ணம் நாளடைவில் குறையத் தொடங்கிற்று. மனித நேயம் மிகுந்த ஒருவர் செல்வந்தராகவும் இருந்தால் பெரும் பாலும் நிலைமை இவ்வாறுதானிருக்கிறது. உலகிலே அயோக் கியர்கள் உண்டு என்பதை அவர்கள் உடனே புரிந்துகொள்வ தில்லை. ஒரு நோய் உண்டாகும் உடலில் எந்தப் பகுதியைத் தொட்டால்கூடப் பொறுக்கமுடியாத வலியாயிருக்குமாம்; இவர் மனமும் அப்படித்தான். பிறரது அற்பத் துன்பத்தைப்பற்றிக் கேள்விப்பட்டால்கூடப் போதும், இவரால் பொறுத்துக்கொள்ள முடியாது. இதனால்தான் இவரைச் சுற்றி, உதவி பெறுவதற் காகப் பெருங் கூட்டமொன்று எப்பொழுதும் காத்துக்கிடந்தது. இவரும் அள்ளி அள்ளிக் கொடுத்தார். செல்வம் குறைந்தாலும், நல்ல மனம் குறையவில்லை. மேலும் மேலும் கொடுத்துக் கொண்டேதானிருந்தார். தம் எதிர்காலத்தைப்பற்றிச் சிறிதும் கவலையுற்றதாகத் தெரியவில்லை. பேச்சக் கெட்டிக்காரத் தனமாக இருந்தது. ஆனால், செயல்களோ மௌட்டியமா யிருந்தன. கொடுப்பதற்கு எதுவும் இல்லாதபோதும், தம்மைச் சுற்றியிருந்த இரவலர் கூட்டத்திடம் இல்லையென்று சொல்ல மனம் வராமல் கொடுப்பதாக வாக்குறுதிகள் தந்தவண்ணமிருந் தார். கொடுப்பதற்கு ஆசை இருந்தது; சக்தி இல்லையே. இரவலர்கள் ஏமாந்தபோது உண்மைநிலை தெரிந்து வாய்கூசாமல் அவரைத் தூற்றினார்கள்.

அப்பொழுது அவர் பட்ட மனவேதனை சொல்லுந்தரமன்று. பிறர் மதிப்பை இழந்துவிட்ட அவர் சுயமதிப்பையும் தன்னம் பிக்கையையும் இழந்தார். முகஸ்துதியிலே சார்ந்து வாழ்ந்து பழக்கமான அவருக்கு அது இல்லாமல் கஷ்டமாயிருந்தது. இப்பொழுதெல்லாம் யாரும் அவரை முகஸ்துதி செய்யத் தயாரா யில்லை; சிறு புகழ்ச்சியோடு நிறுத்திக்கொண்டார்கள். நாளடை வில் அதையும் குறைத்துப் புத்திமதி சொல்லத் தலைப்பட்டார் கள். அந்தப் புத்திமதியை அவர் ஏற்காதபோது அவரைத் தூற்றினார்கள்.'

'அதற்கப்புறம்தான் அவருக்கு நண்பர்களின் சுயஉருவம் தெரியலாயிற்று; வாழ்க்கை இன்னதென இலேசாகப் புரிந்தது. ஒருவரின் அன்பைப் பெறவேண்டுமானால் தாமும் அன்பு செலுத்தவேண்டுமென்ற உண்மை எனக்கு......நான் சொல்ல வந்ததை மறந்துவிட்டேனே.........சுருக்கமாகச் சொன்னால் அவருக்குச் சுயமரியாதை பிறந்துவிட்டது. முதற் காரியமாகத்

தம் பொருளாதாரத்தைச் சீர்ப்படுத்தத் தொடங்கினார். அதற்காக ஐரோப்பா முழுவதும் கால்நடையாகப் பிரயாணம் செய்யத் திட்டமிட்டார். விநோதமான மனிதரில்லையா! விநோதமாகத் திட்டமிட்டுச் செயல்படுத்தினார். இப்பொழுது செல்வ நிலையும் சற்று உயர்ந்திருக்கின்றது. வயது முப்பதாகிறது! இப்பொழுதும் தானம் செய்கிறார். ஆனால், பாத்திரமறிந்து அளவோடு செய்கிறார். பழைய நகைச்சுவையுணர்வு மாற வில்லை. வேடிக்கை நடவடிக்கைகளும் இன்னும் இருந்தே வருகின்றன.'

திரு. பருச்செல் பேசுவதைக் கேட்டுக்கொண்டே வந்தேனா, முன்னால் போகிறவர்களைக் கவனிக்கவேயில்லை. திடீரென அவர்களிடமிருந்து பெருங்கூச்சலொலி கிளம்பியது. என்னவென்று பார்த்தால் இளையவள் சோபியா குதிரையினின்று விழுந்து, வேகமான நீரோட்டத்தின் நடுவே உயிருக்குத் தத்தளித்துக் கொண்டிருந்தாள்.

அவள் இருமுறை மூழ்கி மூழ்கி எழுந்ததைப் பார்த்தேன்; செயலிழந்து கட்டைபோலானேன்; உணர்ச்சி மிகுதியாலோ என்னவோ அசையமுடியாமல் அப்படியே நின்றுகொண்டிருந்தேன். அப்பொழுது என் தோழர் ஓடிச் சென்று நீருக்குள் பாய்ந்தார். அவளிருக்குமிடம் சேர்ந்து அவளைத் தூக்கிக் காப்பாற்றி மறு கரைக்குச் சென்றார். அவர் மாத்திரம் அப்பொழுது அங்கு இருந்திராவிடில் என் மகளின் கதி என்னவாகியிருக்கும்?

நாங்கள் ஓடையின் வேகமில்லாத பகுதியைத் தேடிக் கடந்து மறுகரையை அடைந்தோம். பருச்செல்லும் சோபியாவும் இருந்தவிடம் சென்று, முதலில் அவருக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்தோம். சோபியாவின் நன்றியுணர்வோ விவரிக்க முடியாதது. அதைக் கற்பனைபண்ணிக் கொள்வதே எளிது. அவளும் அதைச் சொற்களால் வெளியிட முற்படவில்லை; பார்வையால்தான் தெரிவித்துக்கொண்டாள். அவரது தோளில் சாய்ந்திருந்த அவள் இன்னும் தன்னை விடுவித்துக் கொள்ள வில்லை. அவரது சார்பு மேலும் தேவை என்று உணர்த்த விரும்பினாளோ?

அவரை எங்கள் வீட்டுக்கு அழைத்து உபசரிக்க வேண்டு மென்று என் மனைவி விரும்பினாள்; நன்றிக்கு ஓர் அடையாளம் ஆகும் அது என்று நினைத்தாள். அடுத்து வந்த சத்திரத்தில் நாங்கள் தங்கி ஓய்வெடுத்துக் கொண்டோம். எல்லோருமாகச் சேர்ந்து உணவு அருந்தினோம். அதன் பின்னர்த் திரு. பருச்செல்

எங்களிடம் விடைபெற்றுக் கொண்டார். ஏனெனில், அங்கு எங்கள் வழி பிரிந்தது.

நாங்கள் எங்கள் பயணத்தைத் தொடர்ந்தோம். அவரைத் தனக்கு மிகவும் பிடித்துவிட்டதென்று என் மனைவி வழிநெடுகச் சொல்லிக்கொண்டே வந்தாள். அவருடைய பிறப்பும் செல்வ நிலையும் நம்முடையவற்றோடு ஒத்தவையாயிருந்தால் அவர் நம் வீட்டில் சம்பந்தம் செய்துகொள்வது தனக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கும் என்றாள். அவள் பேச்சில் தொனித்த ஒய்யாரம் எனக்குச் சிரிப்பை வரவழைத்தது. மனக்கோட்டை மகிழ்ச்சி அளிக்கிறதென்றால் கட்டிக்கொண்டு போகட்டுமே.

4

[பணக்குறைவிலும் மனநிறைவு. மகிழ்ச்சி என்பது சூழ்நிலையிலே அன்று, மனத்திலே விளைவதுதான் என்று நிரூபணமாகிறது.]

நாங்கள் எங்கள் புதிய இடத்துக்குப் போய்ச் சேர்ந்தோம். சொந்த நிலத்தில் உழுது பயிரிடும் உழவர்கள்கொண்ட சிற்றூர் அது. செல்வத்துக்குப் பழக்கப்பட்டவர்களில்லை; வறுமையும் கிடையாது. அவர்களது எளிய தேவைகள் பெரும்பாலும் அவ்விடத்திலேயே கிடைத்து வந்தன. தேவைக்கு மேற்பட்ட பகட்டுப்பொருள்களைத் தேடி அவர்கள் பட்டணம் என்றும் நகரம் என்றும் ஓடுவது கிடையாது. நவநாகரிகத்தால் கறைபடாமல் ஓர் ஆதி எளிமையுடன் அங்கு வாழ்க்கை ஓடியது. மிதவாழ்வை ஓர் அருங்குணமாகப் போற்றுவது ஏனென்றுகூட அவர்களுக்குப் புரியவில்லை. ஏனெனில், அவர்கள் பகட்டு வாழ்க்கையைச் சிறிதும் அறிந்திருக்கவில்லை. உழைப்பில் வெகு உற்சாகம் கொண்டவர்கள்; பண்டிகைகளை மகிழ்ச்சியோடு கொண்டாடினர். கிறிஸ்துமஸ் காலத்தில் கீதங்கள் எங்கும் ஒலித்தன. வாலந்தினா நாளில் அதிகாலையில் தவறாமல் காதல் முடிச்சுகள் அனுப்பினார்கள். சாம்பற் புதன்கிழமைக்கு முந்திய நாள் அப்பம் செய்து சாப்பிட்டார்கள். ஏப்ரல் முதல் நாளில் ஏமாற்றுவித்தைகளால் ஊர் அமர்க்களப்பட்டது. மிகாவேல் திருநாளில் கொட்டைகள் தின்றார்கள்.

நாங்கள் வருவது தெரிவிக்கப்பட்டிருந்தது. சபைப் பாதிரியாரைச் சந்திக்க ஊர்க்காரர்அனைவரும் நல்ல ஆடைகள் அணிந்து குழல் மேளதாளங்களோடு திரண்டு எதிர்கொண்டு வந்தனர். விருந்தும் தயார் செய்திருந்தனர். நாங்கள் அதை மகிழ்ச்சியாக அருந்தினோம். உரையாடலில் அறிவு தூக்கலாய் இல்லையெனினும் அவர்கள் கள்ளமில்லாமல் சிரித்து முகமலர்வாயிருந்தது எனக்கு மனநிறைவளித்தது.

எங்கள் வீடு ஒரு மலையடிவாரத்தில் அமைந்திருந்தது. வீட்டுக்குப் பின்னால் புதர்க்காடு கவிந்துகிடந்தது. எதிரே ஒரு சிற்றோடை சலசலத்துக்கொண் டோடியது. வீட்டின் ஒருபுறம்

புற்காடும் மறுபுறம் ஒரு மைதானமும் இருந்தன. எங்கள் பண்ணை இருபது ஏக்கரும் அருமையான மண். முந்திய சொந்தக்காரரிடமிருந்து நற்பெயர் உரிமையை நூறு பவுன்கள் கொடுத்து வாங்கியிருந்தேன். நிலத்தைச் சுற்றி வேலியில் எல்ம் மரங்களும் வேலிப் புதர்ச் செடிகளும் வளர்ந்து கலந்துகிடந்த அழகு, மனத்தை மயக்கிற்று. புல்வேய்ந்த கூரைவீடு அடக்கமாய் அரவணைப்பாய் இருந்தது. உள்ளே வெள்ளையடிக்கப்பட்டுத் தூய்மையாயிருந்த சுவர்களை என் பெண்கள் தாங்கள் எழுதிய சித்திரங்களால் அலங்கரித்தார்கள். கூடத்திலேதான் அடுக்களையும். அதனாலென்ன? கூடம் குளிரில்லாமல் வெதுவெதுப்பாயிருக்க அது உதவிற்று. மேலும் அடுக்களை ஏனங்களையும் செப்புப் பீங்கான் பாத்திரங்களையும் தேய்த்து மினுக்கி அடுக்குக்களில் வரிசையாய் அடுக்கி வைத்தது கண்ணுக்கு விருந்தாய் இருந்தது. அது மாத்திரமன்று; வேறு தட்டுமுட்டு அலங்காரங்கள் தேவையில்லாமலும் போயிற்று. இவ்வறையைத் தவிர மேலும் மூன்று அறைகள் இருந்தன. எனக்கும் என் மனைவிக்குமான அறையினுள்ளே வேறொரு சின்ன அரங்கு வீடு; அது என் பெண்மக்களுக்கு. இரண்டு படுக்கை கொண்ட மூன்றாவது அறையைப் பையன்கள் பயன்படுத்திக் கொண்டனர்.

இந்தச் சின்ன சுயராச்சியத்தை ஆள நான் சில சட்டதிட்டங்கள் வகுத்தேன். விடியற்காலையில் எல்லோரும் கூடத்தில் கூடவேண்டும். அதற்கு முன்னே வேலையாள் அங்கே நெருப்பு மூட்டியிருப்பான். நாங்கள் ஒருவரையொருவர் முறைப்படி வாழ்த்துவோம். நற்குடி அடையாளங்களான இந்த ஆசாரங்களை முறையாக அனுசரிக்காமல்விட்டால் தான்தோன்றித்தனம் பரவி உறவுகள் பாழாகிவிடும் என்பது என் கருத்து. அதன் பின்னர் ஜெபம். புதுநாளைக் காணச்செய்த இறைவனின் பெருங் கருணைக்குத் துதி செலுத்தும் கடமை முடிந்ததும் நானும் என் மகனும் வெளிவேலைகளைக் கவனிக்கச் செல்வோம். மனைவியும் பெண்மக்களும் அடுப்பு வேலையைத் தொடங்குவர். குறிப்பிட்ட நேரத்தில் காலையுணவு தயாராகிவிடும். இவ் வுணவுக்கு அரை மணியும் இரவுச் சாப்பாட்டுக்கு ஒரு மணியும் நான் அனுமதித்திருந்தேன். இவ் வேளைகளில் பெண்கள் பேசிச் சிரித்துக் கொண்டிருப்பார்கள். நானும் என் மகனும் தத்துவார்த்தமாக ஏதேனும் உரையாடிக் கொண்டிருப்போம்.

சூரியோதயத்தோடு தொடங்கிய வேலையை அது மறைந்த பின் நீட்டிப்பதில்லை. எங்கள் வரவை ஆவலோடு எதிர்பார்த்திருக்கும் வீட்டினரைப் பார்க்கத் திரும்பிவிடுவோம். கணப்பில்

நெருப்பு எரிந்துகொண்டிருக்கும். கணப்பங்கரை சுத்தமாயிருக்கும். சிரித்த முகத்தோடு வீட்டில் எங்களை வரவேற்பார்கள்.

இங்கேயும் விருந்தினர் வந்தனர். அடுத்து வசித்த 'பிளாம்பரோ' குடியானவர் வருவார்; நிறுத்தாமல் பேசுவார்; கண் தெரியாத குழலூதி அடிக்கடி வருவார்; எங்கள் நெல்லி மதுவைச் சுவைத்துவிட்டுப் போவார். இவ்வூரிலும் எங்கள் நெல்லி மது கீர்த்தி பெற்றுவிட்டது. நல்லபடியாகப் பொழுதைப் போக்க இம்மக்கள் பல வழிகள் தெரிந்து வைத்திருந்தனர். பக்கவாத்தியத் தோடு பல கதைப் பாட்டுகள் பாடினார்கள். 'ஜானி ஆர்ம்ஸ்ட் ராங்கின் கடைசிக் குட்நைட்', 'கொடுமைக்காரி பார்பரா ஆலன்' இத்தியாதி கதைப் பாடல்கள்.

ஜெபத்தோடு தொடங்கிய நாளை ஜெபத்தோடு முடிப் போம். சிறுவர் இருவரும் வேதபாடம் வாசிப்பர். தெளிவாகச் சத்தமாக வாசிப்பவனுக்கு ஞாயிறு கோயில் உண்டியலில் போட ஒரு பென்னி[1] கொடுக்கப்படும்.

ஞாயிற்றுக் கிழமை வந்தால் பெண்களின் ஒப்பனை தொடங்கி விடும். பழைய பகட்டு படாடோபம் எல்லாம் இங்கே ஆகாது என்று நான் இதோபதேசம் பண்ணி வைத்திருந்தேன். ஆயினும் ஆடம்பர ஆசை பெண்களைவிட்டு அகன்றதாகத் தெரியவில்லை. ஆடைகளிலே லேஸ் என்ன, ரிப்பன் என்ன, மணி என்ன! என் மனைவிக்கும் அவளுடைய பழைய சிவப்புப் பட்டு உடுப்புமீது தனி மோகம் உண்டு. எப்பொழுதோ ஒரு காலத்தில் அது அவளுக்குப் பொருத்தமாயிருக்கிறது என்று நான் சொல்லி விட்டதுதான் காரணம்.

புது ஊர் சென்ற பின் வந்த முதல் ஞாயிற்றுக் கிழமையன்று அவர்களது ஆரவாரத்தைக் கண்டு எனக்கு எரிச்சல் வந்தது. காலையில் காலந்தாழ்த்தாமல் கோயிலுக்குச் சென்றுவிடவேண்டு மென்று நான் முந்திய நாளிரவே என் மகள்களிடம் சொல்லியிருந் தேன். சபையினர் வருவதற்கு முன்பே நாங்கள் கோயிலுக்குள் போயிருப்பதுதான் என் விருப்பம். நான் சொன்னபடியே பெண்களும் அதிகாலையிலேயே தயாராகிக் கொண்டிருந்தனர். காலையுணவு அருந்த மூவரும் கூடத்துக்கு வந்ததும் நான் கண்ட காட்சி! வாசனைத் தைலம் தடவிக் கூந்தலைத் தூக்கிக் கொண்டையிட்டு, முகத்திலே நறுமணச் சாந்துகள் அப்பி, நெடு நீளமான ஆடைத் தொங்கல்களைச் சேர்த்துக் கொசுவிப் பின்னால்

---

1 பென்னி : குறைந்த மதிப்புள்ள நாணயம்

செருகி, அவர்கள் அசையும்போதெல்லாம் அது சரசரக்க எனக்குச் சிரிப்புத்தான் வந்தது. என் மனைவிக்கும் அறிவில்லையே என்று எண்ணிக்கொண்டேன்.

இந்த நெருக்கடியைச் சமாளிக்க நான் ஒரு வழிசெய்தேன். மோசேயைப் பார்த்துப் பெரிய தோரணையுடன் :

'நமது கோச்சு வண்டியைக் கொண்டுவா' என்று உத்தர விட்டேன். பெண்களுக்கு வியப்பு. நான் அமைதியாக அதை மற்றுமொருமுறை சொன்னேன். என் மனைவி கேட்டாள்:

'இதென்ன விளையாட்டு, இது ஒரு தூரமா? நடந்து விடலாம், கோச்சு எதற்கு?'

'தவறுசெய்கிறாய், பெண்ணே. இந்த அலங்காரங்களோடு நடந்தால் இந்த ஊரின் சிறுவர்கள் நமது பின்னால் ஊளையிட்டுக் கொண்டு வருவார்கள். அதனால் நமக்குக் கோச்சு வேண்டும்.'

'ஏன் சார்ல்ஸு, உங்கள் குழந்தைகள் பாந்தமாய் உடுத்திக் கொள்வது உங்களுக்குப் பிடிக்கவில்லையே.'

'நீங்கள் பாந்தமாக உடுத்திக்கொண்டால் நான் குறை சொல்வேனா ?'

'இது பாந்தமில்லையம்மா ; வேண்டாத பகட்டு. இந்த விறைத்த கொசுவங்களும், அலங்காரத் தொங்கல்களும், குறத்திச் சில்லாட்டைகளும், இந்த ஊர்ப் பெண்கள் நம்மை வெறுப் பதற்குத்தான் உதவும்.'

நிதானமாக மேலும் சொன்னேன் ; 'வேண்டா, என் மக்களே, இந்த நீண்ட உடுப்புகளைக் கத்தரித்துச் சிறியதாய் எளிமையாய் மாற்றித் தையுங்கள். இந்தப் பகட்டைக் கொண்டுசெலுத்து வதற்கு ஆதாரமான செல்வநிலையில் நாம் இப்பொழுது இல்லை. ஆகவே, இவ்வுடை நமக்கு அழகு செய்யாது. இந்த வாலும், தோலும், குஞ்சமும், கொசுவமும் பணக்காரர்களுக்கும்கூட அழகு கூட்டுவதில்லை என்பதுதான் என் கருத்து. சிந்தித்துப் பார்த்தால் இந்த வேண்டாத தொங்கல்களைக்கொண்டே எத்தனையோ ஏழைகளுக்கு உடைகள் தைத்துவிட முடியுமென்பது உங்களுக்குத் தெரியும்.'

இதமான இந்தக் கண்டனம் நல்விளைவைத் தந்தது. அமைதி யுடன் அவர்கள் தங்கள் அறைக்குச் சென்று உடையை மாற்றி விட்டு வந்தார்கள். மறுநாள் என் மகள்கள் இருவரும் அவர் களாகவே அந்தத் தொங்கலாடையைக் கத்தரித்துத் தம்பிமார் டிக்குக்கும் பில்லுக்கும் சட்டைகள் தைத்துக்கொண்டிருந்ததைக் கண்டேன். அதையும்விட விசேஷமென்னவென்றால் கத்தரித்துச் சிறிதாக்கிய உடுப்புகள் என் குமாரத்திகளுக்கு மிகப் பொருத்த மாய் அழகாயிருந்தன.

5

[பெரிய இடத்து அறிமுகம், ஆசை அனர்த்தமாவதும் உண்டு.]

எங்கள் வீட்டினின்று சற்றுத் தள்ளி, காட்டுப் புதர்களும் கொடிகளும் அடர்ந்து பந்தல் போன்றிருந்த ஓர் இடத்தில் எனது முந்தைய பாதிரி இருக்கைகள் போட்டு வைத்திருந்தார். தட்ப வெப்பம் இதமாக இருக்கின்ற நாள்களிலே வேலை முடிந்த பின்னர் நாங்கள் அங்குப் போய் இயற்கையழகைச் சுவைத்துக் கொண்டிருப்பது வழக்கம். அங்கு அமர்ந்து தேநீர் அருந்துவதும் உண்டு. இப்பொழுதெல்லாம் தேநீர் எந்நாளும் அல்லாமல் இப்படி அபூர்வமாகச் சில நாள்கள் மட்டுமே அருந்தும் பானமாகி விட்டிருந்தது. ஆகவே, அதைத் தயாரிப்பதும், சாந்தமான சூழ்நிலையில் அமர்ந்து பரிமாறி அருந்துவதும் ஒரு சடங்குபோல் தனி மகிழ்ச்சியைத் தந்தது. இந்த வேளைகளில் சிறுவர் இருவரும் வாசித்துக் காட்டுவார்கள். அதன் பின்னர்தான் தேநீர் பரிமாறப்படும். சலிப்பைத் தவிர்க்கச் சில சமயங்களில் பெண்கள் கிதார் வாசித்துப் பாடுவார்கள். அவர்கள் இசையில் ஈடுபட்டிருக்கையில் நானும் என் மனைவியும் மலைச்சரிவில் உலாவி வருவோம். ஆரோக்கியமான காற்றை அனுபவித்துக்கொண்டு மலைச்சரிவில் பூத்துக் கிடக்கும் நீலமணிப் பூக்களைக் கண்டு களித்தபடியே, குழந்தைகளைப்பற்றிப் பேசியவாறு உலாவுவது மனத்துக்குச் சுகமாயிருக்கும். எந்த நிலையில் இருந்தாலும் அந்தந்த நிலையில் அனுபவிப்பதற்கென வாழ்க்கையில் எத்தனையோ இன்பம் தேங்கிக் கிடக்கிறது. இப்படித்தான் நாங்களும் பகல் முழுவதும் உழைத்துக் களைத்தாலும் மாலையில் மனத்தில் துளியும் தொல்லை இல்லாமல் நிம்மதியாக இருந்து வந்தோம்.

அது இலையுதிர் காலம். விடுமுறை நாள். வேலைகளை ஒதுக்கி வைத்துவிட்டு ஓய்வாக இருக்க விரும்பிக் குடும்ப மொத்தமும் அந்தப் புதர்ப் பந்தரில் போய் அமர்ந்திருந்தோம். பெண்கள் வழக்கம்போல் இசைக்கச்சேரி நடத்திக்கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது இருபது தப்படி தள்ளி ஒரு மான் நொண்டியபடி வேகமாக ஓடியதைக் கண்டோம். அது இரைத்ததைப் பார்த்து வேட்டையாள்கள் அதைத் துரத்தி வந்திருக்கின்றனர் என யூகித்தோம். அதைக் கண்டு பரிதாபப்பட்டுக் கொண்டிருக்கையிலேயே நாய்களும் குதிரைமீதமர்ந்த வேட்டையாள்களும் அது ஓடிய திக்கிலேயே பாய்ந்து அதைத் துரத்திப் போயினர். வீட்டுக்குத் திரும்பிவிடலாமென எனக்குத் தோன்றியது. ஆனால் என் மனைவியும் பெண்மக்களும் வியப்பினாலோ, ஆவலினாலோ, வேறு மறைவான நோக்கம் காரணமாகவோ இருந்த இடத்தை விட்டு அசைந்தார்களில்லை. முதல் குதிரைக்காரன் அதிவேகமாகப் பாய்ந்து போய்விட்டான். அவன் பின்னால் வந்த நாலைந்து பேர்களுக்கும் அதே அவசரந்தான். கடைசியாக வந்த—உயர்குடித் தோற்றமுள்ள—இளைஞர் ஒருவர் சற்று முன்னால் வந்து எங்களைக் கவனித்தபடி, வேட்டையைத் துரத்துவதை விட்டு, நின்ற வேலையாளிடம் குதிரையைக் கொடுத்து விட்டுச் சற்று அலட்சியமாக ஒரு பெருந்தோரணை போட்டவண்ணம் எங்களை நோக்கி வந்தார். அறிமுகம் வேண்டுமே என்று அவர் நினைத்ததாகத் தெரியவில்லை. வரவேற்பு நிச்சயம் கிடைக்கும் என்று எண்ணியவர்போல என் பெண்களிடம் முகமன் தெரிவிக்க முற்பட்டார். இது முறையை மீறியதாக அவர்களுக்குப் பட்டிருக்கவேண்டும். அவர்கள் அவருக்கு முகம் கொடுக்கவில்லை. எனவே, அவர் எங்களிடம் தம்மை அறிமுகப் படுத்திக்கொண்டார். அவர் பெயர் தாரன்ஹில்லாம். சுற்றியுள்ள பிராந்தியத்துக்கு அவர்தாம் நிலப்பிரபுவாம். இதன் பின்னர்த் திரும்பவும் பெண்கள் பக்கம் திரும்பி வணக்கம் தெரிவித்தார். 'ஐசுவரியத்திற்கும் அழகான ஆடைகளுக்கும் ஒரு சக்தி இருக்கத்தான் செய்கிறது! இம்முறை அவர்கள் அவரை நிராகரிக்கவில்லை. தன்னம்பிக்கையோடு சகஜமாகப் பேசினார் அவர். நாங்கள் விரைவில் பழகிவிட்டோம். இசை வாத்தியங்களைக் கண்டவுடன் பெண்களைப் பாடும்படியாகக் கேட்டார். ஏற்றத்தாழ்வான உறவுகளை நான் அனுமதிப்பதில்லை. எனவே, பெண்களைப் பார்த்துக் கண் சாடையாக சம்மதிக்கவேண்டாவெனத் தெரிவித்தேன். ஆனால், என் மனைவியோ கண் சாடையால் பாடும்படி அவர்களுக்கு அனுமதி கொடுத்தாள். எனவே, அவர்கள் கவிஞர் டிரைடனின் பாடலொன்றை இன்முகத்துடன் பாடினர். பாட்டின் தேர்வும், பாடிய திறமும் அவருக்கு மகிழ்வூட்டியதாகச் சொல்லி வியந்து பாராட்டினார். பின், அவர் கிதாரை எடுத்தார். வாசித்தது நன்றாக இல்லை. ஆனால், என் பெரிய மகளோ அவர் தந்த பாராட்டை அவருக்கு வட்டியும் முதலுமாய்த் திரும்ப வழங்கினாள். தங்கள் பாட்டு

வாத்தியாரை விடவும் அவர் சுத்தமாக வாசிப்பதாகச் சொன்னாள். அப் பாராட்டை மகிழ்ச்சியுடன் ஏற்குமுகமாக அவர் அழகாய்த் தலைகுனிந்து வணங்கினார். அவள் உடனே தன் உடுப்பின் இரு ஓரங்களையும் இரு கைவிரல் நுனிகளால் தொட்டு முன்னால் வளைந்து புன்முறுவலுடன் பதில் மரியாதை செய்தாள். அவளது ரசனையை அவர் புகழ்ந்தார். அவரது அறிவை அவள் மெச்சினாள். ஆகக்கூடிப் பல்லாண்டு பழகியவர் போலாயினர். தாயாருக்கோ மகிழ்ச்சி பொங்கிற்று. வீட்டுக்கு வந்து ஒரு குவளை நெல்லிமது சாப்பிட்டுவிட்டுத்தான் போக வேண்டுமெனக் கட்டாயப்படுத்தினாள். குடும்ப மொத்தமும் அவரை மகிழ்வூட்டத் துடித்ததாகத் தோன்றியது. தாங்கள் நவீனம் என்று நினைத்த விஷயங்களைப்பற்றிப் பின் பெண்கள் அவரிடம் பேச்சுக் கொடுத்தனர். மோசே பழங்காலத் தைப்பற்றிப் பேசத் தொடங்கினான். எல்லோரும் சிரிக்கவே அவனும் கள்ளமில்லாமல் சிரித்துக்கொண்டான். சிறுவர் இருவரும் அவரருகே போய் ஒட்டிக்கொண்டு தங்கள் அழுக்குக் கைகளால் அவர் ஆடையின் 'லேசு'களைத் தடவிப் பார்த்தனர்; கோட்டுப் பாக்கெட்டை மூடியிருந்த சிறு துணித்துண்டை விலக்கி உள்ளே என்ன இருக்கிறது என்று ஆராய்ந்தனர். அவர்களை அவரிடமிருந்து விலக்கிவிட, நான் பெருமுயற்சி செய்தவாறிருந் தேன். ஆயின் பலன் அதிகமில்லை. மாலை மயங்கி வந்தபோது அவர் எங்களிடம் விடைபெற்றுக்கொண்டார். மீண்டும் எங்களை வந்து பார்க்க அனுமதி கோரினார். நிலப் பிரபுவாயிற்றே! நாங்கள் உவப்புடன் இணங்கினோம்.

அவர் போனதும் என் மனைவி ஒரு குடும்பக் கூட்டம் போட்டாள். அவர் சந்திப்பைப்பற்றிப் பேசி அலசினோம். இச் சந்திப்பை ஒரு பெரிய அதிருஷ்டத் திருப்பமாக என் மனைவி கருதினாள். 'எத்தனையோ அற்புதமான நிகழ்ச்சிகள் நடக்க வில்லையா ? மிகப் பெரிய மனிதர்களிடம் முழிக்கு முழி சரியாய்ப் பழக நமக்கும் வாய்ப்புக் கிடைக்கலாம், யார் கண்டது ?' என்று கேட்டாள்.

அப்புறம் திரும்பவும் என்னைப் பார்த்துக் கேட்டாள். 'ரிங்கில்ஸ் பெண்கள் இருவருக்கும் பெரிய இடத்தில் கலியாணம் முடிந்திருக்கிறதே, நமது பெண்களுக்கு நடக்காதா என்ன ?'

'நடக்காமல் என்ன ? ஆனால் திரு. சிம்ப்க்கின்ஸுக்கு லாட்டரியில் பத்தாயிரம் பவுன் விழுந்ததே. நமக்கு ஏன் பிளாங்கி யாயிற்று ?'

'ஏன் சார்ல்ஸ், நானும் என் பெண்களும் சந்தோஷமாக இருந்தால் உங்களுக்குப் பிடிக்கிறதேயில்லை. இப்படித்தான் எதையாவது சொல்லி எங்கள் உற்சாகத்தை மட்டுப்படுத்து கிறீர்கள். சோபியா, நீ சொல்லம்மா, இப்பொழுது வந்தவரைப் பற்றி உன் அபிப்பிராயம் என்ன? அவர் நல்லவராகத் தோன்ற வில்லை?'

'ரொம்ப நல்லவராகத்தான் தோணுது அம்மா. எல்லா விஷயத்தைப் பற்றியும் பேசுகிறார். சின்ன விஷயமா இருந்தா அதைப்பற்றித்தான் நிறையப் பேசுகிறார்' என்றாள் சோபியா. ஒலிவியா சொன்னாள் :

'எப்படியானாலும் அவர் ஓர் ஆண்பிள்ளை. அதில் சந்தேக மில்லை. ஆனால் எனக்கென்னவோ அவரைப் பிடிக்கவில்லை. மரியாதை தெரியவில்லை. அளவுக்குமீறிச் சகஜமாகப் பழகுகிறார். ஐயோ! அவர் கிதார் வாசித்தது. மிக அதிர்ச்சி தந்த விஷயம்!'

இரு பெண்களின் பேச்சையும் நான் நேர்மாறாக அர்த்தப் படுத்தினேன். சோபியா மனத்தில் அவரைத் தாழ்வாய் மதிப் பிட்டாள் என்றும், ஒலிவியா இரகசியமாய் அவரை உயர்வாய் நினைத்தாள் என்றும் கண்டுகொண்டேன்.

'குழந்தைகளே, உங்கள் அபிப்பிராயம் எப்படியோ. உள்ளதைச் சொல்லவேண்டுமானால், முதல் சந்திப்பில், என் அபிப்பிராயம் அவருக்குச் சாதகமாயில்லை. நமது நண்பர்கள் நமது தரத்திலேயே அமையவேண்டும். ஏற்றத்தாழ்வான நட்பு பெரும்பாலும் வெறுப்பில்போய் முடியும். அவர் என்னதான் சகஜமாகப் பழகியதாய்க் காட்டிக்கொண்டாலும் நம்மிடையே உள்ள பிளவை அவர் துல்லியமாய் உணர்ந்திருந்தார் என்று தான் எனக்குத் தோன்றியது. பணத்தைக் கண்டு மயங்கிச் செல்வந்தர் பின்னாலே அற்பர்கள்தாம் அலைகின்றார்கள். அதுபோலவே சில பெண்களும் பணத்துக்குப் பறந்து பணக்கார இளைஞர்களைக் கண்டு மயங்குகின்றனர். அவர்களையும் இழிவாகத்தான் உலகம் மதிப்பிடுகின்றது. நிலப்பிரபுவுக்கும் நமக்கும் செல்வத்திலே பெரும் பிளவு இருக்கிறதனாலே, அவர் நேர்மையான நோக்கத்துடன் நம்முடன் பழகினால்கூட நாம் சற்றுக் குறைவாகவே மதிப்பிடப்படுவோம். ஆனால், அந்தோ! அவரது நோக்கம் நேர்மையானதாக இல்லாவிட்டாலோ, அதை நினைத்தால்கூட எனக்கு மனம் பதறுகின்றது. என் குழந்தை

களின் நன்னடத்தையில் எனக்கு ஐயம் கிடையாது. ஆனால், அவருடையதைப் பற்றியோ எனக்குச் சந்தேகமே...'

தொடர்ந்து பேசவிருந்த எனக்குத் தடையாக யாரோ ஒருவன் உள்ளே வந்தான். தாரன்ஹில் அனுப்பிய வேலையாள் அவன். மானிறைச்சியோடு அவரது வாழ்த்துகளும், கூடிய சீக்கிரம் எங்கள் வீட்டுக்கு ஒரு நாள் விருந்துக்கு வருவதாகச் செய்தியும் வந்தன. சமயத்தில் வந்து என் உபதேசத்தை அமுக்கி அழித்து நின்றது அப் பரிசு. அப் பரிசுக்கு முன்னால் என் சொற்கள் எடுபடா என்பதை நான் புரிந்துகொண்டேன். எனவே, நான் அதிகம் பேசாமல் நிறுத்திவிட்டேன். ஆபத்தைச் சுட்டிக் காட்டியா யிற்று; இனி அவர்கள் பாடு. அவர்களே தாம் அதைத் தவிர்க்க வேண்டும். காவல் தேவைப்படும் பெண், காவல் புரியப்படும் சிரமத்துக்குத் தகுந்தவள் அல்லள்.

6

[கிராமத்தில் ஒரு வீட்டுக் கணப்பங்கரையிலே மகிழ்ச்சியின் தாண்டவம்.]

நிலப்பிரபுவின் நட்புக் குறித்துப் பேச்சுச் சற்றுச் சூடாகவே அமைந்துவிட்டது. எனவே, முடிவில் சமரசமாக மானிறைச்சியில் சிறிதை அன்றிரவே சமைத்து உண்ணலாமென முடிவுசெய்தோம். பெண்கள் உற்சாகமாக வேலையில் முனைந்தனர்.

'இவ் வேளையில் விருந்தினர் வந்தால் அருமையாயிருக்கும். அண்டை அயலார் யாரோடாவது விருந்தைப் பகிர்ந்துகொள்வது சுகம் தரும் விஷயம்' என்றேன்.

'அதோ வருகிறாரே நமது பருச்செல்' என்றாள் என் மனைவி. 'நமது சோபியாவைக் காப்பாற்றினாரே, உங்களையும் வாதத்தில் தோற்கடித்தாரே, அவர்!'

'இதோ பார், என்னைத் தோற்கடிக்க இந்தப் பூலோகத்தில் யாரும் கிடையாது! உன் வாத்துக்கறிச் சமையலை நான் என்றைக்காவது குறைகூறி யிருக்கிறேனா? என் சர்ச்சையில் நீ தலையிடாதே.'

அதற்குள் திரு. பருச்செல்லும் வீட்டினுள் நுழைந்தார். எல்லோரும் அவருடன் கைகுலுக்கி மகிழ்வுடன் வரவேற்றோம். சின்ன டிக்கு ஒரு நாற்காலியைப் போட்டுக் கொடுத்தான். இந்த எளியவரின் நட்பு எனக்கு மனநிறைவளித்ததற்கு இரு காரணங்கள் உண்டு. ஒன்று அவரும் என் நட்பை விரும்பினார் என்பது. மற்றது அவர் தம்மால் இயன்றவரை எல்லாரோடும் நட்புறவுடன் பழக முயல்வது.

திரு. பருச்செல்லை எங்களூரில் அனைவருக்கும் தெரிந்திருந்தது. இளமையில் உதவாக்கரையாகச் சுற்றினார் என்று அவரைப்பற்றி வதந்தி இருந்தது. இப்பொழுதும் வயது ஒன்றும் அதிகமாகிவிடவில்லை; முப்பது தானிருக்கும். அவர் பேச்சு, அறிவும் விவேகமும் நிறைந்ததாகத்தானிருந்தது. ஆனால்,

பொதுவாக அவர் பெரியவர்களிடம் பேசிக்கொண்டிருப்பதை விடக் குழந்தைகளுடன் விளையாடிப் பொழுதைக் கழிக்கவே விரும்பினார். குழந்தைகள் கவடு சூது தெரியாத சின்ன மனிதர்கள் என்று சொல்லுவார். அவர்களுக்குக் கதைகள் சொல்லுவார். கதைப் பாட்டுகள் கற்றுக்கொடுப்பார். அவர்களுக்குக் கொடுக்க வென்றே சட்டைப் பையில் இஞ்சி மிட்டாயும் ஊதல்களும் வைத்திருப்பார். அவர் ஆண்டில் ஒருமுறை எங்களூருக்கு வருவதுண்டாம். வந்து ஊர்க்காரர் உபசரணையில் ஓரிரண்டு நாள்கள் தங்கிவிட்டுப் போவது வழக்கமாம். அன்றிரவு எங்கள் விருந்தினராக இருந்தார். என் மனைவி நெல்லி மதுவை அவருக்குத் தாராளமாய்ப் பரிமாறினாள். கதைகள் சொல்லிப் பழம் பாடல்கள் பாடிப் பொழுதுபோக்கினோம். பெவர்லாந்து விடலை, பொறுமைசாலி கிரிசலா, காத்துஸ்கின்னின் சாகசங்கள், அழகி ரோஸமாந்துவின் உல்லாசப் பந்தர் முதலிய கதைப் பாடல்கள் பாடினோம். வழக்கம்போல் எங்கள் சேவல் இரவு பதினொரு மணிக்குக் கூவியபோதுதான் படுக்கைக்குச் செல்ல ஆயத்தமானோம்.

படுக்கைப் பிரச்சினை எழுந்தது. விருந்தினருக்குக் கொடுக்க எங்களிடம் கட்டிலும் படுக்கையும் கிடையா. எங்கள் வீட்டின் படுக்கைகள் எங்களுக்குத்தாம் போதுமானவை. மதுக்கடைச் சத்திரத்துக்கு அனுப்பலாமென்றாலோ மிகவும் பிந்திவிட்டது. அப்பொழுது டிக்கு தான் மோசேயுடன் படுத்துக்கொண்டால் படுக்கையின் தன் பாதி காலியாகும் என்று சொன்னான். அக்காமார் தன்னைத் தங்கள் படுக்கையில் அனுமதித்தால் அப் படுக்கையின் மறுபாதியும் கிடைத்துவிடும் என்று பில்லும் முன்வந்தான்.

'கெட்டிக்காரக் குழந்தைகள். விருந்தோம்பல் கிறிஸ்தவ ஒழுக்கங்களில் தலையாயது. விலங்குகளுக்குத் தலைசாய்க்க இடமுண்டு ; பறவைகளுக்குக் கூடு உண்டு ; ஆனால் மனிதனுக்குச் சகமனிதன்தான் உதவவேண்டும். மனுக்குலத்தை மீட்க வந்த ஏசுநாதர் ஒரு வழிப்போக்கனாக அந்நியனாகத்தானே உலகுக்கு வந்தார்; பிறக்க வீடின்றிச் சத்திரத்திலே பிறந்தார்; மனிதனது விருந்தோம்பலைச் சோதிக்கத்தான் அப்படி வந்தாரோ என்னவோ ?' என்று சொன்னேன். அதோடு விடாமல் என் மனைவியிடம்,

'தெபோரா, சிறுவர்களுக்குச் சீனிக்கட்டி கொண்டுவந்து கொடு. டிக்குக்குப் பெரிசாகக் கொடு. அவன்தான் முதலில் பேசியது' என்றும் சொன்னேன்.

மறுநாள் புல் அறுத்துச் சேகரிக்கும் வேலை இருந்தது. புல் ஏராளமாக வளர்ந்து காய்ந்து கிடந்தது. எங்கள் அதிதியும் எங்களுக்கு உதவிசெய்ய முன்வந்தார். அவரையும் ஒருவராகச் சேர்த்துக்கொண்டு காலையிலே வேலையைத் தொடங்கினோம். வேலை சுறுசுறுப்பாய் நடந்தது. அரிதாளைக் காற்றில் விட்டு விட்டோம். நான் முதலிலும் மற்றவர் என் பின்னாலும் அறுத்துச் சேர்த்துக்கொண்டு வந்தனர். தன் பகுதி வேலை முடிந்ததும் திரு. பருச்செல், சோபியாவின் பகுதிக்குச் சென்று அவளுக்கு உதவி செய்தார். வேலையைச் செய்துகொண்டே அவள் அருகிலேயே இருந்து அவளுடன் மெல்லப் பேசிக்கொண்டிருந்ததையும் கண்டேன். இந்தக் கஷ்டஜீவி எதற்காக அவளிடம் நெருங்கிப் பழகுகிறார்? ஆனால், சோபியா புத்திசாலிப் பெண்; வாழ்க்கையில் முன்னுக்கு வந்து நல்லபடியாய் வாழவேண்டுமென்ற ஆசைகள் உள்ளவள்; இந்த நாடோடியை அதிகமாக ஊக்குவிக்க மாட்டாள் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது.

மாலையில் வேலை முடிந்தது. இரவு எங்களோடு உணவு அருந்தத் திரு. பருச்செல்லை அழைத்தோம். ஆனால், அவர் இணங்கவில்லை. வேறு வீட்டுக்கு அவசியமாகச் செல்லவேண்டியிருக்கிறதாம். அந்த வீட்டுக் குழந்தைக்காக ஊதல்கூடக் கொண்டு வந்திருக்கிறாராம்.

அவர் சென்றதும் இரவுச் சாப்பாட்டின்போது பேச்சு அவரைப்பற்றித் திரும்பியது.

'வாழ்க்கையில் நன்றாகக் கஷ்டப்பட்டு விட்டார். இளமையில் ஊதாரியாய்த் திரிந்தலைந்த பேரெல்லாம் பின்னாலே இப்படித்தான் சங்கடப்பட வேண்டியதிருக்கிறது. நல்ல அறிவு இருக்கிறது. அதனாலேதான் அவரது பழைய அசட்டு வாழ்க்கையும் அதிகமாய்த் தெரிகிறது. பணம் நிறைய இருந்த காலத்தில் அவரை எத்தனையோ பேர் சுற்றி வந்திருப்பார்கள்? முகஸ்துதி பேசியிருப்பார்கள்? இப்போது நொடித்துப் போய்விட்டதாலே எல்லோரும் அவரை விட்டுவிட்டுப் போய்விட்டார்கள். அவரைச் சூறையாடி, அந்தப் பணத்தை வைத்து எத்தனை பேர் பிழைப்பு நடத்துகிறார்களோ? முன்னாடி அவரைச் சுற்றினவர்கள் இப்போது புதுப் பணக்காரர்களைச் சுற்றுகிறார்களோ என்னவோ? அவர்களைப் போற்றிக்கொண்டு, இவரைத் தூற்றிக் கொண்டு திரிகிறார்களோ என்னவோ? ஆனால் இப்பொழுதுகூட இந்த மனிதருக்கு அறிவு வந்துவிட்டது என்று சொல்லிவிட முடியாது. ''ஏதோ தொழிலைச் செய்தோம், நம் காலில்

நின்றோம்'' என்றில்லாமல் இப்படி எதற்காக ஊரூராய் அலைய வேண்டும்?'

நான் சற்றுக் கடுமையாகத்தான் பேசினேன். ஆனால், அதற்குக் காரணம் எனக்கு மட்டுமே தெரியும். சோபியா மெல்லச் சொன்னாள்.

'அவரது பழைய வாழ்க்கை எப்படி இருந்ததோ, நமக்குத் தெரியாது. அப்படியே இருந்தாலும் இப்பொழுது அவர் ஏழை. அந்த ஏழைமையே அவருக்கு ஒரு தண்டனைதானே. அதை நாமும் குத்திப் பேசுவானேன்? தெய்வம் பழிதீர்க்கின்ற மனிதனிடம் மனிதன் கொடுமையாக நடந்துகொள்ளவே கூடாது என்று நீங்களே அடிக்கடி சொல்லுவீர்கள்.'

மோசே சொல்லுவான் :

'ஆமாம், எனக்கொரு புராணக்கதை நினைவுக்கு வருகின்றது. இசை வல்லுநனான அப்பொல்லோ தேவன் மரிசியா என்ற காட்டேரியை இசைப் போட்டியில் தோற்கடித்து அதை உயிரோடு தோலுரித்துப் போட்டுவிட்டுப் போனானாம். அந்த நிலையில் அந்தக் காட்டேரியை வேறு ஒருவன் வந்து அடித்தானாம். அது கயமைத்தனமாகும் என்று புராணத்திலே சொல்லியிருக்கிறதன்றோ? மேலும், இந்த மனிதரது உண்மை நிலையைப்பற்றி நமக்கு ஒன்றும் அதிகமாகத் தெரியாது. அவர் இப்பொழுது மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறார். அகழெலியின் இருட்டு வளையைப் பார்த்து நாம்தாம் மலைக்கிறோம். அது அங்கே மகிழ்ச்சியாகத்தானே குடியிருக்கின்றது? இந்த மனிதரும் மிக நிம்மதியுடனிருப்பதாகத்தான் எனக்குத் தோன்றுகிறது. அவர் இன்று உன்னோடு பேசிக்கொண்டிருக்கையில் கவனித்தேன், மிகக் குதூகலமாயிருந்தார்.'

மனத்தில் எதுவும் வைக்காமல்தான் சொன்னான். ஆனால், சோபியாவின் முகம் சிவந்துவிட்டது. அதை மறைக்க அவள் சிரிக்க முயன்றாள். தான் ஒன்றும் அதைக் கவனிக்கவில்லை என்று முனகினாள்.

'அவர் முன்னாளில் ஓர் உயர்குடிப் பிறந்த கனவானாகத் தானிருந்திருக்கவேண்டும்' என்று வேறு சொன்னாள். அவள் பேச்சு, முகச்சிவப்பு எதுவும் நல்ல அறிகுறியாய்த் தோன்றவில்லை எனக்கு. எனினும், என் ஐயங்களை என் மனத்திலேயே போட்டுக் கொண்டேன்.

மறுநாள் எங்கள் நிலப்பிரபு எங்கள் வீட்டுக்கு விருந்துக்கு வருவதாக இருந்த நாள். என் மனைவி ஆயத்தங்கள் தொடங்கி விட்டாள். நான் சிறுவர்களுக்குப் பாடம் நடத்திக்கொண்டிருந்தேன். பெண்கள் இருவரும் ஏதோ வேலையாய் மிகச் சுறுசுறுப்பாய் இயங்கினார்கள். எதையோ நெருப்பில் வைப்பதும் எடுப்பதுமாய் இருந்தது. தாயாருக்கு உதவி செய்கிறார்களாக்கும் என்று எண்ணிக்கொண்டேன். சற்றுப் பொறுத்து டிக்கு என் காதருகே வந்து கிசுகிசுத்தான். முகத்துக்குப் பூச ஏதோ சாந்துக் கலவை தயாராகிறதாம். இந்தப் பூச்சுகளை நான் அடியோடு வெறுக்கிறவன். தோலின் இயற்கை மினுக்கத்தை அவை கெடுத்துவிடுகின்றன என்பது என் எண்ணம். எனவே, என் நாற்காலியைத் திருட்டுத்தனமாய் மெல்ல மெல்ல நெருப்பருகே நகர்த்தினேன். கலவைப் பாத்திரத்தைக் கையிலெடுத்து ஓட்டையோ என்று ஆராய்பவன்போல் பார்த்துக்கொண்டிருந்து விட்டுக் கை பிசகியதுபோல் சாந்தை நெருப்பினுள் கவிழ்த்து விட்டேன். இனி வேறொன்று தயாரிக்க அவர்களுக்கு நேரம் கிடையாது!

7

[பட்டணத்துக் கில்லாடி. அடிமுட்டாள்கூட ஓரிரண்டு நாள்கள் வேடிக்கைப் பேச்சுகள் பேசிப் பேர் வாங்கிட முடிகிறது.]

மறுநாள் விடிந்தது. நிலப்பிரபு விருந்துக்கு வருகிறாரென்றால் சும்மாவா. அவருக்குச் சமதையாய் நடக்கவேண்டுமானால் அதற்கேற்ற தடபுடல் வேண்டும்; செலவு எக்கச்சக்கமாயிற்று. என் மனைவியும் பெண்களும் மிக ஆடம்பரமாய் உடுத்திக்கொண்டார்கள் என்பதைச் சொல்லவேண்டியதில்லை.

சொன்னபடியே திரு. தாரன்ஹில்லும் வந்துசேர்ந்தார். குடும்ப குருவும் இன்னோர் அதிகாரியும் உடன் வந்தனர். வேலையாள் பரிவாரமும் வந்திருந்தது. வேலையாள்களைப் பக்கத்து மதுக்கடைக்குச் சென்றுவிடுமாறு உத்தரவிட்டார். அதைக் கேட்ட என் மனைவியோ, வரம்புமீறிய உற்சாகம் கொண்டிருந்ததால் அவர்களும் எங்கள் வீட்டிலேயே விருந்துண்ண வேண்டுமென விரும்பிக்கொண்டாள். இதன் காரணமாக அதற்கப்புறம் மூன்று மாதங்கள் எங்கள் வீட்டில் உணவுத் தட்டுப்பாடு இருந்தது.

முந்தியநாள் திரு.பருச்செல் எங்களிடம் ஒரு செய்தி கூறியிருந்தார். அதாவது, பெரியவன் ஜார்ஜுக்குப் பேசிக் குழம்பிப்போன செல்வி உல்மாட்டைத் தாம் திருமணம் செய்துகொள்வதற்காக நிலப்பிரபு தாரன்ஹில் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கின்றார் என்பதுதான். அதனால் பிரபு வந்திறங்கியதும் கலகலப்பாய் முழுமனத்துடன் அவரை வரவேற்க முடியாமல் ஒரு மாதிரியாகத்தானிருந்தோம் நாங்கள். ஆனால், அது சிறிது நேரத்தில் சரியாகிவிட்டது. ஏனெனில், எல்லோரும் அமர்ந்து பேசிக்கொண்டிருக்கத் தொடங்கியதுமே யாரோ செல்வி உல்மாட்டின் பேச்சை எடுத்தார்கள். உடனே திரு. தாரன்ஹில் மிக அழுத்தமாக 'ஆ! அந்தப் பெண் மகா கோரமாயிற்றே. டன்ஸ்டன் கோயில் கடிகாரத்துக்குக் கீழேயுள்ள விளக்கின் ஒளியில் பார்த்தால்கூட அவள் அழகியல்லள் என்பது தெரிந்துவிடுமே,' என்று சொல்லி அந்த ஹாஸ்யத்துக்குத் தாமே சிரித்தார்.

உடனே நாங்களும் சேர்ந்து சிரித்தோம். பணக்காரர் ஹாஸ்யம் சொன்னால் சிரிக்காமல் இருக்க முடியாதில்லையா?

'இவர் வெகு தமாஷாகப் பேசுகிறாரே,' என்று ஒலிவியாவும் சத்தமாகவே கிசுகிசுத்தாள்.

சாப்பாடு முடிந்தது. மது வழங்கியதும் நான் என் வழக்கப் படியே திருச்சபைநலம் வாழ்த்தினேன். தாரன்ஹில்லின் குடும்பப் பாதிரி அதற்கு நன்றி சொன்னார். அவருக்குத் திருப்பணியில் தான் மிகுந்த ஈடுபாடாம். 'திருச்சபை என் மனையாட்டியைப் போல்' என்று கூறினார் அவர். அதைக் கேட்டதும் நிலப்பிரபு குறும்பாக, 'இதோ பாருங்கள், பிராங்கு, சும்மாவாவது பேசக் கூடாது. திருச்சபை உங்கள் மனையாட்டி என்கிறீர்களே, இப்பொழுது திருச்சபை நீளக்கை அங்கி அணிந்தும், சோபியா அதொன்றும் அணியாமலும் வருகின்றனர் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவர்கள் இருவரில் உங்களுக்கு யாரைப் பிடிக்கும்?'

'நிச்சயமாக இரண்டு பேரையும்தாம்,' என்றார் பாதிரி.

'இந்தத் திருப்பணிப் பித்தலாட்டம் அனைத்தும் சேர்ந் தாலும் ஒரு நல்ல பெண்ணுக்கு ஈடாகாது என்பதுதான் என் கருத்து. உங்கள் தசமபாக நியதி இருக்கின்றதே. அது உண்மையில் ஒரு தண்டனையேயன்றி வேறில்லை. எல்லாம் சுத்த ஏமாற்று வேடம். எனக்கு நன்றாய் நிரூபிக்கமுடியும்,' என்றார் நிலப்பிரபு.

அப்பொழுது மோசே சொன்னான் :

'நீங்கள் நிரூபிக்கவேண்டும். உங்களோடு சர்ச்சைசெய்ய எனக்கு விருப்பம்.'

'ஆஹா, அப்படியே செய்வோம்.'

மற்றவர்களைப் பார்த்துக் கண்ணடித்தார், வேடிக்கைக்குத் தயாராகுங்கள் என்பதுபோல. பின், மோசேயைப் பார்த்து, 'நீங்கள் நிதானமாகச் சர்ச்சை செய்வதானால் நான் சவாலை ஏற்றுக்கொள்ளுகிறேன். உங்களுக்கு எது சம்மதம்? உவமை மரபா? உரையாடல் மரபா?' என்று கேட்டார். சர்ச்சை வாய்ப்புக் கிடைத்த மோசே மகிழ்ந்துபோனான்.

'பகுத்தறிவுப்படி பேசலாம்' என்று பதிலளித்தான்.

''நல்லது. முதலில் கவனிக்கவேண்டியது என்னவென்றால் 'இருப்பது இருக்கிறது' அதை ஒப்புக்கொள்ளுகிறீர்களா? அதை ஒப்புக்கொள்ளவில்லையெனில் ஒன்றுமே மேலே நடவாது.''

'ஆமாம், அதை ஒப்புக்கொள்ள வேண்டியதுதான்.'

'அப்புறமாய்ப் பகுதி முழுமையைவிடக் குறைவானது. அதையும் நீங்கள் ஒப்புக்கொள்ளுவீர்கள் என நம்புகின்றேன்.'

'சரிதான். பகுத்தறிவுக்குட்பட்டது.'

'முக்கோணத்தின் மூன்று கோணங்கள் இரண்டு நேர் கோணங்களுக்குச் சமம் என்பதையும் நீங்கள் மறுக்கமாட்டீர்களென நம்புகிறேன்.'

'அதை யார் மறுக்கமுடியும்?' என்று சொல்லி மோசே எல்லோரையும் மிகப் பெருமையுடன் பார்த்துக்கொண்டான். அப்புறம் பிரபு மிக வேகமாகப் பேசத் தொடங்கினார்.

'சரி, மூலக்கூறுகளை நாம் ஒத்துக்கொண்டுவிட்டதால் இனி, மேலே போகிறேன். சுயம்புவானது சங்கிலிக் கோவையாய் விலோம விகிதத்திலும் வர்க்க விகிதத்திலும் விரிந்துகொண்டே போவதால், ஆன்மீகமென்பது இரண்டாவது மூலக்கூறையே......'

'சற்று நிறுத்துங்கள், சற்று நிறுத்துங்கள். கிறிஸ்தவ தர்ம விபரீதக் கொள்கைகளைப் பற்றிப் பேசுமுன்னால் முதலில் நாம் ஒப்புக்கொள்ளக்கூடிய......'

'என்ன ஒப்புக்கொள்ள மாட்டீர்களா? எல்லாம் ஒன்றை ஒன்று சார்ந்தவையே என்ற அரிஸ்டாட்டிலினது கொள்கையை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா ?'

'சந்தேகமில்லாமல்.'

'சரி, அப்படியானால் நான் முதலில் பகுத்தாராய்ந்து கூறியவற்றில் நீங்கள் தத்துவார்த்தமாய்ப் புறனடைப்பிரகாரம் காரணத்துக்குக் காரியம் உண்டு என்பதை ஒப்புக்கொள்வீர்கள் ? இல்லையெனில் காரணம் கூறுங்கள்.'

'உங்கள் தருக்கமுறை எனக்குப் பிடிபடவில்லை. குழப்பாமல் எளிமையாய்ச் சொன்னீர்களானால் நான் பதிலுரைக்க முற்படுவேன்.'

'அப்படியா ஐயா, நல்லது. உங்களிடம் மிகத் தாழ்மை யாகத்தான் கேட்டுக்கொள்கிறேன். தருக்கக் கூற்றுகள் தாம் தரலாமே தவிர அவற்றைப் புரிந்துகொள்ளப் புத்தியையும் நான் உங்களுக்குத் தரவேண்டுமோ? என்னால் முடியாது, ஸ்வாமி!' எல்லோரும் சிரித்தார்கள். மோசேக்கு முகம் விழுந்துவிட்டது; எதுவும் பேசவில்லை. அதன் பின்னர் மற்றையோர் நடந்ததை மறந்துவிட்டு அவரவர்பாட்டுக்குச் சிரித்துப் பேசிக்கொண்டு இருந்தார்கள். ஆனால், மோசே அதிலொன்றும் கலந்து கொள்ளவே இல்லை.

பிரபுவின் பேச்சு விவாதம் எதுவும் எனக்கு மகிழ்ச்சி தருவதா யில்லை. ஆனால் ஒலிவியாவைக் கவனித்தபோது அவள் அபிப்பிரா யம், முற்றிலும் வேறாக இருந்ததாகத் தோன்றியது. இதெல் லாம் ஒரு தமாஷா என்று அவள் நினைத்ததாகத் தெரிந்தது. பிரபு எதையோ படித்துவிட்டு என்னவோ பேசியதையெல்லாம் நல்ல நகைச்சுவை விருந்தென அவள் எண்ணிக்கொண்டாள்.

திரு. தாரன்ஹில்லுக்கு நூலறிவும் புலமையும் இல்லையே தவிர மற்றப்படி சாதாரண விஷயங்களைப்பற்றித் தாராளமாகப் பேசி னார்; சகஜமாகப் பழகினார். ஓர் உயர்குடிப் பிறந்த சிறந்த கன வானைச் சந்தித்துப் பழகிவிட்டதை எண்ணி அவள் மகிழ்ந்து போனாள். பாவம்! ஒலிவியாவைக் குறைகூறுவானேன்? செல்வம், அழகு, உயர்தர ஆடை, அணிகலன்கள் இவற்றுக்கு மயங்காதார் வெகுசிலர்தாமே? பார்வைக்கு அலங்காரமாகக் காட்சி தரவும், வெளித் தோற்றத்தைச் சிறப்பித்துக் காட்டவும்தானே நாம் நமது பெண்களுக்குப் பயிற்சி அளிக்கின்றோம்? அந்த அலங்காரத்தையும் தோற்றத்தையும் மாத்திரமே அளவுகோலாகக் கொண்டு அவர்கள் பிறரை மதிப்பிடும்போது மட்டும் நாம் ஆச்சரியப்படுவானேன்?

நிலப்பிரபுவும் பரிவாரமும் போய்விட்டதும், அவரது குறை நிறைகளைக் குறித்துப் பேச்சு வந்தது. அவர் ஒலிவியாவைப் பார்த்தது, அவளிடமே பேசியது முதலியவற்றால் அவர் நமது வீட் டுக்கு விஜயம் செய்ததே அவளுக்காகத்தான் என்று எங்களுக்குச் சந்தேகமில்லாமல் தெரிந்துபோயிற்று. சோபியாவைக் குறித்த அவரது சொற்கள், மோசேயை அவர் அசடாக்கிய விதம் இவற்றை யெல்லாம் ஒலிவியா அதிகம் பொருட்படுத்தாமல் ஒரு வேடிக்கை யாக எடுத்துக்கொண்டாள் என அவள் பேச்சிலிருந்து தெரிந்தது. தெபோராவுக்கோ சந்தோஷம் சொல்லிமுடியாது. மகளின் வெற்றி, தன் வெற்றியே எனப் பாவித்து அகமகிழ்ந்தாள்.

அவள் என்னைப் பார்த்துக் கேட்டாள் :

'நிலப்பிரபு பேச முன்வந்தபோது அவரிடம் இன்முகமாய்ப் பேசும்படி நானல்லவோ பெண்களை ஊக்கினேன். இதற்குத்தான் வாழ்க்கையில் நோக்கம் உயர்ந்ததாக இருக்கவேணுமென்கிறது. இப்பொழுது பார்த்தீர்களல்லவா ? என்னதான் நடக்காது? யாருக்குத் தெரியும் ?'

'' 'யாருக்குத் தெரியும் ?' நான் குமுறினேன். என்னைப் பொறுத்தவரையில் எனக்கு இதெல்லாம் பிடிக்கவில்லை. செல்வம் மட்டும் இருந்துவிட்டால் போதுமா ? ஒருவன் ஏழையாக இருந்தால்கூடப் பரவாயில்லை. அவன் ஒழுக்கமாகவும் நேர்மையுடனும் இருக்கவேண்டியது மிகவும் முக்கியம். மேலும், இவன் நம்பிக்கைகளற்றவன் ; சமயக்கருத்துச் சுதந்தரம் உள்ளவனாகவும் தோன்றுகிறது. அப்படிப்பட்ட ஒருவனுக்கு நான் என் பெண்ணை ஒரு நாளும் கொடுக்கமாட்டேன்.''

மோசே சொன்னான் :

'அப்பா, உங்கள் பேச்சு சற்றுக் கடுமையாக இருக்கின்றது. கருத்துச் சுதந்தரத்திற்கு அவன் என்ன பண்ணமுடியும். கருத்துகள் நம்மையறியாமலே நம் மனத்தில் வந்து மோதுகின்றன. நல்லது கெட்டது என்று அவற்றைத் தரம் பிரிக்கவும், நல்லவற்றை மாத்திரம் ஏற்றுக்கொள்ளவும் தீயவற்றை ஒதுக்கவும் எல்லாராலும் முடிகிறதில்லை. கடவுள், ஒருவனது பேச்சை மட்டுமன்று, செயல்களையும் கணக்கில் கொள்ளுவார். எனவே, கருத்துச் சுதந்தரத்துக்காக ஒருவனைக் குறைகூற வேண்டுவதில்லை. ஒரு நகரத்துக்குக் கோட்டைச் சுவரில்லாவிட்டால் அந்த நகரத்து அரசனுக்கு எதிரிகளின் தாக்குதலைச் சமாளிக்க முடியாதில்லையா? அதுபோலத் தான் இவரது நிலையும்.'

'அது உண்மைதான் மகனே. எனினும், அரசனே எதிரிகளை வரவழைத்தால் அது பெருங்குற்றமன்றோ? நம்மையும் மீறிப் பல கருத்துகள் நம் மனத்தில் வந்து மோதுகின்றன என்பது உண்மையேயாயினும், இன்னின்னவை தவறானவை என்று நிரூபிக்கும் எத்தனங்களும் பல அப்படியே எதிர்ப்படுகின்றனவே. அவற்றை அலட்சியம் செய்து தவறான நம்பிக்கைகளை வளர்த்துக்கொள்ளுவது குற்றமன்றோ? அப்படிச் செய்தால் நாம் தண்டனைக்குரியவராவோமே?'

என் மனைவிக்கு இந்த விவாதம் விளங்கவில்லையெனினும் அவளும் பேச முற்பட்டாள். 'சமயக் கருத்துச் சுதந்தரமுடையோனானால் என்ன? அப்படிப்பட்டவர்களும் நல்ல கணவர்களாக

இருப்பதை நான் கண்டிருக்கிறேனே. பெண்களுக்கு அறிவும் பொறுமையும் இருந்தால் கணவன் மனத்தை மாற்ற எவ்வளவு நேரம் ஆகும்? ஒலிவியாவுக்கு அப்படிச் செய்யமுடியாதா என்ன? அவளுக்கும் எவ்வளவோ விஷயம் தெரிந்திருக்கிறதே. எந்தப் பொருளைப்பற்றிப் பேசினாலும் அவளும் கலந்துகொள்ளு கிறாள். நன்றாய்ச் சர்ச்சை செய்கிறாள்.'

'நான் அப்படிப்பட்ட நூல்கள் எதுவும் அவளுக்குக் கற்றுக் கொடுத்ததாக எனக்கு நினைவில்லையே? உன் மகளைப்பற்றி அளவுமீறி அதிகமாய் எடை போடுகிறாய்.'

அதற்குள் ஒலிவியா சொன்னாள்:

''அம்மா தவறாய் எடை போடவில்லை அப்பா. நான் தருக்க நூல்கள் நிறையப் படித்திருக்கிறேன். தாக்கர்-பிரபு சர்ச்சை, ராபின்சன் குருசோ-வெள்ளிக்கிழமை சர்ச்சை இவையெல்லாம் படித்திருக்கின்றேன். இப்பொழுது 'சமயக் காதல்' என்னும் நூலில் கண்ட சர்ச்சையைப் படித்துக்கொண்டிருக் கிறேன்.''

'அப்படியா, ரொம்ப நல்லது. ரொம்ப நல்ல பெண். நீ சமய மாற்றம் செய்வதில் மிக வல்லவளாகத்தான் இருப்பாய். நிறைய நூல்கள் படித்துவிட்டாய். இப்போது போய் நெல்லிமது தயாரிக்க அம்மாவுக்கு உதவி செய்.'

8

[செல்வத்துக்கு வழியில்லாத இடத்தில் காதல் மலர்கிறது. ஆனால், வழிகள் திறக்கக்கூடிய இடமே அது.]

மறுநாள் காலை திரு. பருச்செல் மீண்டும் எங்கள் வீட்டுக்கு வந்தார். இதென்ன இந்த மனிதர் அடிக்கடி வரத் தொடங்குகிறாரே. தண்டச்சோறு என்றும் அவரைச் சொல்லிவிட முடியவில்லை. எங்களோடு சேர்ந்து, புல்காட்டு வேலையானாலும், வைக்கோல் போர் வேலையானாலும், எதுவானாலும் உழைக்கத் தயாராயிருந்தார். அவரால் எந்த இடைஞ்சலும் இல்லை, வர வேண்டாம் என்று எப்படிச் சொல்லுவது ? தர்ம சங்கடமாயிருந்தது.

சற்று வேடிக்கையான மனிதர் என்பதில் சந்தேகமே இல்லை. அவரைப் பார்த்தால் சிரிப்பு வருகிறது; பாவமாகவும் இருக்கிறது. ஆனால், உண்மையில் அவர்மீது எனக்கு எரிச்சல் ஏற்படக் காரணம் அவர் என் சின்னமகள் மீது அபரிமிதப் பிரியம் காட்டியதுதான். விளையாட்டாக அவளை 'என் சின்ன மனையாட்டியே' என்றுகூட அழைத்தார். இரண்டு ரிப்பன் செட்டுகள் கொண்டுவந்தால் அதில் சிறந்ததை அவளுக்குத் தான் கொடுப்பார். மற்றப்படி எல்லோரிடமும் அருமையாய் இங்கிதம் தெரிந்து பழகினார். அவரது எளிமைக்குணம் எல்லோருக்குமே பிடித்துத்தான் இருந்தது. வரவர அவர் பேச்சில் நகைச்சுவை கூடிவருவது போலுமிருந்தது.

மதிய வேளையில் சில நாள்களில் வயற்காட்டிலேயே உட்கார்ந்து சாப்பிட்டுவிடுவோம். வைக்கோல்மேல் ஒரு துணியை விரித்துச் சுற்றி உட்கார்ந்து எங்கள் எளிய உணவை அருந்துவோம். திரு. பருச்செல் உடனிருந்தால் உற்சாகமாய்ப் பொழுதுபோகும். இரண்டு கரிக்குருவிகள் எதிரெதிர் வேலிகளில் உட்கார்ந்து ஒன்றுக்கொன்று மாறிமாறிக் குரல் கொடுக்கும். சிவந்த மார்புக் குருவி ஒன்று எங்களிடம் பழகிவிட்டது; ரொட்டித் துணுக்குகளை எங்கள் உள்ளங்கையினின்று கொத்தித் தின்றது. காட்டில் ஒலித்த ஒலியெல்லாம் அமைதியின் எதிரொலியாகவே கேட்டோம்.

சோபியா சொன்னாள் :

'இந்த அமைதிச்சூழலில் எனக்குத் திரு. கேயின் கவிதை நினைவுக்கு வருகின்றது. காதலர் இருவர் ஒருவரையொருவர் அணைத்தவாறே மரித்ததாக ஒரு கவிதை எழுதியிருக்கிறாரே, அதன் சோகம் என் மனத்தை உருக்கிவிடும். குறைந்தது நூறு தடவையாவது நான் அதைத் திரும்பத் திரும்ப படித்திருக்கிறேன். ஒவ்வொரு தடவையும் புதுப்புதுவிதமாய் அதை ரசிக்கிறேன்.'

மோசே சொன்னான் :

''நானும் படித்திருக்கிறேன். அது இலத்தீன் கவிஞர் ஆவிடு எழுதிய 'ஆஸிஸூம் கலாத்தியாவும்' என்ற கவிதைக்கு உறை போடக்கூடக் காணாது. இலத்தீன் கவிஞர் மாறுபாடுகளை அருகருகே அமைத்துக் காட்டுவதில் சமர்த்தர். கவிதையில் சோகம் வலுவாக அமைவது அதனால்தான்.''

திரு. பருச்செல் தமது கருத்துகளை வெளியிடத் தொடங்கினார்.

'நீங்கள் குறிப்பிடும் இரு கவிஞர்களுமே அடைமொழிகளை மிகுதியாகப் பயன்படுத்தினர். ஆவிடு, ரோம சாம்ராச்சிய காலத்தின் பிற்பகுதியில் இலத்தீனில் எழுதினார். திரு. கே. அண்மையில் ஆங்கிலத்தில் எழுதினார். இலத்தீனில் ஆவிட்டை முன்மாதிரியாகக் கொண்டு எழுதத் தலைப்பட்டதுபோலவே இன்று இங்கிலாந்திலும் நடக்கிறது. ஆனால் அவர்களைப்போல் எழுத இயலவில்லை. கவித்துவமற்றவர் பெரும் மேதைகளைப் பின்பற்றுகிறதானது, மயிலைக் கண்டு வான்கோழி, தானும் தன் பொல்லாச் சிறகை விரித்தாடிக் கொள்ளுகிறது போலத்தான். இதன் காரணமாக அந்த நாளில் ரோமாபுரியில் இருந்ததுபோல இன்று இங்கே ஒரு போலி ரசனை மலிந்துபோய்க் கிடக்கிறது. கவிதையிலே கருத்தற்ற, பொருத்தமற்ற உவமைகள் அதிகமாகிவிட்டன. பொருள் நயத்தை விடவும் ஓசை முழக்கம் விஞ்சிவிட்டது. ஆனால், தங்கள் கட்சிக்குப் பரிந்து பேசக் கவிஞர்கள் யாரும் இங்கில்லாதபோது, நான் அவர்கள் கவிதையைக் கண்டனம் செய்துகொண்டு போவது தகாது. ஆனால், வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு நான் இயற்றிய கதைப்பாட்டு ஒன்றைப் பாடுகின்றேன். நான் இப்பொழுது சொன்னேனே, அந்தக் குறைகள் இன்றி நான் அதைச் செய்திருக்கிறேன்.'

*ஒரு கதைப் பாடல்

'காடிதுள் உறையும் மென்மனத் துறவியே
நெடிதவண் என்னை வாவென் பதுபோல்
பளிச்சிட்டுத் தெரியும் ஒளிச்சுடர் நோக்கித்
தமியேன் என்னை வழிக்கொண்டு செல்க!

அதேன் என்றெனை வினவுதீ ராயின்
இப்பெருங் காட்டில் வழியது தொலைத்தேன்;
களைத்தேன்; கடுந்தடு மாற்றமுங் கொண்டேன்;
இளைத்தேன்; வழியும் நீளுதல் காண்கிறேன்.'

'வெவ்விருட் காடிது, பிள்ளாய், பொறு'வென
அவ்வருள் யோகி செவ்விதின் சொல்வார்:
'சுடர்சுடர் குதித்திடும் கொள்ளிப் பிசாசவை
இடர்ப்படுத் திடஉனைச் சகதிக்கு அழைப்பவை.

புகலின்றி யலைவோய், புகல்வது கேளாய்:
புகுவாய் என்னுழை அடையாக் கதவுள;
எஞ்சிய அடிசில் சிறிதெனும் உண்ணுவம்;
அஞ்சேல்; தஞ்சம் தருகுவம் மகிழ்வொடு.

இற்றை இரவினில் என்சிறு குடிலினில்
இனிதுநீ அயரலாம். இனியோய், கேளாய்!
புல்லுறு படுக்கையும் அடிசிலும் பகிரலாம்;
சொல்லறு ஆசியும் அமைதியும் பெறுகநீ.

விடரலை விலங்கினம் உண்ணக் கொல்கிலம்.
சடலத்தை வளர்த்திட உயிரினம் தொடுகிலம்.
மருளாக் கருணை இறைவன் காட்டினன்.
அருளாம் கருணையைக் கற்பித் திட்டனன்.

மலையதன் சாரலில் முளைத்தெழும் மூலிகை
சுவையுள கனிஎன் யாத்திரைப் பையுள;
சிறுமணல் சுரந்திடும் தண்ணிய நீருண்டு;
பருகயான் கொண்டுள தினிய பானமாய்.

உறுகவல் ஒழித்திடும் யாத்திரி கரே!இவ்
உலகத்துக் கவலைகள் பாவத்துட் படுத்திடும்;
பாரினில் தேவைகள் மிகமிகச் சொற்பமே;
பார்க்கையில் தேவையின் காலமும் அற்பமே!'

* பேராசிரியர் சுந்தரம் பிள்ளை எழுதிய மனோன்மணீயத்தில் வரும் 'சிவகாமி சரிதம்' இதனைத் தழுவி எழுதப்பட்டதே.

விசும்பின் பனியது இறங்குதல் போலே
பசுமனச் சாதுவின் மொழிகளும் தொனித்தன.
வழிச்செல் பவனும் அதனுக்கு இணங்கித்
தெளிந்தவர் பின்னே மகிழ்வுடன் சென்றான்.

அரவன்றி உறவிலா இருளடர் காட்டினுள்
அப்பெரு முனிவரின் உறைவிட மிருந்தது.
பாழ்பட்ட ஏழையர், தவறிய வனிதையர்
வாழ்ந்திடப் புகலிட மாயது இருந்தது.

புல்லால் வேய்ந்ததக் கூரை வீடு;
பொருளென்று இல்லை, பூட்டுதல் இல்லை;
தட்டிக் கதவை எட்டி நீக்கி
விட்டவர் இருவரும் உள்ளே சென்றனர்.

மக்கள் அயர்வுறப் போகும் வேளை
மயக்கம் மனத்தினைச் சூழ்கின்ற தாலே,
அதிதியின் சோர்வை அகற்றிட முனிவர்
கடிதினில் கணப்பிலே நெருப்பினை இட்டார்.

புலாலது மறுத்த சைவர் உணவை
விரைவினில் தந்தார் இன்முக மாக;
தொல்யுகப் புராணக் கதைகள் இன்னும்
பல்வகை படித்தார் பொழுதினைப் போக்க.

பூனைக் குட்டி ஆடிக் களித்தது.
பூவிழும் வண்டின் ஏழிசை கேட்டது.
எரிதரு விறகுகள் தெறிப்பொலி கேட்டது.
விரிவுடன் மகிழ்ச்சியின் தாண்டவம் கண்டது.

அழகிய இயற்கை வழிப்போக் கருக்கு
அமைதியைச் சிறிதும் தந்திட வில்லை.
உள்ளம் கொண்டது கனத்த பாரம்
உகுத்தன நீரினைத் தாரையாய்க் கண்கள்.

அந்நிலை கண்ட துறவி யாரும்
அனல்மெழு காக உருகுத லானார்;
'அன்ப! துயர்முகக் காரண மென்ன?
அதனை என்னிடம் உரைத்திடு' வென்றார்.

'வீட்டார் அகற்ற அலைதலுற் றனையோ ?
விரும்பிய நண்பர் விலக்கிய தாலோ?
வேண்டா ஒருதலைக் காதலி னாலோ?
விளைந்தது இந்த வேதனை யோ?சொல்.

செல்வம் தருகிற வாழ்வும் இன்பமும்,
நில்லா தான நிலையின வாமே ;
சொற்பம் ; அவைமிக அற்பமு மாமே.
அவைதமை விழைவோர் அழிபவர் தாமே !

சிநேகிதம் நட்பு சிலநாள் செல்லும்.
செல்வமும் புகழும் அன்ன தகைத்தே !
சிறிதே தங்கி விலகி யோடும் ;
சிக்கலில் இட்டுத் தவித்திடச் செய்யும் !

காதல் என்பதும் வெற்று முழக்கே ;
கணிகையர் தம்விளை யாட்டுப் பொருளே
புவிதனில் காணுதற் கியலா ஒன்று ;
புறாக்களி லேனும் உண்டோ ? அறியோம்.

அருமை இளைஞனே அருந்துயர் விடுக ;
அதனினும் அறவே காதலைக் களைக'
துறவி சொல்லவும், அதிதிகன் னத்தில்
காதல் செம்மை படருதல் கண்டார்.

விடியற் காலத்து வானத்து ஒளியது
வர்ண சாலம் காட்டுதல் போலும்
வியந்த துறவியின் வியனுறு கண்களில்
வெகுவாய் இன்னும் அழகுகள் தெரிந்தன.

வெட்கிய பார்வையும் விம்மிய மார்பும்
வெகுவாய்ப் பயந்தார் துறவியார் தாமும்.
எழில்மிகு அந்த இளைஞன் தானும்
விழிமருள் மங்கை ; வனிதை ! அதனால்

'மன்னித் திடுமின் இந்தப் பாவியை ;
நானொரு தெய்வத் துறவியின் தலத்தைத்
தூசுடைச் சாவி யான யானே
மாசுறச் செய்தேன் இங்கென் வரவால்

கருணை காட்டுக அடியேன் முன்னே
காதலில் தோல்வி கண்டவள் ஆவேன்.
விரக்தி ஒன்றைத் துணைஎனக் கொண்டு
வெகுவாய் அலைகிறேன் அமைதிக் கென்று.

தையினி யாற்றங் கரையது தனிலே
தனிப்பெரும் மாளிகை எங்களுக் குண்டு.
தந்தை செல்வம் படைத்தவர் ; பிரபு ;
தமியேன் யானே அவருக்கு வாரிசு.

என்னை வேண்டிய வரன்கள் எண்ணிலர் ;
எழிலாள் என்றே என்னைப் புகழ்ந்தனர் ;
அதில்சிலர் காதல் கொண்டதாய்ச் சாற்றினர் ;
சிலரது கூற்றில் உண்மையு மிருக்கலாம்.

பணம்பெரி தென்று பரிசுகள் தந்து
பலர்பலர் வந்து பகர்ந்தது உண்டு ;
கவர்ந்தவர் ஒருவர் ; எட்வின்என் பவரே
காதலை அவரோ சொன்னா ரில்லை.

அடக்கமாம் அணியிடை எளிமையை உடுத்தவர் ;
ஆதிக்கச் செருக்கோ செல்வமோ அற்றவர் ;
அறிவும் அளவரு சீலமும் கொண்டவர் ;
அடியாள் விழைந்ததும் அவ்வருங் குணங்களே.

இதந்தரு மியற்கைச் சூழலில் அவரொரு
இனியவாம் காதல் பாடலை இசைத்தார்.
தருவடர் தோப்பினுள் அவ்விசை ஒலித்தது.
அவரது மூச்சால் வானும் மணத்தது.

கள்ளம் கபடம் என்பன இல்லா
வெள்ளை உள்ளம் தம்மிடம் உள்ளவர்.
மலரினும் மலர்மிசைப் பனியினும் மிகவாய்
மாசினைக் களைந்து பரிசுத்த மானவர்.

நிறத்தால் குணத்தால் நலமுறக் காணினும்
நிலைப்பன வல்ல பூவும் பனியும்.
நலமது அவராய், நிலையின்மை நானாய்
அவண்அவை விளங்கின மலரும் பனியும்.

அன்புடை அவர்மனம் அறிவே னாயினும்
துன்புறுத் துவதே நினைந்தே னாகி
கெஞ்சுதல் மிஞ்சுதல் இவைமிகச் செய்து
மிஞ்சியும் அவரை அழச்செய்து மகிழ்ந்தேன்.

என்புறக் கணிப்பால் மனமது நொந்தார்.
எங்கோ சென்றார் தனிமையை நாடி.
துறந்தவர் பின்னே இறந்தவ ரானார்.
தின்றது என்னைப் பெருமையின் இன்னா.

குற்றமும் நட்டமும் துயரமும் எனதே
உற்றவர் தனித்திடர்ப் பட்டது போலே.
இற்றவர் போல்யான் மடிந்திட லன்றே
மற்றது தனக்குக் கழுவாய் ஆகும்!

ஆதர வின்றி விரக்தியி லவரே
பூதல மீதே தன்னுயிர் விட்டார்.
என் றனுக் காக இறந்த அவர்க்கே
என்னுயிர் விடுதல் கழுவாய் ஆமே.

'வேண்டா இறைவா! வேண்டவே வேண்டா'
பதறிச் சொல்லித் துறவி தழுவ
மறுத்தவள் தடுத்தாள் அறியா ததனால்,
அடுத்தவன் தனது எட்வின் என்றே.

'என்னுயிர் அன்பே, ஏஞ்ச லீனா,
எனைக்கவர்ந் தவளே, ஈதோ காணாய்,
நான்உன் எட்வின் மீண்டும் வந்தேன்
உன்னைக் காண, உனைநே சிக்க.

இனிஎன் கவலைகள் என்னை நீங்கின.
கனிவுடன் உனையான் இங்ஙனம் அணைப்பேன்.
நீஎன் இன்னுயிர் அனைத்தும் நீயே.
நாமினிப் பிரியோம் பிரியவே மாட்டோம்.

வலிமையும் உறுதியும் உன்மனத் துண்டு.
வேதனை மூச்சு உனக்கினி வேண்டா.
அஃதுன் எட்வின் உள்ளத்தை உருக்கும்.
இதுமுதல் பிரியோம். இணைந்தினி வழ்வோம்.'

அவர் பாடலைச் சொல்லச் சொல்ல நாங்கள் கேட்டுக் கொண்டே வந்தோம். சோபியா மெய்ம்மறந்து போனாள்.

திடீரென்று இந்த மோனத்தைக் கிழித்துக்கொண்டு மிக அண்மையில் ஒரு துப்பாக்கி வெடித்தது. ஒரு மனிதன் வேலியைப் பிய்த்துக்கொண்டு அதனூடே புகுந்து பாய்ந்து தான் வீழ்த்திய வேட்டையை எடுக்க வந்தான். நிலப்பிரபுவின் குடும்பப் பாதிரிதான் அவர். அவர் கொன்றிருந்ததோ எங்களைப் பாடி மகிழ்வித்துவந்த கரிக்குருவிகளுள் ஒன்று.

வெடிச் சத்தத்தை மிக அருகில் கேட்டதால் என் பெண்கள் மிரண்டுவிட்டிருந்தனர். சோபியா தன்னையுமறியாமல் திரு. பருச்செல்லை நெருங்கி அவரை அணைத்தவாறிருந்தாள். எங்களையெல்லாம் பார்த்ததும் பாதிரி மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். இத்தனை அருகில் நாங்கள் அமர்ந்திருந்ததை அவர் அறிந்திருக்கவில்லையென்றும், எங்களுக்கு இடையூறு விளைவித்ததற்காக மிக வருந்துவதாகவும் சொன்னார். அதற்கு ஈடு செய்வதேபோல் என் இளைய மகளின் அருகே சென்று மண்டியிட்டு ஒரு விளையாட்டு வீரனின் பாங்குடன் தமக்கு அன்று கிடைத்த வேட்டையை அவளிடம் சமர்ப்பிக்க முன்வந்தார். அதை மறுக்க எத்தனித்தவள், என் மனைவியின் கண்சாடையைக் கவனித்து வேண்டா வெறுப்புடன் ஏற்றுக்கொண்டாள். சோபியா பாதிரியை வீழ்த்திவிட்டாள் என்று என் மனைவி என்னிடம் கிசுகிசுத்தாள். ஒலிவியா பிரபுவைக் கவிழ்த்ததற்கு நிகரானதொரு வெற்றி இது என்று அவள் கருதியதாகத் தெரிந்தது. ஆனால், சோபியாவின் நாட்டம் வேறு இடத்தில் லயித்துள்ளது என்பதுதான் என் கணிப்பு.

குடும்ப குருமூலமாகத் திரு. தாரன்ஹில் எங்களுக்கு ஒரு செய்தி அனுப்பியிருந்தார். அதை அவர் அப்பொழுது வெளியிட்டார். அன்றிரவு எங்கள் வீட்டினெதிரே இருந்த புல்வெளியில் நிலவொளியில் பிரபு ஒரு நடன நிகழ்ச்சி நடத்தப்போகிறாராம்; இசையும் விருந்தும் உண்டாம்.

'இந்தச் செய்தியை நான் உங்களுக்குத் தெரிவித்ததற்காக நான் உங்களிடமிருந்து ஒரு கைம்மாறு எதிர்பார்க்கின்றேன். இன்றிரவு நடனத்தில் மிஸ் சோபியா எனக்கு நடனத் துணையாகி என்னுடன் ஆடிக் கௌரவிக்க வேண்டும்.'

கௌரவமான நடனமானால் ஆட்சேபனை என்ன என்று சொன்னவள் திரு. பருச்செல்லைக் காட்டிக்கொண்டு சொன்னாள் :

‘இதோ! இந்தக் கனவான் நாள் முழுவதும் எங்களுடன் சேர்ந்து உழைத்துக்கொண்டிருக்கிறார். அவரும் நடன நிகழ்ச்சியில் பங்கு பெறுவது பொருத்தமாகும்.’

ஆனால், பருச்செல் குறுக்கிட்டு அவளுக்கு நன்றி தெரிவித்துவிட்டுப் பக்கத்துக் கிராமத்தில் நடக்கும் அறுவடை விருந்தில் தாம் கலந்துகொள்ளவேண்டியிருப்பதாகச் சொல்லி மறுத்துவிட்டார். இனி, அவள் பாதிரியுடன்தான் நடனமாடவேண்டும். அதைத் தவிர்க்கமுடியாது. லோகாயுத வாய்ப்புகள் அதிகம் கொண்ட பாதிரியைவிடவும், நொடித்துப்போன இந்தப் பருச்செல்லையே அவள் கொண்டாடிக் கொண்டிருந்தது எனக்கு வியப்பாக இருந்தது. சோபியாவுடன் நடனமாடக் கிடைத்த வாய்ப்பை நழுவ விட்டுப்போன பருச்செல்லை நினைத்தாலும் அப்படியே வியப்பாகத் தானிருந்தது.

பெண்களின் நிறைகுறைகளை எடைபோடுவதில் பெண்களைவிட ஆண்களே சமர்த்தர். அதுபோலவே ஆண்களின் குணவியல்புகளை அடையாளம் கண்டுகொள்வதில் பெண்கள் பெரும்பாலும் தவறுவதில்லை. இருபாலாரும் ஒருவரை மற்றவர் ஆராய்ந்து கண்காணிக்கும் திறன்களோடு படைக்கப் பெற்றிருக்கின்றனர் என்றே தோன்றுகிறது.

9

[பெரிய இடத்துப் பெண்களின் அறிமுகம். ஆள்பாதி-ஆடைபாதி.]

சோபியா பாதிரியுடன் நடனமாடச் சம்மதம் தெரிவித்தாள். திரு. பருச்செல் எங்களிடம் விடைபெற்றுக்கொண்டு கிளம்பினார். அதற்குள் சிறுபயல்கள் இருவரும் ஓடிவந்து பிரபு ஒரு பரிவாரத்துடன் வந்திறங்குவதாகச் செய்தி சொன்னார்கள். பிரபுவோடு அவரது செயலாளர் இருவர் வந்திருந்தனர். மிக அலங்காரமான-நவநாகரிக பாணியில் ஆடைகளணிந்த நகரத்துச் சீமாட்டிகள் இரண்டு பேரும் வந்திருந்தனர். அவர்கள் எல்லோரும் உட்காருவதற்குப் போதிய நாற்காலிகள் எங்களிடம் இல்லை. ஆடவர், பெண்களின் மடிமீது அமரலாமே என்று திரு. தாரன்ஹில் ஒரு யோசனை தெரிவித்தார். நான் ஒத்துக்கொள்ளவில்லை. என்னைக் கண்டிப்பதுபோல என் மனைவி என்னைப் பார்த்தாள். நாற்காலிகள் இரவல் வாங்கிவருமாறு மோசேயை அனுப்பினோம்.

நாட்டு நடனம் ஆடுவதற்குப் பெண்கள்கை குறைவாயிருந்தது. எனவே, ஆடக்கூடிய பெண்கள் சிலரை நேரில் அழைத்துவரச் செயலாளர் இருவரும் மோசேயை அழைத்துக்கொண்டு சென்றனர். சற்றுநேரங் கழித்து என் அண்டைவீட்டுப் பிளாம்பரோ சமுசாரியின் இரு மகள்களையும் உடன் அழைத்துவந்தனர். ஊரில் புகழ்பெற்ற நர்த்தகிகள் அவர்கள். இரு பெண்களும் நல்ல அழகு; உச்சிக் கொண்டையில் சிவப்புப்பட்டு முடிச்சுக்கட்டி அலங்காரமாயிருந்தனர். ஆனால், அவர்கள் வந்த பிறகுதான் தெரிந்தது, அவர்களுக்கு நாட்டு நடனம் தெரியாதென்று. ஜூக்கு என்ற துடியாட்டத்திலும் ரவுண்டபௌட்டு என்ற சுழலாட்டத்திலும் தாம் அவர்கள் கெட்டிக்காரர்கள். அதைக் கேட்டு முதலில் சற்று உற்சாகமிழந்துபோனோம். பின்னர், முயன்று பார்த்துவிடுவதென நினைத்து நாட்டு நடனமே தொடங்கினோம். அவர்களிருவரும் முதலில் கொஞ்சம் காலைத் தேய்த்து இழுத்துத்தான் ஆடினர். ஆனால், வெகு விரைவில் சரியாயாடத் தொடங்கினர். இரண்டு பிடில், ஒரு குழல், மேளம்தான் எங்கள் வாத்தியங்கள். நிலவு பிரகாசமாய் எறித்தது. திரு. தாரன்ஹில் ஒலிவியாவுடன்

நடனத்தைத் தொடங்கினார். மற்ற ஜோடிகளும் சேர்ந்து கொண்டனர். ஊர் முழுவதும் செய்தி பரவியிருந்ததால் கூட்டம் திரண்டுவந்து சுற்றிலும் நின்று பார்த்தது. மகிழ்ச்சி ஆரவாரம் அலைபுரண்டது. ஒலிவியாவின் நளினமும் துடிப்பும் தனியாய்த் தெரிந்தன. என் மனைவியின் பெருமை இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாதபடி ஆயிற்று. 'இந்தப் பெண் என்னைப் போலவே ஆடுகிறாளே' என்று சொல்லிச்சொல்லி மாய்ந்தாள்.

பட்டணத்துப் பெண்கள் ஒயிலாய் முயற்சியின்றி இலேசாய் ஆடமுயன்றது தெரிந்தது. ஆனால் முடியவில்லை. கையையும் காலையும் பரப்பிக்கொண்டு ஆடிய அது நடனமா? நீச்சலா? குதித்த குதியில் களைத்துப்போனதுதான் மிச்சம். என்ன முயன்றும் அவர்களால் ஒலிவியாவுக்கு இணையாய் ஆடமுடிய வில்லை. பார்வையாளர்களும் ஒலிவியாவை வியந்து பாராட்டினர். 'இசையின் எதிரொலிபோலன்றோ அவள் பாதங்கள் தரையில் பதிகின்றன?' என்று பிளாம்பரோ வியந்தார். சுமார் ஒரு மணி நேரம் ஆடியிருப்பார்கள். திறந்தவெளியில் மேலும் ஆடினால் நீர்க்கொண்டுவிடும் என்று பட்டணத்து நங்கைகளுக்குப் பயம் பிடித்தது. நிகழ்ச்சியை முடிக்க விரும்பி அவர்களுள் ஒருத்தி சற்றுக் கொச்சையாக 'அட கடவுளே, வியர்வைப் பிசுபிசுப்புத் தாங்க முடியவில்லையே' என்றாள்.

வீட்டினுள் சென்றதும், தாரன்ஹில் கொணர்ந்திருந்த நாகரிக உணவுவகைகள் பரிமாறப்பட்டன. உரையாடல் முன்னைப் போலில்லாமல் சற்று அளவோடு இருந்தது. பேச்சில் நகரத்து அம்மணிகள் தாம் விஞ்சி நின்றனர். உயர்மட்டத்துச் சமுதாயம், அவர்களது வாழ்க்கை விவரங்கள், மற்றும் ஓவியம், ஷேக்ஸ்பியர், ஜலதரங்கம் என்று நவீன விஷயங்களைப்பற்றியே பேச்சைத் திருப்பிக்கொண்டனர். ஓரிரு கீழ்த்தரச் சொற்களை அவர்கள் அவ்வப்போது பயன்படுத்தியதையும் கேட்டோம். இது எங்களைப் புண்படுத்துவதாயிருந்தாலும், இப்படித் திறந்தாற்போல் பேசுவது தான் நாகரிகம்போலும் என்று எண்ணிக்கொண்டோம்.

ஆனாலும், எனக்கு இவர்களது கீழ்த்தரப் பேச்சை மூடி மறைப்பது, இவர்களது உயர்தர ஆடை அலங்காரமே என்ற எண்ணமும் தோன்றாமலில்லை. என் பெண்கள் இருவருமோ அவர்களது பேச்சுத்திறனைக் கவனித்துப் பொறாமையுடன் இமை கொட்டாமல் அவர்களையே பார்த்துக்கொண்டிருந்தனர். அவர் கள் செய்த தவறுகளைக்கூடப் பெரிய மட்டத்து அம்சங்களாகக் கருதினர். ஏதோ பெரியமனது பண்ணி, பாவம் என் பெண்களை அவர்கள் அரவணைப்பதுபோல ஒரு தோரணை போட்டுக் கொண்டதுதான் எனக்கு வேடிக்கையாக இருந்தது.

என் பெண்கள் கட்டுப்பெட்டிகளாம். ஒலிவியா மாத்திரம் இச் சிற்றூரைவிட்டுக் கிளம்பிப் பரந்த உலகத்தைப் பார்த்து விட்டாளானால் அவள் நாகரிகமாகிச் சமுதாய வட்டத்தில் புகழ் பெற வாய்ப்பு உண்டாம். அப்படி ஒரு சீமாட்டி சொல்ல, மற்றவள் சொன்னாள் : சோபியா குளிர்காலத்தில் இலண்டனில் வசித் தால் போதுமாம். ஆளே மாறி நவீன பாணியில் ஜொலிப்பாளாம். அவர்கள் பேச்சையெல்லாம் என் மனைவியும் ஆமோதித்தாள். தன் பெண்களைக் குளிர்காலத்தில் இலண்டனுக்கு அனுப்பிப் பழக்கவழக்கங்களில் ஒரு நயமும் மெருகும் பயிற்றுவிப்பதற்குத் தான் எதைச் செய்யவும் சித்தமாக இருப்பதாகத் தெரிவித்தாள்.

நான் சொன்னேன் :

'என் பெண்களின் நடையுடை பாவனைகள் இப்பொழுதும் நயமாக-நாகரிகமாகத்தான் இருக்கின்றன. இதுவே அவர்களது செல்வநிலைக்கு மேம்பட்டது என்றுதான் சொல்லவேண்டும். பட்டணத்துக்குப் போய் இதற்கு மேலும் கற்றுக்கொண்டு வந்தால் அது கோமாளித்தனமாய்த்தான் முடியும். கிட்டாத சுகங்களை நினைத்து ஏங்குகின்ற ஒரு மனநிலையைத்தான் உண்டு பண்ணும்.'

திரு. தாரன்ஹில் சொன்னார் :

'அவர்களுக்குத் தகுதியில்லாத சுகங்களா? அவர்கள் வழங் கக்கூடிய இன்பங்கள் அளவில்லாதவையாயிருக்கும்போது அவர் களுக்குக் கிட்டாத செல்வங்களா? அன்பு, இன்பம், சுதந்தரம் இவைதாம் என் கொள்கைகள். எனக்குச் சொத்திருக்கின்றது. அழகு ஒலிவியாவை என் சொத்தில் பாதி மகிழ்ச்சியாக்குமென்றால் நான் இப்பொழுதே அதை அவளுக்கு எழுதிவைத்துவிடுவேன். அந்தச் சொத்தின் ஒரு பங்காக அவள் என்னையும் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பதுமாத்திரமே என் வேண்டுகோளாகும்.'

நான் உலகம் தெரியாதவனல்லன். இந்த வார்த்தை ஜாலத்தி னூடே ஒளிந்திருந்த அகௌரவமான கோரிக்கை எனக்குத் தெளிவாகவே புரிந்தது. ஆயினும், என் சினத்தைச் சிரமத்துடன் அடக்கிக்கொண்டேன்.

'ஐயா, நீங்கள் பெரியமனது பண்ணிப் பழக முன்வந்துள்ள இந்தக் குடும்பம் கண்ணியமானது. உங்களைப்போலவே நாங்களும் மானத்தைப் பெரிதாக மதிப்பவர்கள். எனவே, எங்களின் மானத்தைக் குலைக்க முற்பட்டால் விளைவுகள் ஆபத்தானவை யாக இருக்கும். மேலும், ஐயா, இன்றைக்கு அந்த மானம் ஒன்றே எங்களுக்கு எஞ்சியுள்ளது. ஆகவே, அப் பெருநிதியைக் குறித்து நாங்கள் மிகவும் கவனமாக இருந்தாக வேண்டும்' என்றேன்.

என் பேச்சு இப்படிச் சூடேறிவிட்டதை உணர்ந்து நானே வருந்தினேன். அதற்குள் அவர் என் கைகளைப் பிடித்துக்கொண்டார். என் மனப்பான்மை பாராட்டத் தகுந்ததேயாயினும் என் சந்தேகங்கள் அநாவசியமானவை என்று அழுத்தந்திருத்தமாய்ச் சொன்னார்.

மேலும் சொன்னார் :

'நீங்கள் சாடையாக ஏதோ குறிப்பிட்டீர்கள். ஆனால், என் மனத்தில் விகற்பமெதுவும் கிடையாது. என்னைப் பொறுத்த வரையில் முற்றுகையிட்டுக் காத்துக் கிடந்து பெறுகிற காதல் எல்லாம் எனக்குச் சரிப்பட்டு வராது; எதிர்பாராமல் அடித்து வீழ்த்துவதுதான் என் போக்கு.'

இந்தப் பேச்சு பட்டணத்துச் சீமாட்டிகளுக்குக்கூடப் பிடிக்கவில்லை. அவர்கள் அதை மறுத்துச் சொல்லவே ஒரு விவாதமே தொடங்கிவிட்டது. கற்பைப்பற்றியும் பேசினோம். சர்ச்சை கனமாய், தரமாய் அமைந்தது. பாதிரி, என் மனைவி, நான் எல்லோரும் தங்கள் தங்கள் கருத்துகளைப் பகிர்ந்துகொண்டோம். மிதவாழ்வின் மகிழ்ச்சி, குற்றமற்ற நெஞ்சின் நிம்மதிபற்றியெல்லாம் பேச்சு வளர்ந்தது. பிரபுவும்கூடத் தமது கடந்த கால ஆட்டபாட்டங்களுக்காக வருந்துபவர்போல் பேசினார். குழந்தைகளுக்குத் தூங்க நேரமாகிவிட்டாலும் நல்ல விஷயங்களைத்தாமே கேட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்று நான் திருப்திப்பட்டேன். திரு. தாரன்ஹில் ஒருபடி மேலேயே போய், கூட்டமுடிவில் என்னை ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டார்; நானும் இணங்கினேன். ஆக, அன்றிரவு நிகழ்ச்சி மிக இனிதாய் நிறைவுபெற்றது.

அப்பொழுது புதிய பிரச்சினை ஒன்று தலைகாட்டிற்று. எல்லோரும் விடைபெற்றுக் கிளம்பிக் கொண்டிருந்தோம். பட்டணத்துச் சீமாட்டிகளுக்கு என் பெண்களைவிட்டுப் பிரிய மனமில்லையாம். நான் அவர்களை இரவு தங்க அவர்களோடு அனுப்ப வேண்டுமாம். அதைத் தொடர்ந்து பிரபுவும் அவ் வேண்டுகோளை ஆமோதித்தார். என் மனைவியும் அவர்களோடு சேர்ந்துகொண்டாள். என் மகள்களும் ஆசையுடன் என் முகத்தைப் பார்த்தனர். நான் குழப்பமுற்றுப் பல சாக்குகள் சொல்லத் தொடங்கினேன். அச் சாக்குகள் நொண்டியானவைதாம். அவர்கள் அவற்றை உடனுக்குடன் மறுத்தனர். எனவே, நான் சாக்குச் சொல்லுவதை நிறுத்திவிட்டுப் 'போகக் கூடாது' என்று ஒரேயடியாய் உத்தரவு இட்டுவிட்டேன். ஆகவே, மறுநாள் முழுவதும் என் பெண்கள் முகத்தைத் தூக்கி வைத்துக்கொண்டு என்னுடன் அதிகம் பேசாமலிருந்தனர்.

10

[மேல்மட்ட வாழ்வை எட்டிப் பிடிக்க முயற்சி. தகுதிக்கு மீறிய வாழ்க்கையினால் ஏழைகள் படும் தொல்லைகள்.]

மிதவாழ்வு, எளிமை, திருப்தி இவற்றைப்பற்றியெல்லாம் நான் அவ்வப்போது முயற்சி எடுத்து ஆற்றிவந்த சொற்பொழிவுகள் அனைத்தும் வீணாகி வருவதைக் காணத் தொடங்கினேன். என் அறிவுரை பெண்களால் அறவே புறக்கணிக்கப்பட்டது. உயர் மட்டத்து மனிதரின் அருட்பார்வை எங்கள்மீது விழுந்ததுமே, நான் உறங்கச்செய்திருந்த-ஆனால், அறவே அகற்றியிராத வீண்பெருமை மீண்டும் விழித்துக்கொண்டது. முகத்துக்கும் கழுத்துக்கும் பூசுகின்ற கலவைகள் மீண்டும் சன்னல்கள்மீது இடம்பெற்றன. வெளிவேலை செய்தால் வெயில் தோலுக்கு ஆகாதாம். அடுப்புவேலை செய்தால் நெருப்புவெக்கை மேனி மினுக்கத்தைக் கெடுத்துவிடுமாம். அதிகாலையில் கண் விழித்தால் தன் பெண்களின் கண் எரியுமே என்று அங்கலாய்த்தாள் என் மனைவி. சாப்பிட்டதும் உழைத்தால் மூக்குச் சிவந்துவிடுமே என்றாள். வேலை எதுவுமே செய்யாமல் இருந்தால்தான் கைகள் வெள்ளை வெளேரென்று ஆகுமாம். ஜார்ஜுவின் சட்டையைத் தைத்ததைப் பாதியில் விட்டு விட்டுத் தங்கள் பழைய சல்லா ஆடைகளைப் புதிதாக்குவதிலும், அதில் ஜிகினா மணியைப் பொருத்துவதிலும் முனைந்தார்கள். முன்னே கூடிச் சிரித்துக் கும்மாளமிட்ட பிளாம்பரோ செல்விகளோடு பழகுவது இப்பொழுது அவர்களுக்கு இளப்பமாய்த் தெரிந்தது. பேச்செல்லாம் உயர்சமூகத்தைப் பற்றித்தான் இருந்தன. பிரபுக்கள், ஓவியம், ரசனை, ஷேக்ஸ்பியர், ஜலதரங்கம் இவை முதலியன.

இவையெல்லாம் போதாவென்று இன்னும்மேலே பாய்வதற்கு வாய்ப்பாய், குறிசொல்லும் குறத்தி ஒருத்தி வந்துசேர்ந்தாள். அந்த மாநிறக் குறத்தியைக் கண்டதுதான் தாமதம். என் பெண்கள் ஓடோடி வந்து என்னிடம் ஆளுக்கு ஒரு ஷில்லிங்கு கேட்டனர். அவள் கையில் வெள்ளிப்பணந்தான் வைக்கவேண்டுமாம்.

---

* ஷில்லிங்கு - வெள்ளி நாணயம்

உள்ளதைச் சொல்லுகிறேனே, அவர்களுக்குப் புத்திசொல்லுவது எனக்குப் பிடிக்காத விஷயமே. அவர்கள் கேட்டதைக் கொடுத்து அவர்கள் முகங்கள் மலர்வதைப் பார்ப்பதுதான் எனக்குப் பிடிக்கிறது. எனவே, ஆளுக்கொரு ஷில்லிங்கைத் தூக்கிக் கொடுத்தேன். குடும்பகௌரவத்தைக் காட்டுவதற்காகப் பெண்கள் இருவரிடமும் என் மனைவி எப்போதும் ஒரு கினிப் பணம் கொடுத்து வைத்திருந்தாள். ஆனால், எக்காரணத்தை முன்னிட்டும் அதை மாற்றக் கூடாது என்று கண்டிப்பாய் உத்தரவிட்டிருந்தாள். அதனால்தான் அவர்கள் என்னிடம் பணம் கேட்டனர்.

குறத்தியோடு அறைக்குள் சென்று கதவைத் தாழிட்டுக் கொண்டார்கள். சிறிது நேரங் கழித்து அவர்கள் வெளியே வந்தபோது இருவர் முகங்களும் மலர்ச்சியாயிருந்தன. குறத்தி நல்ல குறி சொல்லியிருப்பாள் போலிருக்கிறது!

'என்ன சேதி, மக்களே. கொடுத்த காசுக்குத்தக்க நல்ல சேதி சொன்னாளா? உனக்கு என்ன சொன்னாள்?' என்று முதலில் ஒலிவியாவிடம் கேட்டேன்.

'மிக நன்றாய்ச் சொல்லுகிறாள் அப்பா. நாம் தொடர்பு கொள்ளாத வேறு உலகத்து ஆவியின் உதவியாலேதான் அவள் குறி சொல்லுகிறாளென்று தோன்றுகிறது. இன்னும் பன்னிரண்டு மாதத்துக்குள்ளே எனக்கு ஒரு பிரபுவோடு கலியாணமாம். நிச்சயமாய்ச் சொல்லுகிறாள்.'

'சரி, சோபிக்கண்ணு! உன் மணாளன் யாராம்?'

'அப்பா, அக்காவின் கலியாணம் முடிந்தவுடன் நான் ஒரு பெரும் பிரபுவைக் கலியாணம் பண்ணுவேனாம்.'

'இரண்டு ஷில்லிங்குக்கு இவ்வளவுதானா? இரண்டு ஷில்லிங்குக்கு ஒரு பிரபுவும் ஒரு பெரும் பிரபுவும்தானே கிடைத்திருக்கிறார்கள் அதிலே பாதிப் பணம் கொடுத்திருந்தால்கூட நான் ஒரு மகா பெரிய பிரபுவையும் ஒரு நவாபையும் உங்களுக்கு மாப்பிள்ளைகளாகச் சொல்லியிருப்பேனே.'

இந்த நிகழ்ச்சிக்குப்பின் எங்கள் கனவுகள் உயர்மட்டங்களில் சஞ்சரிக்கத் தொடங்கின. எங்கள் யோக நட்சத்திரங்கள் எங்களை மிக உன்னத நிலைகளுக்கு அழைத்துச் செல்லப் போகின்றன என்று நம்பினோம். அந்த ஒளிமயமான எதிர்காலத்தை ஆவலுடன் எதிர்நோக்கினோம்.

ஒரு நிகழ்ச்சி நிறைவேறும்போது உண்டாகின்ற இன்பத்தை விட, அதை எதிர்பார்க்கின்றபோது கிடைக்கின்ற இன்பமே அதிகம் என்பதைப் பலர் அனுபவத்தில் கண்டிருப்பர். முன்னதில் இயற்கை சமைத்துவைத்ததை உண்கின்றோம். பின்னதில் நம் விருப்பத்திற்கேற்ப சமைக்கின்றோம். எதிர்காலக் கனவுகளிலேயே லயித்துக் கிடந்தோம். அவற்றையெல்லாம் ஒவ்வொன்றாக விவரிப்பது இயலாத காரியம். அந்தஸ்து சரிந்து கிடந்த எங்கள் குடும்பம் மீண்டும் தலைதூக்கும் அதிருஷ்டத் திருப்பம் அருகில் வந்துவிட்டதாக நினைத்து மகிழ்ந்தோம்.

நிலப்பிரபு எங்கள் ஒலிவியாமீது காதல் கொண்டுள்ளார் என்று ஊர் முழுதும் பேசிற்று. எனவே, அவளும் அப்படியே அவர் மீது காதல்கொண்டாள். அவர்கள் பேச்சு அவள் மணத்தை நிச்சயப்படுத்திற்று.

இதற்கிடையில் என் மனைவிக்கு நித்திரையில் நல்ல கனவுகள் பல வந்தன. காலைதோறும் அவற்றைக் கவனமாய் துல்லியமாய் விவரித்தாள். ஒருநாள் சவப் பெட்டியில் எலும்புகள் குறுக்காய்க் கிடந்தனவாம். கலியாணம் ஒன்று மிக விரைவில் நடக்கப் போவதற்கு அஃது அறிகுறியாம். மற்றொரு நாள் தன் மகள்களின் சட்டைப் பாக்கெட்டு நிறைய பார்த்திங்குகள்* கிடக்கக் கண்டாளாம். அப்படியானால் அந்தப் பாக்கெட்டுகள் தங்க நாணயங்களால் நிறைந்து வழியுமாம். பெண்களுக்கும் நற்சகுனங்கள் நேர்ந்தன. நல்ல கனவுகள் வந்தன. இதழ்களில் யாரோ அந்நியர் வந்து முத்தமிட, மெழுகுதிரியைச் சுற்றிலும் வளையங்கள் தெரிய, காசுப்பைகள் நெருப்பினின்று எம்பிக் குதிக்க, தேநீர்க் கோப்பையில் காதல் முடிச்சு விழ, இவ் வகையறாக்கள் வந்தன.

சுமார் ஒரு வாரம் கழித்துப் பட்டணத்துச் சீமாட்டிகளிடமிருந்து எங்களுக்கு ஒரு கார்டு வந்தது. வாழ்த்து, பீடிகை எல்லாம் ஆனபின் ஒரு செய்தியும் எழுதியிருந்தனர். மீண்டும் இங்கே வருகிறார்களாம். வருகிற ஞாயிற்றுக்கிழமைக் காலையில் கோயிலில் சந்திக்கலாமாம்.

சனிக்கிழமை விடிந்ததுமே வீட்டில் பரபரப்பு உண்டானதைக் கவனித்தேன். என் மனைவியும் பெண்களும் கூடிக்கூடி கிசுகிசுத்தனர்; ஓரக்கண்ணால் என்னையும் பார்த்துக்கொண்டனர். ஏதோ சூழ்ச்சிக்கான சுழல் உருவாயிற்று. மறுநாள் கோயிலுக்கு

---

* பார்த்திங்குகள்—குறைந்த மதிப்பு நாணயம்

ஆடம்பரமாக ஆடைகள் அணிந்துபோகத் திட்டம் தீட்டுகிறார்களாக்கும் என எண்ணினேன். என்ன கோமாளித்தனம் நடக்கப் போகிறதோ என்று பயந்தேன். என் மனைவியின் தலைமையில் மாலைவரை ஏதேதோ நடந்துகொண்டேயிருந்தது. மாலை தேநீர் அருந்தியானதும் நான் சுமுகமாக இருந்த வேளை பார்த்து அவள் தொடங்கினாள் :

'சார்ல்ஸ், என் பிரியமே, நாளை கோயிலுக்குப் பெரிய இடத்து மனிதர்கள் வரப்போகிறார்கள் இல்லையா?'

'பிரியே, வருவார்கள்போல்தான் தோன்றுகிறது. அதனால் நமக்கென்ன சங்கடம். யார் வந்தாலும் வராவிட்டாலும் கோயிலில் பிரசங்கம் இருந்து தீருமே?'

'அது இருக்கும். ஆனால் பிரியே, நாமும் சற்று நாகரிகமாக நடந்துகொள்ளவேண்டாமா? எதுவும் நடக்கலாமில்லையா, யார் கண்டது?'

'உன்னுடைய முன்னெச்சரிக்கை பாராட்டத்தக்கது. கோயிலில் நாகரிகமான நடத்தை மிக அவசியம். அது எனக்கு உவப்பளிக்கும் விஷயமாயிற்றே. நாம் பக்தி விநயமாக, அமைதியாக, அமரிக்கையாக...'

'ஆமாம், அது எனக்குத் தெரியும். நான் சொல்லுகிறது என்னவென்றால், நாம் கொஞ்சம் முறையோடு போகவேண்டாமா? இந்த ஊர்ப் பங்கரைகள் போலில்லாமல்.'

'நீ சொல்வது மிகவும் சரி. பிரியே, நானே அதைச் சொல்லலாமென்றிருந்தேன். நாம் எல்லோருக்கும் முன்னால் அங்குப் போயிருப்பதுதான் முறை. ஆராதனை தொடங்குவதற்கும் முன்பாகச் சிறிது நேரம் தியானமும் செய்யும்படி முன்னமே போய்...'

'பூ, சார்ல்ஸ் அதெல்லாம் சரிதான். நான் சொல்வது அதில்லை. உயர்குடி மனிதரைப்போல் சிறக்கப் போகவேண்டுமென்கிறேன். கோயில் இரண்டு மைல் தூரத்தில் இருக்கிறது. அவ்வளவு தூரமும் இந்தப் பெண்கள் நடந்து, வேர்த்துப் பூத்து, ஓட்டப் பந்தயத்திலே ஓடினமாதிரி மூஞ்சியெல்லாம் சிவந்து போய், கோயிலுக்குள்ளே சென்று உட்காருகிறது எனக்குச் சம்மதமாயில்லை. இப்பவும், பிரியே, என் யோசனை இதுதான். நம்ம உழவு குதிரைகள் இரண்டும் இருக்கே—ஒண்ணு நம்மகிட்ட வந்து ஒன்பது வருஷமாகுது. அடுத்தது அந்த பிளாக்குபெரி

சின்ன வேலைக்குக்கூட லாயக்கில்லை; சும்மாதான் இருக்கிறது. இரண்டும் தின்று கொழுத்துச் சோம்பேறியாய் அலையுது. நாம வேலை செய்கிறோமே, அவைகளும் செய்யவேண்டாமா? மோசே கொஞ்சம் அவற்றின் முடியை அங்க இங்க கத்தரிச்சுச் சரிபண்ணிட்டான்னா, ரெண்டும் சவாரிக்கு லாயக்கா, பார்க்கிறதற்கு சுமாரா இருக்கும்!'

'இந்தச் சோப்ளாங்கி வாகனத்துமேலே சவாரி போறதை விட நடந்துபோறது எவ்வளவோ கௌரவமாயிருக்கும். பிளாக்குபெரிக்குப் பூனைக்கண். அடுத்ததுக்கு வால் கிடையாது. இரண்டுக்கும் சவாரிப் பழக்கமே இல்லை; எத்துவாளித்தனம் பண்ணும். நம்மகிட்டே சேணம், பின்சேணம் ஒவ்வொன்று தானிருக்கு.' ஆனால், இந்த ஆட்சேபங்கள் எல்லாம் உதறிவிடப் பட்டன. சம்மதிப்பதைத்தவிர எனக்கு வேறு வழியும் இல்லை.

ஞாயிற்றுக்கிழமைக் காலையிலும் சவாரி ஆயத்த வேலை முடிந்தபாடில்லை. சவாரிக்குத் தேவையானவற்றைத் தேடிக் கொண்டு அங்குமிங்கும் அலைந்துகொண்டிருந்ததைக் கண்டதும் அவர்கள் புறப்பட நேரம் ஆகலாம் என்று தோன்றியது. ஆகையால், நான் முதலில் நடந்துபோய்விடத் தீர்மானித்தேன். அவர்கள் குதிரைமீது வருவதால் வேகமாக வந்து சேர்ந்து விட முடியும்.

நான் கோயிலினுள் சென்று என் இருக்கையில் அமர்ந்து ஒருமணி நேரமான பின்பும் அவர்கள் வரவில்லை. ஆராதனை தொடங்க நேரமாகிவிட்டதால் தொடங்கி நடத்தினேன். அப்பொழுதும் அவர்கள் வந்துசேரவில்லை என்பதைக் கவனித்தேன். எனக்கு மனம் சங்கடப்பட்டது. ஆராதனை நடந்து முடிந்தும் விட்டது. அவர்களோ கண்ணில் தென்படவில்லை. இரண்டு மைலும் ஒற்றையடிப் பாதைதான். குதிரைப் பாதையானால் ஐந்து மைல் சுற்றிக்கொண்டு போகவேண்டும். நான் அவர்களைத் தேடிக்கொண்டு குதிரைப் பாதையில் நடக்கத் தொடங்கினேன். பாதித் தூரம் வந்ததும் அவர்கள் ஊர்வலம் மெல்லக் கோயிலை நோக்கி முன்னேறிக்கொண்டிருந்தது தெரிந்தது. என் மகனும் மனைவியும் இரு சிறாரும் ஒரு குதிரைமீதும், இரு குமாரத்திகளும் மற்றதன்மீதும் ஆரோகணித்திருக்கக் கண்டேன்.

காரணம் கேட்டேன். அவர்கள் பார்வையிலிருந்தே பல சங்கதிகள் நிகழ்ந்திருக்க வேண்டுமென யூகிக்க முடிந்தது.

முதலாவது, இரண்டும் வீட்டைவிட்டே கிளம்பமாட்டோமென்று சாதிச்சுதாம். அப்பொழுது அந்தப் பக்கம் வந்த

திரு. பருச்செல் தமது தடியைக்கொண்டு அடித்துக் கிளம்ப வைத்து அப்புறம் ஓர் இருநூறு கஜதூரம் தள்ளிக்கொண்டு ஓட்டி வந்தாராம். அப்புறம் என் மனைவி வீற்றிருந்த பின் சேணத்தின் வார் அறுந்துவிட்டதாம். அதைச் செப்பனிட்டுக்கொண்டு மீண்டும் கிளம்பினார்களாம். அப்புறம் ஒன்று திடீரென நின்றுகொண்டு நகரவே மாட்டேன் என்று அடம் பிடித்ததாம். அந்தக் குதிரையைத் தட்டிக்கொடுத்துத் தாஜா பண்ணிக்கொண்டிருந்தபோது தான் நான் அங்குப் போய் நின்றேன்.

ஆள்களை முழுசாகக் கண்டுபிடித்துவிட்டதுமே எனக்கு நிம்மதியாயிற்று. அவர்களுக்கு ஏற்பட்ட இந்தக் கஷ்டங்கள் ஒரு வகையில் எனக்குச் சந்தோஷமாக இருந்தது. பெண்களுக்குப் பணிவைக் கற்றுக்கொடுக்கவந்த சிறந்த பாடம் இது என்று எண்ணினேன். என் எதிர்கால வெற்றிகளுக்கு இது முன்னடையாளம் என்றும் எனக்குத் தோன்றிற்று.

11

[குடும்பம் மீண்டும் தலையெடுத்துவிடப் பெருமுயற்சி செய்கிறது.]

மறுநாள் மிகாவேல் திருநாள். கொட்டை சுட்டுச் சாப்பிடவும் மற்றும் அதையொட்டிய பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளவும் பிளாம்பரோ சமுசாரி எங்களை அன்று மாலை தம் வீட்டுக்கு அழைத்தார். அந்தக் குதிரைச் சவாரி நிகழ்ச்சியில் நாங்கள் சற்றுத் தாழ்மைப்பட்டிருந்தோம். இல்லாவிடில் அவர் வீட்டு அழைப்பையெல்லாம் அத்தனை எளிதில் ஏற்றுக்கொள்ளுகிறவர்களில்லை.

இன்பமாகப் பொழுதுபோயிற்று. வாத்துக்கறியும், பாயசமும், பானங்களும் மிகச் சுவையாக இருந்தன என்று என் மனைவியே ஒப்புக்கொண்டாள். பிளாம்பரோவுக்குச் சுவையாய்ப் பழக வராது. தம்மைப்பற்றியே சற்று நீண்ட, மிக அறுவையான, நாங்கள் பல முறை கேட்ட கதைகளைச் சொன்னார். இருந்தாலும் மீண்டுமொருமுறை கேட்டுச் சிரித்து மரியாதை செய்தோம்.

திரு. பருச்செல்லும் வந்திருந்தார். அவருக்கு விளையாட்டு என்றால் எப்பொழுதும் பிடிக்கும். கண்ணாம்பூச்சி விளையாட்டு தொடங்கிவைத்தார். பிள்ளைகள் விளையாடிக்கொண்டிருந்தனர். என் மனைவியைக்கூடக் கலந்துகொள்ளும்படி கட்டாயப்படுத்தினார். அவள் இன்றும் இளமையானவளே என்ற நினைப்பு எனக்கும் சந்தோஷத்தைக் கொடுத்தது. அவர்களது ஆட்டபாட்டங்களை நானும் பிளாம்பரோவும் பார்த்து மகிழ்ந்துகொண்டு உட்கார்ந்திருந்தோம். எங்களது இளமைக்கால விளையாட்டுகளை நினைவுகூர்ந்து, அந்த நினைவுகளைப் பரிமாறிக்கொண்டோம்.

கண்ணாம்பூச்சியிலே பல தினுசு ஆட்டங்கள் ஆடிமுடித்ததும் சப்பாத்து விளையாட எல்லோரும் ஒரு வட்டமான நாற்காலிகளில் உட்கார்ந்தனர். இஃது ஓர் ஆதிகாலத்து விளையாட்டு. வட்டத்தின் நடுவில் ஒருவர் நிற்கவேண்டும். உட்கார்ந்திருப்போர் ஒரு செருப்பைத் தொடைக்கடியில் மறைத்து, நடுவில் நிற்பவர் பார்க்காதபோது அடுத்து உட்கார்ந்திருப்பவரிடம் கடத்துவார். தறியில் நாடாச் செல்வதுபோல, சப்பாத்து அங்கும் இங்கும் மறைவாய்ப் போய்க்கொண்டிருக்கும். இந்த விளையாட்டின் சிறப்பு என்ன

வெளில் நடுவில் நிற்பவர் மறுபுறம் திரும்பி நிற்கும்போது செருப்பால் அவரைப் பின்னாலிருந்து ஒருவர் அடித்துவிட்டு அவர் திரும்பு வதற்குள் மறைந்து கடத்துவார். ஒலிவியா நடுவில் நிற்கும் முறை அப்போது. ரொம்பத் திணறிப்போனாள். செருப்பால் அடிபட்டு, நைபட்டு, அலங்கோலமான நிலையில் 'கள்ள ஆட்டம் ஆடப் படாது' என்று கத்திக் கூச்சல் போட்டுக் களைத்துப்போனாள்; கதைப்பாட்டுப் பாடுகிறவன் அலறுவதுபோல அலறுவதும் கரைவதுமாயிருந்தாள். அப்பொழுது பார்த்தா அறைக்குள் அந்தச் சீமாட்டிகள் நுழையவேண்டும்!

ஆம், எங்கள் மேலிடத்து அறிமுகங்கள், பட்டணத்து அம்மணிகள் பிளார்னி சீமாட்டியும், செல்வி கரோலினா உல்ஹெல் மினா அமிலியா ஸ்கெங்ஸ்ஸும்தாம் அப்பொழுது அங்கே வந்து நின்றனர். எங்களுக்கு அவமானம் தாங்க இயலவில்லை. எங்கள் பட்டிக்காட்டு நிலையை அந்த உயர்குடிச் சீமாட்டிகள் கண்கூடாகப் பார்த்துவிட நேர்ந்துவிட்டதே. உயிரை விடலாம் போல் தோன்றியது. இந்தக் கட்டுப்பெட்டி பிளாம்பரோ பேச்சைக் கேட்டுக்கொண்டு விளையாடியதனால் வந்த வினை! அவர்களைக் கண்டதும் எதுவும் பேசத் தோன்றாமல் கல்லாய்ச் சமைந்துநின்றோம்.

முந்திய நாள் பெண்கள் கோயில் வந்து சேராததனால் என்னமோ ஏதோவென்று நினைத்து, விசாரித்துப் போக எங்கள் வீட்டுக்குப் போயிருந்தனராம். அங்கே எங்களைக் காணாமை யால் இங்கே வந்திருக்கின்றனர்.

அவர்களிடம் பேசும்பொறுப்பை ஒலிவியா எடுத்துக் கொண்டாள். 'குதிரை வீழ்த்திவிட்டது' என்று அந்த நிகழ்ச்சியை ஒரு வாக்கியத்தில் சுருக்கப்படுத்தினாள். உடனே சீமாட்டிகள் தாங்கள் பதறிப் போய்விட்டதாகக் காண்பித்துக் கொண்டனர். இவள் உடனே காயமொன்றும் அதிகமில்லை என்று இலேசாய்ச் சொன்னாள். அவர்கள் தாங்கள் அதைக்கேட்டுப் பெரும் நிம்மதி அடைந்ததாகச் சொன்னார்கள். இவள் காயமில்லாவிட்டாலும் தாங்கள் அதிகம் பயந்துபோய்விட்டதாகக் கூற, அவர்கள் மீண்டும் பெரிதும் கவன்றனர். முடிவில் நலமாக வீடுவந்து சேர்ந்துவிட்ட தாக என் மகள் சொல்லவும் சீமாட்டிகள் மீண்டும் தாங்கள் பெரு மகிழ்வு எய்தியதாகத் தெரிவித்துக்கொண்டனர்.

சீமாட்டிகள் இருவரும் என் பெண்களிடம் பரிவோடு கனிவாய்ப் பழகினார்கள். முந்திய சந்திப்பில் பிரியமாக நடந்துகொண்டனர் என்று சொன்னால் இந்தச் சந்திப்பிலே அவர்கள் பெண்களை

அன்புக்கடலில் முழுக்கினர் என்று சொல்லவேண்டும். 'இந்த அன்பு நீடிக்கவேண்டும். நாம் மேலும் நெருக்கமாகப் பழகவேண்டும்' என்று அடிக்கடி சொன்னார்கள். பிளார்னி சீமாட்டி ஓலிவியாவிடம் ஒட்டுதலாகவும் அடுத்தவள் செல்வி கரோலினா உல்ஹெல்மினா அமிலியா ஸ்கெங்ஸு (முழுப் பெயரையும் நீட்டிச் சொல்வது எனக்குப் பிடிக்கிறது) சோபியாவிடம் அதிகப் பற்றுதலாகவும் பழகியதாகத் தெரிந்தது.

சீமாட்டிகள் இருவரும் தங்களுக்கு மாத்திரமே தெரிந்திருக்கக் கூடிய விஷயங்களையே தங்களுக்குள் பேசியவாறிருந்தனர். மற்றவர்கள் அதை அதிசயத்துடன் கேட்டவாறிருந்தனர். பிரபுக்கள், பெரும்பிரபுக்கள், மகாபெரும் பிரபுக்கள், வீரகுல பிரபுக்கள், சீமாட்டிகள் முதலியோரைப்பற்றிய விவரங்களைக் கேட்டுக் கொண்டிருக்க யாருக்குத்தான் பிடிக்காது. அச் சீமாட்டிகளின் அன்றைய உரையாடலின் முடிவுப் பகுதியை எழுதுகின்றேன்.

செல்வி ஸ்கெங்ஸு சொல்லுவாள்:

''சீமாட்டியம்மணி! நிசமோ, பொய்யோ எனக்குத் தெரிந்ததை நான் சொல்கிறேன். மகாபிரபுவுக்கு முகம் மாறிச் சிவந்து போச்சாம். சீமாட்டியம்மாவோ மூர்ச்சையாகிக் கீழே சாய்ந்து விட்டாளாம். உடனே, ஸர் பிமுக்கின் பிரபு வாளையுருவிக் கொண்டு 'அவள் என்னுடையவள். கடைசித்துளி இரத்தம் என்னுடம்பில் ஓடுகிறவரை நான் அவளுக்காகப் போராடுவேன்' என்றாராம். எல்லோரும் ஸ்தம்பிச்சுப் போய் அப்படியே நின்றார்களாம்.''

சீமாட்டியம்மணி பதிலுக்குச் சொல்லுவாள்:

''மகா சீமாட்டியம்மா இதைப்பற்றியெல்லாம் என்னிடம் மூச்சுக்கூட விடவில்லை. பொதுவா அந்தம்மா என்னிடம் எதுவுமே மறைக்கமாட்டாள். ஆனா ஒண்ணு எனக்கு நிச்சயமாய்த் தெரியும். மகாபிரபு அவரோட உதவியாளனை மூன்றுமுறை கூப்பிட்டாராம். 'ஜெர்னிங்கன், ஜெர்னிங்கன், ஜெர்னிங்கன் என்னுடைய கச்சைக் கொண்டுவா' அப்படின்னாராம்.''

ஒரு விஷயம் முன்னாடியே சொல்லியிருக்கவேண்டும். இந்த அம்மாமார் பேசிக்கொண்டிருந்தவேளையில் திரு. பருச்செல்லின் நடவடிக்கை மிக விநோதமாயிருந்தது. அவர்களைப் பார்க்காமல் நெருப்புமுகமாய் உட்கார்ந்துகொண்டு ஒவ்வொருத்தியும் பேசி முடித்ததும் 'மண்ணாங்கட்டி!' என்பார். இது அவ்வளவு மரியாதையாக இல்லை. பெரிய இடத்துச் சமாசாரம் கேட்கும் உற்சாகத்தை இவர் ஏன் இப்படிக் கெடுக்கிறார் என்றிருந்தது.

சீமாட்டி தொடர்ந்தாள்:

'மேலும் ஸ்கெங்ஸ், என் பிரியமே! டாக்டர் பர்டாக்கு அந்தச் சந்தர்ப்பத்தில் இயற்றிய செய்யுளில் ஒண்ணு மில்லையே.'

'மண்ணாங்கட்டி.'

'எனக்கும் அது ஆச்சரியமா இருக்கு! அவர் இதையெல்லாம் விடமாட்டாரே. அதிலேயும் அவர் தம் சுயதிருப்திக்காக மாத்திரம் எழுதுகிறவராச்சே? சீமாட்டியம்மாளிடம் அந்தச் செய்யுள் இருக்கா? நான் பார்க்கலாமா?'

'மண்ணாங்கட்டி.'

'என் பிரிய பெண்ணே! இதையெல்லாம் நான் தூக்கிக் கொண்டு அலைவேனென்று நினைக்கிறயா? நன்றாய்த்தான் எழுது கிறார் அதிலே சந்தேகமில்லை. எனக்கும் விமரிசனம் பண்ணத் தெரியுமில்லையா? எது எனக்குப் பிடிக்குங்கிறதாவது எனக்கு நிச்சய மாகத் தெரியும். டாக்டர் பர்டாக்கு எழுதுகிற சின்னச் சின்னக் கவியெல்லாம் நல்லாத்தானிருக்கிறது. ஆனால் ஒரு குறை. சாமானியரைப்பற்றி அதிகமாக எழுதுகிறார். ஒண்ணு ரெண்டு தான் ஹனோவர் மகா சீமாட்டியையும் தன்னையும்பற்றி எழுதியிருக்கிறார். அவைகளைத் தவிர அவர் உயர்மட்டத்து வாழ்க்கையைப்பற்றி எழுதுகிறதே இல்லை.'

'மண்ணாங்கட்டி.'

''சீமாட்டியம்மணிகூடச் 'சீமாட்டிகள் பத்திரிகை'யிலேயே நிறைய எழுதி வந்தீர்களே நீங்கள் நன்றாய் எழுதுகிறீர்கள். சாமானியரைப் பற்றியெல்லாம் எழுதக்கிடையாது. இப்பொழு தெல்லாம், ஏன் அம்மணி, நீங்கள் எழுதுகிறதில்லை?''

'மண்ணாங்கட்டி.'

'ஆமாம், பிரியே, என் உதவிப்பெண்ணுக்குக் காப்டன் ரோச்சு வோடு கலியாணம் ஆயிற்றா? படித்துக் காட்டவும், எழுதவும் அவள் இருந்தது பெரிய உதவியாயிருந்தது. எனக்குக் கண்பார்வை இப்போ அவ்வளவு சரியாயில்லை; இன்னொரு துணைப்பெண் தேடிக் கொண்டிருக்கிறேன். சரியான ஆள் கிடைக்கிறதாயில்லை. நல்ல குடும்பத்துப்பெண் கிடைச்சா வருஷம் முப்பது பவுன் தாராள மாகக் கொடுத்துவிடலாம். ஆனால், குணமுள்ள பெண் கிடைக்கிறதுதான் கஷ்டமாக இருக்கு. பட்டணத்துச் சிறிசுகள் எல்லாம் நமக்கு வாய்க்குப்படாது.'

'மண்ணாங்கட்டி.'

'எனக்குந் தெரியும் அம்மா. இந்த ஆறு மாதத்திலே நான் மூணு உதவிப்பெண் வச்சாச்சு. ஒருத்தி நாளுக்கு ஒரு மணிநேரம் தையல் வேலை செய்யறதுக்கு ஒத்துக்கல. அடுத்தவ சம்பளம் போதாது என்றாள். ஆண்டுக்கு இருபத்தஞ்சு கினி அவளுக்குப் போதவில்லையாம். மூன்றாமவளை நானே அனுப்பிவிட்டேன். குடும்ப குருவோடு தொடர்பு வச்சுக்கிட்டிருந்ததா சந்தேகம் வந்தது. பிளார்னி சீமாட்டியம்மா! ஒழுக்கம் என்கிறது மிகவும் முக்கியம் அம்மா. ஒழுக்கமுள்ள பெண்ணுக்கு எத்தனை கொடுத் தாலும் தகும் அம்மா! ஆனால், கிடைக்கிறதுதான் கஷ்டமா இருக்கு'.

'மண்ணாங்கட்டி.'

இந்த அளவளாவலை என்மனைவி மிக உன்னிப்பாய்க் கேட்டுக் கொண்டிருந்தாள். கடைசியாகக் குறிப்பிட்ட சம்பள விஷயம் அவளை வெகுவாய் அயரச்செய்தது. ஆண்டுக்கு முப்பது பவுன்; இருபத்தஞ்சு கினி—ஆங்கிலக்கணக்குக்கு ஐம்பத்தாறு பவுனும் அஞ்சு ஷில்லிங்கும் ஆகும். வெகு அலட்சியமாகவல்லவா அடிபடு கிறது. அந்த வேலையை நம்ம பெண்களுக்கு வளைத்துப் போட்டுக் கொண்டால்? என் கருத்து எப்படியிருக்குமோ என்று கண்டு கொள்ள என் முகத்தையும் ஒரு விநாடி ஆராய்ந்தாள். உள்ளதைச் சொல்லவேண்டுமானால் என் பெண்களுக்கு இப்படிப்பட்ட வேலை கள் கிடைத்தால் பொருத்தமாக இருக்குமே என்றுதான் நானும் நினைத்தேன். மேலும் எங்கள் நிலப்பிரபுவுக்கு ஒலிவியாமீது உண்மைக் காதல் இருக்குமானால் அவளது எதிர்கால வாழ்வுக்கு அவளுக்கு இப்படியொரு பயிற்சி தேவையாயிற்றே.

இத்தகைய சந்தர்ப்பத்தில் இனிமேலும் வாளாவிருக்க லாகாது என்று முடிவுகட்டிய என் மனைவி தன் சொற்றிறனை யெல்லாம் காட்டத் தொடங்கினாள்.

'நான் மிகச் சலுகை எடுத்துக்கொள்வதாகச் சீமாட்டிகள் நினைத்துக் கொள்ளக்கூடாது. பெரிய இடத்துப் பழக்கத்துக்கு நாங்கள் பாத்தியதை கொண்டாடக்கூடாதுதான். இருப்பினும், என் குழந்தைகளின் முன்னேற்றத்தில் நான் கருத்துடையவளாக இருப்பது இயற்கையே ஆகும். ஆகவேதான் பேசத்துணிந்தேன். என் இரு பெண்களுக்கும் போதுமான கல்வியும் திறமைகளும் இருக் கின்றன என்பதை நான் சொல்ல விரும்புகின்றேன். இந்த வட்டாரத்தில் இத்தகைய பெண்கள் வேறு கிடையாது. அவர் களுக்கு எழுதப்படிக்க-கணக்குவைக்கத் தெரியும். தையலில் எல்லாவகையும் தெரியும். அகலத் தையல், குறுக்குத் தையல்,

மாற்றுத் தையல், பூத் தையல், சுருக்குத் தையல் எல்லாம் செய்வார்கள். துணி வெட்டவும் ஜிகினா வைத்துத் தைக்கவும் தெரியும். பெரியவள் தாள் கத்தரித்துப் பூவேலை செய்வாள். சின்னவள் சீட்டுக்கட்டு ஜோசியம் அழகாய்ச் சொல்லுவாள்.''

'மண்ணாங்கட்டி.'

நாவன்மை நிறைந்த இச் சிறு பேச்சு முடிவுற்றதும் சீமாட்டிகள் ஒருவரையொருவர் ஒரு பெருந்தோரணையோடு-சந்தேகமிருப்பதுபோலப் பார்த்துக் கொண்டனர். சில நிமிடங்கள் கழிந்தன. அதன்பின் செல்வி கரோலினா உல்ஹெல்மினா பெரியமனது வைத்தவள்போல் தான் பார்த்தவளவில் இக் குறுகிய காலத்தில், அவ்விரு பெண்களைப்பற்றியும் தனக்கு நல்லெண்ணம்தான் என்ற பீடிகையுடன் என் மனைவியைப் பார்த்துச் சொல்லலுற்றாள்:

'ஆனால் அம்மா, இம்மாதிரிச் சந்தர்ப்பங்களில் நாம் முதலில் ஒருவரையொருவர் நன்கு புரிந்துகொள்ளுவது அவசியம். பெண்களின் ஒழுக்கத்தைப்பற்றித் தீர விசாரிக்காமல் ஒன்றும் செய்வதற்கில்லை. என்னைப் பொறுத்தவளவில் இச் செல்விகளின் ஒழுக்கம், நிதானம், அறிவு முதலியவற்றைப்பற்றி நல்லெண்ணமே கொண்டுள்ளேன். ஆயினும், எல்லாவற்றுக்கும் ஒரு முறை இருக்கிறதல்லவா அம்மா?'

அவள் அப்படிச் சந்தேகிப்பதை என் மனைவி வரவேற்றாள். அவர்கள் நிலையில் தான் இருந்தால் தானும் அப்படித்தான் சந்தேகப்பட்டிருப்பாள் என்று வேறு சொன்னாள். வேண்டுமானால் அண்டைஅயலில் தீர விசாரித்துப் பார்த்துக்கொள்ளுங்கள் என்று கூறினாள். அப்பொழுது சீமாட்டி அதொன்றும் அவசியமில்லையென்றும், தன் உறவினர் தாரன்ஹில் சிபாரிசு செய்துவிட்டால் போதுமானதென்றும் கூறவே, நாங்கள் அப்படியே செய்யுமாறு விண்ணப்பித்துக்கொண்டு விடைபெற்றோம்.

12

[விதி செய்யும் சதி. இடுக்கண்களைக்காட்டிலும் அவமானங்களைத் தாங்குவது கடினம்.]

வீடு திரும்பினோம். கோட்டையைப் பிடிக்க மேற்கொண்டு என்னென்ன செய்யலாமெனத் திட்டங்கள் தீட்டியவாறு இரவைக் கழித்தோம். இரண்டு மகள்களில் யாருக்கு எந்த இடம் கிடைக்கும், மேல்மட்டத்து மனிதரோடு பழக யாருக்கு அதிக வாய்ப்புகள் கிடைக்கும் என்றெல்லாம் என் மனைவி யூகம் பண்ணத் தொடங்கினாள். வேலை கிடைக்க நிலப்பிரபுவின் சிபாரிசு மாத்திரம்தான் பாக்கியிருந்தது. அவரோ எங்களுடன் அருமையாகப் பழகுகின்றார். எனவே, அவர் உதவியைப்பற்றி எங்களுக்குச் சந்தேகமே இருக்கவில்லை.

படுத்த பின்னரும் என் மனைவி வாய் ஓயாமல் பேசிக் கொண்டேயிருந்தாள்.

'சார்ல்ஸு, என் பிரியமே! இன்னிக்கு நாம் செஞ்ச வேலை மிகப் பிரமாதம்!'

''ஆமாம், 'பரவாயில்லை'. அதற்கு மேலே எதுவும் பேசத் தோன்றவில்லை எனக்கு.''

''அதென்ன 'பரவாயில்லை' என்று சொல்லி நிறுத்திவிட்டீர்கள். நம் குழந்தைகள் பட்டணத்துக்குப் போய் பெரிய இடங்களிலே பழகுகிறார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். இலண்டனிலே நல்ல மாப்பிள்ளைகளுக்கும் பஞ்சமிருக்காது. நம் பெண்களைப் பார்த்து இந்தச் சீமாட்டிகளே இப்படி அசந்து போறாங்களே, அப்போ சீமான்களைப்பற்றிச் சொல்லவா வேணும்? எனக்குப் பிளார்னி சீமாட்டியை ரொம்பப் பிடிச்சிருக்கு. அருமையாப் பேசறா. செல்வி கரோலினா உல்ஹெல்மினா அமிலியா ஸ்கெங்ஸும் மோசமில்லை. அவளையும் பிடிச்சுத் தானிருக்கு. அவர்கள் உதவிப்பெண் வேலையைப்பற்றிக் குறிப்பிட்டதும் நான் அவர்களை லபக்குன்னு ஒரு பிடிபிடிச்சிட்டேன் பாத்திங்களா? குழந்தைகளுக்காக நான் செஞ்ச அந்த வேலை அபாரம்தானே, சொல்லுங்க.''

நான் அதைப்பற்றி நிச்சயமான எந்த முடிவுக்கும் வந்திராததால்,

'ஆமாம், எல்லாம் ஒரு மூணு மாசம் போனால் தெரியும். எல்லாம் அவனருள்போல் நடக்கும்' என்றேன்.

நான் அடிக்கடி அவளிடம் இப்படிப் பொதுப்பட ஞானிபோல் பேசிவைப்பது வழக்கம். பட்டணத்து வேலை கிடைத்து எல்லாம் நல்லபடியாய் நடந்தால் அந்தச் சொற்கள் அர்த்தமுள்ளவையாக இருக்கும். அப்படியில்லாமல் அசம்பாவிதமாய் முடிந்துவிட்டாலும் அவற்றை ஒரு தீர்க்கதரிசனமாக அர்த்தப்படுத்திக் கொள்ள முடியும்.

அவள் இப்படிப் பேச்சை இழுத்துக்கொண்டே போனது, காரணமாகத்தான் என்பதும் எனக்கு இலேசாகப் புரியத் தொடங்கியது. அவள் ஏதோ திட்டம் வைத்திருக்கிறாள்! எனக்குக் கொஞ்சம் பகீரென்றது. சம்பவங்கள் இப்படித் திரும்புவதால் நாம் இனிச் சமுதாயத்தில் சிறப்பாக வாழ்ந்துகாட்ட வேண்டியது மிக அவசியம் என்று பீடிகை போட்டாள். திட்டம் இதுதான். இரண்டு குதிரைகளில் ஒன்று மிகவும் கிழடானது. பக்கத்து ஊரிலே சந்தை விழா நடக்கிறது. அங்கே போய் அதை விற்று விட்டு நல்ல சவாரிக் குதிரை ஒன்று வாங்கினால் என்ன? ஒருவர் அல்லது ரெண்டு பேர் ஏறுகிறதுபோல் சின்னதாய்—அழகாய்—கோயிலுக்கோ அல்லது பிற வீடுகளுக்கோ அதில் சவாரி போய் இறங்கினால் எவ்வளவு கௌரவமாயிருக்கும். நான் அதைப் பலமாய் எதிர்த்தேன். அவள் பலமாய்ப் பிடிவாதம் பிடித்தாள். முடிவில் அவளே வெற்றிபெற்றாள் என்பதைச் சொல்லவேண்டியதில்லை.

மறுநாள் எனக்குத் தடுமன் பிடித்துக்கொண்டது. அதோடு சந்தை விழாவுக்குப் புறப்பட்டேன். ஆனால், என் மனைவி என்னைத் தடுத்து நிறுத்திவிட்டாள்.

'நீங்கள் போகவேண்டாம் பிரியமே, நம்ம மோசே எதையும் நிதானமாகச் செய்யக்கூடியவன். வாங்கக்கொள்ளக் கெட்டிக்காரன். நம்ம வீட்டிலே நல்ல பேரமா அமைஞ்சதெல்லாம் அவன் வாங்கியதுதானே. பேரம் திகைகிற வரையிலும் நின்னு நிதானமாப் பேசுவான். விற்கிறவனுக்குச் சலிச்சுப் போகும். அவ்வளவு ஜோராப் பேரம் பண்ணுவான்.'

மோசே நிதானமாகத்தான் எதையும் செய்வான். பொறுப்பை அவனிடம் விட்டுவிடுவது நல்லதுதான். அதற்கு மறுநாள் அவன்

புறப்பட்டான். அவன் உடையலங்காரப் பொறுப்பை அவன் சகோதரிகள் கவனித்துக்கொண்டார்கள். பிரகாசமான பச்சையில் உள்கோட்டு. மேலே இடிமின்னல் துணியிலே தைத்த கோட்டு. அது சின்னதாகிவிட்டிருந்தாலும் புதிதாயிருந்ததால் அதையே போட்டுக்கொள்ளச் சொன்னார்கள். அவனது பக்கிள்களை மினுக்கிவிட்டுத் தொப்பியில் அலங்காரப் பின்னுகளைக் குத்திவைத்தார்கள். முடியைச் சிறிது கத்தரித்துவிட்டு அகலமான கறுப்பு ரிப்பனைக்கொண்டு அதைச் சேர்த்துப் பின்னால் கட்டி வைத்தார்கள். அலங்காரம் முடிந்ததும் அவன் குதிரையில் ஏறிக்கொண்டான். வரும்போது மளிகை வாங்கிவர ஒரு கள்ளிப் பெட்டியையும் குதிரைமீது அவன் பின்னால் வைத்தோம். வாசலை விட்டதும் வெகுதூரம் அவன் கூடவே நடந்து 'நல்லதிர்ஷ்டம் உண்டாகுக' என்று கூவி வழியனுப்பி வைத்தோம்.

அவன் போனதும் திரு. தாரன்ஹில்லின் பட்லர் வந்தான். எங்கள் வீட்டு மனிதர்கள் பெயரெல்லாம் அவன் எஜமானர் வாயிலே அடிக்கடி அடிபடுகிறதாம். ரொம்ப உயர்வாய்ப் பேசுகிறாராம் எங்களைப்பற்றி. அந்த நல்லதிர்ஷ்டத்துக்காக அவன் எங்களை வாழ்த்திவிட்டுப் போனான்.

அதிர்ஷ்டங்கள் தனியாக வருவதில்லையல்லவா? பட்லர் போன சில நாழிகைக்கெல்லாம் பிரபுவின் வேலையாளே வந்தான். பட்டணத்துச் சீமாட்டிகள் என் பெண்களுக்கு ஒரு சீட்டு எழுதி அவனிடம் கொடுத்தனுப்பியிருந்தனர். திரு. தாரன்ஹில், அவர்களைப்பற்றிச் சிறப்பாய்ச் சிபார்சு செய்துவிட்டாராம். இன்னும் ஒருசில விசாரணைகள் முடிந்துவிட்டால் அவர்கள் முற்றிலும் திருப்தியுறுவார்களாம்.

'ஆ' என்று வாயைப் பிளந்தாள் என் மனைவி. 'பெரிய இடங்களில் நுழைவது எளிதன்று. ஆனால் நுழைந்துவிட்டோம். அப்புறம் கண்ணை மூடிக்கொண்டு நிம்மதியாய்த் தூங்கிவிடலாம்.'

இதை ஹாஸ்யமாய் நினைத்துச் சொல்லுகிறாள் என்று என் பெண்களுக்குத் தெரிந்திருந்ததால் அவர்கள் சத்தமாய்ச் சிரித்தார்கள். சந்தோஷ மிகுதியால் என் மனைவி தன் பையிலிருந்து ஏழரைப் பென்னி எடுத்து அந்த வேலையாளிடம் கொடுத்தாள்.

இன்று எங்களுக்குப் பார்வையாளர் தினம் போலும். இதோ இன்னொரு பார்வையாளர் திரு. பருச்செல். சந்தை விழாவுக்குப் போயிருந்தவர் இங்கேயும் வந்து எட்டிப்பார்த்தார். பயல்களுக்கு இஞ்சி மிட்டாய் கொடுத்தார். அதை என் மனைவி வாங்கிப்

பத்திரப்படுத்தினாள், பின்னால் அவ்வப்பொழுது கொஞ்சம் கொஞ்சமாய்க் கொடுக்கலாமென்று. பெண்குழந்தைகளுக்கு ஆளுக்கு ஒரு சம்புடம் கொடுத்தார், பொடி டப்பி மாதிரி. அதனுள்ளே ஸ்டாம்புவில்லை, காசு எல்லாம் வைத்துக்கொள்ளலாம். என் மனைவி பணம் வைத்துக்கொள்ளுகிறது ராஜகீரித் தோலாலான ஒரு பர்ஸிலேதான். அது ஆக்கமான பர்ஸாம். ஆனால், அது இப்போது கதைக்குத் தேவையில்லை.

பிளாம்பரோ வீட்டில் பருச்செல் நடந்துகொண்டது அவ்வளவு நன்றாக இல்லைதான். இருந்தாலும் நல்ல மனிதர். இப்பொழுது பெண்களின் வேலைகுறித்து நல்ல செய்தி வந்திருக்கிறது. அதை அவரிடம் சொல்லவேண்டும். அவர் ஆலோசனையையும் கேட்டுக்கொள்ளலாம். ஆலோசனையைக் கேட்கிறது தானே தவிர, அதன்பிரகாரம் செய்கிறது எங்களுக்கு வழக்கமில்லை.

சீமாட்டிகளிடமிருந்து வந்த சீட்டை வாங்கிப் படித்துவிட்டுத் தலையை ஆட்டினார். மிக விழிப்புடன் பரிசீலனை செய்து முடிவு எடுக்க வேண்டிய விஷயம் என்று அபிப்பிராயமும் தெரிவித்தார். அவரது எச்சரிக்கை என் மனைவிக்கு அறவே பிடிக்கவில்லை.

'நீங்கள் இப்படிச் சொல்லுவீர்கள் என்பது நான் எதிர்பார்த்ததுதான். நீங்கள் எப்பொழுதும் மிக விழிப்பாகத்தானே நடந்துகொள்ளுகிறீர்கள். இனிமேல் எங்களுக்கு ஆலோசனை தேவையானால், தங்கள் வாழ்க்கையில் அப்படி விழிப்பாக இருப்பவர்களிடம் கேட்டுக்கொள்ளுகிறோம்.

'தாயே, என்னுடைய வாழ்க்கை எப்படியிருந்தது என்பது இப்போதைய பிரச்சினை அன்று. நான் ஆலோசனை கேட்டு நடந்தவனில்லைதான். ஆனால், அப்படி நடக்கக்கூடியவர்களுக்கு நான் என் மனச்சாட்சிப்படி நல்லாலோசனை வழங்குவது என் கடமையாகும்.'

என் மனைவி சூடாகப் பதில் சொல்லிவிடக்கூடாதே என்று பயந்தேன். நறுக்குத் தெறித்தாற்போல் தகுந்த பதில் அவளுக்குச் சமயத்தில் உதிக்காது. ஆனால், அதற்கு ஈடுசெய்கிறதுபோல் கண்டதையும் பேசிவிடுவதைத் தடுக்க நான் பேச்சை மாற்றினேன்.

'இருட்டப் போகிறதே. இன்னும் மோசே திரும்பக் காணோமே...'

என் மனைவி குறுக்கிட்டாள்.

'அவனைப்பற்றிக் கவலையே வேண்டாம். மழைநாளில் கோழி விற்கிறவனில்லை அவன். பேரம் பேசுவதில் கெட்டி. காரியத்தை ஒழுங்கா முடிச்சுட்டு வந்து சேருவான். முன்னொரு முறை அவன் பேரம் முடிச்ச கதையைச் சொல்கிறேன், கேளுங்க. உங்களுக்குச் சிரிச்சுச் சிரிச்சு வயிறு புண்ணாப்போகும். ஓ-அதோ மோசே வர்றானே. குதிரையைக் காணோம். பெட்டியை அவனே சுமந்துகொண்டு வருகிறான்.'

தெருவியாபாரிபோல் கல்லாப்பெட்டியின் தோல்வார்களைத் தோளில் இடுக்கிப் பெட்டியை முதுகில் போட்டுக்கொண்டு அவன் சாவகாச நடை நடந்துவந்தான்.

'வா, மகனே, வா. சந்தை விழாவில் எங்களுக்கு என்னென்ன வாங்கிக்கொண்டு வந்தாய்?'

பெட்டியை மேசைமீது இறக்கிவைத்துக்கொண்டு ஒரு குறும்புச் சிரிப்புடன், 'என்னையேதான் கொண்டு வந்திருக்கிறேன்' என்றான்.

என் மனைவி கேட்டாள்:

'அது தெரிகிறது மோசே, குதிரை எங்கே?'

'விற்றாச்சு. மூணு பவுன், அஞ்சு ஷில்லிங்கு, ரெண்டு பென்னிக்கு விற்றேன்.'

'பரவாயில்லையே. நீ எப்பவும் நல்லாத்தான் பேரம் செய்வே. மூணு பவுன், அஞ்சு ஷில்லிங்கு, ரெண்டு பென்னின்னா நல்ல வியாபாரம்தான். பணம் எங்கே?'

'பணமாக இல்லை. அதை இதிலே போட்டுவிட்டேன்' ஒரு பொட்டலத்தை எடுத்துக்கொண்டே பேசினான்:

'பன்னிரண்டு டஜன் பச்சைக் கண்ணாடிகள், வெள்ளி பிரேம் கட்டியது. சுறாமீன் மெருகுதோல் கூடுகளோடு சேர்த்து.' என் மனைவிக்குக் குரல் சரியாய் எழும்பவில்லை. மெலிந்த குரலில் அதையே திருப்பிச்சொன்னாள்.

'பன்னிரண்டு டஜன் பச்சைக் கண்ணாடி!'

'குதிரையை விற்றுவிட்டுப் பதிலுக்குக் குதிரை வாங்காமே பன்னிரண்டு டஜன் பச்சைக் கண்ணாடி வாங்கினாயாக்கும்?'

'அம்மா, நான் சொல்கிறதை முதலில் கேளுங்கள். ரொம்ப இலாபகரமான வியாபாரம். இல்லாவிட்டால் வாங்கியிருப்பேனா? அந்த வெள்ளிப் பிரேமுகள் மாத்திரமே நான் கொடுத்த விலையைப்போல் ரெண்டு மடங்கு பெறும்.'

'ஓர் அவுன்ஸ்சு பழைய வெள்ளி இப்ப அஞ்சு ஷில்லிங்கு தான். அந்தக் கணக்குப்படி பார்த்தா இந்தப் பிரேமெல்லாம் நீ கொடுத்த விலையில் பாதிகூடத் தேறாதே' என்று எரிச்சலுற்றாள் என் மனைவி.

நானும் பிரேமுகளைக் கவனித்துப் பார்த்தேன்.

'கவலை வேண்டாம். வேளை வரும்போது விற்போம். ஒவ்வொண்ணும் ஆறு பென்னி பெறும். எல்லாம் பித்தளை-முலாம் பூசியிருக்கு.'

'என்ன பித்தளையா? வெள்ளியில்லையா: வெள்ளி யில்லையா?' என்று இரைந்தாள் என் மனைவி.

'பித்தளைதான், உன் அடுப்பாங்கரை ஏனத்தைப்போல!'

'பன்னிரண்டு டஜன் பித்தளைப் பிரேம். பன்னிரண்டு டஜன் மெருகுதோல் கண்ணாடிக் கூடு! குதிரையோ போயாச்சு. நாசமாய் போவான் அந்த எத்துவாளிப் பயல். ஏமாத்துக்காரன்ங்கறது தெரியாமல் போச்சு உனக்கு?'

'என்னத்துக்காக அந்த மாதிரிப் பசங்ககிட்ட நீ வியாபாரத் துக்குப் போனே?' நானும் ஏதாவது சொல்ல வேண்டுமல்லவா? அதனால் அப்படிக் கேட்டுவைத்தேன்.

'இது ஒரு பொருள்னு மெனக்கெட்டுத் தூக்கிக்கிட்டு வந்திருக் கானே' அவள் எளிதில் ஓயவில்லை.

'ஒண்ணுமில்லாததுக்குப் பித்தளைப் பிரேம் மேல் இல்லையா?' என்றேன் நான்.

இப்பொழுதுதான் மோசேக்குத் தான் ஏமாற்றப்பட்டது புரிந்தது. தான் ஏமாறக்கூடியவன் என்று கண்டு, அந்த எத்தன் வலியத் தன்னிடம் வந்திருக்கிறான். எல்லா விபரமும் சொன் னான். குதிரையை விற்றதும், வேறு குதிரை வாங்குவதற்காகச் சந்தையில் சுற்றிவந்தான். கண்ணியமாகத் தோன்றிய ஒருவர் தம்மிடம் ஒரு குதிரை இருக்கிறதென்று சொல்லித் தம் கூடாரத் துக்கு அழைத்துச் சென்றார்.

'அங்கே இன்னொருவர் — சுத்தமான ஆடைகள் அணிந்திருந்தார். அவர் — இந்தக் கண்ணாடிமேல் கடனாக இருபது பவுன் புரளுமா என்று வேறொருவரிடம் கேட்டுக்கொண்டிருந்தார். அவருக்கு மிக அவசரமாகப் பணம் தேவைப்பட்டதால் அதில் மூன்றில் ஒரு பங்கு கிடைத்தால்கூட அவ்விலைக்கே தள்ளிவிடலாம் என்று பேசிக்கொண்டு போனார். என்னை அழைத்துச் சென்றவர், நானே அவற்றை வாங்கிக்கொள்ளுமாறு ஒரு நண்பனின் தொனியில் என்னிடம் கிசுகிசுத்தார். இதைவிட்டால் வேறு சந்தர்ப்பம் எழுவது கடினம் என்றார். பிளாம்பரோவையும் சந்தையில் கண்டிருந்ததால் நான் அவரை வரவழைத்துப் பேசினேன். அவரிடமும் அதே மாதிரி வாயடி அடித்தார்கள். நாங்கள் இருவரும் யோசனைபண்ணி, அவர் ஒரு பன்னிரண்டு டஜன், நான் ஒரு பன்னிரண்டு டஜன் என்று அவற்றை வாங்கிப் போட்டுக் கொண்டோம்.'

13

[திரு. பருச்செல் பொருந்தாத ஆலோசனை சொல்லத் துணியவே பகைவராகிறார்.]

ஆடம்பர வாழ்க்கைக்காக அவர்கள் எடுத்துக்கொண்ட ஒவ்வொரு முயற்சியும் இவ்வாறு தோல்வியிலே முடிந்தது. அவர்களுக்கும் சோர்வு ஏற்பட்டது. எனக்கோ அவர்களுக்கு அறிவுரை புகட்ட இதுவே நல்ல தருணம் என்று தோன்றியது.

'பாருங்கள், என் குழந்தைகளே! நம்மிலும் மேல்மட்டத்தில் உள்ளோரைப்போல் நாம் வாழ முயல்வதில் பல கஷ்டங்கள் உண்டு. தங்கள் மட்டத்திலுள்ளோரை ஒதுக்கிவிட்டுப் பணக்காரர் பின்னால் வலியச் சென்று பழகும் ஏழைகளைப் பிற ஏழைகளும் புறக்கணிக்கின்றனர். பணக்காரரும் அவர்களை இளப்பமாகவே கருதுகின்றனர். ஏற்றத்தாழ்வான உறவினால் தாழ்ந்த மட்டத்திலுள்ளோருக்கே கஷ்டங்கள் அதிகம். அவ்வுறவினால் உண்டாகின்ற இலாபங்கள் உயர்மட்டத்தினருக்கும், நஷ்டங்கள் தாழ்ந்தமட்டத்தினருக்கும் போய்ச் சேருகின்றன. டிக்குப் பயல் இன்று ஒரு கதை படித்துக்கொண்டிருந்தான். அது இப்பொழுது நமக்கு மிகவும் பொருத்தமானது. எங்கே, அதை எல்லோருக்கும் வாசித்துக் காட்டடா, கேட்போம்.'

டிக்கு வாசித்தான் :

'ஒரு காலத்திலே ஓர் இராட்சதனுக்கும் ஒரு குள்ளனுக்கும் நட்பு உண்டாயிற்று. இணைபிரியாமல் இருந்து வந்தார்கள். ஒரு நாள் அவர்கள் வீரதீரச் செயல்கள் பல புரியவேண்டும் என்ற நோக்கங்கொண்டு, ஒருவரையொருவர் கைவிடக்கூடாது என்று ஒப்பந்தம் பண்ணிக்கொண்டு நாட்டைவிட்டுப் புறப்பட்டார்கள்.

முதலில் இரண்டு சாரசான் வீரர்களோடு போர் புரிய நேரிட்டது. குள்ளன் வெகு தீரமாய் முதலில் ஒரு சாரசானுக்கு ஓங்கி ஓர் அறை கொடுத்தான். சாரசானுக்கு ஒரு சேதமும் உண்டாகவில்லை. அவன் தன் வாளைத் தூக்கிக் குள்ளனுடைய கையை ஒரே வெட்டாய் வெட்டித் துண்டித்துவிட்டான்.

குள்ளனின் நிலை பரிதாபமாயிருந்தது. அப்பொழுது இராட்சதன் அவனுக்கு உதவிசெய்ய வந்து இரண்டு சாரசான்களையும் கொன்று வீழ்த்தினான். குள்ளன் உடனே கோபமாய் அந்த உடல்களின் தலைகளைத் துண்டாக்கினான்.

மேலும் பயணம் செய்துகொண்டு போகையில் இன்னொரு போர் வந்து சேர்ந்தது. மூன்று பொல்லாத பிசாசுகள் ஓர் அழகியைக் கடத்திக்கொண்டு போனதை அவர்கள் கண்டனர். குள்ளன், முன்னைப் போலில்லாவிட்டாலும் இன்னும் தீரம் குன்றாதவனாகப் பிசாசுகளுக்கு முதல் அடி கொடுத்தான். பிசாசுகள் கொடுத்த பதில் அடியில் குள்ளனுக்கு ஒரு கண் போய் விட்டது. அப்பொழுது இராட்சதன் போரில் கலந்துகொள்ள வந்தான். பிசாசுகள் பயந்து ஓடிவிட்டன. இல்லாவிடில் இராட்சதன் அவைகளைக் கொன்றிருப்பான். அவர்கள் அந்த வெற்றி மகிழ்ச்சியில் திளைத்தனர். அழகி இராட்சதன்மீது காதல்கொள்ளவே இருவருக்கும் திருமணமாயிற்று.

மீண்டும் பயணத்தைத் தொடர்ந்தனர். வழியிலே கொள்ளைக் கூட்டம் ஒன்று எதிர்ப்பட்டது. இந்தத் தடவை எப்படியோ இராட்சதன்தான் முன்னணியில் நின்று போர் தொடங்கினான் குள்ளனும் உடனடியாகச் சேர்ந்துகொண்டான். போர் கடுமை யாக நடந்தது. இராட்சதன் எல்லோரையும் கொன்று குவித் தான். குள்ளனுக்கோ கொல்லப்படாமல் தன்னைக் காத்துக் கொள்ளுவதே பெரும்பாடாயிருந்தது. முடிவிலே நண்பர்களுக்கு வெற்றி கிட்டியது. ஆனால், குள்ளனுக்கு ஒரு கால் போயிருந்தது.

ஆகக்கூடி இப்போது குள்ளனுக்கு ஒரு கை, ஒரு கண், ஒரு கால் இல்லை. இராட்சதனோ முழுசாக இருந்தான். ஒரு காயம்கூடக் கிடையாது. அவன் குள்ளனைப் பார்த்துச் சொல்வான்: 'என் சின்ன வீரனே, நாம் சாகசங்களில் வேகமாக முன்னேற்றங் கண்டுவருகிறோம். இன்னும் ஒரே ஒரு தீரச்செயல் செய்துவிட்டால் போதுமானது. நமது புகழ் என்றென் றைக்கும் நிலைத்துவிடும்!'

'முடியாது' என்றான் குள்ளன். அவனுக்கு இப்பொழுது புத்தி வந்திருந்தது.

'முடியாது. நான் என் ஒப்பந்தத்தை இத்தோடு முடித்து விட்டேன். நான் இனி என்றுமே உன்னோடு சேர்ந்து போர்புரியப் போவதில்லை. ஏனெனில், ஒவ்வொரு சண்டையிலும் புகழும் பரிசும் உனக்கும், அடிகள் எனக்கும் கிடைக்கின்றன என்பதைக் கண்டு கொண்டேன்.'

இந்தக் கதையின் நீதியை நான் விளக்கப் புகுந்தேன். அதற்குள் அருகில் பேசிக்கொண்டிருந்தவர்களின் குரல்கள் உரத்து ஒலிப்பதைக் கேட்டேன். என் மனைவிக்கும் பருச்செல்லுக்கும் காலையில் தொடங்கிய சர்ச்சைதான் இன்னும் நீடித்துக்கொண்டிருந்தது. பெண்கள் இலண்டனுக்குச் சென்றால் பல நன்மைகள் விளையக்கூடும் என்று தெபோரரா விளக்கிக்கொண்டிருந்தாள். பருச்செல், அவர்கள் அப்படிச் செல்வதைத் தடுக்க முயன்றுகொண்டிருந்தார். அவர் தொனியில் அக்கறை இருந்ததாகவே தோன்றிற்று. நான் இரண்டு பேர் பேசுவதையும் கேட்டுக்கொண்டு நடுநிலை வகித்தவாறு வாளாவிருந்தேன்.

வரவர சர்ச்சை கடுமையாயிற்று. தெபோராவுக்குக் காரண காரியங்காட்டி வாதாடும் முறை தெரியவில்லை. எனவே, குரலை உயர்த்தினாள். பின் கூச்சலிடத் தொடங்கினாள். முடிவிலே அசிங்கமாய்ப் போய்விட்டது.

'சில பேருக்கு ஏதோ ரகசிய நோக்கம் இருக்கிறது. அதனால் தான் துராலோசனை சொல்லுகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் இனி என் வீட்டுக்கு வராதிருப்பதே நல்லது என்றாள்.'

பருச்செல் நிதானமிழக்காமல் அமைதியாய்ப் பதில் சொல்லத் தொடங்கினார். அது என் மனைவியின் கோபத்தை மேலும் தூண்டியதாகத் தெரிந்தது.

'தாயே, எனக்கு இரகசிய நோக்கம் இருப்பதாகச் சொல்லுகிறீர்களே, அது உண்மைதான். ஆனால், அதை நான் இப்போது வெளியிடுவதாயில்லை. ஏனெனில், நான் வெளிப்படையாய்க் கேட்டவற்றுக்கே உங்களால் சரியான பதில் அளிக்க இயலவில்லை. நான் இங்கு வருவது உங்களுக்கு இடைஞ்சலாக இருப்பதுபோல் தோன்றுகிறது. ஆகவே, நான் இப்போது விடைபெற்றுக்கொள்ள விரும்புகின்றேன். நான் மீண்டுமொருமுறை இங்கே வருவேன், வெளிநாடு கிளம்புமுன்னதாக' என்று சொல்லிக்கொண்டே தொப்பியை எடுத்து அணிந்துகொண்டார். அவரது அவசரத்தைத் தடுப்பதுபோல் சோபியா அவரைப் பார்த்தாள். ஆனால், அவள் பார்வை பயனளிக்கவில்லை.

அவர் சென்றதும் நாங்கள் மனங்குழம்பி ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு சில நிமிடங்கள் அப்படியே நின்றோம். இதற்கெல்லாம் காரணம் - தானேதான் என்று என் மனைவி நன்கு அறிந்திருந்தாளாதலால், அக் குற்ற உணர்வை மறைக்க முயன்று வலியச் சிரித்துக்கொண்டு ஒரு போலியான தன்னம்பிக்கையோடு நின்றாள். எனக்கு அவளைக் கண்டிக்கத் தோன்றிற்று.

'பெண்ணே என்ன இது ? அந்நியரை நடத்தும் முறையா இது ? அவரது உதவிக்கு நாம் செய்யும் கைம்மாறு இதுதானா? நீ மிகக் கடுமையாகப் பேசிவிட்டாய். எனக்கு இது அறவே பிடிக்க வில்லை.'

'அவர் ஏன் என் கோபத்தைக் கிளறினார் ? அவர் அப்படி ஆலோசனை சொன்னதன் உள்நோக்கம் எனக்குத் தெரியும். பெண்கள் இலண்டனுக்குப் போவது அவருக்குப் பிடிக்கவில்லை. ஏனெனில், அவர் சோபியாவின் அருகிலிருந்து பொழுதைப் போக்கமுடியாது. அவள் இலண்டன் போவது மிகவும் அவசியம். இங்கேயே கிடந்து இந்தத் தாழ்ந்த மனிதரோடு பழக்கம் வைத்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை.'

'தாழ்ந்தவர் என்று முடிவுகட்டிவிட்டாயா ? நமக்கு அவரைப்பற்றிய விவரங்கள் சரியாகத் தெரியாது. அவரது பேச்சு பழக்கவழக்கங்களைப் பார்த்தால், அவர் ஒரு சிறந்த குனவான் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. சோபியா, குழந்தாய்! அவர் உன்மீது பிரியம் கொண்டிருப்பதாக அவர் எப்போதேனும் உன்னிடம் தெரிவித்ததுண்டா? சொல்லு அம்மா.'

'அதொன்றுமில்லை அப்பா! அவர் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருக்க நன்றாக இருக்கும். அறிவோடு இனிமையாக அடக்கமாகப் பேசுகிறார், அவ்வளவுதான். ஆனால், ஒருமுறை சொன்னார் : ஏழைபோல் தோற்றமளிக்கின்ற ஓர் ஆண் மகனை, கெட்டிக்காரன் என்று ஒப்புக்கொள்ளுகிற பெண்ணை நான் இதுவரை கண்டதே இல்லை என்று சொன்னார்.'

'எல்லாச் சோம்பேறியும் இப்படித்தான் பேசுவான். வாழ்க்கையிலே நொடிச்சுப்போன ஆம்பிளைகள் இந்த மாதிரி தான் எதையாவது சொல்லிக் கொண்டிருப்பார்கள். அவர்களை நீ இனம் கண்டுகொள்ளப் பழகவேணும். இவருக்குத் தம் பொருளாதாரத்தைச் சீராக நிருவகிக்கத் தெரியவில்லை. இப்படிப்பட்டவர்கள் தம்மைச் சார்ந்தவரைக் கண்கலங்காமல் வைத்துக் காப்பாற்றுவார்கள் என்று எதிர்பார்ப்பது முட்டாள் தனம். சோபியா, நானும் உன் தாயாரும் உன் எதிர் காலத்தைப்பற்றி வேறு நல்ல திட்டங்கள் வைத்திருக்கின்றோம். அடுத்த குளிர்காலத்தில் நீ இலண்டனில் வசிக்க நேரிடலாம். நீ பழகும் மனிதரைத் தெரிந்தெடுப்பதில் இதைவிடவும் ஜாக்கிரதை யாக இருந்துகொள்ள வேண்டும்.'

இச் சொற்கள் சோபியாவின் மனத்தில் என்னென்ன எண்ணங்களை உண்டுபண்ணின என்பதை என்னால் அறுதியிட இயலவில்லை.

என்னைப் பொறுத்தவரையில் சந்தேகாஸ்பதமான ஓர் அதிதியைத் தலைமுழுகிவிட்டாயிற்று என்று உள்ளூர ஒரு நிம்மதியுணர்வு உண்டாயிற்று.

அதிதி உபசாரத்தில் தவறிவிட்டோமோ என்ற குற்றவுணர்வால் மனச்சாட்சி அவ்வப்பொழுது உறுத்தியது உண்மையே. ஆனால், நானே சில காரணங்களைக் கற்பித்துக்காட்டி அந்தச் சட்டாம்பிள்ளையின் குரலை அடக்கினேன். (தவறு இழைத்து முடித்தபின்னர் மனச்சாட்சி கிளப்பும் குரலும் காலப்போக்கில் ஒடுங்கிவிடுகின்றது. மனச்சாட்சி ஒரு கோழையே. தடுக்க இயலாத குற்றங்களை அது நியாயமென்று குற்றஞ்சாட்டிக் கொண்டிருப்பதில்லை.)

14

[மேலும் மனவேதனைகள். ஆயின் இடுக்கண்களாகத் தோன்றுவன நன்மைகளாகவும் முடியலாம்.]

பெண்கள் இருவரையும் இலண்டனுக்கு அனுப்புவது என்று முடிவுசெய்துவிட்டோம். திரு. தாரன்ஹில், அங்கு அவர்களைக் கண்காணித்து எங்களுக்குக் கடிதம் எழுதித் தெரிவித்துவரும் பொறுப்பை அன்புடன் ஏற்றுக்கொண்டார். வேலை கொடுத்தவர்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்றவாறு அவர்கள் பார்வைக்கு அலங்காரமாகவும் காட்சி அளிக்கவேண்டும். ஆனால், துணிமணிச் செலவுக்கோ கையில் பணமில்லை. எப்படிப் பணம் ஆகப் பண்ணுவது—அதாவது, எதை விற்பது உசிதம் என்று எல்லோரும் கூடி ஆலோசனை பண்ணினோம். யோசனை பண்ணி ஒரு முடிவுக்கு வந்தோம். ஒரு குதிரை போய்விட்டதால் அடுத்த குதிரையும் இப்போது உழவில் போடாமல் சும்மாதானே நிற்கிறது. ஒரு கண் பொட்டையாதலால் சவாரிக்கும் லாயக்கில்லை. அதை விற்றுவிடலாம் என்று தீர்மானம் பண்ணினோம்.

இந்தத் தடவை நானே கொண்டுபோய் விற்றுவருவது என்று பேசிக்கொண்டோம். இதற்கு முன்னால் எனக்குக் குதிரை விற்றுப் பழக்கமில்லை. இருந்தாலும் ஒரு நம்பிக்கை. நமக்கு இல்லாத உலக ஞானமா என்று ஒரு தைரியம். நான் பெரும்பாலும் என் நேரத்தை எல்லாம் வீட்டிலே குடும்பத்திலேதான் செலவிட்டேன். அவர்களோடு ஒப்பிட்டால் எனக்கு உலக அறிவு அதிகம் தானே. அந்தக் குருட்டுத் தைரியத்தில் கிளம்பினேன். நாலைந்து எட்டு எடுத்து வைத்தவனை மீண்டும் என் மனைவி கூப்பிட்டு, 'ஜாக்கிரதை, ஏமாந்துவிடாதீர்கள்' என்று குரலைத் தாழ்த்தி எச்சரிக்கை செய்தாள்.

சந்தை விழாவுக்கு வந்துசேர்ந்தேன். குதிரையோடு குதிரையை அங்குமிங்கும் நடத்திக் காண்பித்துக் கொண்டிருக்க வேண்டும். அதுதான் வழக்கம். வெகுநேரம் நடத்திய பிறகும் யாருமே என் குதிரையைக் கவனிக்கவில்லை. கடைசியாக ஒரு சிறு வியாபாரி வந்தான். சிறிது நேரம் மேலும் கீழும் பார்த்துவிட்டுப்

பின் கண்ணைப் பார்த்ததும் எதுவுமே பேசாமல் நடந்துவிட்டான். அதன்பின் மளமளவென்று வரத் தொடங்கிவிட்டார்கள். இரண்டாவதாக வந்தவர் குதிரையை ஆராய்ந்துவிட்டு 'இதற்கு மூட்டு நோய் இருக்கிறதே' என்றார். மூன்றாமவர் சொற்படி என் குதிரைக்குக் காலில் வீக்கம் இருக்கிறதாம். நாலாமவர் அதன் கண்ணை உற்றுப் பார்த்துவிட்டு 'குதிரைக்குக் குடல்புழு இருக்கிறது' என்றார். ஐந்தாவது வந்தவனோ இவை எல்லாவற்றையுமே சொன்னான். அதன் குறைகளை எல்லாம் அடுக்கிவிட்டு 'நாய்க்குத் தீனியாக வெட்டிப் போடக்கூட இது லாயக்கில்லை' என்றான். எனக்கு வெட்கமாகப் போய்விட்டது. என் குதிரையைப் பார்த்து எனக்கே இளப்பம் உண்டாகிவிட்டது. யாராவது அதைப் பார்க்க அருகில் வந்தால் 'இவன் வராதிருப்பதே நல்லது' என்று நினைக்கத் தொடங்கினேன். இவர்கள் சொன்னதை எல்லாம் நான் அப்படியே நம்பிவிடாவிட்டாலும், ஏதோ கொஞ்சம் உண்மையாகத்தானிருக்கும் என்று தோன்றியது.

அந்தச் சமயத்தில் எனது பழைய நண்பர், என்னைப்போல ஒரு குரு, அந்தப் பக்கம் வந்தார். கைகுலுக்கிக் குசலம் விசாரித்துக்கொண்டோம். தாகத்துக்கு ஏதாவது சாப்பிடலாமென்று அருகிலிருந்த மதுக்கடைக்கு அழைத்துச் சென்றார். அந்தக் கடையின் பின்னாலிருந்த ஒரு சிறிய அறையினுள் உட்கார்ந்து கொண்டோம். அங்கே வயசானவர் ஒருவர் ஒரு புத்தகத்தைக் கூர்ந்து படித்துக்கொண்டிருந்தார். பார்ப்பதற்கு மிகக் கண்ணியமாய்த் தோன்றினார். அவரைப் பார்த்ததுமே எனக்கு அவர்மீது மிகுந்த மரியாதை உண்டாயிற்று. தலை பஞ்சு போல் நரைத்திருந்தது. ஆனாலும் முகம் நல்ல ஆரோக்கியமாயிருந்தது. இம்மாதிரியான பெருந்தகையை நான் வாழ் நாளில் இதற்கு முன்னால் பார்த்ததில்லை.

அவர் கருத்தாய்ப் படிப்பதில் ஆழ்ந்திருந்தார். நானும் என் குருத்துவ நண்பரும் செய்திகள் பரிமாறிக்கொண்டோம். எனது விஸ்தானிய ஏகபத்தினிக் கொள்கை, அதையொட்டி யெழுந்த சர்ச்சைகள், எனது கடைசித் துண்டுப் பிரசுரம், ஆர்ச்சு பீக்களின் மறுப்புப் பிரசுரம், அதனால் எனக்கேற்பட்ட சங்கடங்கள் எல்லாவற்றையும் விவரமாய்ச் சொல்லிக்கொண்டிருந்தேன். அப்பொழுது அந்த அறைக்குள் ஓர் இளைஞன் நுழைந்தான். பெரியவரிடம் குனிந்து தாழ்ந்த குரலில் மரியாதையுடன் ஏதோ சொன்னான். பதிலாகப் பெரியவர் சொன்னார் :

'மன்னிப்பொன்றும் கேட்க வேண்டா, பிள்ளாய்! இதெல்லாம் நாம் ஒருவருக்கொருவர் செய்துகொள்ள வேண்டிய கடமைகள்.

இதோ இந்த ஐந்து பவுன்களை வைத்துக்கொள். அதற்கு மேல் தர இயலாமைக்கு நான் வருந்துகின்றேன். இப்போதைய தேவைக்காவது உதவட்டும்.'

அந்த இளைஞன் நன்றிப் பெருக்கால் கண்ணீர் உகுத்தான். நான் உணர்ச்சிப் பெருக்கால் தவித்தேன். ஓடிப்போய்க் கிழவரைத் தழுவிக்கொள்ள வேண்டும் போலிருந்தது. அவரது உதாரகுணத்தைக் கண்டு நான் அவருக்கு முற்றிலும் அடிமையாகிப் போனேன்

பெரியவரோ அவர்பாட்டுக்குப் படிக்கத் தொடங்கிவிட்டார். நண்பரும் நானும் மேலும் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு விடைபெற்றுக் கொண்டோம். விடைபெறுகையில் பேச்சுவாக்கில் நண்பர் என் பெயரைக் குறிப்பிட்டார். 'டாக்டர் பிரிம்ரோஸிடம் பேசிக்கொண்டிருக்கும் வாய்ப்பு இனிமேலும் சீக்கிரம் ஏற்படும்' என்று ஏதோ சொன்னார். என் பெயரைக் கேட்டமாத்திரத்தில் மூதறிஞர் படிப்பை நிறுத்தி என்னையே கூர்ந்து பார்த்தார். நண்பர் போய்விட்டதும் என்னிடம் மிக மரியாதையுடன் கேட்டார் :

'ஏகபத்தினிக் கொள்கையில் ஈடுபாடு கொண்ட புகழ்வாய்ந்த திருச்சபைத் தூண்போன்ற டாக்டர் பிரிம்ரோஸுக்கு நீங்கள் உறவினரோ ஐயா?'

எனது மகிழ்ச்சி கரைகடந்துவிட்டது.

'தாங்கள் அத்தனை புகழ்கின்ற அந்த பிரிம்ரோஸு நானேதான் ஐயா. தங்களைப்போன்ற நல்ல மனிதர்கள் என்னைப் புகழ்வதைக் கேட்டு நான் பெருமையடைகின்றேன். தங்களது உதாரகுணத்தை நான் கவனித்துக் கொண்டிருந்தேன்.'

'ஐயா, நான் உங்களிடம் மிகவும் சுதந்தரம் எடுத்துக்கொண்டு விட்டேன். வலியப் பேசி இடைஞ்சல் விளைவித்துவிட்டேன். என் ஆர்வமிகுதியால் அப்படிச் செய்துவிட்டேன். மன்னிக்க வேண்டும்.'

நான் அவரது கையைப் பிடித்துக்கொண்டேன்.

'ஐயா, நீங்கள் வலியப் பேசியது எனது பாக்கியம். நான் உங்கள் கொடைக்குணத்தைக் கண்டதுமே உங்கள்மீது மிகுந்த மரியாதை கொண்டேன். இப்பொழுது நீங்கள் என் நண்பர்.'

அவர் என் கையை அழுத்தினார்.

'மிகுந்த நன்றி ஐயா! திருச்சபையின் தூண்போன்ற நீங்கள், வைதிக மரபுகளைக் காப்பாற்றும்பொருட்டு...' நான் அவரை இடைமறித்தேன். எழுத்தாளன் என்ற முறையில் புகழ்ச்சியை விரும்புகின்றவன்தானெனினும், அடக்கம் மேலிட்டு அவரைத் தடுத்தேன்.

நாங்கள் அந்தச் சில விநாடிகளில் காதலர்களைவிட விரைவில் உற்ற நண்பர்களானோம். பல பொருள்களைக் குறித்து அளவளாவினோம். அவரது பேச்சிலே புலமையைக் காட்டிலும் பக்தியுணர்வே விஞ்சிநின்றது. ஒருகால் வறட்டுக் கொள்கைகளைக் கண்டிப்பவரோ? அப்படியும் அவர்மீது மதிப்பு அதிகரித்ததே தவிரக் குறையவில்லை. ஏனெனில், எனக்கும் வரவர இந்த வறட்டுக் கொள்கைகளும் அவற்றின் மேலெழும் சர்ச்சைகளும் சலிப்பாக இருந்தன. கொள்கை கோட்பாடுகளைவிட மனிதநேயமே மேம்பட்டது என்ற உண்மையைச் சிறிது சிறிதாக உணரத் தொடங்கியிருந்தேன். உரையாடலையும் அந்தத் திசையில் திருப்பினேன். உடனே அந்த விநாடிக்காகக் காத்திருந்தவர்போல், மடைதிறந்து கொண்டதுபோல் அவர் பேசத் தொடங்கினார்:

'ஆமாம் ஐயா. உலகம் அந்திம திசையில் இயங்கிக்கொண்டிருக்கின்றது. இந்தப் படைப்பு ரகசியமானது; எல்லாக் காலத்திலேயும் தத்துவ ஞானிகளுக்குப் பிடிபடாத புதிராகத்தான் இருந்து வந்திருக்கின்றது. உலக சிருஷ்டியைப்பற்றித்தான் எத்தனை யெத்தனை கருத்துகள்! சஞ்சோனியத்தான், மானிதோ, பெராஸஸ், ஆசிலஸ், லூசினஸ் இவர்களெல்லோரும் புதிரை அவிழ்க்க முயன்றனர்; முடியவில்லை. லூசினஸ் என்ன சொல்லுகிறாரென்றால் [இங்கே கிழவர் எனக்கு விளங்காத கிரேக்கச் சொற்கள் சிலவற்றைச் சொன்னார்] — எதற்குமே ஆதியும் அந்தமும் இல்லை என்கிறார். மானிதோ நேபுகாதான் ஆசார் காலத்தில் வாழ்ந்தவர். ஆசார் என்பது சீரிய மொழிச்சொல். அரசர்களின் பெயர்முடிவில் அது வரும். தெகாலத்பால் ஆசார், நாபோன் ஆசார். இப்படி நாபோன் ஆசாரும் ஒரு விநோதமான கருத்தை வெளியிட்டான். [இங்கேயும் கிழவர் கிரேக்கிலே ஏதோ சொன்னார்.] தங்களால் எதையும் விளக்க இயலாது... மன்னித்துக்கொள்ளுங்கள், ஐயா! நான் விஷயத்தினின்று விலகிச் செல்லுகிறேன்...'

ஆம். அவர் விலகித்தான் சென்றுகொண்டிருந்தார். முதலில் நான் பேசிக்கொண்டிருந்த பொருளுக்கும் உலகப் படைப்புக்கும் என்ன சம்பந்தம் கண்டுபிடித்தார் என்பதும் எனக்குத் தெரிய

வில்லை. போகிறது, படித்த மனிதராயிருக்கிறார். இன்னும் எனக்கு மதிப்புக் குறையவில்லை. ஆயினும், அவரைச் சோதித்து விட வேண்டும் என்ற எண்ணமும் எழுந்தது. ஆனால், நான் எதைப் பேசத் தொடங்கினாலும் வாக்குவாதம் வரும்போல் தோன்றிய வுடன் அவர் சிரித்துத் தலையை அசைத்து மௌனம் சாதித்தார்; சர்ச்சைக்குள் நுழைவதைத் தவிர்த்தார். சர்ச்சை புரியவும், எதிரியைத் தோற்கடித்து வெற்றி சிறக்கவுமான அற்ப ஆசைகளில் மனத்தைச் செலுத்தாதவர்போலும் இவர். ஆயினும், அவர் முகத்திலே தவழ்ந்த சாத்துவிகத்தைப் பார்த்தால், இந்தக் கிழவர் மாத்திரம் மனம்வைத்தால், எந்தச் சர்ச்சையிலும் எந்தக் கொம்பனும் இவரைத் தோற்கடித்துவிட முடியாது என்று தோன்றியது.

ஆகவே, கனமான விஷயங்களை விட்டுவிட்டுப் பேச்சு, நடை முறை விவகாரங்களுக்குத் திரும்பிற்று. நான் என் குதிரையைப் பற்றிச் சொன்னேன். என்னே என் அதிருஷ்டம்! அவரது மானியத்துக்குட்பட்ட விவசாயி ஒருவனுக்குக் குதிரையொன்று தேவைப்படுகிறதாம். குதிரையைக் கூட்டிக்கொண்டு வந்தேன். சட்டுப்புட்டென்று பேரம் திகைந்தது. அவர் எனக்குப் பணத்தைக் கொடுக்க வேண்டியதுதான் பாக்கி. சட்டைப் பையிலிருந்து முப்பது பவுன் நோட்டு ஒன்றை உருவி என்னிடம் நீட்டி மீதியைக் கேட்டார். அவ்வளவு பணம் என்னிடம் இல்லை. அவர் தமது பணியாளை வரவழைத்தார். உயர்தரச் சீருடை அணிந்த வேலையாள் ஒருவன் பவ்வியமாக வந்து நின்றான்.

'இந்தா ஆபிரகாம். இதைக் கொண்டுபோய்த் தங்க நாணயங்களாய் மாற்றிக்கொண்டு வா. பக்கத்திலே ஜான்ஸனில் கிடைக்கும், அல்லது வேறு எங்கேனும் கேட்டுப்பார்.' அவன் போனதும் அவர் வெள்ளி நாணயங்களின் தட்டுப்பாடு பற்றிப் பேசினார். ஒரு சொற்பொழிவே ஆற்றினார் என்று சொல்லவேண்டும். 'தங்க நாணயங்கள் மாத்திரம் கிடைக் கின்றனவா, என்ன?' என்று நானும் அவரோடு சேர்ந்து பேச்சை வளர்த்தினேன். முடிவில் 'இது காசுப் புழக்கம் அருகிய காலம்' என்று முடிவுக்கு வந்தோம்.

அப்பொழுது ஆபிரகாம் வந்தான். சந்தை முழுவதும் கேட்டுப் பார்த்துவிட்டானாம். சில்லறை தந்தால் அரை கிரௌன்* கொடுப்பதாகக்கூடச் சொன்னானாம்; கிடைக்கவில்லையாம். எனக்கு ஏமாற்றமாயிருந்தது. பெரியவர் சிறிது நேரம் யோசித்து விட்டுக் கேட்டார்.

---

* கிரௌன் - ஐந்து ஷில்லிங்கு

'உங்கள் ஊரில் சாலோமோன் பிளாம்பரோவை உங்களுக்கு அறிமுகம் உண்டோ?'

'அவர் எனக்கு அண்டை வீடாச்சே'

'அப்படியா, நல்லதாயிற்று. நான் அவருக்கு ஒரு காசோலைச் சீட்டுத் தருகிறேன். பார்த்ததும் பணம் கொடுக்கவேண்டிய சீட்டு. சாலோமோனை எனக்குப் பல வருடங்களாகப் பழக்கம். நல்ல மனிதர். அந்த நாளில் மூணுகுதி ஆட்டத்தில் நான் அவரை ஜெயித்துவிடுவேன். ஆனால், தாண்டுவதில் அவர் மன்னன். தாண்டு விளையாட்டில் அவர்தான் ஜெயிப்பார்.'

பிளாம்பரோ யோக்கியமான மனிதர். அவர்பேரில் பணச் சீட்டுப் பெறுவதென்றால் கையில் பணத்தைப் பெறுவது போலத்தான். திரு. ஜென்கின்சன் (கிழவரின் பெயர் அது தான்) கையெழுத்திட்டுக் கொடுத்ததும் நான் மகிழ்ச்சியுடன் அதை வாங்கிக்கொண்டேன். அவர், ஆபிரகாமையும் பிளாக்கு பெரியையும் கூட்டிக்கொண்டு புறப்பட்டுப் போய்விட்டார்.

அவர் போய்ச் சிறிது நேரத்துக்கெல்லாம் என் மனம் சலனப் படத் தொடங்கியது. ஓர் அந்நியரிடம் காசு வாங்காமல், காசுக்குச் சீட்டு வாங்கிக்கொண்டிருக்கிறேன். ஓடோடி அவர் பின்னாலே போய்க் குதிரையைத் திருப்பிக்கொண்டு வந்துவிடுவோமா என்று யோசித்தேன். ஆனால், காலங் கடந்துவிட்டது. இனியொன்றுஞ் செய்ய இயலாது என்று சமாதானமடைந்து வீட்டை நோக்கி நடையைப் போட்டேன்.

நேரே பிளாம்பரோ வீட்டுக்குத்தான் சென்றேன். குழாயைப் புகைத்துக்கொண்டு அவர் வாசலில் நின்றார். நான் சீட்டைக் கொடுத்ததும் வாங்கி மாறிமாறி வாசித்தார்.

'கையெழுத்துத் தெரிகிறதா ? எப்பிராயீம் ஜென்கின்சன்.'

'தெரியாமல் என்ன ? நன்றாய்த் தெரிகிறது. ஆளையும் தெரிகிறது. அவனை மிஞ்சிய அயோக்கியனை இந்த லோகத்திலே கண்டுகொள்ள முடியாது. எங்களிடம் கண்ணாடி விற்றதும் இந்தப் போக்கிரிதான். தலை முழுவதும் நரைத்திருந்ததா ? சட்டைப் பை மூடியிருக்காது. பெரிய ஞானிபோல் பேசினானா ? சிருஷ்டி அது இது, என்று கொஞ்சம் கிரேக்கம் கலந்து நீளமாய் ஒப்பித்திருப்பானே!'

'ஆமாம்' என்று குமுறினேன்.

'அது ஒன்றை மாத்திரம் பாராமல் படித்து வைத்திருக்கிறான். படித்தவர் யாரையாவது கண்டால் அவிழ்த்துவிடுவான். அந்த ராஸ்கலை நான் விடப்போவதில்லை. எப்படியும் பிடித்து விடுவேன்.'

சரியான அவமானம். என் மனைவி மக்களின் முகத்தில் எப்படிப் போய் விழிப்பது என்பதுதான் எனக்குப் பெரிய பிரச்சினையாய் பூதாகாரமாய் நின்றது. பள்ளிக்கு மட்டம் போட்ட சிறுவன் வாத்தியாரைப் பார்க்க நடுங்குவதுபோல் நடுங்கினேன். சரி, அவர்கள் கோபப்படுவதற்கு முன்னரே, நானே முந்திக்கொண்டு அவர்களைப் பார்த்துச் 'சள்ளுபுள்'ளென்று விழவேண்டுமெனத் தீர்மானித்துக்கொண்டு வீட்டினுள் நுழைந்தேன்.

ஆனால், அந்தோ! வீட்டில் யாருமே என்னிடம் சண்டை பிடிக்கும் நிலையில் இல்லை. மனைவியும் மகள்களும் அழுது கொண்டிருந்தனர். தாரன்ஹில் வந்து இலண்டன் வேலை ரத்தாகிவிட்டது என்று தெரிவித்துவிட்டுப் போனாராம். யாரோ எங்களைப்பற்றி என்னவோ சீமாட்டிகளுக்கு எழுதிப் போட்டுவிட்டார்களாம். உடனே அவர்கள் சொல்லாமல் கொள்ளாமல் ஊருக்குக் கிளம்பிவிட்டார்களாம்! எழுதிப் போட்டவர் யாரென்று தாரன்ஹில்லால் கண்டுபிடிக்க இயல வில்லையாம். எனினும், அவர் என்றும்போல் எங்கள் குடும்ப நண்பராக இருந்து எங்களை ஆதரித்துவருவதாக ஆறுதல் வார்த்தைகள் சொல்லிவிட்டுப் போனாராம்.

எனது கதையைப் பொறுமையாய்க் கேட்டார்கள். அவர்களது பெருந்துயரத்தில் இச் சிறு ஏமாற்றம் இருட்டடிபட்டுப் போயிற்று.

நானும் அவர்களோடு சேர்ந்து, எழுதிப்போட்டது யாராக இருக்கும் என்று யோசித்து யோசித்து மண்டையைக் குழப்பிக் கொண்டேன். நாங்கள் யாருக்கும் ஒரு தீம்பும் செய்ததில்லை. பிறர் பொறாமையைக் கிளப்புமளவுக்கு நாங்கள் ஆரவாரமாக வாழவில்லை. பகையைக் கிளறுமளவுக்கு நாங்கள் யாரையும் புண்படுத்தியதுமில்லை.

15

[திரு. பருச்செல்லின் அயோக்கியத்தனம் வெளியாகிறது. அதிபுத்திசாலியின் முட்டாள்தனம்.]

அன்று இரவும் மறுநாளும்கூட, எங்கள் எதிரி யாராக இருக்கலாம் என்று யோசிப்பதிலேயே கழிந்தது. அண்டை அயலில் யாரையும் ஐயுற வழியில்லை. அப்பொழுது மைதானத்தில் விளையாடிக்கொண்டிருந்த எங்கள் குட்டிப்பயல் கடிதப் பெட்டி ஒன்றைத் தான் கீழே கிடந்து கண்டெடுத்ததாகக் கொண்டுவந்து கொடுத்தான். அது பருச்செல்லுடையது என்பதை நாங்கள் உடனே கண்டுகொண்டோம். அவர் அதை வைத்திருப்பதை நாங்கள் பார்த்திருக்கின்றோம். அதனுள்ளே பல தாள்கள் இருந்தன. முத்திரையிடப்பட்ட உறை ஒன்று எங்கள் கவனத்தைக் கவர்ந்தது. 'தாரன்ஹில் மாளிகையில் தங்கியிருக்கும் இரு சீமாட்டிகளுக்கும் அனுப்பவிருக்கும் கடிதத்தின் நகல்' என்று அதன்மீது எழுதியிருந்தது. எங்களுக்கு விரோதமாக எழுதிப்போட்டவர் அவராகத் தானிருக்கும் என்ற சந்தேகம், எங்கள் அனைவருக்குமே ஒன்று போல் உண்டாயிற்று. கடிதத்தைத் திறந்து படிப்பதா, கூடாதா? என்று சிறிதுநேரம் வாக்குவாதம் நடந்தது. நான் கூடாது என்றேன். பருச்செல் குற்றவாளியல்லர் என்று சோபியா நிச்சயமாக நம்பியதால், கடிதத்தைத் திறந்து படித்தால்தான் அந்த உண்மை ருசுவாகும் என்று அவள் சொன்னாள். மற்றையோரும் அவளை ஆமோதிக்கவே கடிதத்தைத் திறந்து வாசிக்கலானேன்.

'சீமாட்டிகளே,—

இந்தக் கடிதம் யாரிடமிருந்து வருகின்றதென்பதை அதைக் கொணர்பவனைக் கண்டதுமே நீங்கள் அறிந்துகொண்டிருப்பீர்கள். கள்ளங்கபடு இல்லாதவர் சார்பாக நின்று அவர்களுக்கு உதவி செய்கின்ற இயல்பு எனக்கு உண்டு என்பதை நீங்கள் அறிந்திருக்கலாம். எனக்கு ஓரளவு தெரிந்த இரண்டு இளம்பெண்கள் உதவிப் பெண்களாக இலண்டன் அழைத்துச் செல்லப்படவிருக்கின்றனர் என்று அறிந்தேன். எளிமை ஏமாற்றப்படுத்தப்படுவதையும், தூய்மை களைப்படுத்தப்படுவதையும் நான் எப்பொழுதுமே

எதிர்ப்பவனாதலால் அக் காரியம் ஆபத்து விளைவிக்கக் கூடியது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். அற்பர்களையும் கயவர்களையும் மிகக் கடுமையாக நடத்துபவனல்லன் நான். மௌட்டியத்தைக் கண்டனம் பண்ணிக்கொண்டு திரிவதைத் தொழிலாகக் கொண்டவனுமல்லன். பழிச்செயலைத் தவிர்க்க வேண்டியே நான் இவ்வாறு செயல்பட வேண்டியதாயிற்று. ஒரு நண்பனின் அறிவுரையாக இதைப் பாவித்துக்கொள்ளவும். அமைதியும் ஒழுக்கமும் நிலவி வரும் தூய தலங்களில் பழிபாவங்களை அறிமுகப்படுத்துவதன் முன்னர்ச் சற்றுச் சிந்தித்துப் பார்க்கவும்—'

எங்கள் சந்தேகம் தீர்ந்துவிட்டது. இரு தரப்பினரில் இவர் யாரைக் கண்டனம் பண்ணுகிறார் என்பது எங்களுக்குத் தெளிவாக இல்லை. ஆனால், ஒன்று நிச்சயமாய்த் தெரிந்தது. எங்கள் பெண்கள் இலண்டன் செல்லக்கூடாது என்ற நோக்கம்தான் அது. அதற்குமேல் படிக்கவில்லை. படிக்கவிடவில்லை என் மனைவி. கோபத்தில் கன்னாபின்னாவென்று ஏசத்தொடங்கினாள். ஒலிவியாவும் தாயாரோடு சேர்ந்துகொண்டாள். சோபியாவோ அதிர்ச்சியடைந்துவிட்டாள். பருச்செல் இப்படி அற்பத்தனமாய் நடந்துகொண்டிருப்பார் என்பதை அவளால் இன்னும் செரித்துக் கொள்ள முடியவில்லை. அவரது நன்றிகெட்ட தனத்தை நினைத்துப் பார்த்ததும் எனக்கும் கோபமாகத்தான் வந்தது. தான் சோபியாவுடன் மனம்விட்டுப் பேசிக்கொண்டிருப்பது தடைபடும் என்றுதான் மனுஷன் இப்படிச் செய்திருக்க வேண்டும்.

கடிதத்தையும் அவரையும்பற்றிப் பேசிக்கொண்டே உட்கார்ந்திருந்தோம். அவரை எப்படியாவது பழிவாங்க வேண்டும் என்ற ஆவலும் தலையெடுத்தது. அப்பொழுது அடுத்த சின்னப்பயல் ஓடிவந்து திரு. பருச்செல் வயற்காட்டினூடே வந்துகொண்டிருக்கிறார் என்று தெரிவித்தான். அப்பொழுது எங்கள் மனங்களில் எழுந்த பல்வேறு உணர்ச்சிகளை விவரிப்பதைவிடக் கற்பனை பண்ணிப்பார்ப்பதே எளிது. அவர் இழைத்த தீங்கு விளைவித்த மனக்கொதிப்பு ஒருபுறம்; அவரைப் பழிவாங்கும் நேரம் நெருங்குகிறது என்ற இன்பம் ஒருபுறம். எல்லாம் சேர்ந்து ஒரே குழப்பத்திலிருந்தோம்.

செய்நன்றி மறந்த மனிதர். அவரை நன்றாய்க் கண்டித்து, தைக்கிறாற்போல் குத்தலாய்ப் பேசி அனுப்பவேண்டும் என்று எண்ணினேன். அதனால், முதலில் ஒன்றும் காட்டிக்கொள்ளாமல் வழக்கம்போல் வரவேற்று, வழக்கத்தைவிட அதிகமாகவே பேசி மகிழ்வித்து, அவர் அந்த வஞ்சப்புகழ்ச்சியில் திளைத்துக்

கொண்டிருக்கையில் தருணம் பார்த்துப் பூகம்பம்போல் வெடித்து, அவரது கயமையைச் சுட்டிக்காட்டி அவமானப்படுத்த வேண்டும் என்று பேசி வைத்துக்கொண்டோம். இம்மாதிரித் திட்டங்களை நிருவாகம் பண்ண என் மனைவியால்தான் முடியும். எனவே பொறுப்பை அவள் ஏற்றுக்கொண்டாள்.

அவர் எப்போதும்போல் உள்ளே நுழைந்து ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தார்.

'வெயில் சுகமாக அடிக்கிறது, திரு. பருச்செல்.'

'ஆமாம் வெகு சுகமாய் அடிக்கிறது. மழையும் வந்தாலும் வரலாம். ஏனெனில் என் கால் வலிக்கின்றது.'

'கால்தானே ? காதல் இல்லையே ?' என்று கேட்டுவிட்டு என் மனைவி சத்தமாய்ச் சிரித்து, அப்படியொரு ஹாஸ்யம் அடித்து விட்டதற்காக மன்னிக்கவேண்டும் என்று கேட்டாள்.

'அம்மையே! உங்களை நான் மனப்பூர்வமாய் மன்னிக்கிறேன். நீங்கள் சொல்லியிராவிட்டால் அது ஹாஸ்யம் என்று எனக்குத் தெரிந்திருக்காது.'

என் மனைவி எங்களைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டிக் கொண்டு,

'தெரிந்திருக்காதோ ? இந்தக் காலத்தில் ஓர் அவுன்சு ஹாஸ்யம்கூட அபூர்வமாக அல்லவா இருக்கிறது ?'

'அம்மணி! நீங்கள் விகடப் புத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்திருக்க வேண்டும். அதனால்தான் ஹாஸ்யத்தை அவுன்சு அளவையில் அளக்கிறீர்கள். ஆனால், அம்மணி, மனிதனுக்கு முதலில் அறிவுதான் வேண்டும். அரை அவுன்சாவது வேண்டும்.'

பருச்செல் அவளைக் கிண்டல் பண்ணுவதுபோல் தெரிந்தது. இருந்தும் அவள் சிரித்துக்கொண்டே 'சிலபேர் அறிவு இருக்கிறதாக வேஷம் போடுகிறார்கள்' என்றாள்.

'ஆமாம். தங்களைப் பெரிய அறிவாளிகளாகக் காட்டிக் கொள்ளுகிற பெண்களைக்கூட உங்களுக்குத் தெரிந்திருக்குமே' என்றார் அவர்.

இனி அவர் அவளை எளிதில் மடக்கிவிடுவார். நானும் அரங்கில் குதிக்க வேண்டியதுதான்.

'நகைச்சுவை, அறிவு இதெல்லாம் இருந்து என்ன பயன் ? மனிதனுக்கு நேர்மையல்லவோ முக்கியம். உண்மை, வாய்மை,

மெய்ம்மை இவைதாம் ஒரு மனிதனை உயர்ந்தவனாக்குகின்றன. அறிவிற் சிறந்த மேதையான தத்துவஞானி யொருவன் மனித நேயமற்றவனாகக் குற்றங்கள் பல புரிபவனாக இருக்கின்றான் என்று வைத்துக்கொள்ளுங்கள். அறிவு அதிகமில்லாமல் குற்றங் களும் புரியாமல் எளிமையாக இருக்கும் ஒரு விவசாயியையும் எடுத்துக்கொள்ளுங்கள். இவர்கள் இருவரிலே யார் சிறந்தவர்? எளிய விவசாயி அல்லவா ? வாய்மையுடையவன் இறைவனின் உன்னத சிருஷ்டியாவான்.'

'போப் கவிஞரின் வசனம் இது. சொல்லிச்சொல்லிச் சலித்து விட்ட பழமொழி. மேதையொருவர் தமது மேதைமையை மதிக்கத்தவறி எழுதிய வரி அது. ஒரு நூலிலே குற்றங்கள் இருக்க லாம். ஆயின் அந் நூல் மேதைமை நிறைந்ததாயிருப்பின், அக் குற்றங்கள் அதன் மகிமையைக் குறைத்துவிடுமோ? அப்படியேதான் மனிதரும். ஒருவனிடம் உள்ள குணங்கள் என்ன என்று பார்க்க வேண்டுமே தவிர, அவன் குற்றங்கள் இல்லாதவனா என்று ஆராய்ந்துகொண்டிருக்க வேண்டியதில்லை. குற்றமில்லாதவன் இந்தப் பூமியில் யாருமே இல்லை. சிறந்த அறிவாளியிடம் அவசரப் புத்தி இருக்கலாம். அரசியல் மேதையிடம் பெருமை இருக்கலாம். அதிவீரனிடம் மூர்க்கம் இருக்கலாம். ஆனால், குணத்தைக் கண்டவிடத்தில் போற்றவேண்டும். சிறுகுற்றத்தைப் பெரிது பண்ணக்கூடாது. போற்றல், தூற்றல் எதற்கும் இலக்காகாமல் இயந்திரம்போல் இயங்குகின்றவர்களைத்தாம் நீங்கள் சிறந்த மனிதர் என்பீர்களோ? டச்சு ஓவியங்களில் குற்றம் காணக் கிடைக் காது. ரோம ஓவியங்களில் பிழை அதிகம். ஆனால், ரோம ஓவியங் களைத்தாமே மகத்தானவைகளாகக் கொண்டாடுகிறோம்!'

'ஐயா, மேதையொருவனிடம் ஒருசில பிழைகள் இருப்பின், நீங்கள் சொல்லுவதுபோல் அவன் புகழப்படத்தக்கவனே. ஆனால் அவன் ஒழுக்கக்கேடு மிகுந்தவனானாலும் அவனைப் புகழ வேண்டுமோ?'

'ஒழுக்கக்கேடு மிகுந்த மேதையைக்காண்பது அபூர்வம். அங் கங்கே ஓரிருவர் இருக்கலாம். நான் என் வாழ்நாளில் அவ்வபூர்வப் பிறவிகளைச் சந்தித்ததில்லை. பொதுவாக மேதைகள் குணத் திலும் சிறந்தவர்களாகவே இருக்கின்றனர். அறிவில் குறைந்தவர் தாம் மனித நேயமற்றோராய் இருக்கின்றதைக் காண்கின்றேன். பிறருக்குக் கேடு நினைப்பவனுக்கு இறைவன் அறிவைக் குறை வாகவே கொடுத்திருக்கின்றான். விலங்குலகிலும் இந்த நியதியைக் காணலாம். மூட்டை போன்ற பூச்சியினங்கள் கொடுமையும் துரோகமும் கோழைத்தனமும் கொண்டவை. உடலுறுதியும்

ஆற்றலும் பெற்ற பெரிய விலங்குகள் மென்மையும் வீரமும் பெருந்தன்மையும் உடையவையாய் இருக்கின்றன.'

அப்பொழுது நான்,

'பேசுவது யாருக்கும் எளிது. அறிவிருந்தும் பண்பு சிறிதும் இல்லாத ஒரு மனிதப் பிறவியை இந்த நிமிடத்தில்கூட என்னால் சுட்டிக்காட்ட முடியும்' என்று சொல்லி அவரையே கூர்ந்து நோக்கிவிட்டுப் பின் குரலை உயர்த்தித் தொடர்ந்து,

'தன் இழிசெயலைக் கண்டுபிடிப்பாரில்லையென்று அவர் மெத்தனமாயிருக்கின்றார். ஆனால், இதோ பாருங்கள் இந்தக் கைப்பெட்டியை' என்று அந்தப் பெட்டியைத் தூக்கிக் காட்டினேன்.

'அது என்னுடையது ஐயா, அது கிடைத்துவிட்டதுபற்றி எனக்கு மகிழ்ச்சி' என்று சாதாரணமாய்ச் சொன்னார் அவர். எப்போதும் போலிருந்த அவர் முகத்திலிருந்து எனக்கு எதுவும் கண்டுபிடிக்க இயலவில்லை. பேச்சும் தொனியும் திடமாகவே இருந்தன.

'இந்தக் கடிதத்தைப் பார்த்தீர்களா? இது யார் எழுதியது என்று சொல்ல முடியுமா? என் முகத்தை நேருக்கு நேர் பார்த்துச் சொல்லுங்கள்.'

'ஆம். அந்தக் கடிதம் நான் எழுதியதுதான்.'

'நீங்கள் செய்தது அற்பத்தனமில்லையா? நன்றி கெட்டதனமில்லையா?'

அவர் மிக அதிகாரமாகக் கேட்டார்:

'நீங்கள் இந்தக் கடிதத்தை உடைத்துப் படித்தது அற்பத்தனமில்லையா? இதற்காக உங்களுக்குத் தூக்குத்தண்டனைகூடக் கிடைக்கலாம் என்பது உங்களுக்குத் தெரியாதா? எனது கைப்பெட்டியின் பூட்டை உடைத்துத் திறந்ததாக நான் இவ்வட்டாரத்து நீதிபதியிடம் குற்றஞ்சாட்டினால் நீங்கள் இந்த இடத்திலே தூக்கிலிடப்படுவீர்களே.'

இப்படியொரு மூர்க்கமான போக்கை நான் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. எனக்கும் கோபம் பொங்கிவிட்டது. 'நன்றி கெட்ட மனிதரே, இங்கே நிற்கக்கூடாது. நீர், ஓடிப் போய்விடும்

இனிமேல் இந்த வீட்டில் நீர் காலடி எடுத்து வைக்கக்கூடாது. நான் உமக்கு எந்தத் தண்டனையும் தரவில்லை. உமது மனச்சாட்சியே உம்மைக் குத்தி வதைக்கும், போம்' என்று சொல்லி அந்தக் கைப்பெட்டியை வீசி எறிந்தேன்.

ஒரு புன்சிரிப்புடன் அவர் அதை எடுத்து அதன் கொக்கிகளை மாட்டி மூடினார். பின் போய்விட்டார். அவரது முறுவல் பூத்த முகமும், மனவுறுதியும், அமைதியும் எங்களை வியப்பிலாழ்த்தின

அவர் கோபமுறாதது என் மனைவியை மிகுந்த கோபமுறச் செய்தது.

'மனிதன் தன் அற்பச் செயலுக்காக வெட்கப்படுகிறதாகத் தெரியவில்லையே. முகத்திலே பச்சாதாபக் குறியையே காணோமே' என்றாள் அவள்.

'கெட்டவர்களுக்கு ஏது வெட்கம்? நல்லது செய்யத்தான் இப்படிப்பட்டவர்களுக்கு வெட்கம் கூச்சம் எல்லாம். கெட்ட செயல் செய்ததற்காகப் பெருமைதான் கொள்வார்கள் இவர்கள்.'

ஓர் உருவகக் கதை உண்டு சொல்கிறேன், கேளுங்கள்: குற்றமும் வெட்கமும் தோழர்களா யிருந்துவந்தனர். செல்லுமிடமெல்லாம் சேர்ந்தே 'சென்றனர். ஆயினும் வரவர அந் நட்பு அவர்களுக்குச் சங்கடமாயிற்று. குற்றம் உடனிருக்கும்போது வெட்கம் மனவமைதியை இழந்தான். குற்றத்தின் இரகசியச் சூழ்ச்சிகளை வெட்கம் அடிக்கடி காட்டிக் கொடுத்துவிட்டான். இப்படி மனப்பொருத்தமின்றிச் சில நாள்கள் கழிந்தன. எனவே, அவர்கள் ஒரேயடியாய்ப் பிரிந்துவிடத் தீர்மானித்தனர். அப்படியே பிரிந்து தனித்தனி வழியே போயினர்.

குற்றம் மேலே நடந்து முன்னேறினான். அவனுக்கு முன்னால் விதி, தண்டனையாளன் உருவத்தில் சென்றுகொண்டிருந்தான். ஆனால், குற்றம் முரட்டுத்தனமாய் அவனையும் தாண்டிச் செல்ல முற்பட்டான்.

தயங்கித் தயங்கி வந்துகொண்டிருந்த வெட்கம் பின்வாங்கத் தொடங்கிப் பின் ஒழுக்கத்துடன் வந்து சேர்ந்துகொண்டான். பயணத் தொடக்கத்தில் ஒழுக்கமும் அவர்கள்கூட இருந்தவனே.

குழந்தைகளே, தீயொழுக்கத்தில் ஒரு மனிதன் முன்னேறி விட்ட பின்னர், வெட்கம் அவனைத் துறந்துவிடுகின்றது. அது பின்வாங்கி தன் பழைய நண்பர்களான சீலங்களுடன் போய் ஒட்டிக்கொள்கிறது.

16

[குடும்பம் தந்திரம் செய்து பார்க்கிறது.
அதிதந்திரசாலியிடம் அவர்கள் தந்திரம் செல்லுமா ?]

இப்பொழுதெல்லாம் எங்கள் நிலப்பிரபு எங்கள் வீட்டுக்கு அடிக்கடி வந்துபோகலானார். திரு. பருச்செல் வராமல் நின்று போனதை இவரது வரவுகள் ஈடுசெய்தன. பருச்செல்லோடு போட்ட சண்டையை நாங்கள் அநேகமாக மறந்தே போனோம். சோபியா அதை இன்னும் மனத்திலே அசைபோட்டுக் கொண்டிருக்கிறாளோ என்னவோ?

என் பெண்மக்களை இலண்டன் அழைத்துச் சென்று, நகரத்து வேடிக்கைகளை எல்லாம் காட்ட வேண்டுமென்று பிரபு பெரிதும் ஆசைகொண்டிருந்தார். அது நிறைவேறாதது அவருக்கு ஏமாற்றமே. ஆயினும், கிராமங்களில் பொழுதுபோக்கு மார்க்கங்கள் இல்லையா ? ஒதுக்கமான எங்கள் இல்லத்திலும் நேரத்தை உற்சாகமாகக் கழிக்க அவர் பல வழிகளைக் கண்டுபிடித்தார்.

அவர் பெரும்பாலும் பகல் வேளையில்தான் எங்கள் வீட்டுக்கு வந்தார். நானும் என் மகனும் வெளிவேலைகளுக்குப் போய் விடுவோம். அவர் வீட்டிலே பெண்களிடம் பேசிக்கொண்டிருப்பார். இலண்டன் நகரத்தை வருணிப்பார். அதன் எல்லா இடங்களும் அவருக்கு நல்ல பழக்கம்போலும். நாடக உலகத்துச் செய்திகள் சொல்லுவார். இலண்டன் பிரமுகர்கள், எழுத்தாளர்கள் முதலியோரைப்பற்றிய விவரத் துணுக்குகளை விகடப் புத்தகத்தில் வெளியாகுமுன்னரே இவர் வந்து சொல்லிவிடுவார். அதுபோக, பெண்களுக்குச் சீட்டு விளையாடவும் கற்றுக்கொடுத்தார். பயல்களைக் குஸ்தியில் பழக்கினார். அப்போதுதான் சுறுசுறுப்பு வருமாம். அவரை மருமகனாகப் பெறலாம் என்ற நம்பிக்கையானது அவரது குறைகளை எல்லாம் எங்கள் கண்களுக்கு மறைத்தது.

அவரைப் பிடித்துப்போட என் மனைவி வைத்த பொறிகளைச் சொல்லி மாளாது. ஒலிவியாவின் குணவிசேஷங்களை அவரிடம்

பிரமாதப்படுத்தி வருணித்து வந்தாள். கேக்கு வாய்க்கு மெதுவாயிருந்தால் அது ஒலிவியா செய்த கேக்காகிவிடும். நெல்லி மதுபதமாய் அமைந்தால் ஒலிவியா பறித்துச் சேகரித்த நெல்லிக் கனிகளின் மதுவாகும் அது. ஊறுகாயின் அந்த அலாதிப் பச்சை நிறம் அவள் விரல்பட்டதால்தான். பாயசத்தின் சுவைக்குக் காரணம் அவள் கைப்பட அளந்து சாமான்களைக் கலந்தது அல்லவோ?

ஐயோ, இதோடு விட்டாளா! உயரத்தைப்பற்றிப் பேச்சு வந்தபோது அவளையும் பிரபுவையும் அருகருகே நிறுத்தி வைத்து அவர்களிருவரின் உயரத்தையும் அளந்து ஒப்பிட்டுப்பார்த்தாள்.

அவளது தந்திரம் யாருக்கும் விளங்காது என்று அவள் நினைத்துக்கொண்டாளே தவிர, எல்லோருக்கும் அது பட்டவர்த்தனமாய்ப் புரிந்துதானிருந்தது. இதெல்லாம் எங்கள் போஷகப் பிரபுவுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்துவந்தது. அவரும் தம் ஆசையைப் பல்வேறு விதங்களில தெரிவித்துக்கொண்டுதானிருந்தார். திருமணப் பேச்சைத்தான் இன்னும் எடுக்கவில்லை. இளைஞர்தானே, வெட்கமாக இருக்கும் என்று நாங்கள் நினைத்தோம். அல்லது மாமாவுக்குப் பயப்படுகிறார் போலிருக்கிறது என்றும் எண்ணினோம். அப்பொழுது நடந்த ஒரு நிகழ்ச்சி எங்கள் ஐயங்களை எல்லாம் அறவே போக்கிவைத்தது. பிரபு எங்கள் குடும்பத்து உறுப்பினராக விரும்புகிறார் என்பதை அஃது அறுதியாக்கிற்று.

ஒருநாள் மனைவியும் மகள்களும் அண்டை வீட்டுக்குப் போய் வந்தார்கள். பிளாம்பரோ குடும்பத்தில் ஒவ்வொருவரையும் படம் எழுதியிருக்கிறதாம். நாடோடி ஓவியன் ஒருவன் தலைக்குப் பதினைந்து ஷில்லிங்கு வீதம் வாங்கிக்கொண்டு எல்லோரையும் வரைந்து வர்ணம் தீட்டியிருக்கிறானாம். கலாரசனை விஷயத்தில் எங்கள் இரு குடும்பங்களுக்குமே ஒருவிதப் போட்டி இருந்துவந்தது. இப்பொழுது இவர்கள் இப்படிச் சித்திரம் எழுதிக்கொண்டதால் அவர்கள் எங்களைவிடக் கலாசாரத்தில் ஒரு படி முன்னேறிவிட்டார்களோ என்று என் குடும்பம் கலவரமடைந்தது. எங்களையும் உடனே வரைந்துகொள்ள வேண்டுமாம். நான் என்னால் இயன்றவரை தடுத்துப் பார்த்தேன். என் சொல் எடுபடவில்லை. ஆகவே, ஓவியனை வரவழைத்துக் கொடுத்தேன்.

போஸுகள் கொடுக்கும் பாணியிலாவது அண்டைவீட்டு ரசனையைவிட எங்களது மேம்பட்டது என்று காட்டிவிடுவது என்று தீர்மானிக்கப்பட்டது. அந்த வீட்டில் ஏழு உருப்படிகள். ஏழு பேரும் ஆளுக்கோர் ஆரஞ்சுப் பழத்தை வைத்துகொண்டு நின்றிருந்தனர்.

இஃது எங்களுக்கு ரசக்குறைவாகத் தோன்றியது. வாழ்க்கையின் வீச்சு, லோகத்தின் இசைவொழுகு இதெல்லாம் வெளிப்பட வேண்டாவோ? நீண்ட பல விவாதங்களின் விளைவாக ஒரு முடிவுக்கு வந்தோம். குடும்ப மொத்தமும் ஒரே படமாய் எழுதுவது. அதையொரு வரலாற்றுச் சித்திரமாயமைப்பது என்று தீர்மானித்தோம். ஒரே கான்வாசு போதும். எனவே செலவும் குறைவு. அதே சமயம் நாகரிகமாக இருக்கும். இப்பொழுதெல்லாம் ரசனை மிகுந்த குடும்பங்களில் இப்படித்தான் தீட்டிக்கொள்ளுகிறார்களாம். எந்த வரலாற்று நிகழ்ச்சியைச் சித்திரிப்பது என்பதுகுறித்து ஒத்த முடிவுக்கு வரவியலாததால், ஒவ்வோர் உருப்படியும் தனித்தனியே ஏதேனும் ஒரு வரலாற்று நபராகச் சித்திரிக்கப்படலாம் என்று தீர்மானித்து மனச்சமாதானம் அடைந்தோம்.

என் மனைவி அழகுதெய்வம் வீனஸாகக் காட்சி தர விரும்பினாள். அவளது இடைக்கச்சிலும் கூந்தலிலும் சித்திரிக்கப்படும் வைரங்களில் அதிகச் சிக்கனம் காட்ட வேண்டியதில்லை என்று ஓவியரிடம் சொல்லப்பட்டது. சிறார் இருவரும் காமதேவன்களாக அவளது இருமருங்கிலும் நிற்க, நான் எனது குருத்துவ அங்கி-இடைக்கச்சு சகிதம் உஸ்தானிய சர்ச்சைப் பிரசுரங்களை அவளிடம் கொடுத்துக்கொண்டிருக்கும்படி வரைய ஏற்பாடாயிற்று. பட்டைச் சரிகையிட்ட பச்சைக் குதிரையேற்ற அங்கி அணிந்து, கையில் சாட்டை பிடித்தவாறு மலர்ப்படுக்கையில் வீற்றிருக்கும் ஓர் வீராங்கனையாக ஒலிவியாவைத் தீட்டத் திட்டமாயிற்று. சோபியா ஆயர்குல மங்கையானாள். அதற்கென்று விலையை உயர்த்தாமல், ஆடுகள் போடுவதானால் எத்தனை வேண்டுமானாலும் போட்டுக்கொள்ளச் சொன்னோம். வெண்ணிறகு குத்திய தொப்பியணிந்தவனாய் மோசேயை வரையச் சொன்னோம். எங்கள் ரசனைப் பாங்கை வெகுவாய்ப் பாராட்டிய பிரபு தாமும் குடும்பத்தில் ஒருவராய்ச் சித்திரிக்கப்படவேணும் என்று சொல்லிவிட்டார். ஒலிவியாவின் பாதத்தருகே மகா அலெக்சாந்தராக அவர் உட்கார்ந்திருக்க விரும்பினார். குடும்ப உறுப்பினராகும் விருப்பத்தை அவர் அப்படி உணர்த்தியதாக நாங்கள் அதற்குப் பொருள்கொண்டோம். அவர் விருப்பப்படியே அவரையும் ஓவியத்தில் சேர்த்தோம்.

அதுவே கருத்தாய் ஓவியர் வேலையில் இறங்கினார். நாலே நாளில் முடிந்துவிட்டது. பெரிய படம். வஞ்சனையில்லாமல் வர்ணங்கள் பூசி அப்பியிருந்தார். அதற்காக என் மனைவி அவரை மிகவும் பாராட்டினார். எங்கள் எல்லோருக்குமே வெகு திருப்தியுண்டாயிற்று. ஆனால், படம் முடிந்ததும்தான் ஒரு விஷயம் எங்கள் கவனத்துக்கு வந்தது. திடுக்கிட்டோம். அதை

வீட்டில், எந்த இடத்திலும் மாட்டமுடியாது. அத்தனை பெரிதா யிருந்தது! இந்தச் சின்ன விஷயத்தை எப்படித்தான் முதலிலேயே நினைக்காமல் போனோமோ, கவனமில்லாமல்தான் போய் விட்டது.

ஆகக்கூடிப் படம் எங்களுக்குப் பெருமை தரும் என்று நினைத்ததுபோய், அவமானம் கொண்டுவந்துவிட்டது. அடுப்பங் கரையருகில் விரித்து வரைந்த கான்வாசு அந்தச் சுவரிலேயே சாய்ந்து நின்றுவிட்டது. எந்த அறையின் கதவுகளுக்குள்ளும் அது நுழைய மறுத்து ஊர் சிரிக்கும் பொருளாகியது.

ஒருவர் அதை ராபின்ஸன் குரூஸோவின் நீளப்படகு என்றார். வேறொருவர் அது ஒரு புட்டியின் திருகுமூடி போலிருக்கிறது என் றார். அதை எப்படி வெளியே கொணர்வது என்று பிறிதொருவர் வியந்தார். முதலில் உள்ளே எப்படிப் போயிற்று என்று இன்னொரு வர் கேட்டு நின்றார். சிலர் கேலியோடு நிறுத்திக்கொண்டனர். மற்றும் சிலரோ விஷமமாகக் கிசுகிசுத்தனர். பிரபுவின் படமும் சேர்ந்திருந்தது பலருடைய பொறாமையைக் கிளப்பிற்று. வித விதமான அவதூறுகள் பரப்பினார்கள். நண்பர்கள்போல் வீட்டினுள் நுழைந்து எதிரிகள் சொன்னதை எங்களிடம் சொல்லி அந்த வம்பர்கள் எங்கள் அமைதியைக் குலைத்தனர். அவரவர்கள் பேச்சுக்குத் தகுந்தாற்போல் பேசி அவற்றை மறுத்தோம். ஆனால், வம்பை மறுத்தால் அது மேலும் வளரும்; வளர்ந்தது.

எனவே, ஊர் வம்பை எப்படி அடக்குவது என்று யோசனை பண்ணினோம். ஒரு திட்டம் போட்டோம்; தந்திரமான திட்டம். எனக்கு அதில் மனமேயில்லை.

நாங்கள் செய்ய நினைத்தது இதுதான். திரு. தாரன்ஹில் ஒலியாவுடன் பழகுவது கௌரவமான நோக்கத்துடனா அன்றா என்பதை முதலாவதாக நாங்கள் அறிந்துகொள்ள விரும்பினோம். அவர் மனத்தை ஆழங்காணும் பொறுப்பை என் மனைவி ஏற்றுக் கொண்டாள். ஒலிவியாவுக்கு ஒரு வரன் தேர்ந்தெடுப்பதில் அவருடைய ஆலோசனையைக் கேட்க விரும்புவதுபோல் பாசாங்கு செய்யத் தீர்மானித்தாள். அதன் பின்னரும் அவர் திருமணப் பேச்சுத் தொடங்கவில்லையானால் ஒரு போட்டி மாப்பிள்ளையைக் கொணர்ந்து நிறுத்தியாவது அவரைச் செயலில் இறங்குமாறு வற்புறுத்துவது என்றும் முடிவுபண்ணினோம். எனக்கு இதில் சிறிதும் சம்மதமே கிடையாது. ஆனால், ஒலிவியா சொன்னாள்: போட்டி மாப்பிள்ளையைத் தடுத்துத் தாமே மணந்துகொள்ள அப்பொழுதும் திரு. தாரன்ஹில் பேச்சுவார்த்தை தொடங்க

வில்லையெனில் அவள் போட்டி மனிதனையே மணந்துகொள்வ தாக எனக்கு உறுதியான வாக்குக் கொடுத்தாள். இப்படியாகத் திட்டம் உருவாயிற்று. இதனை நான் தீவிரமாய் எதிர்க்கவு மில்லை; முழுமையாக ஒப்புக்கொள்ளவுமில்லை.

எனவே, திரு. தாரன்ஹில் மறுமுறை வந்தபோது என் பெண் மக்கள் ஒதுங்கிக்கொண்டு, தாயார் திட்டத்தைத் தொடங்கி வைக்கச் சௌகரியம் செய்து கொடுத்தார்கள். எல்லாரும் அடுத்த அறையில்தான் இருந்தார்கள். ஒவ்வொரு சொல்லும் காதில் நன்றாய் விழும்.

என் மனைவி தந்திரமாய்ப் பேச்சைத் தொடங்கினாள். பிளாம்பரோ செல்விகளில் ஒருத்திக்குத் திரு. ஸ்பாங்கரோடு அநேக மாய்த் திருமணம் நடக்கலாமாம்.

நிலப்பிரபு 'உம்' கொட்டவே அவள் மேலும் தொடர்ந்தாள்.

''வசதியுள்ள பெண்களுக்கு எளிதில் நல்ல மாப்பிள்ளை அமைந்துவிடுகின்றது. வசதியில்லாத பெண்களுக்கு ஹூம் ஆண்டவன்தான் கண்திறந்து பார்க்கவேண்டும். திரு. தாரன்ஹில் அவர்களே! அழகு இருந்து என்ன பிரயோசனம்? ஒழுக்கமும் பிற தகுதிகளும் இருந்துதான் ஆவதென்ன? இது தன்னலம் மிகுந்த காலமாக அன்றோ இருக்கின்றது? 'அவள் எப்படிப்பட்டவள்?' என்று யார் கேட்கின்றார்கள்? 'அவளிடம் எவ்வளவு உள்ளது?' என்பதன்றோ பெருங்கேள்வியாக உள்ளது?''

'அம்மையே! நீங்கள் சொல்லுவது எனக்கு ஆச்சரியமாக இருக்கின்றது. ஆனால், நீங்கள் கேட்கும் கேள்விகளில் நியாயம் உண்டு. நான் மாத்திரம் ஓர் அரசனாக இருந்தால் இந் நிலையை மாற்றியமைத்துவிடுவேன். அது செல்வமில்லாத பெண்களுக்குக் காலமாகிவிடும். இந்த இரு சீமாட்டிகளுக்கும் நான் ஆவன செய்வேன்.'

'ஐயா, உங்களுக்கு விளையாட்டாக இருக்கின்றது. நானொரு அரசியானால்? பெரியவளுக்கு எப்பேர்ப்பட்ட கணவனைத் தெரிந் தெடுப்பேன், தெரியுமா? அதிருக்கட்டும். இப்பொழுது பேச்சு வந்துவிட்டதால் சொல்லுகிறேன். வாஸ்தவமாகத்தான் பேசு கிறேன். திரு. தாரன்ஹில் அவர்களே, தெரிந்தால் அவளுக்கு ஒரு நல்ல மாப்பிள்ளை சொல்லுங்களேன். அவளுக்கு இப்பொழுது வயது பத்தொன்பதாகிறது. ஆள் வளர்ந்துவிட்டாள். படிப்பு இருக்கிறது. நானாகச் சொல்லக்கூடாது — திறமைகளும் இருக் கின்றன.'

'அம்மையே, என்னிடம் பொறுப்பை விட்டால் தேவமக ளொருத்தியை மகிழ்விக்கக்கூடிய தகுதிகள் படைத்தவனையே நான் அவளுக்குத் தேர்ந்தெடுப்பேன். விவேகம், செல்வம், ரசனை, நேர்மை அனைத்தும்கொண்ட ஒருவனே அவளுக்குத் தகுந்தவனாவான்.'

'ஐயா, அப்படி யாரையேனும் உங்களுக்குத் தெரியுமா ?'

'இல்லை அம்மணி, அவளையடையத் தகுந்தவனை யாருக்குமே தெரிந்திருக்க முடியாது. ஒரு மனிதன் தன் உடைமை யென்று கொண்டாட முடியாத பெருநிதி அவள். அவளொரு தேவதை. என் மனத்தில் உள்ளதை உள்ளபடி சொல்கிறேன், அவள் தேவமகள்.'

'திரு. தாரன்ஹில் அவர்களே, பாவம் அந்தப் பெண்ணை நீங்கள் மிகவும் புகழ்கிறீர்கள். நாங்கள் அவளை உங்கள் பிராந்தி யத்துக்குட்பட்ட சமுசாரி ஒருவருக்கு மணஞ்செய்து கொடுக்கலா மென யோசித்துக் கொண்டிருக்கிறோம். வில்லியம்ஸ் விவசாயியை உங்களுக்குத் தெரியுமல்லவா? அவர்தான் நல்ல மனிதர். சாப்பாட்டுக்கு வசதியிருக்கிறது. அவரது தாயார் அண்மையில் காலமாகிவிட்டதால் வீட்டைக் கவனிக்கவும் பெண்பிள்ளை தேவைப்படுகிறது. இதோடு பல தடவைகள் அவளிடமும் எங்க ளிடமும் இதுகுறித்துக் கேட்டுவிட்டார் (அது உண்மையே). ஆனால், நாங்கள் தேர்ந்தெடுத்திருக்கும் மாப்பிள்ளையை நீங்களும் ஒத்துக்கொண்டால் எங்களுக்குத் திருப்தியாயிருக்கும்.'

'அம்மணி, என்ன இது? நான் ஒத்துக்கொள்வதா? முடியவே முடியாது. இத்தனை அழகு, அறிவு, ஒழுக்கம் எல்லாம் அவற்றின் மதிப்பையறியாத ஓர்ஆசாமியிடம் போய்ப் பலியாவதா? மன்னிக்க வேண்டும். இது பெருத்த அநியாயம். இதை நான் ஒப்புக்கொள்ள முடியாது. அதற்குக் காரணங்கள் உண்டு.'

'உங்களுக்குக் காரணங்கள் இருக்கலாம். அது வேறு விஷயம். ஆனால், அந்தக் காரணங்களை எனக்குத் தெரிவித்தால் நான் மகிழ்ச்சி அடைவேன்.'

'மன்னிக்க வேண்டும், அம்மணி. கண்டுகொள்ள முடியாத அளவு ஆழமானவை அவை.' இப்பொழுது நெஞ்சிலே கையை வைத்துக்கொண்டார் — 'இதோ இங்கே அழுந்தப் புதையுண்டு கிடக்கின்றன.'

அவர் போனதும் நாங்கள் ஆலோசனைக்குக் கூடினோம். நயமிகுந்த இந்தப் பேச்சுக்குப் பொருள் என்னவாயிருக்கும் என்று யோசித்தோம். உன்னதமான காதலின் அடையாளம் என்பதாக ஒலிவியா கருத்துத் தெரிவித்தாள். ஆனால், எனக்கு அதில் நம்பிக்கையில்லை. அவர் சொற்களில் தொனித்தது திருமண இன்பமன்று, வைப்பாட்டி சுகம் என்பது எனக்கு ஓரளவு தெளி வாகவே விளங்கிற்று.

அவர் என்ன நினைத்து வேண்டுமானாலும் சொல்லட்டும். நாங்கள் எங்கள் திட்டப்படியே போட்டி மாப்பிள்ளையை இனி ஊக்குவிப்பது என்று தீர்மானித்தோம். நாங்கள் ஊர் வந்திறங்கின நாளிலிருந்தே வில்லியம்ஸு விவசாயி, ஒலிவியாவைத் திருமணம் செய்துகொள்ளும் நோக்கமாய் விருப்பத்துடன் அவளிடமும் எங்களிடமும் இதுகுறித்துக் கேட்டு வந்திருக்கிறார்.

17

[கற்புக்கு ஒரு சோதனை! மயக்க முற்பட்டு விடாப்பிடியாய் ஆசைகாட்டினால் இணங்காத பெண்ணுமுண்டோ ?]

திரு. வில்லியம்சு அப்படி விடாப்பிடியாய் ஒலிவியாவைக் கேட்டுவந்தது எனக்கு மகிழ்ச்சியளித்த விஷயம். நல்ல விவேகமான இளைஞர். வசதி வேறு இருந்தது. என் செல்லமகளைக் கண்கலங்காமல் வைத்துக் காப்பாற்றிக்கொள்ளுவார்.

எனவே, அவரைச் சிறிதே ஊக்குவித்தோம். அவ்வளவு தான். அடங்கிக்கிடந்த அவர் காதல் மீண்டும் துளிர்த்துக் கொண்டது. ஒரு நாள் மாலை திரு. தாரன்ஹில் வரவிருந்தபோது இவரையும் வீட்டுக்கு அழைத்தோம். இருவரும் ஒருவரையொருவர் சந்தித்ததும் முறைத்துக்கொண்டனர். வில்லியம்சு, தாரன்ஹில் பிராந்தியத்து விவசாயிதான். ஆனால், அநாவசியமாய்ப் பயப்படு கிறவரில்லை; வாடகைப் பாக்கியும் வைக்கிறவரில்லை. எனவே, நிலப்பிரபுவாயிற்றே என்று வீண்நடுக்கம் கொள்ளாமல் அவர் பாட்டுக்கு இயல்பாய் இருந்தார். ஒலிவியாவோ இழைந்து குழைந்து வளையவந்தாள்; புதுக் காதலன்மீதும் காதலைச் சொரிவதுபோல் பசப்பினாள். நடிப்பா, இயல்பா என்று சொல்ல முடியாதபடி இருந்தது அவளது நடவடிக்கை. திரு. தாரன்ஹில் விசனமாகிவிட்டவர்போல் தோன்றினார். விடைபெற்றுக் கொள்ளும்போது சஞ்சலமாக இருந்தார். ஏன் இந்த வீண் சஞ்சலம்? தமது காதலும் கௌரவமானது என்று வெளிப்படை யாகச் சொல்லிவிட்டால் போட்டிக் காதலர் இருந்தவிடம் தெரியாமல் போய்விடுவாரே. அது தெரிந்திருந்தும் பேசாமலிருந்து கொண்டு—பின்னொரு சஞ்சலப் பாவனையை முகத்திலே வைத்துக் கொண்டு—அவர் போக்கு புதிராகத்தான் இருந்தது. அவர் சங்கடம் ஒருபுறமிருக்க ஒலிவியா அனுபவித்த வேதனைதான் மிகக் கொடுமை. அதுவும் காரியம் கைகூடி வராததால் இரு காதலர்களும் இம்மாதிரி அடிக்கடி எங்கள் வீட்டில் சந்திக்க வேண்டியதாயிற்று. அவர்கள் போய்விட்டபின் அவள் தனியிடத் தில் போய்த் துக்கமுகமாய் உட்கார்ந்திருப்பாள். ஒரு நாள் மாலை இப்படித்தான். காதலர்களும் மற்றவர்களும் உடனிருக்கையில் உல்லாசமாயிருப்பதுபோல் நடித்துக்கொண்டிருந்தாள்.

விட்டதும் மிகச் சோர்வுடன் இருந்ததைக் கண்டு நான் அவளருகில் சென்றேன்.

'என் பிள்ளாய், இப்பொழுது பார்த்துக்கொண்டாயல்லவா? திரு. தாரன்ஹில் உன்மீது உண்மைக் காதல் கொண்டிருந்தாரென்று நீ வீண்கனவு கண்டாயே. அவர் ஏன் வீணாய்க் காலந் தாழ்த்துகிறார். போட்டி மாப்பிள்ளை அவரைவிட மேல்மட்டத்து வரனல்லன். அப்படியிருந்தும் இன்னும் எதுவும் பேசாமலிருக்கக் காரணம் என்ன? உன்னை மணந்துகொள்ள விருப்பமிருந்தால் கௌரவமாகத் தெரிவிக்க வேண்டியதுதானே?'

'அவர் அப்படிக் காலந்தாழ்த்துவதற்குத் தகுந்த காரணங்கள் இருக்கும் அப்பா, நிச்சயமாய் இருக்கும். அவர் என்னைப் பார்க்கும் பார்வைகளும் பேசும் சில வார்த்தைகளும் அவரது காதல் உண்மையானது என உணர்த்துகின்றன. இன்னும் சில நாள்களில் நான் சொல்வது சரியென்று உங்களுக்குப் புரிந்துவிடும். அவரது எண்ணம் உயர்ந்தது. அப்பா, நீங்கள் அவரைத் தவறாய் மதிப்பிடுகிறீர்கள் என்பது அப்பொழுது உங்களுக்குப் புரியும்.'

'ஒலிவியா, என் கண்ணே! அவரை வெளிப்படையாய்ப் பேச வைக்க நாம் முயற்சிசெய்து பார்த்துவிட்டோம். அது தோல்வியில் முடிந்துவிட்டது இத் திட்டம் நீ உடனிருந்து பெரும்பாலும் உன்னாலேயே உருவாக்கப்பட்டது. நான் உன்னைப் பலவந்தப் படுத்தியதாக நீ சொல்ல முடியாது. ஆனால், என் மகளே! உனக்காக, நீ தவறான மனிதன்மீது பிரியம் கொண்டுவிட்ட பாவத்துக்காக, போட்டியாளர் ஏமாற்றப்படக்கூடாது. அதற்கு நான் சம்மதிக்கமாட்டேன். வேண்டுமானால் இன்னும் கொஞ்சம் அவகாசம் மாத்திரம் கொடுக்கலாம். அதற்குள் நீ நம்புகிறபடி உன் காதலன் திருமணப் பேச்சைத் தொடங்கிவிட வேண்டும். அந்தக் காலவரை முடிவதற்குள் அவர் அப்படிச் செய்யவில்லையெனில் நீ கண்டிப்பாய் திரு. வில்லியம்சை மணந்துகொள்ள வேண்டும். அவர் நம்மீது விசுவாசமாக நடந்துகொண்டிருக்கிறார். அவருக்குத் தகுந்த பலன் கிட்டவேண்டும். நான் இதுவரை வாழ்க்கையில் எல்லாக் காரியங்களிலும் நேர்மையைக் கடைப் பிடித்து வந்தவன். பெற்ற பாசம் பெரிதென்றெண்ணி அந்த நேர்மையினின்று வழுவிவிடக் கூடாதம்மா. எனவே, உனக்கு வேண்டிய அவகாசத்தைக் கேட்டுக்கொள். காலம் அதிகமானாலும் பரவாயில்லை. நீ இதற்கிடையில் தாரன்ஹில்லிடம் இதைப் பற்றிப் பேசலாம். காலவரை முடிந்ததும், பெற்றோரென்ற முறையில் நாங்கள் உன்னைத் திரு. வில்லியம்சுக்குக் கட்டிக் கொடுத்து விடுவோமென்பதையும் சொல்லு. அவர் உன்னை

இழக்காமலிருக்க விரும்பினால் அதற்கு ஓரேவழிதான் உண்டு என்பதை அவர் புரிந்துகொள்ளட்டும்.'

ஒலிவியா சம்மதித்தாள்; நியாயந்தானென்று ஒப்புக் கொண்டாள். காதலன் மேற்கொண்டும் பேசாமலிருந்தால் திரு. வில்லியம்சை மணந்துகொள்ளுவதாக உறுதிதந்தாள். எனவே, அடுத்த சந்தர்ப்பத்தில் திரு. தாரன்ஹில் உடனிருக்கும் போது, திரு. வில்லியம்சுக்கும் ஒலிவியாவுக்கும் அடுத்த மாதத்தில் ஒரு நாளைத் திருமணத் தேதியாகக் குறித்துவிட்டோம்.

ஆகவே, காரியம் மும்முரமாய் வளர்ச்சியடைந்தது. திரு. தாரன்ஹில் கலக்கமடைந்துவிட்டதுபோல் தோன்றியது. ஆனால், எதுவும் பேச முன்வரவில்லை. ஒலிவியாவின் தவிப்புத் தான் எனக்கு மிகுந்த கவலையைக் கொடுத்தது. அவள் உற்சாக மெல்லாம் விடைபெற்றுக்கொண்டது. தனிமையை நாடி ஓடி உட்கார்ந்து அழுதாள். இப்படி ஒரு வாரம் கழிந்தது. இரண் டாவது வாரம் முழுவதும் திரு. தாரன்ஹில் விடாமல் வந்தார். திருமண ஆயத்தங்களைத் தடுக்க எந்த முயற்சியும் எடுத்தா ரில்லை; முன்போல் மனந்திறந்து பேசுவதையும் விட்டிருந்தார். மூன்றாவது வாரத்தில் வருவதை நிறுத்திவிட்டார்.

நான் என் மகளைக் கவனித்தேன். அவர்மேல் கோபமாயிருப் பாள் என்று எதிர்பார்த்தேன். ஆனால், அவள் முகத்தில் ஒருவித மான அமைதியும் சஞ்சலமும் குடிகொண்டிருந்தன. தன் விதி இது தான் என்று நினைத்து மனம் ஒடுங்கிவிட்டது என்று நினைத்துக் கொண்டேன். சரி, நல்லதுதான். திரு. வில்லியம்சை மணக்க வாக்குக் கொடுத்துவிட்டாள்; தவறமாட்டாள். என் மனம் நிம்மதி யுற்றது. நல்ல கெட்டிக்கார இளைஞனோடு மகள் தன் வாழ்க் கையைப் பிணைத்துக்கொள்ளப் போகிறாள். ஆரவாரத்தை விட மகிழ்ச்சியே வாழ்க்கைக்குத் தேவை என்பதை அவள் இப்பொழுதுதான் புரிந்துகொண்டாள்போலும்! நான் அவளை என் மனத்துள் பாராட்டினேன்.

கலியாணத்துக்கு இன்னும் நாலு நாள் இருந்தது. அன்றிரவு நாங்கள் வழக்கம்போல் கணப்பங்கரையில் உட்கார்ந்து கொண் டிருந்தோம். நெருப்பு அழகாய் எரிந்துகொண்டிருந்தது. என் மனம் நிம்மதியாயிருந்தது. எல்லோருமே மகிழ்ச்சியாயிருந்தோம். பழங்காலக் கதைகள் பல பேசினோம். வருங்காலத் திட்டங்களும் தீட்டினோம். எதற்கெடுத்தாலும் பிள்ளைகளுக்குச் சிரிப்பு 'குபுக் குபுக்' கென்று வந்துகொண்டிருந்தது.

நான் மோசேயைச் சீண்டினேன்.

'என்ன டே, அக்காளுக்கு இன்னும் நாலுநாளிலே கலியாணம். கலியாண ஏற்பாடெல்லாம் எப்படி இருக்கு?'

'இருக்கு அப்பா. அக்காளுக்கும் வில்லியம்சு விவசாயிக்கும் கலியாணம் ஆயிட்டுதென்றால், அவர் இனிமேல் ஆப்பிள் மது வடிக்கக் கொப்பரைக்கும் எந்திரத்துக்கும் நம்மகிட்டே வாடகை வாங்கமாட்டாரில்லையா, இ ர வ ல ா க வே கொடுத்துவிடுவா ரில்லையா?'

'ஆமாம். கொடுப்பார். அதுமட்டுமா ? அவர் ஜோராப் பாட்டுப்பாடறாரே. இனி அடிக்கடி பாடச்சொல்லியும் கேட்கலாம். ''மணமும் சீமாட்டியும்'' என்ற பாட்டைப் பாடச்சொல்லிக் கேட்க வேண்டும்.'

'அந்தப் பாட்டை அவர் டிக்குவுக்குச் சொல்லிக் கொடுத் தாச்சு, அப்பா. அவனும் நல்லாப் பாடுறான்.'

'அப்படியா? டிக்குப் பயல் எங்கே ? பாடச்சொல்லுவோம்.'

'அவன், லிவி அக்காவோடே இப்பத்தான் எங்கேயோ வெளியில் போனான்.'

'அவர் எனக்கும் ரெண்டு பாட்டுச் சொல்லிக்குடுத்தார் அப்பா. நான் பாடுறேன். ஒண்ணு ''மரிக்கும் அன்னம்'' அடுத்தது ''கோட்டிநாய்க்கு ஒப்பாரி''. எந்தப் பாட்டுப் பாட?'

'கோட்டிநாய்ப் பாட்டுப் பாடு. நான் அதைக் கேட்டது கிடையாது. தெபோராக் கண்ணே, நல்ல நெல்லி மதுவா கொஞ்சம் கொண்டுவா. இப்ப கொஞ்ச நாளாகவே நான் ஒப்பாரிப் பாட்டுக் கேட்டுக்கேட்டு அழுதுகொண்டிருந்தேன். அதனாலே மதுவாவது குடித்துக்கொள்ளுவோம். சோபியா ராஜாத்தி, கிதாரை எடுத்துக்கொள், பையனுக்குப் பக்கவாத்தியம் வாசி.'

வெறிநாயின் மறைவுகுறித்து

நலமிகு மக்களே, இதோ ஓர் பாடல்;
நுமக்கொரு பாடல், நலந்தரு பாடல்.
நீளமும் இல்லை; பாடல் சிறிதே.
நேரமும் அதிகம் ஆகாது சொல்ல!

நாடது இஸ்லிங்டன் ஊரது தன்னில்
நல்லவர் ஒருவர் நலமுடன் வாழ்ந்தார்.
ஜபதபம் இவைகள் தவறா மனிதர்;
கடவுள் பக்தியில் தனிச்சிறப் புற்றவர்

உற்றோ ராயினும் மற்றோ ராயினும்
உள்ளங் கனிந்தே உருகுவா ரவரே.
இல்லார் தமக்கு ஊணுடை தருவார்;
எத்துய ராயினும் கண்டுளம் பதைப்பார்.

ஆங்கவ் வூரில் நாயொன்று வாழ்ந்தது.
ஊரென் றாலே நாயிருக் காதா ?
நிறம்பல கொண்ட நாய்பல உண்டு;
நவில்கின்ற நாயும் அவைகளில் ஒன்று.

அவ்விதம் நாயும் விளம்பிய மனிதரும்
ஆன முதலில் நட்புற்றி ருந்தனர்.
ஆயினும் காரணம், நிமித்தங்கள் அறியோம்;
அவர்களுள் பூசல் வந்தது போலும்.

சுயநலம் நாய்க்கு வந்தது போலும்;
பிறநலம் என்பதை மறந்தது போலும்;
வெறிமிகக் கொண்டே அந்த நாயும்
அறிவற்றுக் கடித்தது அந்த மகானை.

அயலார் அறிவார் யாவரும் வந்தனர்;
அதிசயங் கொண்டு கூடிப் பார்த்தனர்.
'இப்படி நல்ல மனிதரைக் கடித்ததே,
அறிவு கெடுத்தது அந்நாய்' என்றனர்.

கடிவாய்ப் புண்மிக மோசம் ஆனது.
கிறித்தவ நல்லோர் வருந்தவும் நின்றது.
'வெறிநாய் இது'வென விளம்பினர் சிலரும்;
வேறுசில கயவர் பிழையார்இவ ரென்றார்.

ஆனால் கயவர் ஏமாந் திடவே
ஆங்கோர் பெரிய அற்புதம் நிகழ்ந்தது.
கடியது கொண்ட நல்லவர் பிழைத்தார்.
படிமிசை மாண்டதோ வெறிகொண்ட நாயே.!

'நல்ல பையன் பில்லு, அழகாய்ப் பாடினான். இது ரொம்ப சோகமான பாட்டு. (கண்ணாடிக் கிளாஸுகளைத் தூக்கித் தொட்டுக்கொண்டு)இதோ பில்லுவின் நல்வாழ்வுக்காக! ஒரு நாள் அவன் பிஷப்பாக வேண்டும்.'

என் மனைவியும் சேர்ந்து வாழ்த்தினாள்.

'அப்படியே ஆகுக! பாடுவதுபோலவே பிரசங்கமும் செய் தானானால் நிச்சயம் பிஷப்பாகலாம். அவன் அம்மா வழியில் எல்லோருமே இனிமையாகப் பாடுகிறவர்கள்.'

இந்தப் பழைய கதைப்பாடல்கள் மிக இனிமையாக இருக்கின்றன. இப்பொழுது கவிதை எழுதுகிறேன் என்று சொல்லிக் கொண்டு கவிஞர்கள் எழுதுகிறார்களே! அவை கேட்கச் சகிக்கிற தில்லை. ஒரே கவிதான். கற்பனை வறட்சி. ஆனால், அவையும் நன்றாக இருக்கின்றன என்று சொல்ல எத்தனை விமரிசகர்கள்! ஒப்பாரி வேறு எழுதக் கிளம்பியிருக்கிறார்கள். ஆனால், பாட்டிலே சோகம் மருந்துக்கும் இல்லை. ஒண்ணுமில்லாத சங்கதிக்கெல்லாம் ஒப்பாரிப் பாட்டு எழுதுகிறது. ஒரு சீமாட்டியின் நாய் தொலைஞ்சு போனால் அதற்கு ஒரு பாட்டு. விசிறி காணாமல் போனால் அதற்கும் ஓர் ஒப்பாரிப் பாட்டு. பின்னே சோக உணர்ச்சி எங்கிருந்து வரும்?'

மோசேயும் தன் கருத்தைத் தெரிவித்தான். 'இப்பொழுது புதுசாய் ஒரு கவிதைத் தினுசு தொடங்கியிருக்கிறது. ஏராளமாய் வெளிவருகிறது. எல்லாம் ஒரே அச்சு. ஒரு கவிதையை வாசித்தால் அடுத்ததை வாசிக்க வேண்டியதில்லை. ஜான் மேரியைச் சந்திக்கிறது, காதல் பேச்சு பரிமாறுகிறது. அவன் அவளுக்குப் பரிசு தருகிறது. அவள் பூச்செண்டு தருகிறது. பிறகு ரெண்டு பேரும் கோவிலுக்குப் போகிறது. கலியாணங் கட்டிக்கொள்கிறது. மற்றச் சின்னஞ் சிறிசுகளைப் பார்த்து "நீங்களும் கலியாணம் செய்துகொள்ளவேண்டும்" என்று அறிவுரை வழங்குகிறது.'

'காசா, பணமா, அறிவுரைதானே? இலேசாய் வழங்கி விடலாம். அதுவும் கவிதையில் இன்னும் எளிதாய் வழங்கி விடலாம். நினைத்த மாத்திரத்தில் கோவிலுக்குக் கொண்டு போய்க் கலியாணமும் முடிச்சு வச்சுவிடலாம்.'

ஐரோப்பாவிலுள்ள இரண்டு கலியாணச் சந்தைகள் எனக்குத் தெரியும். ஒன்று, இங்கிலாந்தில் உள்ள ரசனலா. மற்றொன்று, ஸ்பெயினிலுள்ள பாண்டாரனா. ஸ்பெயின் சந்தையோ ஆண்டுக் கொருமுறைதான் கூடுகிறது. ஆனால், நம் ஆங்கிலேய மனைவி யரோ ஒவ்வோர் இரவிலும் விலையாகின்றனர்.

அவன் அம்மா குறுக்கிட்டாள்.

'இங்கிலாந்துப் பெண்களுக்கென்ன. நல்ல மனைவிகள் கிடைக்க வேண்டுமானால் இங்கிலாந்துக்குத்தான் வரவேண்டும்.

'கணவன்மாரை ஆட்டிவைக்கும் மனைவிமார். பாலம் ஒன்று கட்டிவிட்டால் போதும். ஐரோப்பியப் பெண்கள் இங்கே ஓடி வந்து நமது பெண்களிடம் பாடம் கற்றுப் போகலாம். தெபோரா இன்னுமொரு பாட்டில் கொண்டுவந்துவிடு. மோசே, நீ ஒரு பாட்டுப் பாடு...என்னமோ நம்ம சம்சார வண்டி ஒரு வழியா ஓடிக்

கிட்டிருக்கு. எல்லாம் அவன் கிருபை. எனக்கு இன்னிக்கு மனசு நிறைஞ்சிருக்கு. நான் ஒரு ராஜா என்று என்னையே நினைச்சுக் கிறேன். அவ்வளவு சந்தோஷம். இந்தக் கணப்பங்கரையும், என்னைச்சுற்றிலும் சந்தோஷமா சிரிச்சுக்கிட்டிருக்கிற முகங்களும். தெபோரோ நமக்கு வயசாயிட்டுது. ஆனா என்ன? இனி நமக்குக் கஷ்டம் ஒண்ணும் இருக்காது. நம்ம மூதாதையர் எல்லோரும் ரொம்ப கண்ணியமா வாழ்ந்தவங்க. நாமும் நம்ம குழந்தைகளை ஒழுக்கத்தோடு வளத்துவிட்டுட்டோம். அவங்க எல்லாம் நம்ம வயசு காலத்திலே நமக்கு ஆதரவா இருப்பாங்க. நாம் அவங்களுக்குக் கற்றுக்கொடுத்த பழக்கவழக்கங்களையெல்லாம் அவங்க பிள்ளைகளுக்கும் அவங்க கற்றுக்கொடுப்பாங்க. வாடா மகனே, நீ வரதுக்காகத்தான் காத்துக்கிட்டிருக்கோம். வா, பாட்டுத் தொடங்கு—நாங்க கோரஸ் பாடுகிறோம்—ஒலிவியாக் கண்ணு எங்கே? அவ சத்தம்தான் கோஷ்டிப் பாடல்லே ரொம்ப இனிமையா ஒலிக்கும்—.'

டிக்குப்பயல் ஓடி வந்ததைப் பார்த்துவிட்டுத்தான் நான் அப்படிச் சொன்னேன்.

'அப்பா! அப்பா, அவ போயிட்டா. லிவி அக்கா போயிட்டா. இனி வரவே மாட்டாளாம்.'

'போயிட்டாளா? என்னடா சொல்றே?'

''இரண்டு கனவான்கள் ஒரு கோச்சு வண்டியிலே வந்தாங்க. அதிலே ஒருத்தர் அவளை முத்தமிட்டார். ''உனக்காகச் சாகவும் தயார்'' அப்படின்னார். அக்கா ரொம்ப அழுதா. திரும்பி வர மாதிரித்தான் இருந்தது. ஆனால், அந்த ஆள் என்னவோ பேசினார். உடனே அவளும் வண்டியிலே ஏறிட்டா. ஏறுகிற போது அவ சொன்னா: ''ஐயோ! நான் இப்படிப் போயிட்டதைக் கேட்டதும் எங்கப்பாவுக்கு எப்படியிருக்கும்?'' '

'என் மக்களே, போங்கள். போய் உட்கார்ந்து அழுங்கள். இனி நமக்குச் சுகமுமில்லை, சௌக்கியமுமில்லை. அவன் நாசமாய்ப் போவான். கடவுள் அவனுக்கு நித்திய தண்டனை கொடுக்கட்டும். என் பிள்ளையை என்னிடமிருந்து கடத்திக்கொண்டு போறானே. கடவுள் அவனைச் சும்மா விடமாட்டார். அவளை நல்லொழுக்கப் பாதையில் பழக்குவித்தேனே. எவ்வளவு நேர்மையாய் நடந்துகொண்டிருந்தவள். இனி இந்த உலகத்தில் நமக்கு என்ன இருக்கிறது? போங்கள் மக்களே, எங்கேனும் போய்த் தொலையுங்கள். என் மனம் உடைந்து நொறுங்கிவிட்டது.'

'அப்பா உங்கள் மனோதைரியமெல்லாம் இவ்வளவுதானா?' என்று கேட்டான் மோசே.

'தைரியமா? ஆமாம் எனக்குத் தைரியம் இருக்கு. போ, என் துப்பாக்கியைக் கொண்டு வா. அவனை விரட்டிப் பிடிக்கிறேன். எங்கே போயிருந்தாலும் அவனைப் பிடித்துக்கொண்டு வருவேன். வயதாகிவிட்டது என்று பார்த்தானா? என்ன செய்கிறேன் என்று பார்க்கட்டும் அந்த அயோக்கியன் கூர்கெட்ட அயோக்கியன்.'

துப்பாக்கியை எடுத்துவிட்டேன். என் மனைவி என் தோளைப் பற்றிக்கொண்டாள். என்னைப்போல் அவளுக்குக் கோபம் வரவில்லை.

'என் கணவரே, அன்புக் கணவரே! இந்த வயதான கரங்களுக்கு ஏற்ற ஒரே ஆயுதம் வேதாகமந்தான். அதைத் திறந்து வாசியுங்கள். உங்கள் கோபம் பொறுமையாக மாறும்... அவள் நம்மை ஏமாற்றிவிட்டாள்.'

என் மகன் சொன்னான்:

'ஆம் அப்பா, நீங்கள் இப்படிக் கோபப்படுவது சரியன்று. நீங்கள் அம்மாவைத் தேற்றவேண்டியதை விட்டு, அவர்களின் மனவேதனையை மேலும் அதிகரிக்கிறீர்கள். ஒரு குரு யாரையும்—அயோக்கியனைக்கூட—சபிக்கக்கூடாது. நீங்களோ கோபத்தில் அவனைச் சபித்தீர்கள்.'

'நான் சபித்தேனா என்ன, அவனை?'

'ஆம் இருமுறை சபித்தீர்கள்.'

'நான் சபித்திருந்தால் கடவுள் என்னையும் அவனையும் மன்னிக்கக்கடவர். ''பகைவனுக்கருள்வாய்'' என்று திருவாய் மலர்ந்தருளிய அவனது திருநாமம் போற்றி! அவன் கொடுத்தான்; அவனே எடுத்துக்கொள்ளுகிறான்-''எதிரியையும் வாழ்த்து'' என்ற அவன் போதனை எளிதில் கடைப்பிடிக்க இயலாதது என்பது இப்பொழுது புரிகிறது. நான் பல ஆண்டுகள் சந்தோஷமாக இருந்தேன். முதுமைக் காலத்தில் கண்ணீர் வடிக்கும் நிலை ஏற்பட்டுவிட்டது. இதைத் தாங்கிக்கொள்வது மிகக் கடினம். என் மகளே, என் கண்மணியைக் கெடுத்த அந்தப் பாதகன். நாசமாய்—ஆண்டவன் என்னை மன்னிக்கவேண்டும். என்ன வார்த்தை சொல்லவிருந்தேன்—ஹூம் அவள் அழகென்ன, குணமென்ன, சிரிப்பென்ன, விளையாட்டென்ன! அவளைப் பார்த்தாலே மனக்

கவலை பறந்தோடிவிடுமே—ஐயோ! அவள் செத்திருந்தால்கூடத் தேவலையே — ஓடியல்லவா போயிருக்கிறாள் — நமது குடும்ப மானமும் இத்தோடு போய்விட்டதே. இனி இந்த உலகத்தில் எனக்குச் சுகமேது? — போகிற உலகத்தில்தான் — பிள்ளாய் — அவர்கள் போனதை நீ பார்த்தாயே—அவன் அவளைப் பலவந்தப் படுத்தித்தான் கூட்டிக்கொண்டு போனானா?—அப்படியானால் அவள் களங்கமில்லாதவள்தான்.'

'இல்லேப்பா. அவன் அவளை முத்தமிட்டான். ''நீ ஒரு தேவதை'' அப்படீன்னான். அவள் ரொம்ப அழுதாள். அப்புறம் அவன் தோள்மேலே சாய்ந்தாள். அப்புறம் வண்டியிலே ஏறினதும் வண்டி வேகமாப் போயிட்டுது.'

அழுதுகொண்டே பேசுவது என்மனைவிக்குச் சிரமமாயிருந்தது:

'திருட்டுத் தேவடியா. நன்றிகெட்ட மூதேவி. பெத்துவளர்த்த நம்மையே ஏமாற்றிவிட்டு ஓடிவிட்டாள் பாரேன். உங்க நரை மயிரை வேதனையோடே பாதாளத்திலே இறங்கப்பண்ணுகிறாள். உங்க பின்னாலே நானும் வரவேண்டியதுதான்.'

இப்படியோர் அவலத்தை எங்கள் குடும்பம் இதுவரை அனுப வித்ததில்லை. இதுவே முதல் தடவை. இரவில் யாருக்கும் சரியான தூக்கமில்லை. புலம்புவதும் தேற்றுவதுமாய் அன்றிரவு எப்படியோ கழிந்து மறுநாள் விடிந்தது. அந்த அயோக்கியனை எப்படியாவது கண்டுபிடிக்க வேண்டும். ஏன் இப்படிச் செய்தாய் என்று கேட்க வேண்டும் என்று மனத்திலே உறுதிபண்ணிக் கொண்டேன்.

காலைச் சாப்பாட்டு வேளையில் ஒலிவியாவின் இடம் வெறிச் சென்றிருந்தது. அவளது கலகலத்த பேச்சும், காலைவேளைக்குக் களையூட்டும் அவள் கிண்கிணிச் சிரிப்பும்—என் மனைவி திரும்பவும் திட்டத் தொடங்கினாள். திட்டினாலாவது அவள் மனசு தேறுமா னால், செய்துவிட்டுப்போகட்டும்.

'குடும்பத்தையே கறைப்படுத்தின கள்ளி. அவளை இனி இந்த வீட்டு வாசப்படி மிதிக்க விடமாட்டேன். இனி அவள் எனக்கு மகளல்ல. தேவடியாச் சிறுக்கி. கள்ளப்புருசன் கூடவே இருந்துகொள்ளட்டும். நம்மை அவள் அவமானப்படுத்தியதை யாவது சகித்துக்கொள்வேன். அவள் நம்மை ஏமாற்றிவிட்டாள் பாருங்க, அதைத்தான் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.'

'மனைவியே, கடுமையாகப் பேசவேண்டா. அவள் குற்றம் கண்டிக்கத்தகுந்ததுதான். ஆனால், அவள் தன் குற்றத்தை

உணர்ந்து மனம்திருந்தி வந்தாளானால் என் உள்ளமும் வீடும் அவளை வரவேற்கும். அவள் மனம்வருந்தித் திரும்பினால் நான் மிகவும் மகிழ்ச்சிகொள்வேன். யானைக்கும் அடி சறுக்குமே. சிலர் தந்திரசாலிகளின் பேச்சில் ஏமாறுகிறார்கள். சிலர் புதுமை மோகத்தில் மயங்கிப்போய்த் தவறிழைத்துவிடுகிறார்கள். முதல் முதலாகச் செய்கின்ற குற்றம் பெரும்பாலும் எளிமைக் குணத் தினால் ஏற்படுவதுதான். மீண்டும்மீண்டும் செய்யப்படுபவையே அறிந்து செய்யப்படுபவை. அவள் பத்தாயிரம் குற்றங்கள் புரிந்துவிட்டாலும்கூட அவள் அவற்றுக்காக வருந்துவாளானால் நான் அவளைச் சேர்த்துக்கொள்ளுவேன். அவள் இனிய குரலைக் கேட்டு என்று மகிழப் போகின்றேனோ? ''மகனே, என் வேதாகமத்தையும் தடியையும் எடுத்துக்கொண்டு வா.'' எங்கிருந் தாலும் நான் அவளைத் தேடிக் கண்டுபிடிப்பேன். அவள் அவமானத்தினின்று அவளை மீட்க முடியாவிடினும், அவள் மேற் கொண்டு பாவக்குழியில் கிடந்துழல்வதையேனும் தடுக்க முடியும்.'

18

[நெறிபிறழ்ந்த மகளை நெறிப்படுத்தமுனைந்த தந்தை.]

அக்காளை வண்டிக்குள் ஏற்றிய கனவானை அடையாளம் கண்டுபிடிக்குமளவுக்கு விவரிக்க டிக்குவுக்கு இயலவில்லை. இத்தகைய நடவடிக்கைகளுக்கு எங்கள் நிலப்பிரபு பேர்பெற்றவர். ஒலிவியாவைக் கூட்டிச் சென்றது அவர்தான் என்பதில் எனக்கு எள்ளளவு சந்தேகமுமில்லை. எனவே, நேராய்த் தாரன்ஹில் மாளிகைக்குச் சென்றேன். அவர் செயலை வன்மையாய்க் கண்டித்து, முடிந்தால் மகளையும் கையோடு கூட்டிக்கொண்டு வந்துவிட வேண்டும். வழியிலே என் சபை உறுப்பினர் ஒருவரைக் கண்டேன். என் மகளைப்போலவே காணப்பட்ட ஓர் இளம் பெண் ஒரு கனவானோடு கோச்சுவண்டியில் வேகமாகப் போனதை அவர் பார்த்தாராம். அந்தக் கனவானின் அடையாளங்களை அவர் சொன்னதோ திரு. பருச்செல்தானவர் என்று யூகிக்கும்படியாயிருந்தது. ஆனால், என் மனம் அதை ஒப்புக்கொள்ள மறுத்தது. திரு. தாரன்ஹில் மாளிகையை நோக்கியே நடந்தேன் நான்.

மிக அதிகாலையாதலால் அவரைத் தொந்தரவு செய்ய வேலையாள்கள் விரும்பவில்லை. ஆயினும் நான் உடனே பார்த்தாக வேண்டும் என்று கண்டிப்பாகச் சொல்லவே, அவர் வந்தார். என்றும்போல் ஒரு சாதாரண பாவனையுடன்தானிருந்தார். ஒளிவு மறைவு எதுவும் தென்படவில்லை. நான் வந்த விஷயமென்னவென்று விசாரித்தார். நான் சொன்னதும் மிகுந்த ஆச்சரியமடைந்தார். தமக்கு அதுகுறித்து ஒன்றுமே தெரியாதே என்றார். தம் மானத்தின்மீது ஆணையாகச் சொன்னார். அவரைச் சந்தேகித்துவிட்டதற்காக நான் என்னையே நொந்துகொண்டேன்.

அப்படியானால் அவளைக் கூட்டிப்போனது திரு. பருச்செல் தானா? அவர் அவளோடு ஓரிருமுறை தனியாகப் பேசிக்கொண்டு நின்ற காட்சி மனத்தில் வந்துபோனது. அதற்குள் இன்னொரு மனிதர் வந்து சாட்சி சொன்னார். பருச்செல் என் மகளோடு

வெல்ஸு போனதை அவர் கண்டாராம். வெல்ஸு அங்கிருந்து முப்பது மைல் தொலைவிலிருந்த சிறு நகரம். கேளிக்கை வேடிக்கைகளுக்குப் பிரசித்தி பெற்ற இடம். உல்லாசம் நாடிவரும் கூட்டம் அங்கு அதிகம்.

இவையெல்லாம் என்னை ஏமாற்றித் திசைதிருப்பிவிடச் செய்யப்பட்ட முயற்சிகளாகவும் இருக்கக்கூடும். ஆனால், பகுத்தறிவு மேலோங்கிய மனநிலையில் நான் அப்பொழுது இல்லை. எதையுமே ஆராயப் புகவில்லை. வெல்ஸை நோக்கி நடக்கத் தொடங்கினேன். வழியில் பலரை விசாரித்தேன். யாருக்கும் எதுவும் தெரியவில்லை. வெல்ஸை நெருங்கிவிட்டேன். அப்பொழுது குதிரைமீது ஒருவர் எதிர்ப்பட்டார். அவரைப் பிரபுவின் பரிவாரத்தோடு பார்த்த ஞாபகமிருந்தது. அவர் சொன்னார்: என் மகளும் பருச்செல்லும் குதிரைப் பந்தயக் களத்துக்குப் போயிருக்கிறார்களாம். அது வெல்ஸிலிருந்து மேலும் முப்பது மைல் தொலைவிலிருந்தது. இரவில் இருவரும் சேர்ந்து நடனமாடியதை அவர் நேரில் கண்டாராம். என் மகளின் நடன நளினத்தை எல்லோரும் வியந்து பாராட்டினார்களாம். உடனே போனால் எப்படியும் அவர்களைக் கண்டுபிடித்துக் கொள்ளலாம் என்றார்.

எனவே, மறுநாள் விடிந்ததும் நான் குதிரைப் பந்தய மைதானத்தை நோக்கி நடக்கலானேன். பிற்பகல் நாலு மணியளவில் அங்குப் போய்ச் சேர்ந்தேன். நவநாகரிக அலங்காரக் கூட்டம் இன்பமே நோக்கமாய், கண்ணுங்கருத்துமாக வளையவந்தது. என் நோக்கமோ எத்தனை வேறுபட்டது? நெறிபிறழ்ந்த மகளை வழிப்படுத்தும் சிந்தையோடு அவளைத் தேடினேன். நெரிந்து கொண்டிருந்த கூட்டத்தில் பருச்செல் ஒரு கணம் தென்பட்டது போலிருந்தது. ஆனால், நான் அவரைத் தொடர்வதற்குள் என்னைக் கண்டுவிட்டு அவர் எப்படியோ மறைந்து விலகிக் கூட்டத்திலே கலந்துவிட்டார். என்ன தேடியும் அதன்பின்னர் எனக்கு அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

என் மனம் சோர்வுறத் தொடங்கியது. துணியே விட்டுவந்த மனைவி மக்களைப்பற்றிய கவலை மனத்தை அரித்தது. பயணத்தைத் தொடர்வதில் விருப்பமே இல்லாதுபோயிற்று. விரக்தி மேலிட்டது. உடல் அலுப்பை உணர்ந்தேன். அடுத்து எனக்குக் காய்ச்சல் கண்டிருக்கிறது என்றும் தெரிந்துகொண்டேன். மைதானத்தைவிட்டு வெளியேறினேன். வீடு எழுபது மைல் தொலைவிலிருந்தது.

வீதிமேலிருந்த ஒரு சின்ன மதுக்கடைக்குள் நுழைந்தேன். ஏழை எளியவர் தங்குவதற்கேற்ற சத்திரங்களாகவும் இந்த மதுக்

கடைகள் பயன்பட்டன. அசதி மிகுதியால் படுத்தவன் மூன்று வாரங்கள் அப்படியே படுக்கையில் கிடந்தேன். உடல் குணமானதும் வேறொரு பிரச்சினை பிடித்துக்கொண்டது. சத்திரத்தில் எனக்கான செலவுகளுக்குக் கொடுக்கக் கையில் பணமில்லை. அந்தக் கவலையில் காய்ச்சல் திருப்பிக்கொண்டுவிடுமோ என்று பயந்து கொண்டே வந்தவன், சத்திரத்தின் சிற்றுண்டியறையில் எனக்கு நன்கு பழக்கமானவர் ஒருவரைக் கண்டுகொண்டேன். குழந்தை நூல்கள் சில எழுதியவர். இப்பொழுதும் ஒரு மகானின் வாழ்க்கைக் குறிப்புகளைச் சேகரிப்பதற்காகத்தான் அந்தப் பிராந்தியத்தில் பயணம் செய்துகொண்டிருக்கிறாராம். என் ஏகபத்தினிக் கொள்கைப் பிரசுரங்கள் சிலவற்றை அவர்தான் பிரசுரித்தார். நல்ல மனிதர், பரோபகாரி. ஆலயச்சுற்றுக்குள் நல்ல நூல்களை விற்பனை செய்வதில் ஆர்வமுள்ளவர். சிற்றுண்டியை முடித்துக் கொண்டு மீண்டும் குதிரையில் ஏறப்போனவரை விரைவாக அணுகி, நிலைமையை விளக்கி அவரிடம் கொஞ்சம் பணம் கடனாக வாங்கிக்கொண்டேன்.

சத்திரத்தைவிட்டுக் கிளம்புகையில் நான் மிகவும் பலவீனமாயிருந்தேன். எனவே. தினமும் பத்து மைல்போல் தங்கித் தங்கி, மெள்ள நடப்பது என்று திட்டமிட்டுக்கொண்டு எங்கள் ஊரை நோக்கிப் பயணத்தைத் தொடங்கினேன்.

நடக்க நடக்க என் மனம் அமைதியுறலாயிற்று. எல்லாம் அவன் சித்தம்போல் நடக்கட்டும். மனிதனின் வீம்பு எம்மாத்திரம்? பெண்ணை மீட்டுக்கொண்டு வந்துவிடுவேன் என்று நினைத்தது என் அகந்தையே. மனம் அமைதிகொண்டதும் உடல் நலமும் திரும்பிவிட்டது.

துன்பத்தை எதிர்நோக்க அஞ்சுகின்றோம். ஆனால், வந்து விட்ட பின்னரோ அதைத் தாங்கும் சக்தியும் வந்துவிடுகின்றது. ஆரவார வாழ்வென்னும் மலையுச்சியை அடைந்துவிடும் ஆசை உந்த, மனிதன் மேலே ஏறுகின்றான். கீழே இருந்து பார்க்கும்போது மிகப் பிரகாசமாகத் தெரிந்த இடங்களில் மறைந்திருந்த ஆபத்துகள் எல்லாம் கிட்ட நெருங்கிய பின்னர்தான் புலனாகின்றன. மலையுச்சியினின்று கீழே இறங்குவதும் பயப்பட வேண்டியதொன்றில்லை. கீழே பார்க்கும்போது தெரிகின்ற இருண்ட படுகுழிகளெல்லாம் நாம் நினைத்ததுபோல் பயங்கரமானவையல்ல. அருகே நெருங்கினால் நம் மனத்தை மகிழ்விக்கும் அழகுகள் அங்கேயும் பலவுண்டு. பள்ளத்தாக்கின் இருள் நமது கண்களுக்குப் பழக்கப்பட்டுவிட்ட பின்னர் அஃது இதமாக இருப்பதை உணர்வோம்.

இரண்டு மைல்கள் நடந்திருப்பேன். எனக்கு முன்னே சற்றுத் தொலைவில் ஒரு பாரவண்டி தென்பட்டது. எட்டி நடையைப் போட்டு அதனருகில் வந்தேன். நாடோடி நாடகக் கம்பெனி வண்டி அது. சீன்களும் மற்றும் நாடகமேடைத் தட்டுமுட்டு களும் நிறைந்திருந்தன. பக்கத்து ஊருக்குப் போகிறதாம்.

வண்டிக்காரன் தவிர நடிகனொருவனும் அதில் இருந்தான். மற்றப் பேரெல்லாம் மறுநாள்தான் வருவார்களாம். நல்ல வழித் துணை கிடைத்துவிட்டால் பயணம் சுகமாயிருக்கும்; அலுப்புத் தெரியாது. நடிகனிடம் பேச்சுக்கொடுத்தேன். பழைய நாளில் எனக்கும் நாடக அனுபவங்கள் உண்டு. ஆனால், இன்றைய நாடகப் பாங்கு எனக்கு அத்தனை பரிச்சயமில்லை. எனது நாளில் டிரைடன், ஆட்வே முதலியோரின் நாடகங்கள் கொடிகட்டிப் பறந்தன.

'இப்பொழுது அந்த மாதிரி நாடகங்கள் எல்லாம் பாஷனில்லை' என்றான் அவன். 'ரசனை ஒரு நூற்றாண்டு பின்னோக்கிப் போயிருக்கிறது. பிளெச்சர், பென் ஜான்ஸன், ஷேக்ஸ்பியர் இவர்களது நாடகங்கள் நன்றாய் எடுபடுகின்றன.'

'வசனம் மிகப் பழைய நடையிலிருக்குமே. ஹாஸ்யம்கூடப் பெரும்பாலும் அந்தக் காலத்துக்குரியது. அதெல்லாம் இப்பொழுது விளங்குகிறதா என்ன? கதாபாத்திரங்கள்கூட உணர்ச்சிமிகுந்ததாய்ச் சித்திரிக்கப்பட்டவையாயிற்றே.'

'நடை, ஹாஸ்யம், பாத்திரம் இதையெல்லாம் யாரையா கவனிக்கிறார்கள்? ஜான்ஸன், ஷேக்ஸ்பியரெல்லோரும் புகழ் வாங்கிய நாடகாசிரியர்களாச்சா? அவர்கள் பேரைச் சொல்லிக் கொண்டு நாங்க ஊமைக்கூத்துப் போட்டாலும் மக்கள் சந்தோஷமாப் பார்த்துவிட்டுப் போவார்கள்.'

'அப்படியானால் இப்ப நாடகாசிரியர்கள் தாங்களாக எதுவும் எழுதவில்லை. ஷேக்ஸ்பியரைக் காப்பியடிக்கிறார்கள் அப்படித் தானே?'

'சார், அவர்கள் காப்பியடிக்கிறார்களோ என்னவோ அதுவும் தெரியாது. பார்க்க வருகிற ஜனங்களுக்கும் தெரியாது. அவர்கள் நாடக வசனத்தை அதிகமாகக் கவனிக்கமாட்டார்கள். திடீர்த் திருப்பங்கள் கொடுத்து ஆரவாரமாக நடிச்சா கைதட்டுவாங்க. சில நாடகத்திலே ஹாஸ்யத்தைக் கேட்டு வயிறு வலிக்கச் சிரிப்பார் கள். ஹாஸ்யத் துணுக்கு ஒன்றுமே இல்லையென்றால்கூடச் சில நாடகம் ஜமாய்ச்சுப்புடும். காங்கிரீவ், பர்க்குஹார் முதலியவர்

கள் நகைச்சுவையெல்லாம் இப்போது எடுபடாது. சாமானியமான, இயல்பான ஹாஸ்யம்தான் இப்போது பிடிச்சிருக்கு.'

அதற்குள் ஊர் வந்துவிட்டது. ஊர்க்காரரும் இதை எதிர் பார்த்திருந்தமையால் வேடிக்கை பார்க்கவந்து சூழ்ந்து கொண்டார்கள்.

'கொட்டகையினுள்ளே இருப்பதைவிட வெளியேதான் எங்களுக்குக் கூட்டம் அதிகம்' என்று நடிகன் விகடம் அடித்தான். அப்பொழுதுதான் 'நாம் ஒரு குருவாயிற்றே' என்று எனக்கு உணர்வு தட்டியது. நாடகக் குழுவிலே பாதிரிக்கு என்ன வேலை என்ற வம்பு கிளம்புமுன்னர் அருகிலிருந்த மதுக்கடைக்குள் தஞ்சம் புகுந்தேன்.

கூடத்திலே வெள்ளைச்சட்டை மனிதர் ஒருவர் இருந்தார். என்னைக் கண்டதும் பேச்சுக்கொடுத்தார். நான் அந்த நாடகக் கம்பெனியின் குருவா, குருவேடந் தாங்கும் நடிகனா என்று கேட்டார். எனக்கும் கம்பெனிக்கும் எவ்விதத் தொடர்பும் கிடையாது என்று விளக்கினேன். அவர் என்னையும் அப்பொழுது உள்ளே நுழைந்த நடிகனையும் தம்முடன் மது அருந்த அழைப்பு விடுத்தார். மது சாப்பிடும்போது அரசியல் பேசத் தொடங்கினார். இவரொரு பார்லிமெண்டு மெம்பராக இருப்பாரோ என்று எனக்குச் சந்தேகம் முளைத்தது. அவர் அரசியல் அப்படியிருந்தது.

இரவுச் சாப்பாட்டுக்கு என்ன இருக்கிறது என்று சத்திரக் காரனை விசாரித்தோம். அதற்குள் அந்தக் கனவான் நாங்கள் அவர் வீட்டில் சாப்பிடவேண்டும் என்று விரும்பி அழைத்தார். நாங்களும் ஒப்புக்கொண்டு அவர் வீட்டுக்குச் சென்றோம்.

19

[அரசாங்கத்தின்மீது எரிச்சல், சுதந்தரத்தைப்பற்றிய தவறான கருத்து இவற்றால் அலைக்கழிக்கப்பட்டு ஆட்டம் போடுகிற ஒருவரின் வருணனை.]

அவர் வீடு கிராமத்தைவிட்டுச் சற்றுத் தள்ளி இருந்தது. கோச்சுவண்டி தயாராக இல்லையாம். எனவே நடந்துவிடுவோம் என்று கூறி அழைத்துச் சென்றார். சிறிது நேரத்தில் வீட்டை அடைந்தோம். அது மிக அழகானதொரு மாளிகை. அந்த வட்டாரத்தில் அதுதான் சிறந்தது. உள்ளே அழைத்துச் சென்று ஓர் அறையில் இருத்திவிட்டு உணவு ஏற்பாட்டைக் கவனிக்க அவர் போனார். நவீன முறையில் நயமாக ரசனையுடன் அலங்கரிக்கப் பட்டிருந்த அவ்வறையை நானும் நடிகனும் கவனித்தோம். 'நல்ல இடத்தில்தான் வந்து சேர்ந்திருக்கிறோம்' என்ற அர்த்தத்துடன் நடிகன் என்னைப் பார்த்துக் கண்ணடித்தான். அதற்குள் அவர் திரும்பிவிட்டார்.

சிறிது நேரத்தில் உணவும் தயாராயிற்று என்று சொன்னார். மிகச் சாதாரணமாய் உடுத்தியிருந்த இரண்டு மூன்று பெண்களும் வந்தனர். அறிமுகப்படுத்தப்பட்டனர். அளவளாவிக்கொண்டே சாப்பிடலானோம்.

அந்த வீட்டு மனிதருக்கு மிகப் பிடித்தமான விஷயம் அரசியல். 'சுதந்தரம் என் மூச்சு' என்று விட்டு விட்டுச் சம்பந்தா சம்பந்த மில்லாமல் முழங்குவதுபோல் சொன்னார். அவர் படிக்காத அரசியல் பத்திரிகை எதுவுமே இல்லை என்பதும் தெரியவந்தது. மானிட்டர், ஆடிட்டர், டேய்லி, பப்ளிக், லெட்ஜர், கிரானிக்கிள், லண்டன் ஈவினிங், ஓயிட்ஹால் ஈவினிங் என்று மொத்தம் பதினேழு பத்திரிகைகளின் பெயர்களை அடுக்கினார். ரிவ்யூக்களை யும் விடுவதில்லையாம்.

'இந்தப் பத்திரிகைகளுக்கு ஒன்றையொன்று பிடிப்பதில்லை. ஆனால், எனக்கு எல்லாவற்றையுமே பிடிக்கிறது!' என்றார்.

நான் எதையும் படிப்பதில்லை என்று சொல்லக் கேட்டு அவருக்கு ஒரே ஆச்சரியம்.

'சுதந்தரம் என் மூச்சு. காரன்வால் பிரதேசத்துச் சுரங்கத் தொழிலாளர்மீது ஆணை, சுதந்தரம் இங்கிலாந்தின் மகிமை, அதன் பாதுகாவலர்களை நான் பூஜிக்கிறேன்' என்று தொடர்ந்து முழக்கம் செய்தார்.

'அப்படியானால் உங்களுக்கு அரச பக்தியும் உண்டு என்று சொல்லுங்கள்' என்று நான் கேட்டேன்.

'நாம் சொல்கிறபடியே அரசர் கேட்டு நடந்தால் நமக்கும் அரச பக்தி வரும். அவர் அப்படி எங்கே கேட்டு நடக்கிறார். அவருக்குச் சொல்ல எனக்கு நிறைய ஆலோசனை இருக்கிறது. அவர் கிட்டே இப்போது இருக்கிற ஆலோசகர்கள் சரி இல்லை. யாரார் நல்ல ஆலோசனை சொல்கிறார்களோ அவர்கள் சொற் பிரகாரம் அரசர் நடக்கவேண்டும். அப்போதான் முடியாட்சி சரியாய் நடக்கும்.'

நான் சொன்னேன் :

'ஆளாளுக்கு ஆலோசனை சொல்லத் தொடங்கினால் அது எங்கே போய் முடியும்? அப்படிச் சொல்கிறவர்களைத் தண்டனா சக்கரத்துக்குள்ளே போட்டுச் சித்திரவதை செய்தாலும் தப்பில்லை. அரசியல் சட்ட அமைப்பு என்று ஒன்று இருக்கல்லவா? அதை எல்லாரும் மதிக்கவேண்டும். புனிதமாக மதிக்கவேண்டும். அதிலே குறை இருந்தால் அதைப் போக்க நேர்மையான முறையிலே போராடவேண்டும். இப்போது சங்கடம் என்ன வென்றால் போராட முன்வரக்கூடியவர்கள் ரொம்பப் பேர் இல்லை. ஆனால், அப்படி நீங்க சொல்நீங்க பாருங்க—ஆலோசனை சொல்ற வங்க — அவங்க நிறையப் பேர் இருக்காங்க. அவர்கள் எல்லாரும் எப்படிப்பட்டவர்கள் தெரியுமா? முறுகுகிற கட்சியிலே சேர்ந்துவிட சமயம் பார்த்துக் கொண்டிருக்கிறவர்கள்.'

ஒரு பெண்மணி குறுக்கிட்டாள்.

'என்னது, நீங்க சுதந்தர விரோதியா? இந்த நாட்டிலே இன்னுமா இந்தமாதிரி அற்பர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள்? நீங்கள் ஒருவேளை கொடுங்கோலர் கட்சியோ? சுதந்தரம் புனித மானது! பிரித்தானியரின் மகிமை அதுவேதான்!'

இந்தக் கூச்சலில் வீட்டுக்காரர் உடனே சேர்ந்துகொண்டார்.

'அடிமைத்தனத்தை ஆதரிக்கும் கட்சி இன்னுமா சாக வில்லை? பிரித்தானியரின் மகிமையை விட்டுக்கொடுக்க நான்

சம்மதியேன். அப்படிப்பட்ட அற்பர்கள் இன்னும் இந்தப் பூமியிலே நடமாடுகின்றனரா?' இருவரும் இவ்வாறு சிறிது நேரம் மாறிமாறிப் பேசினர்.

அப்புறம் நான் தொடங்கினேன் :

'ஐயா, நானும் சுதந்தரத்தை ஆதரிப்பவனே. சுதந்தரம் இறைவனின் குணங்களில் ஒன்று என்று நம்புகிறவன் நான். தற்காலத்தின் சிறப்புகளில் அது ஒன்று. எல்லோரும் இந்நாட்டு மன்னர். நானும் ஒரு மன்னனே. அரசுகட்டிலுக்கு நம்மனைவருக்கும் சம உரிமை உண்டு. படைப்பிலே நாம் சமமானவர்கள். ஆயினும், இதில் பல சங்கடங்கள் உள. லெவலர்கள்—சமப்படுத்திகள்—என்றொரு கட்சி சில காலத்துக்கு முன்னால் இருந்ததே தெரியுமா? அவர்கள் இக்கருத்தில் நம்பிக்கைகொண்டு, தனியாகச் சமுதாயம் அமைத்து, தங்கள் நம்பிக்கைப்பிரகாரம் வாழ்ந்துகாட்ட முயன்றனர். எனினும், அவர்களால் இயலவில்லை. காரணம் என்னவென்றால் அவர்கள் அனைவரும் ஒன்றுபோல் இல்லை. சிலர் அதிபுத்திசாலிகளாகவும் சிலர் அதிதந்திரசாலிகளாகவும் இருந்தனர். இந்தப் புத்திசாலிகளும் தந்திரசாலிகளும் மற்றையோரைத் தங்களுக்குக் கீழ்ப்படுத்தி ஆளத் தொடங்கினர். குதிரையைவிடக் குதிரைச் சவாரி செய்கிறவன் தந்திரசாலியாக இருக்கவேண்டுமல்லவா? இதுதான் எங்கேயும் உள்ள நிலை. சிலர் ஆளவும் சிலர் ஆளப்படவும் பிறந்திருக்கின்றனர். எனவே, கொடுங்கோலன் அல்லது பிறரை ஆட்சிசெய்கின்றவன் எப்படியும் எங்கேயும் முளைத்துவிடுவான். ஆங்காங்கே சிறு கொடுங்கோலர்கள் முளைத்துக்கொண்டே இருப்பார்கள். அதைத் தவிர்த்துக் கொடுங்கோலர்களை ஓரளவு கட்டுப்படுத்தி, ஒழுங்குபடுத்தி அவர்களைத் தலைநகரத்தில் ஓர் அரசனின் அருகில் இருத்தி வைப்பதுதான் உசிதம். இக் கொடுங்கோலர்களைத் தவிர்க்கத்தான் முடியாட்சி தேவைப்படுகின்றது. அரசனுக்குக் கொடுங்கோலர்கள்மேல் அதிகாரம் இருப்பதால் அவர்கள் அவனை வெறுப்பர். அவன் அதிகாரத்தைப் பிடுங்கித் தங்களுக்கு வைத்துக்கொள்ள, அல்லது அவனை அடியோடு கவிழ்த்துவிடத்தான் அவர்கள் முயன்றுகொண்டே இருப்பர். அவர்கள் முடியரசுக்குக் குழிபறிக்கும் வேலையைத்தான் எப்பொழுதும் செய்துகொண்டிருப்பார்கள். அவர்கள் அப்படிச் செய்யாமலிருக்கும்படி மக்கள் விழிப்பாயிருக்க வேண்டும். நமது அரசியல் சட்ட அமைப்பும், பிற சட்டங்களும் இதற்கேற்றாற்போல் அமைய வேண்டும். செல்வமும் செல்வாக்குமுடையோர் இதில் அதிகக் கவனம் செலுத்தவேண்டும்.

'நாட்டின் பொருளாதார நிலையையும் நாம் நன்கு தெரிந்து வைத்திருப்பது அவசியம். அப்பொழுதுதான் செல்வமானது மேலும்மேலும் செல்வந்தரிடமும் போய்க் குவிகின்ற நிலையைத் தவிர்க்க முடியும். செல்வந்தரது பேராசை அதிகரிக்காதபடி நாம் தான் பார்த்துக் கொள்ளவேண்டும். இப்பொழுது (1766) நமது நாட்டில் (இங்கிலாந்தில்) செல்வம் வெகுவாகப் பெருகுகின்றது. அது உள்நாட்டுத் தொழில்வளர்ச்சியால் ஏற்பட்டதன்று; அயல் நாட்டு வாணிகத்தால் உண்டானதாகும். இந்த அயல்நாட்டு வாணிகத்தை ஏழைகள் நிருவகிக்க முடியாது; செல்வந்தரால்தாம் நிருவகிக்க இயலும். உள்நாட்டுத் தொழில்மூலம் உண்டாகின்ற செல்வமும் அதே செல்வந்தரிடம்தான் போய்ச்சேருகின்றது. எனவே, செல்வந்தரின் பணவருவாய்க்கு இரண்டு சாதனங்கள் உள்ளன. ஏழைகளுக்கோ ஒன்றுதான் உள்ளது.

'வர்த்தகம் பெருகுகின்ற நாடுகளில் பணமும் பெருகியுள்ளது. பணம் பெருகிய வர்த்தகர்கள் நிலபுலன்கள் வாங்கிச் சமுதாயப் பிரபுக்களாகவும் மாறுகின்றனர்.

'இப்பொழுது நமது நாட்டுச் சட்டதிட்டங்கள் இந்தப் பணப் பெருக்கத்துக்கு மிகவும் சாதகமாக அமைந்திருக்கின்றன. பணமோ மனிதரை ஏழைகளென்றும் பணக்காரரென்றும் பிளவுபடுத்தும் தன்மையது. பணக்காரர் தங்களைப்போன்ற பிற பணக்கார ரிடம் திருமண சம்பந்தம் வைத்துக்கொண்டு தங்களைப் பலப் படுத்திக் கொள்கின்றனர். அறிவாளியைவிடப் பணக்காரனுக்கே சமுதாயத்தில் மதிப்பு அதிகமாக இருக்கின்றது. அறிவாளிகளிடம் பணம் இல்லையேல் அவர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர். அவர்கள் அறிவையும் ஆலோசனையையும் நாடு அலட்சியப்படுத்துகின்றது. நிலைமை இப்படியிருப்பதால் அறிவாளியின் குறிக்கோளும் பணம் சேகரிப்பதாகிவிடுகின்றது.

'இப்பொழுது நாட்டில் பணம் புரளுகிறது. பலர் பணக் காரராகிவிட்டனர். பணத்தாலாய இன்பங்களைத் துய்த்து முடித்தபின்னர் அப் பணக்காரரின் கவனம் செல்வாக்கு, அதிகாரம் இவற்றின்மீது திரும்புகின்றது. உபரிப் பணத்தை அக் காரியங்களில் ஈடுபடுத்துகின்றனர்.

'எப்படியென்றால், ஒரு செல்வந்தன் தன்னைச் சார்ந்து தன்னையே சுற்றிக்கொண்டிருக்கக்கூடிய ஒரு கூட்டத்தை உருவாக்க முயல்கின்றான். பணத்திற்காகப் பலர் தங்கள் சுதந்தரத்தையும் இழந்து அவனுக்கு அடிமைகளாகின்றனர். இப்படித்தான் கொடுங்கோலர்கள் உருவாகின்றனர். சோற்றுக்காக வேண்டி ஒரு கொடுங்கோலனை அவர்கள் சகித்துக் கொள்ளுகின்றனர். பணத்

தாசைகொண்ட அற்பர்கள் கொடுங்கோலருக்கும் பணிபுரிகின்றனர். இப்படியாக ஒவ்வொரு செல்வந்தனும் தன்னைச் சுற்றிச் சார்ந்திருக்கும் ஓர் ஏழைகள் வட்டத்தை உண்டாக்கிக் கொள்ளுகின்றான். செல்வந்தர்கள் மிகுந்தால் அவர்களை மையமாகக் கொண்ட சிறு வட்டங்களும் மிகும். இப்படி மையத்தைச் சுற்றி வாழ்பவர்கள் அடிமைகளையே ஒப்பார்கள். மனித மந்தைகள் அடிவருடும் இயல்பும் பயிற்சியும் பெற்றவர்கள்; சுதந்தரத்தை வாயளவில் கொண்டாடுகிறவர்கள்.

'செல்வந்தர் அமைக்கும் வட்டங்களுக்குள் அமையாத பேரும் பலருண்டு. செல்வந்தருக்கும் மந்தையருக்கும் இடைப்பட்டவர்கள் இவர்கள். செல்வந்தனின் வட்டத்துக்குள் வரவேண்டிய கட்டாயமில்லாத அளவுக்குப் பணவசதியுடையவர் தாங்களாகவே வட்டம் அமைத்து ஏழைகளை அதற்குள் இழுக்கும் அளவுக்கு வசதி இல்லாதவர். இந்த நடுத்தர வகுப்பினரிடையேதான் பெரும்பாலும் சமுதாயத்தை வளர்க்கின்ற கலைகள், அறிவு, ஒழுக்கம் முதலியவை குடிகொள்ளுகின்றன. இவர்கள்தாம் சுதந்தரத்தையும் காப்பாற்ற முடியும். இவர்கள்தாம் குடிமக்கள் என்று அழைக்கப்படத் தகுதிவாய்ந்தவர்கள். இவர்களது செல்வாக்குக் குறைவது நாட்டுக்கு நல்லதன்று. சிறு கொடுங்கோலர்கள் தங்கள் விருப்பங்களைத் தம் மந்தைமூலமாகச் சாதித்துக்கொள்ளப் பார்ப்பர். மந்தை எழுப்பும் கூச்சலில் நடுத்தர வர்க்கத்தினரின் குரல் அமுங்கிப்போக வாய்ப்பு உண்டு. நடுத்தர வர்க்கத்தினர் அரசனது அதிகாரங்களையும் சலுகைகளையும் காப்பாற்றுவதில் ஆர்வம் காட்டுகின்றனர். அது ஒரு சிறந்த பணி என்பது என் கருத்து; திருப்பணி என்றே கூறுவேன். சுதந்தரம் புனிதமானது என்று நான் கூறுவதும் இதனால்தான்.

'நடுத்தர வர்க்கத்தின்மீது சிறு கொடுங்கோலர் ஆதிக்கம் செலுத்துவதை அரசன் தடுக்கமுடியும். அவன் செல்வந்தக் கொடுங்கோலர்களின் அதிகாரங்களைப் பிரித்துக் குறைக்கின்றான். நடுத்தர வர்க்கம் ஒரு நகரம் என வைத்துக்கொள்ளுவோம். செல்வந்தர்கள் அதை முற்றுகையிட்டுப் பிடிக்க முற்படும் எதிரிகள். அரசன் அந்த நகரத்தைக் காப்பாற்ற வெளியிலிருந்து வரும் உதவியாளனாவான். முற்றுகையாளர் அந்த உதவியாளனின் பலத்தைக் கண்டு அஞ்சி நகரவாசிகளுக்குப் பல போலியான திட்டங்களை நிறைவேற்றுவதாக வாக்களித்து அவர்களை ஏமாற்றப் பார்க்கின்றனர். நகரவாசிகளை வஞ்சகமாய்ப் புகழ்ந்து வெற்றி முழக்கங்கள் பல செய்கின்றனர்; வேடிக்கைகள் காட்டி மகிழ்விக்க முயல்கின்றனர்; சலுகைகள் தருவதாக வாக்களிக்கின்றனர். முதலில் அரசனை விரட்டிவிட வேண்டும். அதுதான்

அவர்கள் நோக்கம். அதன் பின்னர்க் கோட்டைச்சுவரைத் தகர்ப்பது எளிது. அப்புறம் அவர்கள் இஷ்டத்துக்கு எதுவும் செய்துகொள்ளலாம். ஹாலந்து, ஜினோவா, வெனிஸ் இவ்விடங்களில் இன்று நிலைமை இதுதான். ஏழைகளைச் சட்டங்கள் அடக்குகின்றன. சட்டங்கள் பணக்காரர் கைகளிலே அடக்கம்.

'இக்காரணங்களுக்காகத்தான் நான் முடியரசை ஆதரிக்கின்றேன்; அதைத் தெய்விகமாய்ப் போற்றுகின்றேன். இந்தப் பூமியிலே மக்கள் யாரையாவது தெய்வத்து அடுத்தபடியாய்க் கொண்டாடுவது சரியென்றால் அஃது அரசனாக இருக்கட்டும்— இறைவனால் அபிஷேகம் பண்ணப்பட்டு மக்களுக்காகச் செயல்படும் மன்னனைக் கொண்டாடுவது தகுதியே. அமைதிக் காலமாயினும் போர்க்காலமாயினும் அவனது அதிகாரம் குறைந்தால் அது சுதந்தரத்தைப் பாதிக்கும். இப்பொழுது நமது நாட்டிலே சுதந்தரம், நாட்டுப்பற்று, பிரித்தானியம் அது இது என்று வெற்று முழக்கங்கள் அதிகமாகி வருகின்றன. இதனால் பல கெடுதிகள் நேர்ந்துவிட்டன. இந்த நிலைமையை மாற்ற உண்மையான சுதந்தர பக்தர்கள் முன்வரவேண்டும். சுதந்தர ஆதரவாளர்களாகத் தங்களைக் காட்டிக்கொள்ள முயல்கின்ற பல போலிகளை நான் அறிவேன். அவர்கள் எல்லோரும் இயல்பிலே, தங்கள் குடும்ப வாழ்க்கையிலே கொடுங்கோலர்களாக இருப்பதையும் கண்டிருக்கிறேன்.'

என் பேச்சுச் சூடேறிக்கொண்டே போயிற்று. வீட்டுக்காரர் இந்த நீண்ட பேச்சின் நடுவே பலமுறை குறுக்கிட்டுப் பார்த்தார். நான் விடவில்லை. நிறுத்தாமல், குரலையும் உயர்த்தி மேலே மேலே பேசிக்கொண்டே போனேன். அளவுமீறித்தான் போய்விட்டது. ஒரு வழியாய் நான் நிறுத்தியதும் அவர் உத்தரவு போட்டுவிட்டார்!

'நீர் நம்ம பாதிரியா? ஜெசூட்டுச் சாமியாரா? காரன்வால் நிலக்கரிச் சுரங்கத்துமேல் ஆணை — நீர் உடனே இந்த வீட்டை விட்டுக் கிளம்பிவிடும், அல்லது என் பேர் உல்கின்ஸன் இல்லை.'

நான் பண்புகெட்டதனமாய் நடந்துகொண்டதை நன்றாய் உணர்ந்திருந்தேன். மன்னிப்புக் கேட்டேன்.

''என்னய்யா மன்னிப்பு? நீர் ஆயிரம் தடவை மன்னிப்புக் கேட்டாலும் நடக்காது. சுதந்தரம் கூடாது என்கிறீர். பணம் சேகரிக்கக் கூடாது என்கிறீர். உடனே வீட்டைவிட்டு வெளியே போம், ஐயா.'

நான் சமாதானம்செய்யப் புகுந்தேன். அதற்குள் வெளியே யாரோ கதவைத் தட்டிய ஓசை கேட்டது. வேலையாள் ஒருவன் நின்றிருந்தான். அவனைப் பார்த்ததும் பெண்களிடமிருந்து பெருங் கூப்பாடு கிளம்பியது.

'போச்சே, காரியம் கெட்டுப்போச்சே. எசமானும் எசமானி யம்மாவும் வந்துட்டாங்களே.'

இப்பொழுது எங்களுக்கு விஷயம் புரியலாயிற்று. வீட்டுக்காரர் என்று நாங்கள் நினைத்திருந்த அந்த மனிதர் அந்த மாளிகையின் சமையல்காரர்! வீட்டு எசமானர் வெளியூர் போயிருந்தபோது இவர் இப்படி வேஷம் போட்டு, கொஞ்ச நாளாவது ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்து பார்ப்போமே என்ற ஆசையில் அப்படி நடித் திருக்கிறார். நாட்டுப்புறக் கனவான்களும் சிறு பிரபுக்களும் வழக்கமாகப் பேசுகின்ற அரசியல் கருத்துகளை அவர் வெளி யிட்டார்.

எஜமானரும் அவர் மனைவியும் உள்ளே நுழைந்ததும் சமையற் காரர் பட்ட சங்கடம் கொஞ்சநஞ்சமன்று. அந்தக் கனவானுக்கும் அம்மையாருக்கும் விஷயம் பிடிபடலாயிற்று. ஆச்சரியம் ஒருபுறம், கோபம் ஒரு புறம். வீட்டிற்கு வந்திருந்த விருந்தினர்களைக் கண்டு சந்தோஷமும் உண்டாயிற்று. என்னையும் நடிகரையும் மரியாதை யோடு வரவேற்றனர்.

'கனவான்களே, நானும் எனது மனைவியும் உங்களை அன்போடு வரவேற்கின்றோம். எதிர்பாராத சந்தர்ப்பமாயினும் உங்கள் வரவு எங்களுக்கு மகிழ்ச்சியையே தருகின்றது.'

எதிர்பாராத சந்தர்ப்பம் என்பதில் எனக்கும் சந்தேகம் கிடையாது. என்ன பதில் சொல்வது என்று தோன்றாமல் நின்று கொண்டிருந்தேன். அப்பொழுது வீட்டினுள் நுழைந்த இன்னொரு நபரைப் பார்த்ததும் நான் முற்றிலும் பேச்சிழந்து ஊமையாகி விட்டேன். அது என் ஜார்ஜுவுக்கு ஒழுங்குசெய்யப்பட்டுப் பின் குழம்பிப்போன பெண் செல்வி அரபெல்லா உல்மாட்டு!

என்னைப் பார்த்ததுதான் தாமதம், ஓடிவந்து என் கரங்களுக் குள் புகுந்துகொண்டாள்.

'ஐயா, என்ன ஆச்சரியம்! எதிர்பாராத மகிழ்ச்சி! டாக்டர் பிரிம்ரோஸுவை அதிதியாக அடைந்ததில் என் மாமாவும் அத்தையும் ஆனந்தக்கடலில் மூழ்கிப்போவார்கள்!' என் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் பெரியவரும் அவர் மனைவி யாரும் மிகுந்த மரியாதையுடன் மீண்டுமொருமுறை வரவேற்புத்

தெரிவித்தனர். நான் எப்படி அந்த வீட்டு அதிதியானேன் என்று விவரம் கேட்டுச் சிரித்துகொண்டார்கள். சமையற்காரரை வேலை நீக்கம் செய்துவிடலாமெனப் பேச்சு எழுந்தது. நான் அவருக்காகப் பரிந்து பேசினேன். அதன்பேரில் அந்த யோசனையைக் கைவிட்டு விட்டனர்.

திரு. ஆர்னால்டும்—அவர் பெயர் அது—அவர் மனைவியும் நான் சில நாள்கள் அங்கே தங்கிச் செல்லவேண்டுமென விரும்பினர். செல்வி உல்மாட்டும் அவ்வாறே கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள். அவள் என்னிடம் பயிற்சிபெற்ற மாணவி. அவள் மன வளர்ச்சியை உருவாக்கியதில் எனக்கும் பங்கு உண்டு. அவர்கள் விருப்பப்படியே தங்கிப் போகலாமென இணங்கினேன்.

தங்குவதற்கு மிக நேர்த்தியாக அலங்கரிக்கப்பட்ட அறையொன்றைக் கொடுத்தார்கள். மறுநாள் விடிந்ததும் செல்வி உல்மாட்டு வந்து அவளுடன் உலாவ என்னைத் தோட்டத்திற்கு அழைத்தாள். தோட்டமும் நவீன பாணியில் அமைந்திருந்தது. சிறிது நேரம் தோட்டச் சிறப்புகளைக் காட்டிப் பேசிக்கொண்டிருந்தாள். பின் ஒரு சாதாரணப் பாவனையை வலிந்து முகத்தில் வரவழைத்துக்கொண்டு தற்செயலாகக் கேட்பதுபோல என் மகனிடமிருந்து எனக்குக் கடிதம் வருகின்றதா என விசாரித்தாள்.

'அதை ஏம்மா கேட்கிறாய். அவன் போய் மூணு வருஷமாகிறது. இன்னும் ஒரு கடிதம்கூட வரவில்லை. அவனது நண்பர்களுக்கும் அவன் எழுதவில்லை. அவன் எங்கேயிருக்கிறான் என்றே தெரியாது. அவனை எப்போது பார்ப்பேனோ? அந்த மகிழ்ச்சி எனக்குக் கிடைக்குமா என்ற சந்தேகமும் மனத்தை அலைக்கழிக்கிறது. வேக்குபீல்டில் கணப்பங்கரையில் நாம் கழித்த காலங்கள் எவ்வளவு இன்பகரமானது. அந்த மகிழ்ச்சியான நாள்கள் இனித் திரும்ப வருமா? என் சின்னக் குடும்பம் பிரிந்துகொண்டே போகின்றது. அம்மா, வறுமை மட்டுமன்று அவமானமும் எனக்கு வந்து சேர்ந்துவிட்டது.'

அவள் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தது. அவள் உணர்ச்சி வசப்படுவதைப் பார்க்க முடியாமல், நான் துயரக் கதையை மேற்கொண்டு விவரிக்கவில்லை. காலத்தினால் அவள் காதல் மாறவில்லை என்பதை நான் கண்டுகொண்டேன். இதற்கிடையில் அவளுக்குப் பல மாப்பிள்ளைகள் வந்தும் அவள் அவர்களை எல்லாம் நிராகரித்துவிட்டாள் என்பதையும் தெரிந்துகொண்டேன்.

கொடிவீட்டுக்கு அழைத்துச் சென்று காட்டினாள். அவர்கள் அங்கே செய்திருந்த புதுமைகளை விளக்கினாள். ஆனால், எதைப் பற்றிப் பேசினாலும் எதையாவது சாக்கிட்டுச் சுற்றிவளைத்தாவது என் மகனைப்பற்றிய பேச்சையும் புகுத்திக்கொண்டிருந்தாள்.

முற்பகல் அப்படிக் கழிந்தது. மதிய உணவுக்கு மணியடித்ததும் உணவு அறைக்குச் சென்றோம். அங்கே நாடகக் கம்பெனி மானேஜரும் வந்திருந்தார். டிக்கட் விற்பனை விஷயமாய் வந்திருந்தார். அன்று மாலை 'நோன்பு மங்கை' என்ற நாடகத்தை நடத்தவிருக்கிறார்களாம். ஒரு புதிய இளைஞன் கதாநாயகன் ஹொரேஷியாவாக நடிக்கிறானாம். அவன் இதற்கு முன்னால் மேடையேறியதே இல்லையாயினும் மிக அற்புதமாக நடிக்கிறானாம். அவர் அந்த இளைஞனை மிகவும் புகழ்ந்தார்.

'நடிப்பு என்பது சொல்லிக்கொடுத்துவரும் கலையன்று. அதற்கென்று பிறக்க வேண்டும். அந்த இளைஞன் அப்படிப் பிறந்தவன். அவன் குரலும் உடற்கட்டும் பாவனைகளும் பிரமாதம். அவனை மிஞ்சிய நடிகனை நான் இதுநாள்வரை பார்த்ததில்லை. எங்கள் பயணத்தின்போது அவனைச் சந்திக்க நேர்ந்தது. குழுவில் சேர்த்துக்கொண்டோம்.'

மானேஜரின் வருணனை, நாடகம் பார்க்கும் ஆர்வத்தைத் தூண்டியது என்று சொல்ல வேண்டியதில்லை. பெண்களுக்குத் தான் ஆசை அதிகம். நானும் உடன்போக வேண்டுமென்றும் வற்புறுத்தி அழைக்கத் தொடங்கிவிட்டனர். ஒரு தானியக் களஞ்சியத்தைக் கொட்டகையாக்கியிருந்தனர். ஊரின் பெரும் பிரமுகர்களுடன் நான் சென்றேன். எனவே, எங்களை மிகவும் மரியாதையாக வரவேற்று அழைத்துச் சென்று முன் இருக்கைகளில் உட்காரவைத்தனர்.

ஹொரேஷியோ வரும் காட்சிக்காக ஆவலுடன் காத்திருந்தோம். அவனும் மேடைக்கு வந்தான். அவனைக் கண்டதும், எனக்கு ஏற்பட்ட உணர்ச்சிகளை அத்தகைய அனுபவம் பெற்ற பெற்றோர்கள் மாத்திரமே உணர்ந்துகொள்ள முடியும். ஹொரேஷியோவாக வந்தவன் வேறு யாருமில்லை. துர்ப்பாக்கியம் பிடித்த என் மகனேதான். அவன் நடிக்கத் தொடங்கிச் சில விநாடிகள் கழிந்ததும் அவன் பார்வை முன் இருக்கைகளில் அமர்ந்திருந்த செல்வி உல்மாட்டுமீதும் என்மீதும் விழுந்தது. எங்களை அடையாளம் தெரிந்ததும் பேச்சுமூச்சிழந்து மேடையிலே கல்லாய்ச் சமைந்துபோனான். புது நடிகன் பயப்படுகிறான் போலிருக்கிறது என்றெண்ணிய பிற நடிகர்கள் திரையின் பின்னாலிருந்து அவனை

ஊக்குவித்தனர். அவனுக்கோ கண்ணீர் வெள்ளமாய்ப் பெருகிற்று. எப்படி நடிப்பான்? மேடையைவிட்டு உள்ளே சென்றான்.

என் உணர்ச்சிகளை என்னால் விவரிக்க இயலவில்லை. ஒன்றன்பின் ஒன்றாய் அலையலையாய் எண்ணங்கள் வந்து மோதின. மனம் பின்னோக்கிப் பாய்ந்தது. இதற்குள் செல்வி உல்மாட்டு, முகமெல்லாம் வெளிறியவளாய், நடுங்கும் குரலில் தன்னை விட்டுக்கு அழைத்துச் செல்லுமாறு என்னிடம் கேட்டாள்.

வீடு வந்து சேர்ந்தோம். எங்கள் முகங்களைப் பார்த்த திரு. ஆர்னால்டு விஷயமென்னவென்று விசாரித்தார். புதுநடிகன் என் மகன்தான் என்று தெரிவித்தேன். அவர் உடனே அவனை அழைத்து வருவதற்காகக் கோச்சுவண்டியை அனுப்பினார். ஜார்ஜூவால் நடிக்க இயலாததைக் கண்டு அவன் இடத்தில் வேறு ஆளைப் போட்டு நாடகத்தை நடத்தினார்கள்.

ஜார்ஜூ வந்து சேர்ந்ததும் திரு. ஆர்னால்டு அவனைப் பரிவுடன் வரவேற்றார். அவனைக் கண்டதும் என்னையும் மீறி நான் பூரிப்படைந்தேன். அவனைக் கண்டிப்பதுபோல் பாசாங்கு செய்யவெல்லாம் எனக்கு வரவில்லை. அதிக அக்கறையில்லாதது போல் செல்வி உல்மாட்டு அவனை வரவேற்றாள். ஆனால், அது ஜாக்கிரதையுடன் கையாளப்பட்ட பாவனை என்று எனக்குத் தோன்றியது. அவள் மனத்திலுண்டான உணர்ச்சிக் கொந்தளிப்பு இன்னும் அடங்கவில்லை. அர்த்தமில்லாமல் அவள் பேசிய சொற்கள் அவளது பேருவகையைக் காட்டின. அப்படி அர்த்த மில்லாமல் பேசியதற்காக அவளே சிறிது சத்தமாகச் சிரித்தாள். நடுநடுவே கண்ணாடியில் தன்னைப் பார்த்துக்கொண்டாள். முகத்தில் மகிழ்ச்சி பரவியது. தன் அதியற்புத அழகிலே அவளுக்குத் திருப்தி ஏற்பட்டதுபோலும். அடிக்கடி கேள்விகள் கேட்டாள். ஆனால், பதில்களைக் கவனமாகக் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

20

[புதுமை தேடி நாடோடியாய்த் திரிந்த ஒரு தத்துவசாலியின் கதை]

இரவுச் சாப்பாடு முடிந்ததும் திருமதி ஆர்னால்டு, ஜார்ஜுவின் சாமான்களை எடுத்துவர ஆளனுப்புவதாகச் சொன்னார். அதற்கெல்லாம் இப்போது என்ன அவசரம் என்று அவன் தடுத்தான். அந்த அம்மாளோ வற்புறுத்திச் சொன்னாள். அப்பொழுது ஜார்ஜு உள்ளதைச் சொல்ல வேண்டியதாயிற்று. எடுத்துக் கொண்டு வருவதற்கு அவனிடம் சாமான்களே இல்லை! அவன் உடைமைகள் எல்லாம் ஒரு தடியும் ஒரு பையும்தான்.

'மகனே, நீ என்னைவிட்டுத் தரித்திரனாகப் பிரிந்தாய். தரித்திரனாகவே வந்து சேர்ந்திருக்கிறாய். ஆனால், உலக அனுபவம் நிறையப் பெற்றிருப்பாய் அல்லவா?'

'ஆம், அப்பா! செல்வமே நோக்கமாகக் கொண்டு அதைத் தேடிப்போனால், அது வந்துசேராதுபோலும். நாளடைவில் அந்த நோக்கத்தையே நான் கைவிட்டுவிட்டேன்.'

திருமதி ஆர்னால்டு கேட்டார்:

'உங்கள் அனுபவங்களை எல்லாம் கேட்கச் சுவையாக இருக்குமென்று தோன்றுகிறது. உங்களைப் பற்றி அரபெல்லா எனக்கு நிறையச் சொல்லியிருக்கிறாள். நீங்கள் வீட்டைவிட்டுக் கிளம்பிய பின் நிகழ்ந்தவற்றையெல்லாம் சொன்னால் பொழுது நன்றாகப் போகும்.'

'அம்மணி, அதைச் சொல்ல எனக்கு விருப்பமே. கேட்கவும் சுவையாகத்தான் இருக்கும் என்று கருதுகிறேன். நான் செய்தது அதிகமில்லை. ஆனால், பார்த்ததோ ஏராளம். நான் என் குடும்பத்தைப் பிரியவேண்டிய காரணம் உங்களுக்குத் தெரிந்திருக்கும். ஆனால், அதை ஒரு பெரிய கஷ்டமாக நான் நினைக்கவில்லை; மனந்தளரவுமில்லை. எதிர்காலத்தைப்பற்றி எனக்குத் திடமான நம்பிக்கை இருந்தது. அதிர்ஷ்டச் சக்கரம் சுழலும்போது கீழே போன பகுதி மேலே வந்துதானே ஆகவேண்டும்? எனவே,

மனஉறுதியுடன் நான் இலண்டனை நோக்கிப் பயணமானேன். அருந்திறன்கள் சங்கமிக்கும் தலம் அது. அங்கே ஆற்றல்கள் மதிப்பிடப்பெற்று அங்கீகாரம் பெறும். திறமான புலமையெனில் புகழும் பரிசும் நிச்சயம் என எண்ணி வீறுநடை போட்டேன். பறவைகள் பாடக் கேட்டு மனம் மகிழ்ந்தேன். மனத்திலே நம்பிக்கை ஒளி சுடர்விட்டது.

'அங்குப் போய்ச் சேர்ந்ததும், அப்பா, நீங்கள் சொல்லியபடி நமது உறவினரைக் கண்டு உங்கள் கடிதத்தை அவரிடம் கொடுத்தேன். அவரும் என்னைப்போல் கஷ்டதசையில்தான் இருந்தார். ஒரு பள்ளியில் துணையாசிரியராகச் சேர்ந்து பணிபுரிவதே எனது அப்போதைய யோசனை. அந்த யோசனையைக் கேட்டுவிட்டு அவர் ஒரு மாதிரியாகச் சிரித்தார். நல்ல வேலையைத்தான் தெரிந்தெடுத்திருக்கிறேன் என்று சொல்லிவிட்டுச் சிரித்தார். அவருக்கு போர்டிங் பள்ளியில் துணையாசிரியராக இருந்த அனுபவம் உண்டாம்.

'நியூகேட் சிறைச்சாலையில் வார்டனாக இருப்பது அதை விட மேல். அதிகாலையில் எழும்பவேண்டும். இரவில் நெடுநேரம் கண்விழிக்க வேண்டும். என் தலைமையாசிரியர் எப்போதும் என்னை மிரட்டிக்கொண்டேயிருந்தார். அவரது தர்மபத்தினிக்கு என்னைக் கண்டாலே ஆகாமல் போய்விட்டது. என் மூஞ்சி அழகாயில்லை என்று அவள் நினைத்தாள் போலிருக்கிறது. பள்ளியில் பயல்கள் தொந்தரவு தாங்கமுடியவில்லை. சற்று மாறுதலாக வெளியே போய் நாலு பேரைப் பார்த்துப் பேசிவிட்டு வரலாமென்றால் அதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. "இந்த வேலைக்கான தகுதிகள் உனக்கு உண்டு என்று நீ நினைக்கக் காரணமென்ன ? முதலில் நான் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லு. அந்த வேலைக்கு உனக்குப் பயிற்சி உண்டா?" '

'இல்லை.'

'அப்படியானால் அந்த வேலைக்கு நீ அருகதை இல்லை.'

'பையன்களுக்குத் தலை சீவிவிடத் தெரியுமா ?'

'தெரியாது.'

'இதுவும் தகுதிக் குறைவு. உனக்கு அம்மை போட்டதுண்டா?'

'இல்லை.'

'தகுதிக்குறைவுதான். ஒரு கட்டிலில் மூன்று பேராக உன்னால் படுக்க முடியுமா?'

'முடியாது.'

'இன்னொரு தகுதிக் குறைவு. உனக்கு வயிறாரச் சாப்பிடத் தெரியுமா?'

'தெரியும்.'

'அப்படியானால் நீ அந்த வேலைக்கு லாயக்கே இல்லையப்பா. அந்த வேலைக்குப் போவதைவிடக் கத்திசெய்கிறவன்கிட்ட அடிமையாப் போகலாம். நான் இப்பொழுது எழுத்துத் தொழிலில் இறங்கியிருக்கிறேன். உனக்கும் நல்ல படிப்பும் முயற்சியும் இருக்கிறது. பேசாமல் எழுத்தாளனாகிவிடு. எழுத்தாளனை வறுமை பீடிக்கிற காலமெல்லாம் இப்பொழுது மாறியிருக்கிறது. அந்தத் தொழிலில் நல்ல வருமானம் இருக்கிறது. எனக்கு இங்கே ஒரு நாற்பது பேரைத் தெரியும். சும்மா சொல்லக்கூடாது, யோக்கியமான மனிதர்கள். ஆனால், மந்தம். எழுத்திலே தீட்சணியம் கிடையாது. ஆனால், எழுத்துத் தொழிலில் இறங்கி நல்ல பேரும் பணமும் சம்பாதித்துவிட்டார்கள். வரலாறு, அரசியல் எது வேண்டுமானாலும் எழுதலாம். உப்புச்சப்பில்லாமல் சலிப்புத் தட்டுகிற மாதிரி எழுதுவது நல்லது. அப்பொழுதுதான் நிறையப் பேர் புகழ்வார்கள். ஒன்று சொல்கிறேன் கேட்டுக்கொள். இவர்களுக்கெல்லாம் சக்கிலியத் தொழிலில் பயிற்சி கொடுத்தால் புதுச்செருப்பு செய்கிற திறமை கைகூடாது. செருப்புத் தைக்கிற வேலை இருக்கே, அதில் தான் கைவரிசையைக் காட்டுவார்கள்.'

'துணையாசிரியர் வேலைக்குத்தான் மதிப்பு இல்லை என்கிறாரே. பின்னே அதிலே சேருவானேன்; நான் எப்பொழுதுமே மிகுந்த ஆர்வத்துடன் பயின்றுவந்த இலக்கியத் துறையிலேயே இறங்கிவிடுவதெனத் தீர்மானித்தேன். இலண்டனில் எழுத்தாளர்கள் கூடும் கிரப்புத் தெருவை நினைத்தாலே எனக்கு மெய்சிலிர்க்கும். டிரைடனும் ஆப்வேயும் விட்டுச்சென்ற அடிச்சுவட்டிலே கால்வைத்து நடக்கப் போகின்றேன் என்றெண்ணிப் பெருமிதம் கொண்டேன். அனைத்துக் கலைகளுக்கும் இலக்கியத் தேவி, தாய் போன்றவள் அல்லவா? அவளைச் சேவிக்கக் கிடைத்தது எனது பாக்கியமே என்று அகமகிழ்ந்தேன்.

'இத்தகைய ஓர் இறுமாப்புடன் எழுத உட்கார்ந்தேன். யாரும் எழுதாத புதுமைகளை—சுட்டிக் காட்டியிராத பெருந் தவறுகளைப்பற்றியெல்லாம் எழுதினேன். இதுவரை ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மைகளுக்கு முரணாகவும் துணிந்து எழுதினேன். அவற்றைத் திறம்படப் புனைந்துரைத்தேன். எல்லாமே

புதிதாகச் சொல்ல விரும்பினேன். புதிது கிடைக்காவிட்டால் புதிதுபோல் தோன்றவைத்தேன். எழுத்துலகம் விழித்துப் பார்க்கும். என்னை எதிர்க்கும் என்று காத்திருந்தேன். முள்ளம் பன்றியின் முட்களைப்போல் முட்களை எல்லாத் திசையிலும் சிலுப்பிக்கொண்டு எதிர்க்கத் தயாராய் நின்றேன்.'

'சபாஷ், எதைப்பற்றியெல்லாம் எழுதினாய்? ஏகபத்தினிக் கொள்கையை மறந்துவிடவில்லையே? சரி, நான் குறுக்கிடக் கூடாது. நீ சொல்லிக்கொண்டு போ. உன் முரண்பாடுகளை வெளி எழுத்துலகம் படித்துவிட்டு என்ன சொல்லிற்று?'

'அப்பா! எழுத்துலகம் எதுவும் சொல்லவில்லை. எதுவுமே சொல்லவில்லை. அவர்கள் எல்லோரும் தங்கள் தங்கள் நண்பர் களின் எழுத்துகளைப் பாராட்டிப் புகழ்வதிலும் எதிரிகளைத் தூற்றுவதிலும் மிக மும்முரமாக முனைந்திருந்தனர். எனக்கு நண்பர்களும் இல்லை; விரோதிகளும் இல்லை. எனவே, என் எழுத்தை யாரும் சட்டைசெய்யவில்லை. அப்படியே ஒதுக்கி விட்டார்கள்.

'அதை நினைத்துப் பொருமிக்கொண்டு ஒரு நாள் ஒரு காப்பிக் கடையில் உட்கார்ந்திருந்தேன். ஒரு நோஞ்சான் மனிதன் என் எதிரில் வந்து உட்கார்ந்தான். சிறிது நேரம் பேசிக்கொண்டிருந் தோம். நான் படித்தவன் என்று அவன் கண்டுகொண்டதும், பலப் பல திட்டங்களைச் சொல்லத் தொடங்கினான். அதிலே ஒன்று பழைய நூலொன்றை உரையுடன் வெளியிடுவது. பணத்துக்கு எங்கே போவது என்று கேட்டேன். நான் எவ்வளவு பணம் எதிர் பார்க்கிறேன் என்று கேட்டதும் நான் ஒரு தொகையைச் சொன் னேன். அவன் பார்வையில் அது மிகக் குறைந்ததாகத் தோன்றி யிருக்கவேண்டும். எனக்கு மேலும் பல யுக்திகள் கூறத் தொடங் கினான்.

' "இதோ பார், நீ பட்டணத்துக்குப் புதுசு. அதன் இயல்பு களை என்னிடம் கற்றுக்கொள். நான் இப்பொழுது சொன்னேனே யோசனைகள், அவை வெறும் திட்டங்கள்தாம். ஆனால், அவற்றைப் பேசிப்பேசியே நான் இந்தப் பன்னிரண்டு ஆண்டு களாக எவ்விதக் குறையுமின்றிப் பிழைப்பு நடத்திவருகின்றேன். நமது வலையில் விழக்கூடிய மனிதர்கள் யாரென்று கேள். சுற்றுப் பயணம் முடித்துவிட்டு வருகின்ற மகாப்பிரபு, ஜமெய்க்காவிலிருந்து வரும் குபேரன், நாட்டுப்புறத்துப் பணக்கார விதவை இவர்களைப் போன்றவர்கள்தாம். அவர்களைப் பக்குவமாகத் தாக்க நாம் சில வழிமுறைகளைக் கையாள வேண்டும். முதலாவது, அவர்

களைக் கண்மண் தெரியாமல் புகழவேண்டும். அவர்கள் மனம் நெகிழ்ந்து போயிருக்கிற சமயம் பார்த்துச் சந்தா என்று தொடங்க வேண்டும். அது கிடைத்துவிட்டதும், நாம் எழுதப்போகின்ற நூலை அவர்கள் பேரிலே அர்ப்பணம் செய்யப் போகின்றோம் என்று சொல்லி இன்னொரு தொகை கறக்கவேண்டும். அது ஆச்சா, அதுக்கப்புறம் அவர்கள் குடும்பச்சின்னத்தை அதிலே பொறிக்க வேணுமாக்கும் என்று சொல்லவேண்டும். அதுக்கு ஒரு தொகை. இப்படியாக அவர்கள் வீண்பெருமையைக் கிளறிக் கொடுத்துக்கொண்டே இருக்கவேணும். நமக்கும் அதுபாட்டுக்குப் பிழைப்பு நடந்துகொண்டே வரும். நினைச்சுப் பாத்தா சிரிப்பாத்தான் வரும். அது வேறு விஷயம்.

''ஆனா, எனக்கு இப்போ இந்தத் தொழிலிலே சில சின்னச் சங்கடங்கள். அதாவது, என் சங்கதி அங்கே இங்கே சில இடங்களில் தெரிஞ்சுபோச்சு. அதனாலே என் முகத்தைக் காட்டக் கொஞ்சம் தயக்கமா இருக்கு. அதனாலே உன் முகத்தை எனக்கு இரவல் கொடு. இத்தாலியிலிருந்து இப்பத்தான் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு பணம் பெருத்த பிரபு ஒருவர் வரவிருக்கார். ஆனா, அவர் வீட்டுக் காவலாளனுக்கு என்னைத் தெரியும்.உள்ளே விடமாட்டான்; விரட்டிவிடுவான். அதனாலே, இந்தப் பிரதியை எடுத்துக்கொண்டு நீபோ. வெற்றி கிடைச்சா ஆளுக்குப் பாதி.'' '

நான் அங்கலாய்த்தேன்:

'ஜார்ஜ், இப்பொழுது இதுதான் கவிஞர்களின் நிலையா? கவித்திறன் தெய்வீகமானது. அவர்களும் இப்படிப் பிச்சை எடுக்க வேண்டிய நிலைக்கு இறங்கியாயிற்றா? தங்கள் கவிதையைக் கயவர்கள்மூலம் பணக்காரரிடத்திலே விற்றுப் பிழைப்பு நடத்து கிறார்களாக்கும்.'

'இல்லையப்பா, நான் சொல்லுகிறது மூணாந்தரக் கவிஞர் களைப்பற்றித்தான். சும்மா எதுகை மோனையோடு வலிந்து செய்யுள் எழுதிக் குவிக்கிறவர்கள் மேதைமை என்றால் அதுக்குத் தக்க பெருமையும் கூடவே இருக்கிறது. அவர்கள் இப்படி இறங்குகிறதில்லை. உண்மைக் கவிஞர்கள் புகழை விரும்புகிறார் கள்; இகழைக் கண்டு அஞ்சுகிறார்கள். ஆனால், புரவலரைத் தேடி ஓடுகிறதில்லை. புரவலரைத் தேடி ஓடுகிறவன் பெரும்பாலும் போஷணைக்குத் தகுதியற்றவனே.

'அப்படி ஓடுகிற அளவுக்கு என் தன்மானமும் இடம்தர வில்லை. ஆனால் பொன் வேண்டா, புகழே போதும் என்று சும்மா

இருக்கிற அளவுக்கு என் பொருளாதாரமும் அமையவில்லை. எனவே, இரண்டுக்கும் நடுவில் ஊதியம் பெற்றுக்கொண்டு எழுதுவது என்ற நிலையை விரும்பினேன். ஆனால், வெறும் ஊதியத்துக்காக எழுதுவதில் மனம் நிறையவில்லை. உழைப்பதும் உண்பதும் என்ற வாழ்க்கை சலிப்புத்தந்தது. என்னுள்ளே என்னையுமறியாமல் புகழாசை ஒளிந்துகொண்டிருந்ததைக் கண்டேன். பணமே நோக்கமாகக் கண்டதையும் எழுத என்னால் இயலவுமில்லை. மனம் லயித்து ஊறி இலக்கியம் படைக்கும் தொழில் ஒன்றில்தான் இன்பம் இருந்ததாகத் தோன்றியது.

'அவ்வாறே சில கட்டுரைகள் எழுதவும் எழுதினேன். அவை சில மாதாந்தர, வாராந்தரப் பத்திரிகைகளில் வெளியாயின. ஆனால், மற்றச் சாதாரணச் சரக்குகளிடையே அவற்றில் ஒன்றாக அச்சேறி யாருடைய கவனத்தையும் ஈர்க்காதே போயின. எனது எளிய சரள நடையையும், ஒழுங்கிசைவுடன் ஒலித்த வாக்கியங்களையும் எந்த வாசகனும் கவனித்துப் படித்ததாகத் தெரியவில்லை. யாரும் அவற்றைப் பாராட்டவில்லை. ஆயினும், நான் எழுதினேன். ஆனால், நிலைமை மாறவில்லை. என் கட்டுரைகள் வெளியானதே யாருக்கும் தெரியவில்லை வெறிநாய்க்கடி, கீழை நாட்டுக் கதை, சுதந்தர முழக்கம் என்று இம்மாதிரி ஏதேதோ கட்டுரைகளுக்கிடையே என்னுடையவும் புதைந்துபோயின. சாரமில்லாமல், ஆனால் நிறைய வேகமாக எழுதிக் குவிக்கிறவர்களுக்குப் பாராட்டுக் கிடைத்ததையும் கண்டேன். என் மனம் கசந்துபோயிற்று.

'என் நிலையில் இருந்த வேறு சில எழுத்தாளர்களைச் சந்திக்க நேர்ந்து நட்புக்கொண்டேன். நாங்கள் ஒருவரையொருவர் புகழ்ந்துகொண்டோம். எங்களுக்காக இரங்கிக் கொண்டோம். புகழ் பெற்றுவிட்ட மற்ற எழுத்தாளர்களின் படைப்பிலே குற்றம் கண்டோம். பிற எழுத்தாளர்களைப் புகழ நாவெழும்பவே மறுத்தது. இப்படிப் பேசிப்பேசியே திருப்தியடைந்தேன். எழுதுவதை நிறுத்திவிட்டேன். படிப்பதில்கூட மனம் செல்லவில்லை. எழுத்துத் தொழிலில் புகுந்த பின்னர், பிற எழுத்தாளர்களின் புலமையையும் புகழையும் கண்டு நான் வயிறெரியப் பிடித்துக்கொண்டதுதான் மிச்சம்.

'இம்மாதிரி வயிறெரிந்துகொண்டு நான் ஒரு நாள் மாலை தூய ஜேம்ஸ் பார்க்கில் ஒரு பெஞ்சியில் உட்கார்ந்திருந்தேன். அப்பொழுது உயர்மட்டத்து வாலிபனொருவன் என்னை நோக்கி வந்தான். கல்லூரியில் நல்ல பழக்கம். சற்றுத் தயங்கியவாறே முகமன் பரிமாறிக்கொண்டோம். என் கசங்கிய உடைகளைக்

கண்டு அவனுக்கு வெறுப்புத்தட்டுகிறதோ என்று எனக்கொரு சந்தேகம். ஆனால், அப்படியெல்லாம் இல்லை. நெடுந் தாரன்ஹில் நல்ல மனசுடையவன்தான்...'

'யாரது, ஜார்ஜு? யாரென்று சொன்னாய்? அது நமது நிலப் பிரபுவாகத்தானிருக்கவேண்டும்?' அதற்குள் திருமதி ஆர்னால்டும் கேட்டாள்.

'தாரன்ஹில் பிராந்தியத்தில்தான் நீங்கள் இருக்கின்றீர்களா? அவர் எங்கள் குடும்ப நண்பர். நெடுநாள் பழக்கம். சீக்கிரத்தில் இங்கேயும் வரவிருக்கிறார்.' ஜார்ஜு கதையைத் தொடர்ந்தான்.

'முதல் வேலையாக அவன் தனதுஉடைகளை எனக்குஅளித்து, பழையபடி கௌரவமாகத் தோற்றமளிக்கச் செய்தான். பாதி நண்பன், பாதிச் சேவகன் என்ற முறையில் நான் அவன் மாளிகையில் வசிக்கலானேன். அவனோடு மேஜையில் அமர்ந்து சாப்பிடலாம். ஏல விற்பனைச் சமயத்தில் நான் அவனருகில் இருக்க வேண்டும். அவனை ஓவியம் வரைந்தால் நான் அவன் பக்கத்திலிருந்து உற்சாகப்படுத்தவேண்டும். சாரட்டுவண்டியில் அவனுக்குத் துணையாகப் போகவேண்டும். மொத்தத்தில் அவனுக்குத் தமாஷ் காட்டிக்கொண்டு அவனோடு திரியவேண்டும். இதுபோக மாளிகையிலும் இன்னதென்றில்லாமல் பல வேலைகள் இருந்தன. கனமான பொருள்களைத் தூக்க ஒரு கை கொடுக்கவேண்டும். சமையற்காரனின் குழந்தைகளுக்கும் ஞானத் தகப்பனாகச் சடங்கிலே நிற்கவேண்டும். குறிப்பறிந்து சில்லறைப் பணிகள் புரியவேண்டும். பாடச் சொன்னால் பாடவேண்டும். சிரித்த முகமாய்ப் பணிவாய் வளைய வரவேண்டும்.

'இப்படிச் சில நாள் கழிந்தது. அப்பொழுது எனக்குப் போட்டியாக அங்கே ஒருவன் வந்து சேர்ந்தான். இந்த வேலைக்கென்றே பிறந்தவன், போங்கள்! என் போஷகனின் இதயத்தை ஒரு நொடியில் கவர்ந்துவிட்டான். முந்தி, கப்பலில் வேலைசெய்தவனாம். அவன் அம்மா ஒரு பிரபல மகாப்பிரபுவின் மாளிகையிலே துணி துவைத்து வந்தவளாம். அதனாலே அவனுக்குப் பெரும் பிரபுக்களின் வம்சாவளி விவரங்கள் கொஞ்சம் அத்துபடியாகியிருந்தது. அந்த விவரத் துணுக்குகளைச் சேர்ப்பதிலே அவனுக்கு ஒரு கிறுக்கு. அதனாலே ஒருசில மாளிகைகளிலிருந்து அவனை வேலையைவிட்டே நீக்கிவிட்டார்களாம். இந்த மாளிகையிலே கூஜா தூக்கற வேலையை அவன் அப்பழுக்கில்லாமல் செய்தான். முகஸ்துதி பண்றதிலே மகா சாமர்த்தியம் காட்டினான். முகத்துக்கெதிரே யாரையுமே கூசாமல் பாராட்டிப்

பேசறதிலே நிபுணனாயிருந்தான். எனக்கோ கடும்பிரயாசம் எடுத்தாக்கூட அந்தக் கலை கைகூடி வருவதாயில்லை. என் போஷகனின் குறைகளைத்தான் நான் நாள்தோறும் கூடஇருந்து பார்த்துக்கொண்டே யிருக்கிறேனே. அப்புறம் எனக்கு எப்படி அவனைப் புகழவரும்? ஆனால், என் பிரபுவுக்கோ புகழாரம் சூடிக் கொள்ளும் ஆசை மிகுதியாக இருந்தது. என் போட்டி, அந்த ஆசையைக் குறைவில்லாமல் பூர்த்தி செய்துவந்தான். இனி எனக்கு இங்கே கதை ஓடாது. வேலையை அவனிடம் விட்டுவிட்டு நான் வேறு வேலை பார்த்துக்கொள்ள வேண்டியது என்று நினைக்கத் தொடங்கிய சமயத்தில் பிரபுவுக்கு ஒரு பிரச்சினை வந்துசேர்ந்தது. ஒரு பெண்ணிடம் தவறாய் நடந்துகொண்டிருப்பான் போலிருக் கிறது. அவள் அண்ணனோடு மற்போர் செய்யவேண்டியதாயிற்று. எனக்காக நீ யுத்தம் பண்ணு என்றான். எனக்கு வெகு உற்சாகம். அப்பா, நான் செய்தது உங்களுக்கு உடன்பாடில்லை என்று உங்கள் முகபாவனையிலிருந்தே தெரிகிறது. ஆனால், நண்பன் என்ற முறையில் நான் அதற்குச் சம்மதித்துப் போர்புரிந்து வென்றும் விட்டேன். ஆனால், அவள் பத்தினியொன்றுமில்லையாம். அண்ணன் என்பவன் அவளை வைத்து மிரட்டிப் பிழைக்கிற ஒரு மோசடிக்காரனாம். ஜெயித்த பிறகுதான் தெரியவந்தது.

'தாரன்ஹில் மிகுந்த சந்தோஷமடைந்து நன்றி கூறினான். எனக்கு ஏதாவது தகுந்த கைம்மாறு செய்ய விரும்புவதாகச் சொன்னான். ஆனால், அந்தச் சமயத்தில் அவன் எதிர்பாராத விதமாக உடனே இலண்டன் புறப்பட வேண்டியதாகிவிட்டதால், இரண்டு பிரமுகர்களுக்குச் சிபார்சுக் கடிதங்கள் மாத்திரம் கொடுத் தான். ஒன்று, அவனது மாமா ஸர் வில்லியம் தாரன்ஹில்லுக்கு- மற்றது, உயர்ந்த அரசாங்க உத்தியோகம் வகிக்கும் வேறொரு பிரபுவுக்கு.

'நான் முதலில் ஸர் தாரன்ஹில்லிடம் சென்றேன். அவர் ஒரு தர்மிஷ்டர் என்று கேள்வி. அவரது வேலையாள்கள் என்னைச் சிரித்தமுகமாய் வரவேற்றார்கள். வேலையாள்களின் முக பாவனைகளிலிருந்தே எஜமானர்களின் உதாரகுணத்தை ஓரளவு எடைபோட்டுவிட முடியும். மிக அழகான மாளிகை அது. அலங்கார அறையொன்றில் உட்கார்ந்ததுமே ஸர் வில்லியம் பிரபு வந்துவிட்டார். கடிதத்தைக் கொடுத்தேன். படித்துவிட்டுச் சிறிது நேரம் மௌனமாகவே இருந்தார். பிறகு பேசத்தொடங்கினார்.

'என் தமக்கை மகன் உங்களைப்பற்றி மிகப் பலமாகச் சிபார்சு செய்திருக்கிறான். அதனால் நீங்கள் அவனுக்கு முதலில் பெரிய உதவி செய்திருக்கவேண்டும். அவனுக்குச் செய்திருக்கக்கூடிய உதவியையும்கூட என்னால் யூகிக்க முடிகிறது. அவனுக்காக

நீங்கள் மற்போர் செய்திருப்பீர்கள். மற்போர் என்பது இப்பொழுது சட்டப்படி மிகப் பெரிய குற்றம் என்பது உங்களுக்குத் தெரியாதா? இந்தச் சட்ட மீறலுக்காக நான் உங்களுக்குப் பரிசு தர வேண்டுமோ? அப்படி என் மருமகன் என்னிடம் எதிர்பார்ப்பதை நான் ஊக்குவிக்க முடியாது. நியாயப்படி நான் உங்களுக்குத் தண்டனை தரவேண்டியது. உங்களுக்கு உதவிசெய்ய மறுப்பதே நான் உங்களுக்குத் தரும் தண்டனையாக இருக்கட்டும். அதன் மூலம் நீங்கள் உங்கள் குற்றத்தை நினைத்து வருந்தவும் வாய்ப்பாக இருக்கும்.'

' ''தர்மிஷ்டர்தான்.'' நான் சொல்லிக்கொண்டு வெளியே வந்தேன். அடுத்த பிரபுவிடம் கிளம்பினேன். பிரபுக்களின் வாசல்களை ஏழைகள் மொய்க்கிறார்கள். இங்கேயும் பெருங் கூட்டம் இருந்தது. பல்வேறு விண்ணப்பங்களைப் பொய்யோ மெய்யோ—எழுதி வைத்துக்கொண்டு காத்துக்கிடந்தனர். உள்ளே நுழைவது சாதாரண காரியமாயில்லை. என் அனைத்து ஆஸ்தியில் பாதியை வேலையாளுக்குக் கைக்கூலியாகக் கொடுத்தேன். அதன் பின் என் கடிதம் அவரது முன்பார்வைக்காக அனுப்பிவைக்கப் பட்டது. நான் ஒரு பிரம்மாண்டமான அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டேன். அலங்காரமோ ஆடம்பரமாய் இருந்தது. பொருத்தமான ஓவியங்கள் தங்கமுலாம் சட்டங்களோடு ஆங்காங்கே மாட்டப்பட்டிருந்தன. தட்டுமுட்டுகள் ஏராளமாய், செல்வத்தின் அடையாளங்களாய்க் கிடந்தன. எனக்கு ஒரு விதமான பயங்கலந்த பிரமை உண்டாயிற்று. நாட்டின் பாதிச் செல்வம் இவரிடம் அடைபட்டிருக்கிறதோ? பெரிய சர்க்கார் உத்தியோகம் என்றால் இப்படித்தான் போலும். இவற்றை வைத்து ஆள்கிறவர்கள் எவ்வளவு பெரிய மனிதராக இருக்க வேண்டும். மாமேதையாக இருக்கவேண்டும். அவர் அறிவை நாம் ஆழங்காண இயலாது என்றெல்லாம் என் சிந்தனை ஓடியது. அப்பொழுது யாரோ வரும் காலடியோசை கேட்டது. ஆ! அந்த மாபெரும் மேதைப் பிரபு வந்துவிட்டார் — இல்லை — இது ஒரு பணிப்பெண். மேலும் காலடிச் சத்தம். இது கண்டிப்பாக அவராகத்தானிருக்க வேண்டும். ஊஹூம்—இது அவர் சோக்ரா. கடைசியாகப் பிரபு தோன்றினார்.'

' ''இந்தக் கடிதம் கொண்டுவந்தது நீங்களா?'' நான் குனிந்து பணிவாக ''ஆம் ஐயா'' என்றேன். ''கடிதத்தைப் படித்தேன். விஷயம்........''

'அதற்குள் வேலையாள் ஒருவன் ஒரு சீட்டை அவரிடம் நீட்டினான். அவர் உடனே பேசாமல் அறையைவிட்டு வெளியே

சென்றார். நான் என் மகிழ்ச்சியை நிதானமாக அசைபோட்டுக் கொண்டிருந்தேன்.

'அப்புறம் அவர் வரவேயில்லை. பிரபு கோச்சில் ஏறி வெளியே போகப் போகிறார் என்று ஒரு வேலையாள் சொன்னான். நான் உடனே வாசலுக்கு ஓடினேன். ஏற்கெனவே நாலைந்து பேர் அங்கு அவரிடம் ஏதேதோ விண்ணப்பித்துக் கொண்டிருந்தனர். நானும் அவர்களோடு சேர்ந்துகொண்டேன். ஆனால், பிரபு வேகமாகப் பெரிய எட்டுகளாக வைத்து நடந்து கோச்சு வண்டிப் படியண்டை போய்விட்டார். ''எனக்கு என்ன பதில்?'' என்று நான் குரலை உயர்த்திக் கேட்டேன். அவர் அதற்குள் கோச்சினுள் ஏறிவிட்டார். என்னைப் பார்த்தும் பாராமலும் ஏதோ முணு முணுத்தார். பாதி காதில் விழுந்தது. மறுபாதி கோச்சுச் சக்கரங் கள் எழுப்பிய கடகடவோசையில் கலந்து நின்றது. அவரது மகத்தான குரலைக் கேட்கும் ஆவலுடன் கழுத்தை நீட்டியவாறே சிறிது நேரம் அங்கேயே நின்றேன். அப்புறம் நான் திரும்பிப் பார்த்தபோது பிரபுவின் வாசலில் என்னைத் தவிர வேறு யாரும் இல்லை.

'இப்படியாக நான் சகித்த அவமானங்களுக்குக் கணக்கு வழக்கில்லை. என் பொறுமை தீர்ந்துபோகும் கட்டம் வந்து விட்டது. குப்பைத்தொட்டியில் வீசி எறியப்பட வேண்டிய பொருளாக இயற்கை என்னை நிர்ணயித்து வைத்திருக்கிறதோ? உயிரை மாய்த்துக்கொண்டால்தான் என்ன? என்னிடம் இன்னு மோர் அரை கினியா மீதமிருந்தது. அதை இந்த மாதிரி வீணாக்கிவிடக்கூடாது. அதைக்கொண்டு நன்றாகச் சாப்பிட்டு விடவேண்டும். பின்வருவது வரட்டும் என்று எண்ணினேன்.

'அப்படியே சாப்பிடுவதற்கு நல்ல இடமாகப் பார்த்துப் போய்க்கொண்டிருக்கையில், திரு. கிறிஸ்பியின் அலுவலகம் வர வேற்கிறாற்போல் திறந்த கோலமாய் இருந்ததைக் கண்டதும் உள்ளே நுழையத் தோன்றிவிட்டது. திரு. கிறிஸ்பியின் விளம் பரப்படி, இந்த வேலைக்குக் குடிமக்கள் எவரும் விண்ணப்பிக்கலாம். தெரிந்தெடுக்கப்பட்டால் ஆண்டுக்கு முப்பது பவுன்கள் கிடைக்கு மாம். ஆனால் ஒன்று, பதிலாகச் சுதந்தரத்தைக் கொடுத்து விட வேண்டும். ஆம், அமெரிக்காவுக்கு அடிமைகளை ஏற்றுமதி செய்வதுதான் திரு. கிறிஸ்பியின் வேலை. அப்பாடா, இனிப் பயம் இல்லை. ஒரு வேலை கிடைத்துவிட்டதே போதும். கவலையை யொழித்தேன். அவரது கிடங்குக்குள் நுழைந்தேன். துறவியின் சிற்றறையைப்போல் காட்சி அளித்த அந்த இருண்டவிடத்திலே என்னைப்போலப் பல ஏழைகள் கிறிஸ்பியின் வரவை எதிர்நோக்கிப்

பொறுமையிழந்தவர்களாய்க் காத்துக்கிடந்தனர். வாழ்க்கை கசந்து வெறுத்துப் போனவர்கள்—அதிர்ஷ்ட தேவதையின் அருள் கிடைக்காமையால் பன்முறை ஏமாந்து மனஞ்சலித்துப் போனவர்கள். அப்பொழுது திரு. கிறிஸ்பி வருவதற்கான அடையாளங்கள் தோன்றலாயின. எல்லோரும் பேச்சுமூச்சை அடக்கி மரியாதையாக ஒடுங்கினோம். அவரும் வந்தார்.

'அந்தக் கும்பலினின்று நான் வேறுபட்டவனாக இருந்ததை அவர் உடனே அடையாளம் கண்டுகொண்டார். சிறிது நேரம் என்னைக் கவனித்துப் பார்த்தார். நின்று என்னிடம் சில கேள்விகள் கேட்டு விசாரித்தார். இப்படி அவர் என்னைத் தனிப்படுத்தியதில் நான் மயங்கிப்போனேன். கடந்த ஒரு மாதத்தில் என்னிடம் சிரித்துப் பேசிய முதல் மனிதர் அவர்தாம்.

'என் தகுதிகளைப்பற்றி விசாரணை செய்தார். முடிவில் எந்த வேலை செய்யவும் எனக்குத் தகுதிகள் இருப்பதாகத் தாம் கருதுவதாகத் தெரிவித்தார். ஏதாவது நல்ல வேலையாகத் தர வேண்டுமே என்று யோசிப்பதுபோல் பட்டது. நெற்றியை விரலால் தட்டிக்கொண்டு ஞாபகப்படுத்த முயன்றார். பின் திடீர் நினைவுக்கு வந்துவிட்ட பாவனையோடு அமெரிக்காவில் பென்சில்வேனியா ஆட்சிமன்றத்திலிருந்து சிக்ஷா சிவப்பிந்தியரோடு தொடர்புகொள்ள ஒரு தூதரகம் அமைக்க ஏற்பாடாகிறதாம். அவரது செல்வாக்கைப் பயன்படுத்தி அங்கே எனக்குச் செயலாளர் வேலைநியமனம் செய்துவைப்பாராம். மனுஷன் பொய் பேசுகிறான் என்று என் மனசிலே நிச்சயமாய்ப் பட்டது. இருந்தாலும் அவர் பேச்சிலே தொனித்த ஒரு மகத்துவம் என்னை மயக்கிற்று. வெறும் வாக்குறுதிகூட ஓர் உவப்பையளித்தது. விளைவு என் அரை கினியிலே பாதியை அவரிடம் கொடுத்தேன். அவரது முப்பதாயிரம் பவுன்களோடு அதுவும் போய்ச் சேர்ந்துகொண்டது. மறுபாதியை எடுத்துக்கொண்டு அடுத்திருந்த மதுக்கடைக்குச் சென்றேன். சந்தோஷமாகப் பொழுதைப் போக்கத் தீர்மானித்தேன். திரு. கிறிஸ்பியைவிட நிச்சயமாக என்னால் அதிகச் சந்தோஷமாக இருக்க முடியும்.

'மதுக்கடை வாசலில் எனக்குப் பழக்கமான ஒருவர் நின்றுகொண்டிருந்தார். ஒரு கப்பல் கேப்டன். மது அருந்த அவரை அழைத்தேன், வந்தார். என் கதையெல்லாம் அவரிடம் சொன்னேன். திரு. கிறிஸ்பி இங்கிருந்து அழைத்துச் செல்கின்றவர்களை அமெரிக்கத் தோட்டங்களிலே அடிமைகளாக விற்கிறாராம். நானும் அவர் பேச்சுக்கு இணங்காமல் வந்துவிட்டது நல்லதுதான் என்றார்.'

அப்புறம் எனக்கு யோசனைகள் சொன்னார்:

' "அப்படித் தொலைதூரங்கள் போய்ப் பிழைக்காவிட்டால் என்ன? கௌரவமாக—கனவான்போல்—வாழ்க்கை நடத்த நல்ல வழியிருக்கிறது. நான் சொல்லுகிறேன், கேள். நாளைக்கு என் கப்பல் ஆம்ஸ்டர்டாமுக்குக் கிளம்புகிறது. அதில் ஏறி வா. சின்னப் பயணம். அங்குப் போய் இறங்கியதும் டச்சுக்காரருக்கு ஆங்கிலம் சொல்லிக் கொடுக்கத் தொடங்க வேண்டியதுதான். மளமளவென்று மாணவர்கள் சேர்வார்கள். ஏராளமாய்ப் பணம் கிடைக்கும். உனக்கு ஆங்கிலம் நன்றாக வருமல்லவா?" '

'அது வரும். ஆனால், டச்சுக்காரர்கள் ஆங்கிலம் படிப்பதில் ஆர்வம் காட்டுவார்களா?' என்று என் சந்தேகத்தை வெளியிட்டேன்.

' "அவர்களுக்கு ஆங்கிலமென்றால் ஒரே கிறுக்குத்தான்" ' என்று உறுதிமொழி தந்தார்.

'எனவே ஹாலந்து தேசத்து டச்சுக்காரருக்கு ஆங்கிலம் கற்றுக்கொடுப்பதற்காக மறுநாள் கப்பலில் ஏறினேன். என்னிடமிருந்த சாமான்களில் பாதியை விற்றுக் கப்பல் கட்டணம் கட்டினேன். காற்றுப் பொருத்தமாய் வீசிற்று. பயணம் சீக்கிரம் முடிந்தது. நான் இறங்கி ஆம்ஸ்டர்டாமின் பெரிய வீதிகளில் ஆகாயத்தினின்றிழிந்து வந்த அந்நியன்போன்ற உணர்வுடன் நடக்கலானேன். தொழிலை உடனே தொடங்கினால் நல்லது, நேரத்தை வீணாக்காமல்; சற்று வசதியாகவிருந்த ஓரிருவருடன் பேச்சுக் கொடுத்தேன். ஆனால், நாங்கள் ஒருவரையொருவர் புரிந்துகொள்ள முடியவில்லை. டச்சுக்காரனுக்கு நான் ஆங்கிலம் கற்றுக்கொடுக்க வேண்டுமானால் முதலில் அவன் எனக்கு டச்சுக் கற்றுக்கொடுக்க வேண்டும் என்ற விஷயம் எனக்கு அந்த விநாடியில்தான் உதித்தது. இந்தச் சின்ன விஷயத்தை எப்படி மறந்தேன் என்று எனக்கு வியப்பாயிருந்தது. மறந்ததென்னவோ உண்மை.

'ஆக, திட்டம் தவிடுபொடியாயிற்று. பழையபடி இங்கிலாந்து திரும்ப வேண்டியதுதான். அப்பொழுது அயர்லாந்து மாணவனொருவன் லொவேன் நகரத்திலிருந்து திரும்பிக்கொண்டிருந்தான். அவனைச் சந்தித்துப் பழகினேன். பேச்சு இலக்கியத்துக்குத் திரும்பியது. இந்த இலக்கியம்பற்றிப் பேசத் தொடங்கிவிட்டால் என் கதியற்ற நிலையை நான் மறந்து மெய்மறந்துவிடுகிறேன். அவன் சொன்னான்: லொவேன் பல்கலைக் கழகத்தில் கிரேக்கமொழி தெரிந்தவர் ஒருவர்கூடக் கிடையப

தாம். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. லொவேன் சென்று கிரேக்குக் கற்றுக்கொடுத்துப் பிழைக்கலாமே என்று தோன்றியது. அவனும் அந்த யோசனையை ஊக்குவித்தான். பணம் சம்பாதிப்பதுபற்றிச் சில வழிமுறைகளும் சொல்லிக்கொடுத்தான்.

'மறுநாள் லொவேனுக்குப் பயணமானேன். என் பொருள்கள் ஒவ்வொன்றாய்க் குறையத் தொடங்கின, ஈசோப்பின் ரொட்டிப் பொட்டலம் குறைந்ததுபோல. பல்கலைக்கழகம் போய்ச் சேர்ந்தேன். கீழ்மட்டத்திலிருந்து தொடங்கக் கூடாது. நேரடியாக முதல்வரைப் பிடித்துவிடவேண்டுமென்று எண்ணிக் கொண்டு, ஆசிரியர்களைத் தவிர்த்துவிட்டு நேரே பிரின்ஸிபாலிடம் சென்றேன். தகுதிகள் அனைத்தையும் ஒன்றுவிடாமல் சொல்லிவிடவேண்டும் என்று நினைத்துக்கொண்டேன். பேச அனுமதி கிடைத்ததும் உள்ளே சென்று விஷயத்தைத் தெரிவித்தேன். அந்தப் பல்கலைக்கழகத்தில் கிரேக்கு ஞானம் உள்ளவர்கள் இல்லையாதலால் நான் அந்தக் குறையைப் போக்க இயலும் என்றேன். அவருக்கு என் திறமையில் நம்பிக்கை இல்லாதது போல் தோன்றியது. அவர் தெரிந்தெடுக்கும் கிரேக்க இலக்கியத்தின் ஒரு பகுதியை இலத்தீனில் மொழிபெயர்த்துக் காட்ட முடியும் என்று சொன்னதும் அவருக்குச் சிறிது நம்பிக்கை பிறந்தது. ஆனால் அவர் சொன்னார்:

' "இதோ பார் இளைஞனே, நான் கிரேக்குப் படித்ததே இல்லை. அதனால் ஒன்றும் 'கெட்டுப் போய்விடவில்லையே. டாக்டர் பட்டத்துடன் அங்கியும் தொப்பியுமாகத்தான் இருக்கிறேன். கிரேக்க ஞானமே இல்லாமல் ஆண்டுக்குப் பத்தாயிரம் பிளாரின்கள் சம்பாதிக்கிறேன். கிரேக்குத்தெரியாததால் எனக்குச் சாப்பாடு இறங்கமாட்டேனென்கிறதா, இல்லையே? எனக்குக் கிரேக்குத் தெரியவில்லை. அது தெரிந்து என்ன ஆகப்போகிறது என்பதும் தெரியவில்லை?" '

'இங்கிலாந்தைவிட்டு வெகு தொலைவில் அப்பொழுது நான் இருந்தேன். இனி வீடு திரும்புவதைவிட முன்னேறிச் செல்வதே உசிதம் என்று பட்டது. எனக்குச் சிறிது சங்கீத ஞானம் உண்டு; குரலும் மோசம் கிடையாது. பொழுதுபோக்குக்குப் பாடி மகிழ்ந்திருக்கிறேன். இனி, அதையே கொண்டு பிழைத்தால் என்ன? பிளாந்தர் நாட்டுவழியாய் நடந்து, அங்குள்ள விவசாயிகள் நடுவே பாடினேன். பிரெஞ்சுநாட்டுக்கு வந்தேன். மகிழ்ச்சியுடன் காணப்பட்ட ஏழைகளுக்குப் பாடினேன். ஏழைகள்தாம் பெரும்பாலும் மகிழ்ச்சியாயிருக்கின்றனர் என்பதையும் கண்டேன். இரவு நேரங்களில் குடியானவர்கள் வீடுகளுக்குச் சென்று உல்லாசமான

இராகங்கள் பாடுவேன். இரவு தங்க இடம் கிடைப்பதோடு மறு நாள் காலை உணவும் கிடைக்கும். நாகரிக மக்களிடமும் பாட முயன்றேன். ஆனால், அவர்கள் என் சங்கீதத்தை இரசிக்கவில்லை. பாட்டைக் கேட்டுவிட்டு எந்தவிதக் கைம்மாறும் செய்யாமல் அவர்கள் பாட்டுக்கு இருந்துகொள்வார்கள். இது எனக்கு வியப்பாக இருந்தது. ஏனெனில், நான் பொழுதுபோக்குக்குப் பாடின காலங்களில் என் இசையைக் கேட்டு நாகரிக மக்கள், குறிப்பாகப் பெண்மணிகள் ரசித்துப் பாராட்டுவார்கள். இப்பொழுது அதுவே பிழைப்பாகிவிட்டதால் அஃது அலட்சியமாகத் தோன்றியது போலும். அரும் வரங்கள்கூடப் பிழைப்புக்காகப் பயன்படுத்தப் படும்பொழுது குறைவாக மதிப்பிடப்படுவதற்கு இஃது ஓர் உதாரணம்.

'இப்படியாக நாட்டுவளம் காணும் நோக்கமாய்ப் பயணம் செய்துகொண்டே போனேன். பாரிசு நகரத்தில் நாலைந்து நாள் சுற்றினேன். பணம்படைத்த அந்நியரைக் கண்டால் அந்த நகரத்துவாசிகளுக்கு மிகவும் பிடிக்கிறது. அறிவு படைத்த அந்நியரை அஃது அவ்வாறு கொண்டாடுவதாகத் தெரியவில்லை. எனக்கோ இரண்டும் கிடையாது. அது என்னைக் கொண்டாடவு மில்லை. பணமே அதற்குக் குறியாக இருந்தது. பாரிசைவிட்டுக் கிளம்பலாம் என்று நினைத்த வேளையில் நமது உறவினரை—நீங்கள் எனக்குக் கடிதம் தந்தீர்களே—அவரை அங்கு ஒரு பெரிய வீதியிலே சந்தித்தேன். அப்படி எதிர்பாராமல் சந்தித்ததில் எங்களிருவருக்கும் மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டது. நான் பாரிசு வந்த கதையைக் கேட்டார். அவர் இப்போது அங்கேதான் தொழில் செய்கிறாராம். பழம்பொருள் வியாபாரமாம். ஓவியங் கள், மெடல்கள், சிலைகள் இப்படி நானாவிதக் கலைப்பொருள் களைச் சேகரிக்கிறது; அவற்றைப் பணக்காரரிடத்திலே விற்கிறது. இலண்டன்வாசியும் புதுப்பணக்காரருமான ஒருவருக்காக அப் போது சில பொருள்கள் சேகரித்துக்கொண்டிருந்தார். எனக்கு ஒரே ஆச்சரியமாய்ப் போயிற்று. இந்த மாதிரித் தொழிலிலே எல்லாம் தமக்குக் கொஞ்சமும் ஈடுபாடு கிடையாது என்று அவர் சொல்லியிருந்தது எனக்கு நன்றாய் நினைவிருந்தது எனவே, எனது ஐயங்களை அவரிடம் தெரிவித்தேன். இந்தத் தொழிலை அவர் எப்படித் தொடங்கப் போயிற்று? கலைப் பொருள்களை விமர்சித்துத் தீர்ப்புக்கூறும் திறன் அவருக்கு எப்படி வந்தது? அது என்ன பெரிய கஷ்டம் என்று அவர் சிரித்தார். இரண்டு விதிகளை விடாமல் கடைப்பிடித்து வரவேண்டுமாம். அது போதுமாம். ஒன்று, ஓவியத்தைப் பார்த்துவிட்டு "ஓவியர் இன்னும் கொஞ்சம் சிரமம் எடுத்திருந்தால் படம் இன்னும் சிறப்பாக அமைந்திருக்கும் என்று சொல்லவேண்டியது. மற்றது,

எப்போதும் பீதரோ பெருங்கினோவா என்ற ஓவியரின் படங்களை புகழ்ந்துகொண்டிருக்க வேண்டியது. முன்னே இலண்டனில் எழுத்தாளனாய் ஜொலிக்கும் கலையை உனக்குச் சொல்லிக் கொடுத்தேனல்லவா ? பாரிசில் ஓவியத்தொழில் நடத்துவதும் சற்றேறக்குறைய அதைப்போன்றதுதான். உனக்கும் சொல்லித் தருகிறேன்.'' '

'எது எப்படியானால் என்ன ? எனக்குப் பிழைப்புக்கு ஒரு வழி திறக்க வேண்டும். அதுதானே முக்கியம்! அவரோடு சென்றேன். அவர் உதவியால் ஆடைகளைச் சீர் செய்து கொண்டேன்.

'படஏல விற்பனை நடக்கும் இடத்துக்கு அழைத்துச்சென்றார். ஆங்கிலேயர் படங்களைப் பெரும்பாலும் அங்குதான் வாங்குகிற தாம். நாகரிக முன்னணியில் நின்ற பலரோடு அவர் சகஜமாக உரையாடியதைக் கண்டேன். ஓவியங்களையும், கலைப்பொருள் களையும் பார்த்துவிட்டு அபிப்பிராயம் தெரிவிக்கும்படி பலரும் அவரை அணுகிக் கேட்டார்கள். அவரது ரசனையின்பேரில் அவர்களுக்கு நம்பிக்கைபோலும். ஆனால், அந்தச் சந்தர்ப் பங்களில் அவர் என்னைத் தனியே அழைத்துப்போவார். என்னுடைய கருத்தைக் கேட்டுக்கொள்ளுவார். பிறகு அவர் களிடம் போய் யோசனை பண்ணுவதுபோல் சிறிது நேரம் முகத்தை வைத்திருப்பார் தோளைக் குலுக்குவார். ''முக்கியமான விஷயம் பாருங்கள்; அவசரமாக முடிவு எடுத்துவிடக் கூடாது'' என்று பீடிகை போட்டுப் பேசிக்கொண்டு போவார். படத்தைப்பற்றி வாய்க்கு வந்ததைச் சொல்லுவார். ''வர்ணம் சரியில்லை'' என் பார். தூரிகை அங்குக் கிடந்தால் துணிந்து எடுப்பார். அருகி லிருக்கும் வண்ணத்திலே முக்குவார். ஓவியத்தில் அங்கும் இங்கும் இலேசாய்த் தீட்டுவார். சற்றுப் பின்னால் தள்ளிநின்று பார்த் துக்கொண்டே ''இப்பொழுது வர்ணச் சேர்க்கை பரவாயில்லை, பாருங்கள்'' என்பார்.

'பாரிசில் அவருக்கு அப்போதைக்கு வேலை முடிந்துவிட் டது. போகும்முன் எனக்கு வேலைக்காகப் பல இடங்களில் சிபார்சு செய்து வைத்திருந்தார். அவற்றிலே ஒன்று பணக்கார இளைஞர் ஐரோப்பியச் சுற்றுப்பயணம் மேற்கொண்டால் அவர் களுக்குத் துணையாகவும் ஆசிரியனாகவும் அவர்களுடன் போவது என்பது. அப்படிப்பட்ட வேலைவாய்ப்பு ஒன்று எனக்கு வந்தது. பையன் பெரிய பணக்காரன். அவன் மாமனுக்கு மேற்கிந்தியத் தீவிலே பெருத்த சம்பாத்தியமாம். அதுக்கெல்லாம் இவன்தான் வாரிசு. பாரிசில் அவனுக்கொரு பாதுகாவலரும் வழக்கறிஞரும்

இருந்தார்கள். பணத்தை நிருவகிக்க அவனுக்குப் பயிற்சி கொடுத்து வந்தார்கள். ஐரோப்பாவிலே சுற்றுப் பயணம் செய்து முடிப்பது நாகரிக உலகத்துக்குள் புகுவதன் முதல்படி. படித்தவன் ஒருவன் துணையாகப் போகவேண்டும். அதற்காக நான் நியமிக்கப்பட்டேன். உத்தியோகத்தின் பெயர் ஆசான் என்று லும், பையனின் இஷ்டப்படி நடந்துகொள்ளுவது நல்லது என்று என்னிடம் சொல்லப்பட்டது.

'பணவிவகாரங்களில் பையன் குருவைப் பன்மடங்குகள் மிஞ்சிவிட்ட சிஷ்யன். பேராசையை இவ்வளவு அல்லது அவ்வளவு என்று அளவிட்டு முடியாது. போகிற வழியிலே அவன் என்னிடம் கேட்கும் கேள்விகள் எல்லாம் சிக்கனமான வழிகள் எவை ? எப்படி எப்படிச் செலவழித்தால் எவ்வளவு எவ்வளவு மிச்சம் பண்ணலாம் என்பதைத் தெரிந்துகொள்வதற்காகவே இருந்தன. நாட்டுவளம் பார்ப்பதெல்லாம் இரண்டாம் பட்சம். சுருக்குவழி எது என்று கேட்டு, சுருக்கு வழிகளிலேயே சுற்றினோம். இங்கே மலிவாக வாங்கி அங்கே இலண்டனிலே இலாபத்துக்கு விற்கக் கூடிய பொருள்கள் எவையெவை என்றும் கண்டுபிடித்து வந்தான். செலவில்லாமல் பார்க்கக்கூடிய வேடிக்கைக் காட்சிகள் என்றால் உடனே சம்மதித்துவிடுவான். கட்டணம் வசூலித்து நடக்கும் பொழுதுபோக்குக் காட்சிகளானால் ''அது நன்றாக இருக்காது என்று கேள்வி. வேண்டாம்'' என்பான். பையிலிருந்து சில்லறை எடுத்துக் கொடுப்பதானால் ''ஹூம், பிரயாணம் என்றால் என்ன செலவாகிறது'' என்று பெருமூச்சுடன் முனகிக்கொண்டுதான் கொடுப்பான். இத்தனைக்கும் அவனுக்கு வயது இருபத்தொன்று!

'லெஃஹான் தீவுக்கு வந்தோம். துறைமுகத்திலே நின்று கப்பல்களைப் பார்த்துக்கொண்டு இருந்தோம். அங்கிருந்து கடல் வழியாக இங்கிலாந்து திரும்ப என்ன செலவாகும் என்று விசாரித்தான். நிலவழிச் செலவைவிட அது சற்றே குறைவு என்று தெரிவிக்கப்பட்டது. அவ்வளவுதான்! கடல்வழியாகப் புறப்படத் தீர்மானித்துவிட்டான். என் சம்பளத்தைக் கொடுத்துத் தீர்த்து விட்டு ஒரு வேலையாளை அமர்த்திக்கொண்டான். கடல்வழியாய் இலண்டனுக்குப் புறப்பட்டுவிட்டான்.

'மீண்டும் பரந்த உலகில் நின்றேன். அது எனக்குப் பழக்கமாகியிருந்தது. இங்கேயெல்லாம் என் சங்கீதம் எடுபடாது. சாதாரண விவசாயிக்குக்கூட இங்கே என்னைவிட அதிக சங்கீத ஞானம் உண்டு. விவாதம் புரிவதில் நான் இப்பொழுது சற்றுத் திறமையை வளர்த்துக்கொண்டிருந்தேன். ஐரோப்பியப் பல்கலைக் கழகங்கள் எல்லாவற்றிலும், மடங்களிலும் வாரத்தில் சில நாள்

களில் தத்துவப்பொருள்கள் குறித்துச் சர்ச்சைகள் நடத்துகிறார்கள். வெளியிலிருந்து வரும் படிப்பாளிகளும் கலந்துகொள்ளலாம். திறமையாகச் சர்ச்சையிட்டால் பரிசு உண்டு. சாப்பாடும் அன்றிரவு தங்கப் படுக்கையும் கிடைக்கும். இப்படியாக இங்கிலாந்து திரும்பும் பயணத்தில் ஐரோப்பியப் பட்டணங்களின் பல பல்கலைக் கழகங்களுக்குச் சென்று வந்தேன். பற்பல சொற்போர்களில் கலந்து கொண்டேன். வாழ்க்கையை, மனிதனைக் கண்டேன்; வாழ்விலும் தாழ்விலும் கண்டேன். நான் கண்ட முடிவுகள் வெகுசிலவே.

'ஏழைகளுக்கு முடியாட்சியும், செல்வந்தருக்குக் குடியாட்சியும் நன்மை பயக்கக்கூடியன. சுதந்தரம் என்பது செல்வத்தின் மறு பெயரே. பெரும்பாலும் எல்லா நாடுகளிலும் நிலைமை இதுதான்.

'மனிதன் சுதந்தரத்தை ஓரளவுதான் மதிக்கின்றான். சமுதாயத்தில் மற்றையோரைத் தன் சித்தத்துக்குப் பணிய வைப்பதில் அவனுக்குச் சம்மதமே.

'அப்பா, இங்கிலாந்து வந்து உங்களைப் பார்த்துவிட்டு மீண்டும் பயணம் கிளம்பவேண்டும் என்று திட்டமிட்டிருந்தேன் வழியில் நாடகக் கம்பெனியில் சேர்ந்திருந்த ஒரு நண்பனைச் சந்திக்க நேர்ந்தது. கோடைக்காலங்களில் ஊரூராய்ச்சென்று நாடகம் போடும் கம்பெனி. நானும் அதில் சேரவேண்டும் என்று விரும்பினார்கள். ஆனால், நாடகம் பார்ப்போரைப்பற்றி எச்சரிக்கவும் தவறவில்லை. அவர்களை இலேசில் திருப்திப்படுத்திவிட முடியாதாம். பத்துத்தலை இராட்சசனைப் போன்றவர்களாம். நடிகன் ரொம்பவும் புத்திசாலியாக இருந்தால்தான் முடியுமாம். நடிப்புக்கலை என்பது ஒரு நாளில் கைவந்துவிடும் கலையல்லவாம். தோளை ஒரு தினுசாகக் குலுக்கத் தெரியவேண்டுமாம். முந்நூறு வருஷமாக அந்த மரபு இருந்துவருகிறதாம். அதை நானும் படித்துக்கொள்ள வேணுமாம். அப்புறம் எனக்கு என்ன வேடம் கொடுக்கலாம் என்று பேச்சு நடந்து முடிவிலே ஹொரோஷியோ வேடம் கொடுத்தார்கள். அப்புறம் உங்களையெல்லாம் பார்த்து விட்டதால் நடிக்காமலேயே நின்றுவிட்டேன்.'

21

[தீயவருக்கிணங்கி அவருடனிணைந்து சிறிது காலம் ஆடி அடங்குதல்]

மேற்கண்ட கதையை ஜார்ஜு ஒரே தடவையில் சொல்லி முடிக்கவில்லை. முதல்நாள் இரவில் தொடங்கியது, விட்டுவிட்டுத் தொடர்ந்து மறுநாள் பிற்பகலில்தான் முடிந்தது. அது முடியவும் திரு. தாரன்ஹில் பரிவாரம் வந்து இறங்கவும் சரியாக இருந்தது. எல்லோரும் வரவேற்றார்கள். இதற்கிடையில் சமையற்காரர்— அவர் இப்பொழுது எனது நண்பர்—எனக்குச் சில சங்கதிகளைக் கிசுகிசுவெனத் தெரிவித்திருந்தார். தாரன்ஹில் பிரபு செல்வி உல்மாட்டுடன் திருமண நோக்கத்தோடு பழகுகிறாராம். ஆர்னால்டு தம்பதிகளுக்கும் அது உடன்பாடாம்.

தாரன்ஹில் என்னையும் ஜார்ஜுவையும் அங்குக் கண்டதும் திடுக்கிட்டதை நான் கவனித்தேன். வியப்புக் காரணமாகத்தான் என்று எண்ணி அதைப் பிரமாதப்படுத்தவில்லை. நாங்கள் முகமன் தெரிவித்தபோது அவரும் இன்முகமாய் பதில் தெரிவித் தார். முகத்தில் கள்ளமொன்றும் இல்லை. அவர் வந்தபின்! வீட்டில் ஆரவாரமும் கலகலப்பும் அதிகமாகியது.

தேநீர் முடிந்ததும் அவர் என்னைத் தனியே அழைத்து என் மகள் சமாச்சாரம் என்னவாயிற்று என்று விசாரித்தார். நான் தேடிப்போனது, தோல்வியுடன் திரும்பியது. எல்லாம் சொல்லக் கேட்டுச் சற்று ஆச்சரியம் கொண்டவர்போல் தோன்றினார். அவர் எங்கள் வீட்டுக்கு அடிக்கடி சென்று என் குடும்பத்தினரைத் தேற்றி வந்தாராம். எல்லோரும் நல்ல சுகத்துடனிருக்கின்றனர் என்றும் செய்தி தெரிவித்தார். அப்புறம் நான் இந்தச் சங்கதியைச் செல்வி உல்மாட்டிடமும் என் மகளிடமும் சொல்லி யிருக்கிறேனா என்று கேட்டார். நான் இன்னும் சொல்லவில்லை என்றதும் என் விவேகத்தைப் பாராட்டினார். இரகசியமாய் வைத்துக்கொள்வதுதான் நல்லது. நமது அவமானத்தை நாமே வெளியில் சொல்லப்படாது. செல்வி லிவி குற்றவாளி என்பதும் இன்னும் நிச்சயமாய்த் தெரியாதே! என்று சொல்லித் தேற்றி னார். அதற்குள் ஒரு வேலையாள் வந்து நாட்டு நடன நிகழ்ச்

சிக்குத் தயாராகும்படி பிரபுவை நினைவுபடுத்தவே, அவர் போய்விட்டார். அவர் என் விவகாரங்களில் காட்டிய அக்கறையும் பரிவும் என் மனசுக்கு இதமாகவிருந்தது.

அவர் செல்வி உல்மாட்டுடன் திருமண நோக்கமாய்ப் பழகுகிறார் என்பது தெளிவாகவே காணக்கிடந்தது. ஆனால், அவள் மனம் எப்படியிருந்தது? மாமன் மாமியாரைத் திருப்திப் படுத்துவதற்காக ஒருவித வேண்டாவெறுப்புடன் அவள் அவரது பிரியத்தை ஏற்றுக்கொள்ளுகிறாள் என்றுதான் எனக்குத் தோன்றியது. என் மகனை அவள் கனிவுடன், ஆசையுடன் நோக்குவதை நான் கவனிக்கத் தவறவில்லை. அவன் இருந்த கோலத்தில் அவள் அவனை இன்னும் சட்டைசெய்வதே பெருத்த ஆச்சரியம்தான். அவளது தனிக் கவனம் என் மகன்மீது செல்வதைத் தாரன்ஹில் கவனிக்காமலிருந்திருக்க முடியாது. அவரும் என் மகன்மீது விசேஷ பிரியத்தைச் சொரியத் தொடங்கினார். அவள் ஜார்ஜுவைக் கவனிக்க, அதன் காரணமாகத் தாரன்ஹில்லும் ஜார்ஜுவைக் கவனிக்க முற்பட்டதாக எனக்குப் பட்டது.

என் மீதும்கூட அவரது பிரியம் அதிகரித்துவிட்டதாகவே தெரிந்தது. அடிக்கடி வந்து பேசினார். என் குடும்பத்துக்கு எந்த உதவியானாலும் செய்யச் சித்தமாகவிருக்கிறாராம். திரு. ஆர்னால்டு விரும்பிக்கொண்டதால் நானும் என் மகனும் அவர் மாளிகையில் ஒரு வாரம் தங்கினோம். நாங்கள் விடைபெற்றுப் புறப்பட்டுக் கொண்டிருந்தபோது தாரன்ஹில் என்னிடம் வந்தார். மகிழ்ச்சியோடு காணப்பட்டார். ஜார்ஜுக்கு ஒரு நல்ல வேலைவாய்ப்பு இருப்பதாகச் சொன்னார். மேற்கிந்தியத் தீவுக்கு அனுப்பப்படும் படையொன்றில் பொறுப்புவாய்ந்த மேல்மட்டப் பதவியொன்று கிடைக்க வாய்ப்பிருப்பதாகவும், முதல் நூறு பவுன்கள் கட்டவேண்டியதிருக்கும் என்றும் சொன்னார்.

'நூறு பவுன்களைப்பற்றி நீங்கள் இப்போது கவலைப்பட வேண்டாம். என் நண்பனுக்கு உதவ முடிந்ததே அதுவே எனக்குப் பெருமகிழ்ச்சி. பணத்தை இப்போதைக்கு நான் கட்டிவிடுகின்றேன். பின்னால் செளகரியம்போல் திருப்பிக்கொடுத்தால் போதும்'

நன்றி சொல்ல எனக்கு வார்த்தைகள் அகப்படவில்லை. நூறு பவுனுக்கும் உடனே பத்திரம் எழுதிக் கொடுத்தேன். பத்திரம் கொடுத்த பின்னும் ஏதோ ஓசியில் வாங்கிவிட்டவன் போல் விடாமல் நன்றி கூறிக்கொண்டே யிருந்தேன்.

பெரிய கமிஷன் பதவியாதலால் ஜார்ஜு காலந்தாழ்த்தாமல் ஆகவேண்டியதைக் கவனிக்க உடனடியாக இலண்டன் புறப்பட வேண்டும் என்று அவர் வற்புறுத்திச் சொன்னார். அவனும் மறுநாள் அதிகாலையிலேயே புறப்பட்டுவிட்டான். ஒரு படை வீரனின் மிடுக்குடன் உற்சாகமாகக் கிளம்பத் தயாரானான். போரின் ஆபத்துகளைப்பற்றி அவன் அஞ்சியதாகத் தெரியவில்லை. எங்களை—செல்வி உல்மாட்டுவைப்—பிரிந்து செல்வதற்காக அவன் அதிகமாகக் கவலை காட்டிக் கொள்ளவில்லை.

எல்லாரிடமும் சொல்லிவிட்டு என்னிடம் விடைபெற வந்த போது நான் வாழ்த்து—அது ஒன்றுதான், அப்போதைக்கு என்னிடம் இருந்தது — கூறிச் சொன்னேன்.

'மகனே, நாட்டுக்காகப் போரிடுவதென்பது மிகவும் உன்னதமான பணி. நமது குடும்பத்து மூதாதையர் பலர் அப்படிச் செய்துள்ளனர். அந்தக் காலத்திலே அரசனைக் கடவுளுக்கு அடுத்தபடியாகக் கருதினர். அரச விசுவாசத்தைவிடவும் சீரியவொழுக்கம் வேறில்லை என்று நம்பினர். நமது மூதாதையர் ஒருவர் இந்தத் திருப்பணியில் உயிரிழந்து வீரமரணமும் எய்தினார். அவர் முடிவு மிகவும் உன்னதமானதே. அந்நிய நாட்டிலே போரிலே மடிந்து அழக் கூட ஆளில்லாமல் நாதியற்றுக் கிடந்தார்கள் என்றெல்லாம் யாரும் எண்ணவேண்டா. அவர்களுக்காக வானத்துப்பனி கண்ணீராய்ச் சொரிந்ததே. போய் வா மகனே' என்று சொல்லியனுப்பினேன்.

மறுநாள் நானும் ஆர்னால்டு தம்பதிகளிடம் விடைபெற்றுக் கொண்டேன். அவர்கள் விருந்தோம்பலுக்கு நன்றி கூறினேன். திரு. தாரன்ஹில் செய்த உதவிகளுக்காக அவரிடமும் நன்றி பகர்ந்துவிட்டு வெளியே வந்தேன். நற்குடிப்பிறப்பினர் நல்லறத்தோடு நடத்திய மகிழ்ச்சிக்களை சொட்டிய அந்தக் கலகலப்பான இல்லத்தைவிட்டு, என் மகளைப்பற்றிய கவலை பீடித்தவனாக நடந்தேன். அவளை இனிப் பார்ப்பேனோ என்ற ஏக்கம் மனத்திலே நிறைந்தது. அவள் குற்றத்தைக் கடவுள் மன்னிக்க வேண்டுமென அவளுக்காக வேண்டிக்கொண்டேன். பலவீனமாக இருந்ததால் ஒரு குதிரை அமர்த்தினேன். எப்பொழுது வீடு சேர்வோம், மனைவியையும் பிள்ளைச் செல்வங்களையும் பார்ப்போம் என்ற ஆவல் மேலோங்கியவனாகப் பயணம் செய்தேன். பொழுது சாய்ந்தபோது வீட்டுக்கு இன்னும் இருபது மைல் தொலைவிலிருந்தது. எனவே, பாதையோரமிருந்த மதுக்கடைச் சத்திரத்தில் இரவைக் கழிக்கத் திட்டமிட்டேன்.

என்னுடன் சேர்ந்து திராட்சை மது அருந்த சத்திரக்காரரையும் அழைத்தேன். சத்திரத்திலே சமையலறைதான் நல்ல விசால

மான அறை. அந்த அறையில் அடுப்பங்கரை நெருப்பினருகே உட்கார்ந்து மது அருந்தியவாறே அரசியல், நாட்டுநடப்பு எல்லாம் பேசிக்கொண்டிருந்தோம். பிரபு தாரன்ஹில்லைப்பற்றியும் பேச்சு வந்தது.

அவரைப்பற்றிச் சத்திரக்காரருக்கு நல்ல அபிப்பிராயமில்லை. பலருடைய வெறுப்புக்கு ஆளாகி வருகிறாராம். பலரது வீடுகளுக்குச் சென்று பழகுகிறது. பின், அந்த வீட்டுப் பெண்களைக் கடத்திச் சென்று இரண்டு மூன்று வாரங்கள் வைத்திருக்கிறது. பிறகு அநாதரவாகத் தெருவில் விட்டுவிடுகிறது. இதுதான் வேலையாம். அவருடைய மாமா பெரும்பிரபு ஸர் வில்லியமோ அதற்கு நேர்மாறாம். தருமதுரையென்று அவர் எல்லோரது அன்புக்கும் புகழுக்கும் பாத்திரமானவராம். ஆனால், அவர் இங்கே அபூர்வமாகத்தான் வருகிறாராம்.

அப்பொழுது சில்லறை மாற்ற, வெளியே சென்றிருந்த சத்திரக்காரரின் மனைவி உள்ளே நுழைந்தாள். அவள் இல்லாத சமயத்தில் அவள் கணவன் என்னோடு பேசிச் சிரித்து மது அருந்திக்கொண்டிருந்ததைக் கண்டதும் அவளுக்கு வெகு கோபம் வந்தது.

'இங்கே நீர் என்ன செய்கிறீர்?'

'உன் நல்வாழ்வைச் சொல்லிக் குடித்துக்கொண்டிருக்கிறேன்!'

'திரு. சிமண்டஸ். இனி என்னால் பொறுக்க முடியாது. நீர் என்னை நடத்துகிற விதம் சரியில்லை. இந்த வீட்டிலே முக்கால் வாசி வேலையை நான் செய்கிறேன். நீர் செய்யவேண்டிய கால் வாசி வேலையும் செய்யப்படாம அப்படியே கிடக்கு. விருந்தாளியோட உக்காந்து மிதக்கற வேலையை மாத்திரம்தான் நீர் சரியாய்ச் செய்கிறீர். காய்ச்சலிலே கிடந்தாக்கூட, மருந்துக்காவது நான் ஒரு மடக்குக் குடிச்சு நீர் கண்டிருக்கீறீரா?'

எனக்கு அவள் கோபத்தின் காரணம் புரிந்துபோயிற்று. உடனே கிண்ணம் ஒன்றை எடுத்து மதுநிரப்பி அவளிடம் கொடுத்தேன். அவள் அதை மரியாதையுடன் வாங்கி என்னை வாழ்த்தி என் கிண்ணத்தைத் தொட்டுக்கொண்டாள்.

'ஐயா, இந்த மதுவுக்காக நான் கோபிச்சதா நீங்க எண்ண வேண்டாம். சத்திரத்து வேலையெல்லாம் இவர் என்னோடே சேர்ந்து சரிவரக் கவனிக்க மாட்டேங்கறார். வாடிக்கைக்காரர் கிட்ட பணம் வசூலிக்கிற வேலையை அவர் செய்யறதே இல்லை.

என்னைவிட்டு வேடிக்கை பார்க்கிறார். இப்பகூட மெத்தையிலே ஒரு சிறு வயசுப் பொண்ணு வந்து தங்கி இருக்கா. அவர் அனாவசியமாகக் குழையறதைப் பாத்தாலே அவகிட்ட பணம் இல்லேன்னு தெரியுது. பணம் கட்டறதுக்குள்ளே இழுத்தடிச்சுத் தாமதம் பண்ணப்போறா. இவர் அவளைக் கொஞ்சம் தட்டிக் கேட்டா என்ன?'

'தட்டி என்ன கேக்கறது? தாமதம் பண்ணறவங்கதான் நிச்சயமாகக் கொடுப்பாங்க' என்றார் சத்திரக்காரர்.

'வந்து ரெண்டு வாரமாச்சு. அவ கையிலே காசு புழங்கி நான் இன்னும் பார்க்கல.'

'மொத்தமாக் குடுப்பா, பாரு.'

'குடுப்பா அஞ்சாறு குடுக்க வச்சாத்தான் குடுப்பா. அதைத் தான் இப்ப செய்யப்போறேன். இன்னிக்கு இராத்திரிக்குள்ளே குடுக்கலன்னா மூட்டைமுடிச்சோடே அடிச்சுப் பத்திடுவேன்.'

'யோசிச்சுச் செய். அவளைப் பாத்தா உயர்குடிப் பெண் பிள்ளைபோலத் தெரியுது. மரியாதைப்பட்டவள் மாதிரி இருக்கா.'

'உயர்குடியுமாச்சு, தாழ்குடியுமாச்சு. அவ உயர்குடின்னா அது அவமட்டிலே. ஹாரோ* பள்ளிக்கூடத்துப் பேரைக் கேட்ட மாத்திரத்திலே அசந்துபோற ஏமாளி இல்லே நான். இப்ப அவளை விரட்டிவிட்டுத்தான் மறுவேலை பார்க்கப் போறேன்.'

சமையலறையிலிருந்தே மெத்தைக்குப் படிக்கட்டு இருந்தது. அவள் அதில் தாவி ஏறி மேலே பாய்ந்தாள். அங்கே போய் அவள் போட்ட கூச்சலும் ஏச்சும் பணம் கிடைக்கவில்லை என்பதை எங்களுக்குத் தெரிவித்தது.

'போடி வெளியிலே. ஊர் சுத்தற தேவடியா போலிருக்கு. இப்ப உன்னை இழுத்து வீசினேன்னா அப்புறம் மூணு மாசத்துக்கு நீ எழுந்திருக்கமாட்டே. காசு பணம் கொடுக்காம மரியாதைப் பட்டவங்க சத்திரத்துக்குள்ளே புகுந்துகிட்டே. தேவடியாத்தனம் தொடங்கறதுக்கு முன்னாடி இடத்தைக் காலிபண்ணு.'

'அம்மா, கொஞ்சம் இரக்கம் காட்டுங்க. ஏற்கெனவே புறக் கணிக்கப்பட்டவ நான். இன்னிக்கு ஒரு ராத்திரி மட்டும் தங்க அனுமதியுங்க. மீதி வேலையை மரணம் முடிச்சுவிடும்.'

* ஹாரோ உயர்குடிப் பிள்ளைகளின் கல்விநிலையம்

ஆ! இது என் ஒலிவியாப்பிள்ளையின் சத்தமில்லையா? படிக் கட்டிலே பறந்து மேலே போனேன். சத்திரக்காரம்மாள் அவள் உச்சிமுடியைப் பிடிச்சு இழுத்து விசிறினாள். சுழன்றுவந்த அந்த அபாக்கியவதி, விரித்த என் கரங்களுக்கிடையே வந்து விழுந்து அணைப்புண்டாள்.

'வாம்மா, என் கண்ணே! அப்பாகிட்ட வந்துட்டியா? பயப் படாதே. போக்கிரிப்பசங்க உன்னைக் கைவிட்டுவிட்டாலும் நான் உன்னைக் கைவிடமாட்டேனம்மா. நீ பத்தாயிரம் குற்றம் பண்ணி யிருந்தாலும் பாதகமில்லை. நான் எல்லாவற்றையும் மறந்துடு வேன்.'

'ஓ, அப்பா!' பல நிமிடங்கள் அவளால் எதுவும் பேச இயல வில்லை.

'அப்பா, நீங்க தெய்வம். உங்க அன்புக்கு நான் தகுதியில்லாதவ. அந்தக் கயவனை நினைச்சாலே எனக்கு ரொம்ப வெறுப்பா இருக்கு. என் மேலேயும் வெறுப்பா இருக்கு. உங்க நல்ல மனசையும் நோகப் பண்ணிட்டேன். என்னை மன்னிக்க உங்களாலே முடியுமா அப்பா?'

'முடியுமம்மா. மனசாரத்தான் சொல்றேன். நீ உன் குற்றத்தை நினைச்சு வருந்துறதுனாலே உனக்கு நிச்சயமா மன்னிப்பு உண்டு. ஒலிவியாக் கண்ணே, நடந்ததை மறந்துவிடு. நாம் இனிப் பழையபடி சந்தோஷமா இருக்கமுடியும்.'

'அது இனி முடியாது. இனி வாழ்க்கை பழையபடி அமையும் என்பதில் எனக்கு நம்பிக்கையில்லை. என் வாழ்க்கையே பாழாகி விட்டதெனத்தான் எனக்குத் தோன்றுகிறது. வெளியில் தலைகாட்ட முடியாதபடி அவமானம். வீட்டிலும் வெட்கத்தோடு தான் நடமாடவேண்டிவரும். என்ன அப்பா, நீங்கள் என்ன இப்படி மெலிந்து வெளிறியிருக்கிறீர்கள்? எனக்காகவா கவலைப் பட்டீர்கள்? நானல்லவா பாவம் செய்தவள். நீங்கள் அதற்காக வருந்தக்கூடாது. நீங்கள் விவேகமாக...'

'பெண்ணே, விவேகம் என்பது...'

'அப்பா! நீங்கள் என்னைப் ''பெண்ணே'' என்று அழைத்து நான் இதுவரை கேட்டதில்லை...' குரல் தழுதழுத்தது. ஆயினும் தொடர்ந்தாள். ''நீங்கள் என்னை இப்படி விட்டேத்தியாக அழைத்தால்...'' '

'மன்னிச்சுவிடு, மகளே, விவேகத்தினால் நிச்சயமாகத் துன்பத்தைத் தவிர்க்கமுடியும் என்று சொல்லவந்தேன். ஆனால், உடனே அன்று...மெதுவாக... நாளடைவில்தான்...'

சத்திரக்காரம்மா வந்து எங்களுக்கு வேறு நல்ல அறை தரட்டுமா என்று கேட்டாள். நாங்கள் சம்மதித்தோம். நாங்கள் இருந்து சாவகாசமாகப் பேச ஏற்றதான ஓர் அறைக்குள் சென்றோம். அப்படிப் பேசிய பிறகு இருவர் மனத்திலும் சற்று அமைதி உண்டாயிற்று.

அவளை இந்த நிலைக்குக் கொணர்ந்த சந்தர்ப்பச் சூழ்நிலை என்ன என்பதை விசாரிக்காமலிருக்க முடியவில்லை. விசாரித்தேன். அவள் சொன்னாள்:

'அப்பா, எங்கள் முதல் சந்திப்பிலேயே அவர் என்னிடம் —என்னிடம் மாத்திரமே — திருமணப் பேச்சு எடுத்தார்!'

'அப்படியா? அத்தனை பெரிய போக்கிரியா! ஆச்சரியமாக இருக்கிறதே. திரு. பருச்செல் கௌரவமான மனிதர் என்று நான் தான் ஏமாளித்தனமாய் நினைத்துவிட்டேன். அதுவும் நமது குடும்பத்தில் ஒருவரைப்போல் பழகிவிட்டு இப்படி அயோக்கியத் தனம் பண்ணுவார் என்று நான் நினைக்கவேயில்லை.'

'அப்பா, நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? என்னை ஏமாற்றியது திரு. பருச்செல் அல்ல; மாறாக, நான் தாரன் ஹில்லிடம் எங்கே ஏமாந்துவிடுவேனோ என்று என்னை அடிக்கடி எச்சரித்துக் கொண்டேயிருந்தார். அவர் என்னிடம் தனியே பேசும்போதெல்லாம் தாரன்ஹில் வஞ்சகமான மனிதரென்றும் நான் உஷாராக இருக்கவேண்டுமென்றும் சொல்லிவந்தார். நான்தான் அவரது புத்திமதியை அலட்சியப்படுத்தினேன். திரு. பருச்செல் சொன்னதைவிடவும் தாரன்ஹில் மோசமானவர் அப்பா!'

'தாரன்ஹில்லா உன்னை ஏமாற்றியவர்!'

'ஆம், அப்பா. அவர்தான் என்னைக் கெடுத்தவர். பட்டணத்துச் சீமாட்டிகள் என்று இரண்டு பேர்களை அறிமுகப் படுத்தினாரே. அவர்கள் இருவரும் மிகவும் கீழ்த்தரமானவர்கள்; சீரழிந்துபோனவர்கள். எங்களை ஏமாற்றி இலண்டனுக்கு அழைத்துச் செல்லத்தான் அவர் அவர்களை நியமித்தது. திரு. பருச்செல் அந்தக் கடிதத்தில் அவர்களிருவரையும்பற்றி வருணித்திருந்தாரே, நினைவிருக்கிறதா? நாம் ஒன்றும் சரியாய்ப் புரிந்துகொள்ளாமல், ஒருவேளை என்னையும் சோபியாவையும்

தான் அப்படியெல்லாம் சொல்லுகிறாரோ என்று தவறாக நினைத்துவிட்டோம். ஆனால், அந்தக் கடிதம் கிடைத்ததுமே அவர்களிருவரும் பயந்துபோய் ஊரைவிட்டுக் கிளம்பிவிட்டார்களே! அவருக்கு என்ன அப்படி ஒரு செல்வாக்கு என்பதுதான் எனக்குப் புதிரா இருக்கு! ஆனா, அவர் நமது நண்பர். நமது நல்வாழ்விலே அக்கறையுள்ளவர் என்பதிலே எனக்குச் சந்தேகமேயில்லையப்பா.'

'ஆச்சரியமாக இருக்கிறதே அம்மா! ஆயினும், முற்றிலும் எதிர்பாராததும் அல்ல. தாரன்ஹில்லுடன் அறிமுகமான நாள் தொட்டே எனக்கு அவனைப்பற்றி நல்ல அபிப்பிராயம் கிடையாது அந்த அபிப்பிராயம் சரியென்று இப்பொழுது ருசுவாகியுள்ளது. ஆனால், அவன் பெரும்பணக்காரன்; ஆள்கட்டு உள்ளவன்; அவனை நாம் என்ன பண்ணமுடியும்? இதனால்தான் நாம் விழிப்பாக இருந்துகொள்ள வேண்டுமென்கிறது. உன் படிப்பும், ஒழுக்கமும், நல்வளர்ப்பும் உன்னை எப்படியம்மா கைவிட்டது? உன்னால் சோதனையை மேற்கொள்ள முடியாமல் போய் விட்டதே!'

'அப்பா, அவரை மகிழ்விக்க வேண்டுமென்பதே என் ஒரே நோக்கமாகவிருந்தது. என்னைப்பற்றி நான் கவலைப்பட்டுக் கொள்ளவேயில்லை. என்னுடைய அந்தக் குணம் அவருக்குச் சௌகரியமாய் அமைந்துவிட்டது. திருமணம் என்று பெயருக்கு ஒரு பாதிரியைக்கொண்டு ஒருவருக்குந் தெரியாமல் ஒரு சடங்கு நடந்தது. அதுமேலே எனக்கு நம்பிக்கையில்லை. அவர் வார்த்தை ஒண்ணுதான் இருக்கு நம்பறதுக்கு....'

'அப்படியானா, அபிஷேகம் பண்ணப்பட்ட குருதான் திருமணம் முடிச்சுவச்சதா?'

'ஆம், அப்பா. ஆனா அந்தக் குருவின் பெயரை வெளியிடுவதில்லையென்று சத்தியம் செய்து கொடுத்திருக்கிறோம்...'

'வா, அம்மா,' என்று அவர் அணைத்துக்கொண்டார். 'வா, உன்னைப் பல்லாயிரம் மடங்கு மகிழ்ச்சியோடு இப்போது வரவேற்கிறேன். நீ இப்பொழுது அவரது மனைவி. மகா பவித்திரமான உறவு அது. மனிதனின் சட்டங்கள்—வைரத்திலே பொறித்த சட்டங்களானாலுங்கூட—அந்த உறவைப் பிரிக்கவே முடியாது.'

'ஐயோ அப்பா. அவரது வண்டவாளங்கள் உங்களுக்குத் தெரியவில்லை. இதற்கு முன்னால் ஏழெட்டுப் பெண்களை இதே

மாதிரி இவருக்குக் கலியாணம் முடிச்சுவச்சிருக்கார். எல்லோரையும் என்னைப்போலவே ஏமாற்றிப் புறக்கணித்துவிட்டார்.'

'அப்படியா! அப்படியானால் அந்தப் பாதிரியைத் தூக்கிலிட வேண்டும். நீ நாளைக்கே அவருக்கு எதிராகச் சாட்சி சொல்ல வேண்டும்.'

'நான் சத்தியம் செய்துகொடுத்திருக்கேனே. அதை மீறலாமா அப்பா?'

'மீறக்கூடாதுதான். அதனாலே சமுதாயத்துக்கு நன்மை ஏற்படுமென்றால்கூட மீறுவது தர்மமில்லைதான். ஏனெனில், நன்மை ஏற்படுமென்பது நிச்சயமில்லை. மீறின குற்றம் குற்றம்தான். நன்மை ஏற்படுவது உறுதியென்றால்கூட அது ஏற்பட்டு முடிகிற வரை இடையேயுள்ள காலப்பகுதி குற்றமுள்ளது. அக் கால கட்டத்தில் நமது செயல்களுக்குப் பொறுப்பேற்கும்படி நாம் அழைக்கப்படலாம் — சரி, நான் குறுக்கே பேசுகிறேன் — நீ தொடர்ந்து சொல்லு, அம்மா!'

'மறுநாள் விடிந்ததுமே அவர் பேச்சில் சிறிதேனும் உண்மையில்லை என்பது எனக்குத் தெரிந்துபோயிற்று. ஏனெனில், அப்பொழுது என்னைப்போல் அவரால் ஏமாற்றப்பட்ட வேறு இரு பெண்களை அவர் எனக்கு அறிமுகம் செய்துவைத்தார். அவர்களுடன் பேசியபோது அவர்கள் பரத்தைத் தொழில் செய்துவருகிறார்கள் என்பது தெரிந்தது. இவருக்கும் அவர்கள் காதலிகளாக இருந்துவருகின்றனர் என்று அறிந்து நான் அவர்கள்மீது மிகுந்த பொறாமை கொண்டேன். நான் அவரை உள்ளன்புடன் நேசித்ததால் அவர் அன்பை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ள எனக்கு இயலவில்லை. ஆனால், சிற்றின்ப வேட்கை என் மானஉணர்ச்சியை மந்தமாக்கிற்று. என் அவமானத்தை மறக்கவேண்டி உடுத்தவும், நடனமாடவும், பேசிச் சிரிக்கவுமாயிருந்தேன். ஆயினும், நான் சந்தோஷமாக இல்லை. ஆடவர் பலர் வந்து தாராளமாக என் அழகைப் புகழ்ந்தனர். அதனால் எனக்கு மேலும் விசனமுண்டாயிற்று. வரவர என் விசனம் அதிகரித்தது. அதைக் கண்டு அவர் என்னை அவமரியாதையாக நடத்தத் தொடங்கினார். ஒருநாள் அவர் தம் நண்பனென்று ஓர் இளைஞனை அழைத்துவந்தார். ஒரு மகாப் பிரபுவின் குமாரனாம். அவனுக்கு இவர் என்னை அளித்துவிடப்போவதாகச் சொன்னார். அதைக் கேள்வியுற்றதும் நான் பட்ட மனவேதனையை உங்களிடம் விவரிக்க இயலாது அப்பா. வெறிபிடித்தவள்போல் அவரிடம் கத்தினேன். பின், நான் வெளியேறிவிடுவதாகச் சொன்னேன். உடனே அவர் தம் பர்ஸை என்னிடம் நீட்டினார். நான் அதை அவர் மேலேயே வீசி

எறிந்தேன். ஆவேசம் பிடித்தவளைப்போல வெளியே நடந்து விட்டேன். வெளியில் வந்த பின்புதான் என் நிலைமை எனக்குப் புரிந்தது. கெட்டுப்போய்த் தெருவில் நிற்கும் பெண். யாரிடம் உதவிக்குப் போவதென்று தெரியாமல் திகைத்தேன்.

'அப்பொழுது ஒரு பயணக் கோச்சுவண்டி வரவே அதில் ஏறினேன். அவ்விடத்தைவிட்டு—அந்தக் கயவன் இருக்குமிடத்தை விட்டு—வெகுதூரம் போய்விட வேண்டுமென்பது மாத்திரமே அப்போதைக்கு என் அவசியத் தேவையாயிருந்தது. அப்படியொரு வெறுப்பு எனக்கு அவர்மேல் உண்டாயிற்று. இங்கே வந்து இறக்கி விட்டார்கள். இந்த இரண்டு வாரங்களும் இந்தம்மாவின் கடுஞ் சொற்களும் எனது பயங்களுமே என்னைவிட்டு நீங்காமல் எனக்குத் துணைபோல் இருந்துவந்தன. அம்மாவோடும், தங்கை தம்பி மாரோடும் கழித்த இன்பமான நாள்களின் நினைவுகள் வந்து மனத்தை உறுத்துகின்றன, அப்பா. அவர்களும் மனவேதனைப் பட்டிருப்பார்கள். ஆனால், என்னுடைய துக்கம்தான் ஆழமானது. குற்றமும் அவமானமும் கலந்த ஒரு பயங்கரமான வேதனை.'

'பொறுமையாயிரு மகளே, காலம் மாறும். படுத்து அமைதி யாகத் தூங்கு. காலையில் வீட்டுக்கு அழைத்துச் செல்லுகின்றேன். அவர்கள் உன்னை அன்பாகவே வரவேற்பார்கள். பாவம் அவள்! அவள் இதயத்தை இது நொறுக்கிவிட்டது. ஆனாலும் ஒலிவியா, அவள் உன்னை நேசிக்கிறாள். இதை மறந்து மன்னித்து விடுவாள்.'

22

[அன்பு எதையும் தாங்கும்!]

மறுநாள் அவளைக் குதிரையின் பின்னாலிருத்தி வீட்டை நோக்கிப் பயணத்தைத் தொடர்ந்தேன். அவள் மனத்தைப் பீடித்திருந்த பயத்தையும் கவலையையும் போக்கும்விதமாய் அவளிடம் பேச்சுக் கொடுத்துக்கொண்டே சவாரி செய்தேன். தாயின் முகத்தில் விழிக்க அவளுக்குத் தைரியம் வருமாறு அவளை ஆயத்தப்படுத்தினேன். நாங்கள் பயணம் செய்த வழி இயற்கையழகால் கொழித்துக் கிடந்தது. தெய்வம் நமக்கு எத்துணைக் கருணை காட்டுகிறது. எவ்வளவு தாராளமாய் இயற்கையழகை வாரி வழங்குகிறது! அவ்வப்பொழுது இயற்கை உற்பாதங்கள் நிகழ்ந்தாலும், அவற்றால் வரும் தீங்கைவிட மனிதன் சகமனிதனுக்கு இழைக்கும் துன்பம்தானே அதிகமாகவுள்ளது?

எது எப்படியானாலும் என் அன்பு மாறவே மாறாது என்று நான் அவளுக்கு உறுதியளித்தேன். அவள் என்னைத் தகப்பனாக மாத்திரமல்லாது ஓர் ஆசானாகவும் பாதுகாவலனாகவும் கருதி நம்பிக்கையுடன் வாழவேண்டுமென்று சொன்னேன். பிறர் தூற்றுவது காதில் வந்து விழுந்தால் பயந்து சோர்ந்துவிடக்கூடாதெனத் தைரியமூட்டினேன். நல்ல நூல்கள் படிக்கும் வழக்கத்தை வற்புறுத்தினேன். குற்றங்களைக் கடிந்துகொள்ளாத அமைதியான இனிமையான துணைகள் அவை. வாழ்க்கை வெறுத்துப்போகின்ற சமயத்தில் அதைச் சகித்துக்கொள்ளும் மனவுறுதியை வளர்க்கின்ற நற்சாதனங்கள் அவை என்றெல்லாம் எடுத்துச்சொல்லிக்கொண்டே வந்தேன்.

நான் வாடகைக்கு அமர்த்தியிருந்த குதிரையைத் திருப்பிக் கொடுக்கவேண்டிய சத்திரம் வந்தது. வீடு இன்னும் ஐந்து மைல் தொலைவிலிருந்தது. ஒலிவியாவுக்கு வீட்டில் வரவேற்பு எப்படியிருக்குமோ? எனவே, அன்றிரவு அவளைச் சத்திரத்தில் விட்டுவிட்டு நான் மாத்திரம் தனியே வீடுசென்று குடும்பத்தினரைத் தயார்ப்படுத்தி வைத்துவிட்டு, மறுநாள் சோபியாவையும் அழைத்துக்கொண்டு வந்து, பின் மூவருமாக வீடு திரும்பலாமென எண்ணினேன். சத்திரம் சேரும்போது இருட்டிவிட்டது. சத்திரக்

காரம்மாவிடம் சொல்லி அவளுக்கு உணவும் தங்க அறையும் ஏற்பாடு செய்துவிட்டு, அவளை முத்தமிட்டு விடைபெற்றுச் சென்றேன்.

இரவு வேளையிலே தனியாக நடந்தது மனசுக்குச் சுகமாயிருந்தது. வீட்டை நெருங்கநெருங்க மகிழ்ச்சி பொங்கிற்று. பறவை சடசடவென்று இறக்கையை அடித்துக்கொண்டு கூட்டை விட்டுக் கிளம்புவதுபோல என் மனம் ஒருவித மகிழ்ச்சிப் பரபரப்போடு என் வீட்டுக் கணப்பங்கரைக்குப் போயிற்று. பிள்ளைகளிடமும் அவளிடமும் பேச வாஞ்சைமொழிகள் மனத்திலே உருவாயின. அவர்கள் என்னை வரவேற்கும் காட்சி மனக்கண் முன்னால் விரிந்தது. மனைவியின் மென்மையான தழுவலை உடலிலே உணர்ந்தேன். குழந்தைகளின் சந்தோஷம் பொங்கும் சிரிப்பொலியைக் காதிலே கேட்டேன். அவசரப்படாமல் மெள்ளவே நடந்தேன். இருள் கப்பிக்கொண்டு வந்தது. ஆள் நடமாட்டமில்லை. அக்கம்பக்கம் வீடுகளில் விளக்கொளி அணைந்துவிட்டது. கோழிகள் மட்டுமே ஆங்காங்கே கூவின. காவல்நாயும் அடித்தொண்டையில் அவ்வப்போது குரைத்தது. என் அருமை இல்லம் நெருங்கிவிட்டது. வீடு சேர இன்னும் ஒரு பர்லாங்கு இருக்கும்போதே எங்கள் நாய் என்னை வரவேற்க ஓடிவந்தது.

நான் வந்து வீட்டுக் கதவைத் தட்டினேன். அப்போது நடுநிசி. விவரிக்க முடியாதவோர் இன்பவுணர்ச்சியால் என் மனம் பொங்கியது. அப்போது—அப்போது இது என்ன பயங்கரம்! என் வீட்டினுள்ளிருந்து ஓலைவேய்ந்த கூரைக்கு மேலாய் குபுக்கென்று தீநாக்குகள் எழும்பின. நான் பார்த்துக்கொண்டிருக்கும் போதே ஆங்காங்கே இடைவெளிவிட்டுச் சுவாலைகள் குதித்து எழும்பின. நான் ஓவெனப் பெருஞ் சத்தமாய்க் கூவினேன். பின், மயக்கமாகி வாசலிலேயே கீழே சாய்ந்துவிட்டேன். என்னைத் தட்டி எழுப்பி நான் கண்விழித்தபோது என் மனைவியும் மக்களும் என் அருகில் நின்று மூர்ச்சை தெளிவித்துக்கொண்டிருந்தனர். என் கூக்குரல் கேட்டு மோசே முதலில் விழித்துக்கொண்டு தீயைக் கண்டு தன் அம்மாவையும் சோபியாவையும் எழுப்பியிருக்கிறான். அவர்கள் தூங்கிய கோலமாய் அரைகுறை ஆடையோடு பயந்தடித்து வெளியில் ஓடிவந்து என்னைக் கண்டு எனக்கு மூர்ச்சை தெளிவித்தனர். நான் கண்விழித்துப் பார்த்தபோது தீ கூரைமீது பரவி, வீடு பகுதிபகுதியாய்ப் பிய்ந்து விழுந்துகொண்டிருந்தது. அவர்கள் மூவரும் பிரமை பிடித்துப்போய்ப் பேச்சிழந்து தீக்கதிர்களை ரசிப்பதுபோல் நிலைகுத்திட்டு அதையே பார்த்துக்கொண்டு அசையாமல் நின்றனர். தீயையும் அவர்களையும் மாறிமாறிப்

பார்த்த நான் என் இரு சிறு மகன்களையும் தேடினேன். அவர்கள் அங்கே இல்லை.

'ஐயோ! என் சின்ன மக்கள் எங்கே?'

'தீயிலே அகப்பட்டுச் செத்துப்போனார்கள். இதோ நானும் சாகிறேன்.' என் மனைவிதான் அமைதியான குரலில் அப்படிச் சொன்னது.

அப்போது சிறுவர்களின் கூக்குரல் சத்தம் உள்ளிருந்து வந்தது. அவர்கள் அப்போதுதான் விழித்திருக்க வேண்டும்.

'எங்கே, என் செல்வங்கள் எங்கே?' நான் உள்ளே பாய்ந்தேன். தீயினிடையே சாடி அவர்கள் தூங்கும் அறைக்குள் சேர்ந்தேன்.

'என் மக்களே, எங்கே இருக்கிறீர்கள்?'

'இங்கே, அப்பா, இங்கே இருக்கோம்' என்று ஏகதொனியில் கூவினார்கள். அவர்கள் படுத்திருந்த கட்டிலுக்குத் தீ அப்போதுதான் தாவிக்கொண்டிருந்தது. இருவரையும் ஒன்றாய் வாரியெடுத்து, நெருப்புக் கொழுந்துகள்மீது தாவி வெளியே வந்தேன். நான் வெளியில் வந்து நிற்கவும் கூரை மொத்தமும் சரிந்து விழவும் சரியாயிருந்தது.

'இனி விழட்டும். எது வேண்டுமானாலும் தீப்பிடித்து விழட்டும். என் செல்வங்களைக் காப்பாற்றிவிட்டேன். இந்தா பிடி, நமது பொக்கிஷங்களை. நமக்கு இனி ஒரு குறையும் இல்லை.'

அவர்களைத் தூக்கி அணைத்து எல்லோரும் மாறிமாறி முத்தங்களிட்டோம். அவர்களும் எங்கள் கழுத்தை இறுகக்கட்டி எங்கள் உணர்ச்சிகளைப் பிரதிபலித்தார்கள். என் மனைவி சிரிப்பதும், மாறி அழுவதும், பின் சிரிப்பதுமாய் இருந்தாள்.

தீயைப் பார்த்துக்கொண்டே நின்ற நான் சிறிது நேரம் கழித்துத்தான் என் கை நோவதை உணர்ந்தேன். தோள்வரை அது கருகிப்போயிருந்தது. அசைக்க முடியவில்லை. மோசேக்கு உதவ முடியாமல், அவன் ஓடியாடி வேலைசெய்வதைப் பார்த்துக்கொண்டு நின்றேன். வீட்டினுள்ளிருந்து சில பொருள்களைக் காப்பாற்றினான். தானியத்தில் தீ பரவாமலிருக்க ஏதேதோ செய்தான். அதற்குள் அண்டை அயலார்களும் ஓடிவந்தனர். ஒருசிலர் அவனுக்கு உதவினர். பலர் என்னுடன் நின்று தீயைப் பார்த்தனர்.

வெகு சில பொருள்களே காப்பாற்றப்பட்டன. மற்றவை சாம்ப லாயின. என் பெண்மக்களுக்காகச் சேர்த்து வைத்திருந்த கரன்ஸி நோட்டுகளும் எரியுண்டு போயின.

எங்கள் வீட்டுக்குப் புறத்தேயிருந்த ஒரு சிறு குடிலில் நாங்கள் போய்த் தங்கினோம். ஆபத்துக்கு உதவினர் அயலார். ஆடை கள், சமையல் பண்டம், பாத்திரங்கள் கொணர்ந்து தந்தனர். பிளாம்பரோ குடும்பத்தினர் உற்றதுணையாய் நின்றனர். எனவே, பொழுது விடிந்தபோது எங்களுக்குத் தங்க ஒரு கூரை—சின்னதா யினும்—கிடைத்திருந்தது.

களேபரமெல்லாம் ஒருவாறு அடங்கியதும் என் மனைவி மக்கள் என் கதையை விசாரித்தனர். நான் வீடு திரும்ப இவ்வளவு தாமதமானதன் காரணத்தை அறிய மிகவும் ஆவலுடனிருந் தனர். எல்லா விவரங்களையும் சொன்னேன். வீடு திரும்புகிறவளை அரவணைக்கவேண்டாவா? வீடு என்ன—அதுதான் நாசமாகி விட்டதே—போகட்டும். இருக்கிற குடிலிலே அவளும் பழையபடி எங்களோடு வந்து இருக்கும்படி அவளை வரவேற்கும்படி என் மனைவியின் மனம் பக்குவமடைய வேண்டும். அதுதான் எனக்கு முக்கியமாகப் பட்டது. இந்தத் தீ விபத்து நேர்ந்ததும் ஒருவகை யில் நல்லதுதான் போலும். அல்லது என் மனைவியைச் சம்மதிக்கச் செய்வது கஷ்டமாகவே இருந்திருக்கும். வீடு, பொருள் எல்லாம் போய் அவள் பெருமை அடங்கியிருந்தது. துயரத்தினால் மனமும் சற்று அமைதிப்பட்டிருந்தது. அவளை ஒருவழியாய்ச் சமாதானப் படுத்தி வைத்தேன். சத்திரத்துக்குச் செல்ல எனக்குத் தெம் பில்லை. தீப்புண் வேதனை கடுமையாகவிருந்தது. எனவே, மோசேயையும் சோபியாவையும் அனுப்பிவைத்தேன்.

சிறிது நேரத்தில் அவர்கள் ஒலிவியாவோடு வந்துசேர்ந்தனர். ஒலியாவுக்குத் தாயை ஏறிட்டுப் பார்க்கத் தைரியம் வரவில்லை. குற்றம், அவமானம் எல்லாம் சேர்ந்து வதைக்க நின்று கொண்டிருந்தாள். நான் என்னதான் முன்கூட்டியே நற்புத்தி சொல்லி வைத்திருந்தாலும் என் மனைவியால் பொறுமையைக் கடைப்பிடிக்க முடியவில்லை. பெண்களின் நடத்தையைப்பற்றி ஆண்களைவிடப் பெண்களே மிகவும் கண்டிப்பாக இருக்கின்றனர்.

'சீமாட்டி அவுக வந்தாச்சாக்கும். மாளிகையிலேயிருந்து இறங்கி இந்தக் குடிசைக்கு வந்திருக்காகளாக்கும். அம்மா, தாயே, விவி பெரிய மனுஷாளோடே எல்லாம் பழக்கம் வச்சுக் கொண்டபிறகு இனி நாங்களெல்லாம் உனக்கு எம்மாத்திரம்? பிறகு குரலைச் சற்று மாற்றி 'அப்பாவும் நானும் உன்னாலே

ரொம்ப மனவேதனையை அனுபவிச்சிட்டோம். கடவுள்தான் உன்னை மன்னிக்க வேண்டும்' என்றாள்.

சொற்களைப்போலவே அவள் தொனியும் மிகக் கடுமையாக இருந்தது. ஒலிவியா முகம் வெளிறிப்போய் நடுங்கினாள். அழவும் முடியாமல் பேசவும் வராமல் அப்படியே நின்றாள். எனக்குப் பொறுக்கவில்லை. எப்படிப் பேசினால் என் மனைவி அடங்குவாள் என்பது எனக்குத் தெரியும். குரலைக் கடுமை யாக்கிக்கொண்டு தொடங்கினேன் :

'பெண்ணே, கடைசியாகச் சொல்லுகிறேன் கவனித்துக் கொள். அவள் ஏமாற்றப்பட்டவள். பிறரை நம்பி மோசம் போனவள். வழிதவறிப் போனவளை மீட்டுக் கொணர்ந்திருக் கிறோம். இந்தச் சமயத்தில் நாம் அவளிடம் எப்போதும்போல் அன்பு காட்டாவிட்டால் அவள் தன் பழைய கடமைகளைப் புரிந்து வாழ்வது அவளுக்குக் கடினமாகிவிடும். நாமும் பெரிய ஆபத்தினின்று மீண்டிருக்கின்றோம். வாழ்க்கையின் கடின யதார்த்தங்களை இனித்தான் சந்திக்கப் போகின்றோம். நாம் ஒற்றுமையாக இருப்பது மிக அவசியம். ஒருவருக்கொருவர் ஆதரவாயிருக்க வேண்டும். அப்பொழுதுதான் அயலாரின் நிந்தனையை எதிர்கொள்ள முடியும். ஒற்றுமையாக இருந்தால் எந்த நிலைமையிலும் மனஅமைதியுடன் வாழமுடியும். பாவத்தை நினைந்து வருந்துபவரைக் கடவுள் மன்னிக்கிறார். நாமும் அப்படியே செய்ய வேண்டாவா ? தொண்ணூற்றொன்பது நல்லவர்களால் உண்டாகும் சந்தோஷத்தைக் காட்டிலும், பாவத்துக்காக மனம்வருந்துகின்ற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் அதிக சந்தோஷம் உண்டு என்று நீ படித்த தில்லையா? நற்செயல்களைச் செய்துகொண்டிருப்பவனைவிடப் பாவம் செய்துவிட்டுப் பின் அதனின்று மீண்டு நல்ல பாதைக்குத் திரும்புகிறவனைத்தான் நாம் அதிகமாக ஊக்குவிக்க வேண்டும்.'

23

[குற்றம் புரிந்தவர் மட்டும்தான் கவலையினால் பிடிக்கப்பட்டால், அதனின்று மீளமுடியாமல் தவிக்கின்றனர்.]

சின்னக் குடிசையானாலும், அதிலேயும் முடிந்தவரை வசதிகள் ஏற்படுத்திக்கொண்டு நல்லபடியாய் வாழவேண்டும் என்ற ஆசையோடு பற்பல முயற்சிகள் எடுத்துவந்தோம். அங்கேயும் மகிழ்ச்சியோடும் அமைதியோடும் நாள்களைக் கடத்தினோம். எனக்கு இன்னும் வேலைசெய்ய இயலவில்லை. மோசேதான் கடினவேலைகள் அனைத்தையும் செய்தான். தீயினின்று தப்பிய ஓரிரண்டு புத்தகங்களைக் குடும்பத்தினருக்கு வாசித்துக் காட்டுவதை நான் என் முக்கிய வேலையாக்கிக்கொண்டேன். பொழுதுபோக்குக் கற்பனைக் கதைகளே இந்தச் சந்தர்ப்பத்துக்கு உகந்தவை என்று தோன்றியதால் பெரும்பாலும் அவற்றைத்தாம் வாசித்துக் காண்பித்தேன்.

அண்டைஅயலாரும் அடிக்கடி வந்து ஆறுதல் சொல்லித் தேற்றிவிட்டுப் போனார்கள். வில்லியம்ஸ் விவசாயியும் அவர்களில் ஒருவர். அவர் எதையும் மனத்தில் வைத்துக்கொள்ளவில்லை. ஒலியாவுடன் மீண்டும் திருமணப் பேச்சு எடுப்பதும் அவருக்குச் சம்மதமே. ஆனால், அவள் அதைச் சிறிதும் விரும்பவில்லை எனத் தெரிந்தது.

குடும்பத்தில் இப்பொழுது பழைய வேலைகளும் மகிழ்ச்சியும் திரும்பியிருந்தாலும், ஒலிவியா முன்னைப்போல் அவற்றில் கலந்துகொள்ள இயலவில்லை. கள்ளமில்லாமல் பேசிச் சிரித்த அந்தக் குணம் மறைந்துவிட்டது. தன்மீதே அவளுக்கு மதிப்புக் குறைந்துவிட்டிருந்தது. பிறரை மகிழ்வித்துத் தானும் மகிழும் அவளது பழைய இயல்பு அடியோடு மாறியிருந்தது. மனத்தைக் கவலை அரித்துத் தின்றது. உடலில் அழகு குடியோடிப் போயிற்று. தேய்கின்ற அழகைக் காப்பாற்ற அவள் எந்தவிதமான முயற்சியும் எடுக்கவில்லை.

சோபியாவுடன் யாரேனும் பிரியமாகப் பேசுவதைக் கேட்டால்கூட அவளுக்கு ஒருமாதிரியாயிற்று. கண்களில் நீர்

முட்டியது. அவளது குற்றவுணர்வு நீங்கி, அந்தவிடத்திலே அசூயை குடிகொண்டுவிட்டதோ என்றுகூட எனக்குத் தோன்றியது. என் தீப்புண் நோவையும் மறந்து நான் அவளை மகிழ்விக்கப் பல முயற்சிகள் செய்துவந்தேன். வரலாற்று நூல்களிலிருந்து பொருத்தமான கதைகளைத் தேர்ந்தெடுத்து அவளுக்குச் சொல்லிவந்தேன்.

'மகிழ்ச்சி என்பது நமது கையில் இல்லை அம்மா! எல்லாம் அந்த ஆண்டவன்தான் நடத்தி வருகின்றான். அவனது வழிகள் அனந்தமானவை; நாம் கற்பனையும் பண்ணிப்பார்க்க இயலாதவை. ஒரு வரலாற்று நிகழ்ச்சி சொல்லுகிறேன் கேள்:

'மாதில்டா என்றொரு பெண். இத்தாலியில் நியோபாலிஸ் நகரத்தின் உயர்மட்டத்து வாலிபனொருவனுடன் அவளுக்குத் திருமணமாயிற்று. ஒரு குழந்தைக்கு அவள் தாயான சிறிது காலத்துக்குள் அவன் இறந்துபோனான். அப்பொழுது அவளுக்கு வயது பதினைந்து. வால்தரணி நதியின்மீது அவர்கள் மாளிகை கட்டப்பட்டிருந்தது. ஒரு நாள் ஜன்னலருகே நின்று குழந்தையைக் கொஞ்சிக்கொண்டிருந்தபோது, குழந்தை அவள் கையினின்று தாவிக்குதித்து,கீழே ஓடிக்கொண்டிருந்த வால்தரணியின் வெள்ளத்தில் மூழ்கிப்போயிற்று. திக்பிரமை பிடித்த தாய் அவனைக் காப்பாற்றும் உணர்ச்சி வேகத்தில் தானும் பின்னாலே குதித்தாள். குழந்தை அகப்படவில்லை. அவள் தட்டுத் தடுமாறி வெள்ளத்தினின்றும் தப்பி மறுகரை சேர்ந்தாள்.

'அச்சமயத்தில் பிரெஞ்சுப் போர்வீரர்கள் அங்கே கொள்ளை நடத்திக் கொண்டிருந்தனர். கொள்ளையின்போது வழக்கமாக நடக்கும் அட்டூழியங்களும் அசிங்கங்களும் அங்கும் நடந்து கொண்டிருந்தன. மாதில்டாவும் அதற்கு இரையாகப்போகும் சமயத்தில் ஓர் இள அதிகாரி அவளைக் காப்பாற்றித் தன் குதிரை மீதிருத்தி, தன் நகரத்துக்குக் கொணர்ந்து சேர்த்தான். முதலில் அவள் அழகிலும் பின் குணத்திலும் மயங்கிய அவன், அவளை மணந்துகொண்டான்; அவன் பதவி உயர்ந்தது; அவர்கள் சந்தோஷமாக இருந்தனர்.

'பல ஆண்டுகள் கடந்தன. போர்வீரனின் சந்தோஷம் நிலையானதன்றே. ஒரு போரில் அவனது படை தோல்வி கண்டபோது அவன் தன் நகரத்துக்கு வந்து ஒளிந்துகொண்டிருந்தான். நகரம் முற்றுகையிடப்பட்டுப் பிடிக்கப்பட்டது. அச்சமயத்தில் பகைவர்களான இத்தாலியர்களும் பிரெஞ்சியர்களும் ஒருவருக்கொருவர் செய்துகொண்ட கொடுமைகளும் வெறிச்செயல்களும் மிகப் பயங்கரமானவை.

'பிரெஞ்சியக் கைதிகளைக் கொன்றுவிடுமாறு இத்தாலியர் தீர்மானித்தனர். மாதில்டாவின் கணவன் தலைவனாதலால் முதலில் அவன் கொலைக்களத்துக்கு நடத்திச் செல்லப்பட்டான். அங்கு வாளேந்திய கொலையாளி அவனருகில் நின்று தளபதியின் உத்தரவுக்காகக் காத்திருந்தான். மக்கள் பலர் பீதியுடன் பார்த்து நின்றனர். அப்பொழுது அவனைக் கடைசி முறையாகப் பார்த்துக் கொள்வதற்காக மாதில்டா ஓடிவந்தாள். அவனைக் கண்டதும் கண்ணீர் பெருக்கிப் புலம்பினாள்: ''வால்தரணியில் விழுந்த மகனைக் காப்பாற்றப்போன என்னை இரட்சித்து எனக்கு மறுவாழ்வு கொடுத்தீர்களே! அது இந்தக் கண்ணராவியைப் பார்க்கத்தானா?'' என்று கதறினாள். அவளது அழகை வியந்து, அவள் நிலைக்கு இரங்கி அவளையே கவனித்துக்கொண்டிருந்த இளந்தளபதி அவளது வார்த்தைகளைக் கேட்டமாத்திரத்தில் உணர்ச்சிவயமானான். ஆற்றுவெள்ளத்தில் மூழ்கிப்போன குழந்தை அவனேதான். மாதில்டா அவனது தாய். ஓடிப்போய்த் தன்னை வெளியிட்டான். அவள் காலில் விழுந்தான். இனி மற்றவற்றை விவரிக்கவும் வேண்டுமோ? கைதி விடுவிக்கப் பட்டான். அன்பு, நட்பு, கடமை இப் பண்புகளால் விளைகின்ற ஆனந்தமெல்லாம் அக் குடும்பத்திலும் பெருகிற்று.'

அவள் மனத்தை மாற்ற நான் சொன்ன கதைகளை அவள் கேட்டும் கேளாமலும் எதிலும் சிரத்தையில்லாமலே இருந்தாள். முன்னெல்லாம் பிறர்மீது இரக்கம்கொண்ட அவள், இப்போது தன்னிரக்கம் மிஞ்சியவளானாள். இகழ்ச்சிக்கு அஞ்சிப் பிறரோடு கலந்து பழகத் தயங்கினாள். தனிமையிலோ கவலை அவளைப் பிய்த்துத் தின்றது.

அப்பொழுது தாரன்ஹில்லுக்கும் செல்வி உல்மாட்டுக்கும் திருமணமாம் என்ற வதந்தி எங்கள் காதில் விழுந்தது. அவள்மீது அவர் மிகுந்த கவனம் செலுத்தியபோதும் அந்த மனிதர் என்னிடம் பேசியபோதெல்லாம் அவளது அழகையும் செல்வத்தையும் அலட்சியமாகக் குறிப்பிட்டதையெல்லாம் நினைத்துக்கொண் டேன். செய்தி கேட்டதிலிருந்து ஒலிவியா சஞ்சலம் மிகுந்தவ ளானாள். இப்படியொரு துரோகத்தையும் புறக்கணிப்பையும் தாங்கும் சக்தி பாவம் அவளுக்கு இல்லை. வதந்தி உண்மைதானா என்று அறியவும், முடிந்தால் அதைத் தடுக்கவும் நினைத்து நான் மோசேயைத் திரு. உல்மாட்டிடம் அனுப்பிவைத்தேன். செல்வி உல்மாட்டுக்கு ஒரு கடிதமும் கொடுத்தனுப்பினேன். செய்தி உண்மைதானா என்று கேட்டுவிட்டு, திரு. தாரன்ஹில் எங்கள் குடும்பத்தில் தகாதவிதமாய் நடந்துகொண்டதையும் அதில் தெரிவித்திருந்தேன். அவன் அங்குச் சென்று மூன்று நாள்கள்

கழித்துத் திரும்பினான். கடிதத்தைச் செல்வி உல்மாட்டிடம் சேர்க்கமுடியவில்லையாம். அவள் திரு. தாரன்ஹில்லோடு சேர்ந்து அவரது பிராந்தியத்தைச் சுற்றிப்பார்க்கப் போயிருக்கிறாளாம்.

திருமணச் செய்தி உண்மைதான். அதையொட்டிய வேறு பல விவரங்களையும் தெரிந்துவந்திருந்தான். முந்திய ஞாயிறு தாரன்ஹில் பரிவாரத்தோடு வெகு ஆடம்பரமாகக் கோயிலுக்கு வந்தார். மணப்பெண்ணும் ஆறு தாதியர் சூழ அங்கு வந்திருந்தாள். பெண்ணும் மாப்பிள்ளையும் சர்வாலங்காரமாக ஜோடியாக அடிக்கடி அந்தப் பக்கங்களில் சவாரி போகின்றனர். மணவிழா இன்னும் சில தினங்களில் நடைபெறும். அந்த நாள் எப்போது வருமென்று சுற்றுவட்டாரமெல்லாம் காத்துக்கொண்டிருக்கிறது. இருதரப்பு உறவினர்களும் நண்பர்களும் வந்து குழுமத் தொடங்கியாயிற்று. பெரிய பிரபு ஸர் வில்லியம் தாரன்ஹில்லும் வந்து இறங்கிவிட்டார். எங்கும் கும்மாளமும் கொண்டாட்டமுமாய்க் கிடக்கிறது. நாடெல்லாம் பெண்ணின் அழகையும், மாப்பிள்ளையின் சிறப்பையும், அவர்களின் காதலையும்பற்றிப் பேச்சாயிருக்கிறது. அந்த மனுஷன் தாரன்ஹில் யோகக்காரன்தான் என்று விவரங்களை முடித்தான் மோசே.

'போகட்டும், மகனே, நடந்துவிட்டுப் போகட்டும். நமக்கும் என்ன குறைந்துபோய்விட்டது சொல்லு. இந்த வைக்கோல் படுக்கையும், வேய்ந்தும் வேயாததுமான கூரையும், பெயர்ந்து விழும் சுவரும், தகர்ந்து கிடக்கும் தளமும், கருகித்தீய்ந்த என் உடலும், சோற்றுக்கு அழும் குழந்தைகளும்—இதுதான் நம் வீடு. ஆனால் என்ன? ஓராயிரம் உலகங்களை ஈடாகக் கொடுத்தாலும் நான் இதை விட்டுவிடுவேனா? செல்வங்களே, நமது மனம் ஓர் உன்னத உலகம். அந்த உலகோடு பேச நாம் பழகிக்கொள்ள வேண்டும். மேட்டுக்குடி ஒய்யாரம் எதுவும் அதற்கு நிகரன்று.

'வாழ்க்கை என்பது ஒரு பயணம். நாம் அனைவரும் பயணிகள். நல்லோருடைய பயணம் வீடு சேரும் நம்பிக்கையோடு அமரிக்கையாக, மகிழ்ச்சியாக நடந்தேறுகிறது. தீயோர் அவ்வப்போது வழியில் சுகம் அனுபவிப்பதுபோல் தோன்றினாலும் அவர்கள் பயத்தோடு நாடு கடத்தப்படுவோரைப்போல் அஞ்சி வழிநடக்கின்றனர்.'

ஒலிவியாவுக்கும் செய்தி எட்டிவிட்டது. அவள் வருவதைக் கண்டு நான் பேச்சை நிறுத்தினேன். எங்களைப் பார்த்ததும் உணர்ச்சிக் கொந்தளிப்பால் மயக்கமாய் சாயப்போனாள். அதைக் கண்டு நான் அவளைத் தாங்கிப் பிடிக்கும்படி அருகில் நின்ற என்

மனைவியிடம் சொன்னேன். சிறிது நேரத்தில் அவள் மயக்கம் தெளிந்து தன்னிலை பெற்றாள். அவள் எதுவும் பேசவில்லை. அமைதியாகவே இருந்தாள். அவள் மனம் உறுதிப்பட்டுவிட்டது என்று நான் நினைத்தேன். ஆனால், நான் எண்ணியது தவறு. கசப்பு மிஞ்சியதால் தன் காதல் அனுபவத்தைக் குறித்த ஒரு விரக்தியும் வாழ்க்கைமேல் வெறுப்பும் ஏற்பட்டதன் விளைவு அது.

என் சபை உறுப்பினர்கள் எங்களுக்கு அநேக உதவிகள் செய்தனர்; உணவுப் பண்டங்கள் அனுப்பினர். நாளடைவில் குடும்பத்தில் பழைய குதூகலம் சிறிதுசிறிதாகத் திரும்பலாயிற்று. ஒலிவியாவைத் தவிர எல்லாரும் மகிழ்ச்சியுடன் அவரவர் வேலைகளைச் செய்துவந்தோம். அவர்களாவது மகிழ்ச்சியாக இருக்கிறார்களே, போதும் என்ற மனநிலை எனக்கும் உண்டாயிற்று. ஒலிவியா பிடிவாதமாகச் சஞ்சலமாக இருந்தாள் என்பதற்காக மற்றவர்களும் அப்படியே இருக்கமுடியுமா? அவர்கள் திருப்தியைக் கெடுக்க எனக்கு மனமில்லை. எனவே அந்தச் சின்னக்குடிலில் மீண்டும் சிரிப்பும், விளையாட்டும், கதையும் தலைதூக்கலாயிற்று.

24

[மேலும் இடுக்கண்கள்]

மறுநாள் காலையில் வெயில் சுகமாயடித்தது. இந்த வெயில் அந்தப் பருவத்தில் எதிர்பாராதது. எனவே, எங்களுக்கெல்லாம் காலையுணவை எடுத்துக்கொண்டு அந்த உல்லாசப் புதர்ப் பந்தலிலே அமர்ந்து சாப்பிடவேண்டுமென்ற ஆசை உண்டாயிற்று. அப்படியே சென்றோம். சோபியாவைப் பாடும்படி கேட்டேன். அவளும் பாடினாள். மேலே கிளைகளில் பறவைகள் பாட இவளின் குரலும் அவற்றோடு சேர்ந்து ஒலிக்க, நாங்கள் அதை ரசித்துக் கொண்டிருந்தோம். அதாவது, ஒலிவியாவைத்தவிர. இந்த இடத்தில்தான் அவள் தன் துரோகக் காதலனை முதல்முதலாகச் சந்தித்தது. அவள் முகத்தில் வேதனை படர்ந்தது. இருப்பினும், இயற்கையழகுக்கு ஓர் அலாதி வல்லமை இருக்கிறது. அத்தோடு சுருதி சுத்தமான சோபியாவின் பாட்டும் சேர்ந்தது. அவள் வேதனை மாறி, மனம் தூய்மையுற்றது. அவள் தாயின் கடின மனமும் கரைந்தது. அவள் கண்களில் கண்ணீர் வடியக் கண்டேன். மகள்மேல் வாஞ்சை பொங்கியது.

'ஒலிவியா, என் கண்ணே! நீயும் பாடம்மா. அப்பா கற்றுக் கொடுத்த அந்தச் சோகப் பாட்டைப் பாடு. பாடு மகளே! வயசான காலத்தில் உன் அப்பா கேட்டுச் சந்தோஷப்படட்டும்' என்றாள்.

ஒலிவியாவும் இணங்கினாள். அவள் முகத்தில் படிந்திருந்த சோகம் என் இதயத்தை உருக்கியது.

எழிலுடைப் பெண்ணாள் ஏந்திழை ஒருத்தி
தன்படி சென்று மௌட்டிகம் கொண்டு
எண்ணிய வழியில் நடந்திட்ட பிறகு
பன்னிப் பின்னர் ஆடவ ரெல்லாம்
ஏமாற் றுபவர் என்பதைப் புரிந்தால்
மின்னித் திகழ்ந்த அவளது அழகு
ஏந்திழை துயரை மாற்றுவ தாமோ ?
கன்னிக் கிருந்த அவ்வழ கெல்லாம்
எளிதினில் தவற்றை மறைத்திடப் போமோ?

துணிந்தவள் புரிந்த குற்றங் களையும்
அவமா னங்கள் தவறுகள் தமையும்
துன்னித் துவண்டு மறைத்திட வென்றால்
அவள்செய வுள்ளது ஒன்றே ஒன்று
முன்னிக் காதலன் மனமது வருந்த
இவள்அவன் இதயத்தைப் பிழிந்தே எடுக்க
மண்ணில் தன்னுயிர் மாய்ப்பது அன்றே
அவள்செய வென்று உள்ள ஒன்று!!

இரண்டாம் கவியை அவள் பாடி முடிக்கையில் அவள் நெஞ்சின் துக்கம் அவள் குரலில் இழைந்து உருகி அதில் ஓர் இனிமையை ஏற்றுவித்தது. அப்பொழுது சற்றுத் தூரத்தில் ஒரு பிரபுவின் பரிவாரம்—ஆம் திரு. தாரன்ஹில்தான் வந்துகொண்டிருந்தார். நாங்கள் சற்றுக் கலக்கமுற்றோம். ஒலிவியாவோ உடனடியாகத் தங்கையையும் கூட்டிக்கொண்டு வீட்டுக்கு நடக்கப் புறப்பட்டுவிட்டாள்.

சில நிமிடங்களில் சாரட்டுவண்டி எங்கள் பந்தர்முன் நிற்க, அவர் அதனின்று இறங்கி, நான் உட்கார்ந்திருந்த இடத்தை நோக்கி நடந்துவந்தார். ஒன்றும் நடக்காததுபோல் ஒரு சௌஜன்ய பாவனையுடன் என் நலத்தை விசாரித்தார்.

'ஐயா, நீங்கள் இந்த விஷயத்தைச் சாதாரண நிகழ்ச்சியாக்க முயல்வது உங்கள் கயமையை அதிகரித்துக் காட்டுகின்றது. நீங்கள் என்னிடம் இப்படிச் சாவதானமாகப் பேசத் துணிந்ததற்கு நான் உங்களைக் கண்டிக்க வேண்டும். ஆயினும், இப்போது நான் எதுவும் செய்வதாயில்லை. என் வயதும் என் குருத்துவத் தொழிலும் என் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி வைக்கின்றன.'

'ஐயா, உங்கள் பேச்சு என்னை ஆச்சரியத்திலாழ்த்துகிறது. எனக்கு அது விளங்கவுமில்லை. உங்கள் மகள் அண்மையில் என்னோடு செய்த உல்லாசப் பயணம் அப்படியொன்றும் சட்டத்தை மீறிய தண்டனைக்குரிய குற்றம் அன்றே?'

'நீ ஓர் ஈனன், கயவன், பொய்யன். ஆனால், நான் ஏன் உம்மிடம் இப்போது கத்தவேண்டும்? ஆனாலும், இதையெல்லாம் என்னால் சாதாரணமாக ஜீரணித்துக்கொள்ள இயலவில்லை. நான் நல்ல குடும்பத்தில் வந்தவன். உனது கணநேரக் காமத்தைத் தணித்துக்கொள்ள இன்னொரு ஜீவனின் வாழ்க்கையையே பாழடிக்கின்ற சுயநலம் பிடித்த நீ ஒரு வீணன். மானமாக வாழ்ந்து வந்த எங்கள் குடும்பத்தைக் கறைப்படுத்தியவன்.'

'கஷ்டப்படுவதே எங்கள் நோக்கம் என்று நீங்களும் உங்கள் மகளும் தீர்மானித்துக்கொண்டால் அதற்கு நான் என்ன பண்ணட்டும்? நீங்கள் சந்தோஷமாக வாழ வழி உண்டு. நான் அதற்கான உதவிகளைச் செய்ய எப்பொழுதும் சித்தமாயிருக்கின்றேன். அவளை வேறொருவனுக்குச் சீக்கிரமே மணமுடித்து வைப்போம். வேண்டுமானால் பழைய காதலனையும் அவள் வைத்துக்கொள்ளட்டுமே, எனக்கு அவள் பேரில் என்றைக்கும் மதிப்பு உண்டு.'

நான் கோபத்தில் என் வசமிழந்தேன். அவனது அந்த அலட்சிய பாவத்தை என்னால் சகித்துக்கொள்ளவே முடியவில்லை. இடுக்கண் வருங்கால் நகுவது எளிது. இது இடுக்கண் அன்று நகுவதற்கு. எனக்குக் கோபம்தான் கண்மண் தெரியாமல் வந்தது. கயமையின் உச்சத்தைக் கண்டால் கோபப்படாமல் வேறு என்ன செய்ய?

'அற்பப் புழுவே, முதலில் இங்கிருந்து அகன்றுபோ. நீ என் எதிரில் நிற்பதுகூட என்னை அவமதிப்பதாகும்...என் மகன் பெரியவன் இப்போது என்னருகில் இருந்தால் எனக்குப் பெருந் துணையாக இருப்பான். அவனும் வயதான என்னை விட்டுவிட்டு அயல்நாடு போய்விட்டான்.'

'நான் உம்மிடம் கடுமையாகப் பேச எண்ணி வரவில்லை. ஆனால், உமது போக்கு என்னை அப்படிப் பேசத் தூண்டுகிறது. எனது நட்பால் உங்களுக்கு விளையக்கூடிய நன்மையை எடுத்துச் சொன்னேன். என்னைப் பகைத்துக்கொண்டால் விளையக்கூடிய கெடுதிகளைப்பற்றியும் இனிச் சொல்லிவிடுகிறேன். நீங்கள் எழுதிக்கொடுத்த பத்திரத்தை என் வழக்கறிஞருக்கு மாற்றியிருந்தேன். அவர் இப்பொழுது பணத்தை உடனடியாகக் கொடுக்காவிட்டால் வழக்குமன்றத்துக்குப் போவதாகப் பயமுறுத்துகிறார். நானே கொடுத்துவிடலாமென்றாலும் எனக்கு இப்போது கலியாணச் செலவு அதிகமிருப்பதால் கொடுக்க இயலவில்லை. அடுத்தது, எனது காரியஸ்தர் சொல்லிய விஷயம். உங்கள் வாடகை கொடுபடாமல் கிடக்கிறதாம். இந்த விவகாரங்களை எல்லாம் நான் அவரிடம்தான் விட்டுவிடுகிறது.

'நான் உங்களுக்கு உதவி செய்யவே விரும்புகின்றேன். செல்வி உல்மாட்டுக்கும் எனக்கும் திருமணம் நிச்சயமாகியுள்ளது. சீக்கிரமே திருமணவிழா நடைபெறும். நீங்களும் உங்கள் மகளும் கலியாணத்திற்கு வரவேண்டுமென்பது என் விருப்பம். அரபெல்லாவும் அப்படியே விரும்புகின்றாள். மறுக்கமாட்டீர்களென நம்புகிறேன்.'

'திரு. தாரன்ஹில் அவர்களே! நான் சொல்ல வேண்டியதை யும் சொல்லிவிடுகிறேன். என் மகளைத் தவிர நீங்கள் வேறு யாரையும் மணந்துகொள்ளுவதை நான் ஒப்புக்கொள்ளமுடியாது. உங்கள் நட்பு என்னை ஓர் அரியணையில் ஏற்றுவதானால்கூட அது எனக்கு வேண்டா. உங்கள் பகை என்னை என் கல்லறைக்கு இழுத்துச் செல்லுமென்றாலும் நான் அதற்கும் பயந்தவனல்லன். சீர் செய்யமுடியாத பேரிழப்பு எங்கள் குடும்பத்தில் உம்மால் நேர்ந் திருக்கிறது. உம்மை மானஸ்தன் என்று நம்பி ஏமாந்துவிட்டோம். என்னுடன் நீர் நட்புறவை வைத்துக்கொள்ளுவது இனி அசாத் தியம். உமக்கு அழகு, செல்வம், சுகம், சீர்சிறப்பு எல்லாம் இருக் கிறது. போய் அனுபவியும். எனக்கோ வறுமையும், நோயும், அவமானமும், துன்பமும் இப்பொழுது இருக்கின்றன; இருக்கட்டும். இத்தனை கஷ்டத்திலும் மானமாக வாழவேண்டும் என்பது ஒன்றையே நான் பெரிதாகக் கருதுகின்றேன். எனவே, நான் உம்மைத் தாழ்ந்தவராகவே மதிப்பிடவேண்டியுள்ளது. ஆனால், நான் உம்மை மன்னித்துவிட்டேன்.'

'நீர் என்னை இப்படி அவமானப்படுத்துவதன் பலனை உடனே அனுபவிக்க நேரிடலாம். யார் தாழ்ந்தவர் என்பதைப் பார்த்துவிடுவோம்' என்று சொல்லிவிட்டுத் தாரன்ஹில் கிளம்பிவிட்டார்.

என் மனைவியும் மகனும் எங்கள் பேச்சைக் கேட்டுக்கொண் டிருந்துவிட்டு மிகவும் பயந்தார்கள். அவர் போனதும் ஒலிவியா வும் சோபியாவும் வந்து நடந்தவற்றை விசாரித்தார்கள். விவரம் கேட்டு அவர்களும் கலங்கிப்போயினர். என்னைப் பொறுத்தவரை யில் நான் மனம் தளரவில்லை. 'அவன் செய்கிற கொடுமையைச் செய்துகொள்ளட்டும். இதற்கு முன்செய்யாததா? இனி வருவதை யும் எதிர்கொள்ளுவோம்' என்ற உறுதி உண்டாயிற்று. ஒரு பேராயுதம் உண்டாம். அதை எப்படி எறிந்தாலும் எதிரியைத் தாக்க முனை இருந்துகொண்டே இருக்குமாம். அதுபோல நாமும் இருக்கவேண்டும் என்று மனத்திலே தீர்மானம் பண்ணிக்கொண் டேன்.

தாரன்ஹில் தாம் பயமுறுத்தியவற்றைச் செயல்படுத்தத் தொடங்கிவிட்டார். மறுநாள் அதிகாலையில் காரியஸ்தர் வந்து நின்றார். வாடகைப் பாக்கி கிடக்கிறதாம். கிடந்ததுதான். அண்மையில் குடும்பத்தில் நேர்ந்துவிட்ட பல இக்கட்டுகள் காரண மாக, கட்டவேண்டிய வாடகை கட்டப்படாமல் நின்றது உண்மையே. இப்பொழுது உடனே கட்ட வசதியில்லை என்று காரியஸ்தரிடம் கூறி அனுப்பினேன். அன்று மாலையில் என் மாடு

களைப் பிடித்துக்கொண்டுபோய் மறுநாள் அவை பாதிவிலைக்கு விற்கப்பட்டன. அதைக் கேட்டதும் என் மனைவிமக்கள் மிகவும் கலங்கிப் போனார்கள். இனி, பிழைப்புக்கு என்ன செய்வோம். நம்மை அதோகதியாக்கிவிடுவான். ஆகையால், அவனுக்குப் பணிந்து போய்விடுவது நல்லது என்று புத்திசொல்லத் தொடங்கினார்கள். அவன் பழையபடி நண்பனாக வீட்டுக்கு வந்துபோய் இருக்கட்டும். அதற்கு இணங்கிவிடுவதுதான் புத்திசாலித்தனம் என்று வாதாடினார்கள்; கெஞ்சினார்கள். இனிமேல் என்னென்ன இன்னல்கள் இழைப்பானோ என்று கலக்கமடைந்தார்கள். ஒரு வேளை சிறையில் பிடித்துப் போட்டாலும் போடுவான். தீப்புண் ஆறாத இந்த நிலையில் அப்படியொரு கஷ்டம் நேரிட்டால் அதை எப்படித் தாங்கமுடியும்? இவ்வாறாகப் பலவற்றையும் எடுத்துச் சொல்லி அழுது கெஞ்சினார்கள். ஆனால், நான் இணங்கவில்லை.

'என் செல்வங்களே, நெறியல்லாத ஒரு செயலைச் செய்யுமாறு நீங்கள் ஏன் என்னைத் தூண்டுகிறீர்கள்? அவனை மன்னிக்க வேண்டியதுதான் என் கடமையே தவிர, அவன் செய்வதை ஒப்புக் கொள்ளுவது அன்று. அதற்கு என் மனச்சாட்சி சம்மதிக்காது. என் மனச்சாட்சிக்கு உடன்பாடில்லாத ஒன்றை ஒத்துக்கொள்ளுவதாக அவனிடமும் உலகத்தாரிடமும் சொல்லவேண்டுமா? அவன் பின்னாலே போய் அவனை முகஸ்துதி செய்யவேண்டுமா? சிறைவாசத்தைத் தவிர்ப்பதற்காக என் கொள்கைகளைச் சிறைப் படுத்திக்கொள்ள வேண்டுமா? அதற்கு நான் இணங்க முடியாது. அவர்கள் நம்மை இந்தக் குடிசையினின்று விரட்டிவிட்டாலும் கூட, நாம் தர்மத்தைக் கடைப்பிடிப்பதினின்று வழுவக்கூடாது. அவர்கள் நம்மை எந்த வளையில் வேண்டுமானாலும் கொண்டு போய் வைக்கட்டும்; கவலை வேண்டா. நமக்குள்ளேயே ஓர் அழகான வீடு உண்டு தெரியுமா? நமது மனமென்ற அந்த வீட்டிலே உறுதியும் மகிழ்ச்சியும் என்றும் உண்டு!'

இப்படியாக இரவு நெடுநேரம்வரை பேசிக்கொண்டே உட்கார்ந்திருந்தோம். வெளியே பனி ஏராளமாகக் கொட்டிக் கொண்டேயிருந்தது. விடிந்ததும் மோசே எழுந்து, பாதையை அடைத்துக்கொண்டு குவிந்து கிடந்த பனியை அகற்றித்தள்ளும் வேலையில் இறங்கினான். சிறிது நேரத்தில் முகம் வெளிறியவனாய் உள்ளே ஓடிவந்தான். நீதித்துறையைச் சேர்ந்த இருவர் எங்கள் வீட்டைநோக்கி வந்துகொண்டிருக்கிறார்களாம்.

அதற்குள் அவர்களும் உள்ளே நுழைந்து என் படுக்கையருகில் வந்து நின்றனர். என்னைச் சிறையாக்கத் தாங்கள் வந்ததாகச் சொன்னார்கள். பதினொரு மைல் தள்ளியிருந்த ஜில்லா

ஜெயிலுக்குப் போகத் தயாராகும்படி என்னிடம் சொன்னார்கள். நான் அமைதியாகவே இருந்தேன்.

'நண்பர்களே, இது கடுங்குளிர்காலம். தீப்புண் காரணமாக எனக்கு இப்போது காய்ச்சலும் கண்டிருக்கிறது. நேற்றிரவு பனி ஆழமாகப் பெய்திருக்கிறது. குளிருக்குத் தகுந்த ஆடைகள் என்னிடம் இல்லை; நடப்பதற்குச் சக்தியும் இல்லை. இருப்பினும் நான் இப்பொழுது உங்களுடன் வரச் சித்தமாயிருக்கிறேன்...'

எங்கள் உடைமைகளைச் சேகரித்துக் கட்டுமாறு மனைவி மக்களிடம் சொன்னேன். அவர்களும் என்னுடன் கிளம்பவேண்டியதல்லவா? இந்தத் துன்பத்துக்கெல்லாம் தான்தான் காரணம் என்று மனம் உறுத்தியதாலோ என்னவோ, ஒலிவியா மயக்கமாகிக் கீழே சாய்ந்தாள். அவளைக் கவனிக்கும்படி மோசேயிடம் கூறினேன். இரு சிறுவர்களும் தாயை இறுகக் கட்டிக்கொண்டு நீதித்துறை மனிதரைப் பீதியுடன் உறுத்துப் பார்த்துக்கொண்டு இருந்தனர். என் மனைவி அவர்களை அணைத்துப் பிடித்துக் கொண்டு நடுங்கியவாறே நின்றாள். சோபியா ஒருத்தி ஆக வேண்டிய காரியங்களை என்னைக் கேட்டுக்கேட்டு ஒவ்வொன்றாய்ச் செய்துகொண்டிருந்தாள். ஒரு மணி நேரத்திற்குள் நாங்கள் புறப்படுவதற்குத் தயாராகிவிட்டோம்.

25

[கொடிய இடுக்கணின் நடுவிலுங்கூட ஆறுதல் அளிக்கும் ஏதோவொரு சிறிய கூறு இருந்தே தீரும்.]

அமைதி ததும்பிப் பொங்கிய அந்தக் கிராமத்தைவிட்டு நாங்கள் வெளியேறி நடக்கத் தொடங்கினோம். ஒலிவியா சில நாள்கள் காய்ச்சலால் அவதிப்பட்டிருந்ததால் அவளால் நடக்க இயல வில்லை. அதைக் கண்ட ஓர் அதிகாரி அவளைத் தம் குதிரையின் பின்னால் ஏற்றிக்கொண்டார். இவர்களும் மனிதர்கள்தாம் என்று நினைத்தேன் நான். மோசே ஒரு சிறுவனையும் மனைவி அடுத்தவனையும் கையில் பிடித்து நடந்தனர். நான் சோபியா வின்மீது சாய்ந்தாற்போல் அவள் கைத்தாங்கலில் மெள்ள நடந்தேன். அவள் கண்களினின்று கண்ணீர் வடிந்தது. அது தனக்காக அன்று; எனக்காக என்பதையும் உணர்ந்தேன்.

நாங்கள் இரண்டு மைல் நடந்திருப்போம். எனது எளிய சபை மக்கள் ஐம்பது பேர் இருக்கும். அடித்துப் புரண்டு எங்கள் பின்னாலே ஓடிவந்தார்கள். ஓடிவந்து அந்த இரண்டு அதிகாரி களையும் பிடித்துத் தங்கள் கிராமத்துக் குருவை எப்படிச் சிறைக் குக் கொண்டுபோகலாச்சு என்று கத்தி, ஒரு துளி இரத்தம் தங்கள் உடலிலே இருக்கும்வரை அதற்கு விடமாட்டோம் என்று கோஷித்து, அதிகாரிகளை அடிப்பதற்கும் தயாரானார்கள். அவர் கள் மூர்க்கத்தைக் கண்டால் கொலை விழுமோ என்றுகூட எனக்குத் தோன்றிற்று. ஒருவழியாய் அதிகாரிகளை அவர்கள் பிடியிலிருந்து விலக்கிவிட்டேன்.

என் சிறுவர் இருவரும் அப்பா, இனி விடுதலையாகிவிடுவாராக் கும் என்றெண்ணி ஆர்ப்பரிக்கத் தொடங்கினர். என்னை விடுவிக்க வந்த எளிய மக்கள் எனக்கு உதவிசெய்யும் நினைப்பில்தான் அப்படி ரகளை செய்துவிட்டனர்.

நான் அவர்களைப் பார்த்துச் சொன்னேன்:

'நண்பர்களே, பிரசங்க பீடத்திலிருந்து நான் உங்களுக்குச் செய்த பிரசங்கங்கள் எல்லாவற்றையும் மறந்துவிட்டீர்கள் போலிருக்கிறதே. இப்படிச் செய்வதன்மூலம் நீங்கள் எனக்கு

அன்பு காட்டவில்லை. நீதியின் ஆணையை எதிர்ப்பது தகாது பாவமாகும். உங்களுக்கும் எனக்கும் இருவருக்குமே அதனால் நாசம்தான் வரும். இப்படிச் செய்யவேண்டுமென்று யாரோ உங்களுக்குத் தவறாய்ச் சொல்லிக்கொடுத்துவிட்டார்கள். அது யாரென்று சொல்லுங்கள். நான் அவருடன் பேசுகிறேன். என் மக்களே, வீணே ஏமாறாதீர்கள். திரும்பிப் போங்கள். போய் இறைவனுக்கும், நாட்டுக்கும், எனக்கும் நீங்கள் ஆற்றவேண்டிய கடமைகளைச் செய்துகொண்டிருங்கள். நான் திரும்பிவந்து உங்களையெல்லாம் காணவும், மீண்டும் உங்களிடையே பணிபுரியவும் இறைவன் வழிசெய்வார். நித்திய வாழ்க்கைக்கு ஆயத்தப்படுத்தும்படி என் பொறுப்பில் விடப்பட்ட ஆத்துமாக்களை நல்வழியில் நான் நடத்திச் சென்ற திருப்தியை எனக்குத் தாருங்கள்.'

அவர்கள் தங்கள் தவற்றை உணர்ந்து மனம் வருந்தினார்கள். கண்ணீர் மல்க ஒவ்வொருவராய் என்னிடம் விடைபெற்றுக் கொண்டனர். அவர்களின் கைகளைக் குலுக்கி ஆசீர்வதித்து அனுப்பிவைத்தேன். மீண்டும் பயணத்தைத் தொடர்ந்து இருள் கவியும்முன் சிறையிருந்த ஊரை அடைந்துவிட்டோம். நகரமுமில்லாமல் கிராமமுமில்லாமல் ஓர் இரண்டுங்கெட்டான் இடம் அது. இந்தச் சிறையை வைத்துத்தான் ஊருக்கு மதிப்பு. அதுவும் அந்த நாளில், இப்பொழுது அதன் பழைய மவுசெல்லாம் போய்ச் சில சிறிய வீடுகளைக்கொண்ட ஓர் ஊராயிருந்தது.

முதலில் ஊர்ச் சத்திரத்தில் இறங்கி உணவுக்கு ஏற்பாடு பண்ணினேன். உணவு வந்ததும் நாங்கள் வழக்கம்போல் குடும்பமாக அமர்ந்து மகிழ்ச்சியுடன் சாப்பிட்டோம். அதன் பின்னர் நான் சிறைச்சாலைக்குச் சென்று சிறையதிகாரியைக் கண்டு பேசினேன். போர்க் கைதிகளுக்காகக் கட்டப்பட்ட சிறை அது. இப்பொழுது என் மாதிரியான கடன்காரக் குற்றவாளிகளும், மற்றும் பயங்கரக் குற்றவாளிகளும்கூட அடைக்கப்பட்டிருந்தனர். பொது அறையில் எல்லாத் தரப்பட்ட கைதிகளும் ஒன்றாகக் கூடுகின்றனர். குறிப்பிட்ட நேரத்தில் அந்தப் பெரிய கல்பாவிய பொது அறைக்கு வருகின்றனர். மற்றபடி ஒவ்வொரு கைதிக்கும் தனியறை உண்டு; இரவு நேரத்தில் அதனுள் பூட்டப்படுவான்.

சிறையினுள் அழுகையும் புலம்பலும் நான் எதிர்பார்த்தேன். உள்ளே நுழைந்தபின்தான் தெரிந்தது அது தவறு என்பது. எல்லாக் கைதிகளும் ஒரே நோக்கமாய் அட்டகாசமும் ஆர்ப்பாட்டமும் பண்ணுவதில் முனைந்து நின்றதைக் கண்டேன். நினைவுகளை மறக்க அவர்கள் குடித்துக் கும்மாளமிடுவதில் ஒற்றுமையாய்ச் செயல்பட்டனர். புதுக் கைதியாக நான் உள்ளே நுழைந்ததும்

எனது மாமூலைக் கேட்டார்கள். நான் கொடுத்துவிட்டேன். என்னிடமிருந்த பணத்தில் பெரும்பகுதி அது. மதுவாங்க உடனடியாகக் கொடுத்தனுப்பப்பட்டது. அப்புறம் ஒரே கீழ்த்தர விகடங்களும், ஆபாச ஜோக்குகளும், சிரிப்பும், அட்டகாசமும்தான்.

அதைப் பார்த்துவிட்டு எனக்குப் பல எண்ணங்கள் வந்தன. 'குற்றவாளிகள் இத்தனை உல்லாசமாக இருக்கிறபோது நான் ஏன் துக்கமாக இருக்கவேண்டும்? சிறைவாசம் என்ற ஒன்றைத் தவிர வேறு என்ன கஷ்டம் எனக்கு! மகிழ்ச்சியுடனிருக்க எனக்குப் பல ஏதுக்கள் இருக்கின்றனவே' என்று நினைத்து, மகிழ்ச்சியுடன் இருக்க முயன்றேன்.

(முயன்று வருவதன்றே மகிழ்ச்சி! வலிந்து எடுத்த முயற்சி பெரும் சிரமமாய்ப் போய்விட்டது.)

இப்படியெல்லாம் எண்ணிக்கொண்டு அந்தப் பெரிய அறையின் மூலையில் துக்கமுகமாய் உட்கார்ந்து கொண்டிருந்தேன். அப்பொழுது ஒரு சக கைதி என்னிடம் வந்து பேச்சுக் கொடுத்தார். என்னிடம் பேசவிரும்பி வருகிறவர்களிடம் நான் என்றுமே பராமுகமாய் இருந்ததில்லை. யாரானால் என்ன? நல்லவனானால் அவனோடு பேசுவதால் எனக்கு நன்மையுண்டு. தீயவனானால் என்னோடு பேசுவதில் அவனுக்கு நன்மை உண்டு. வந்தவர் படிப்பறிவு இல்லாதவராயினும் உலகம் தெரிந்தவராய் இருந்தார்.

மனிதனின் நல்லியல்பைவிடவும் தீயவியல்போடு அவருக்குப் பரிச்சயம் அதிகமிருக்கவேண்டும். படுக்கைக்கு ஏற்பாடு செய்துவிட்டேனா என்று விசாரித்தார். எனக்கு அது விவரம் தெரியவில்லை.

'இங்கே வைக்கோல் மட்டும்தான் தருவார்கள். உங்கள் அறை பெரிதாயிருப்பதால் குளிர் அதிகமாயிருக்கும். உங்களைப் பார்த்தால் கனவான்போல் தோன்றுகிறது. நானும் ஒரு காலத்தில் அப்படியிருந்தவன்தான். எனது கம்பளிகளில் சிலவற்றை நீங்கள் உங்கள் படுக்கையில் போட்டுக்கொள்ளுங்கள்.'

சிறையிலும் மனிதநேயம் வியாபித்திருப்பது வியப்புதான். நான் அவருக்கு நன்றி சொன்னேன்.

'துன்ப காலத்தில் மனிதனுக்கு மனிதன் துணையாயிருக்க வேண்டும் என்று பண்டைய அறிஞர்கள் வற்புறுத்தியிருக்கின்றனர். ஒரு கிரேக்க வாசகம், ''உலகத்தை வேண்டுமானாலும் எடுத்துக் கொள். ஒரு நண்பனை மாத்திரம் எனக்குக் கொடுத்துவிடு'' என்கிறது. தனிமையில் உலகம் யாருக்கு வேண்டும்? என் பேச்சிலே

என் புலமை பளிச்சிட்டுவிட்டது. அவருக்கும் என் படிப்பு தெரிந்திருக்கட்டும் என்ற ஆசையில்தான் அப்படிப் பேசினேனோ என்னவோ?'

எனது சக கைதி தொடங்கிவிட்டார்:

'உலகத்தைப்பற்றிப் பேச வந்தால்...உலகமானது அந்திம திசையில் இயங்கிக்கொண்டிருக்கிறது. படைப்பு இரகசியம் எல்லாக் காலங்களிலும் எல்லாத் தத்துவஞானிகளுக்கும் புதிராகவே இருந்துவந்திருக்கின்றது. உலக சிருஷ்டியைப் பற்றித்தான்! எத்தனை யெத்தனை கருத்துகள் சொல்லப்படுகின்றன. சஞ்சோனியத்தான், மானிதோ, பெராஸஸ், ஆசியஸ், லூசினஸ் இவர்களெல்லாரும் புதிரை அவிழ்க்கமுயன்றும் வெற்றிபெற முடியவில்லையே. லூசினஸ் என்ன சொல்கிறாரென்றால்—கிரேக்க மொழியிலே......'

'கொஞ்சம் இருங்கள்—புலமை பளிச்சிடும் உங்கள் பேச்சிலே குறுக்கிடுவதற்கு மன்னிக்கவேண்டும். இதையெல்லாம நான் முன்னே எங்கேயோ கேட்டது போலிருக்கிறதே. வெல்பிரிட்ஜு சந்தை விழாவில் உங்களைச் சந்தித்த பாக்கியம் எனக்குக் கிடைத்ததென ஞாபகம். தங்களது பெயர் எப்பிராயீம் ஜென்கின்ஸன் அல்லவா?'

அவர் ஒரு பெருமூச்சுவிட்டார். நான் கேட்டுவிட்டேன்:

'உங்களுக்குக் கண்டிப்பாய் நினைவிருக்கும். டாக்டர் பிரிம்ரோஸு என்பவரிடம் நீங்கள் ஒரு குதிரை வாங்கவில்லை?'

அவருக்கு நன்றாய் நினைவுவந்துவிட்டது. துயரோடு இருளும் கலந்திருந்த அந்த இடத்தில் அவர் என்னை முதலிலேயே அடையாளம் தெரிந்துகொள்ளாமல் போனதில் ஆச்சரியமொன்று மில்லை.

'ஆமாம், சார். நன்றாய் நினைவிருக்கு. குதிரை வாங்கினேன், பணம் கொடுக்க மறந்து போய்விட்டது. உங்கள் அண்டைவீட்டுப் பிளாம்பரோவை நினைத்தால்தான் எனக்குச் சற்றுப் பயம். கள்ள நோட்டு அடிச்சதா அடுத்த விசாரணையில் எனக்கு விரோதமாய்ச் சாட்சி சொல்லப் போறாராம். உங்களை ஏமாத்தினதை நினைச்சா எனக்கு வருத்தமா இருக்கு. எத்தனையோ பேரை ஏமாத்தினேன். அப்படியெல்லாம் ஏமாத்தி என்னத்தைக் கண்டேன். சிறையிலேதானே கிடக்கிறேன்!'

'இங்கே என்னிடம் நீங்கள் மிகுந்த பரிவு காட்டினீர்கள். கைம்மாறு கருதாது எனக்குக் கம்பளிகள் கொடுத்து உதவ முன் வந்தீர்கள். திரு. பிளாம்பரோவை நான் கவனிச்சுக்கிறேன். உங்களுக்கு விரோதமா சாட்சி சொல்லாமலிருக்க அவரைக் கேட்போம். என் மகனை அவரிடம் அனுப்புகிறேன். நான் சொன்னால் அவர் எப்படியும் கேட்பார். குதிரை விஷயமாக நானும் உங்களுக்கு விரோதமாக எதுவும் சொல்லமாட்டேன்.'

'நீங்க என்ன செய்யணும்னு விரும்புகிறீங்களோ அதை யெல்லாம் நான் செய்றேன் சார். படுக்கைக்கு வேண்டியதை எடுத்துக்கொள்ளுங்கள். இந்தச் சிறைச்சாலையிலே, இனி நீங்கள் என் நண்பர். எனக்கு இங்கே கொஞ்சம் செல்வாக்கு உண்டு.'

ஆமாம், இவர் எப்படி இவ்வளவு இளமையானார்! நாம் முன்னால் பார்த்தபோது குறைந்தது ஐம்பது வயதாகத் தோற்ற மளித்தாரே என்று நான் வியந்து கேட்டபோது வந்தது பதில்:

'சார், உங்களுக்கு உலகம் தெரியவில்லை. அப்பொழுது கள்ளமுடி வைத்திருந்தேன். பதினேழு முதல் எழுபதுவரை எந்த வயசு வேஷமும் எனக்குப் போடமுடியும். எல்லா அயோக்கியத் தனத்தையும் படிச்சுவச்சதனாலேதான் இப்படிக் குட்டிச்சுவராப் போனேன். அதையெல்லாம் படிச்சதுக்கு உருப்படியா ஒரு தொழில் படிச்சிருந்தேன்னா, இந்நேரம் சுகமா வாழலாம். அது போகட்டும் சார், இப்ப நான் உங்க நண்பன். எதிர்பாராமல் திரும்பச் சந்திச் சிருக்கோம்.'

சிறைச்சாலை வேலையாள்களில் ஒருவர் வந்ததும் எங்கள் பேச்சு நின்றது. கைதிகளின் பெயர்களை வாசித்து அவர்களை அறைகளுக்குள் விட்டுப் பூட்டுவதற்கு வந்தவர் அவர். இன்னொரு வர் வைக்கோலுடன் வந்து என்னை ஓர் இருண்ட ஆளோடியின் வழியே கூட்டிக்கொண்டுபோய் ஓர் அறையில் விட்டார். இதிலும் தரையில் கல் பாவியிருந்தது. அதன் ஒரு மூலையில் நான் வைக்கோலைப் பரப்பி அதன்மீது என் படுக்கையையும் ஜென் கின்ஸன் கொடுத்த போர்வைகளையும் பரப்பினேன். அதன்பின் அவர் என்னிடம் மரியாதையாக இரவு வணக்கம் சொல்லிவிட்டு வெளியேறினார். எல்லா மனிதரையும் திருத்தி நல்வழிப்படுத்து கின்ற இறைவனைத் தியானித்துவிட்டுப் படுத்தேன். விடியும் வரை எவ்விதக் கவலையுமின்றி நிம்மதியாய் உறங்கினேன்.

26

[சட்டம் முழுமையாக இயங்குவதென்பது, அது குற்றத்துக்குத் தண்டனை அளிப்பதுபோலவே நன்னடத்தைக்கு வெகுமதி அளிப்பதுமாகும்.]

காலையில் கண்விழித்தபோது என் மனைவிமக்கள் என் படுக்கையைச் சுற்றிக் கண்ணீர் வடித்துக்கொண்டு நின்றிருந்தனர் சிறைச்சாலையின் பிரம்மாண்டமான கற்சுவர்கள் அவர்கள் மனத்தில் இனந்தெரியாத துயரத்தைத் தோற்றுவித்திருக்க வேண்டும். அவர்கள் துயரப்படுவது தேவையற்றது என்று எடுத்துச்சொன்னேன். அன்றிரவுபோல் நான் என்றைக்குமே அவ்வளவு நிம்மதியாய்த் தூங்கவில்லை என்றும் சொன்னேன்.

ஒலிவியா வரவில்லை. அவளுக்குக் காய்ச்சல் அதிகமாயிருப்பதால் அழைத்துக்கொண்டு வரவில்லையாம். பின், மோசேயை அனுப்பிச் சிறைச்சாலைக்கு அருகில் என் குடும்பம் வசிக்கும்படியாக வாடகைக்கு அறைகள் ஏற்பாடு பண்ணச் சொன்னேன். அவன் போய்த் திரும்பிவந்து ஓர் அறைதான் கிடைத்திருப்பதாகச் சொன்னான். வாடகை பரவாயில்லை. இதையெல்லாம் கவனித்துக்கொண்டேயிருந்த சிறைக் காவலாளர், மோசேயும் சிறுவர்களும் என் அறையிலேயே தங்கிக்கொள்ளலாமென அனுமதி தந்தார். அவர்களுக்கு அறையின் ஓர் ஓரத்தில் படுக்கை தயாரித்தோம்.

சிறையினுள் நுழைந்தபோது அவர்கள் முகத்திலிருந்த பயத்தை நினைவுகூர்ந்தவனாய் நான் கேட்டேன் :

'ஏண்டா இந்தப் படுக்கை எப்படியிருக்கிறது? இந்த அறை இருட்டாயில்லே? உனக்குப் பயமா இல்லையா?'

'பயமாவே இல்ல. நீங்க தான் கூடஇருக்கீங்களே' என்றான் டிக்கு.

'அப்பாகூட இருந்தாத்தான் நல்லா இருக்கு' என்றான் நான்கு வயது பில்லு.

குடும்பத்தில் ஒவ்வொருவரும் செய்யவேண்டிய கடமைகளைக் குறித்தேன். சோபியா உடல்நலமில்லாத அக்காளைக் கவனித்துக்கொள்ளவேண்டும். என் மனைவி என்னைப் பார்த்துக் கொள்ள வேண்டும். சிறுவர்கள் எனக்கு வாசிக்க வேண்டும். மோசேயிடம் தெளிவாய்ச் சொன்னேன்:

'அப்பா மகனே, இனி உன் உழைப்பால்தான் குடும்பம் நடக்கவேண்டும். நீ தினக்கூலிக்குப் போய்ச் சம்பாதிப்பதைக் கொண்டு சிக்கனமாகச் செலவு செய்தால் நாம் எல்லாரும் சௌக்கியமாக இருக்கமுடியும். உனக்குப் பதினாறு வயதாகிவிட்டது. உடலில் வலு இருக்கிறது. அதை நல்லபடி பயன்படுத்தினால் நாம் பட்டினியினின்று தப்பிவிடலாம். ஆகவே; நீ வேலை தேடிச் சென்று உழைத்து அன்றன்றுள்ள சம்பாத்தியத்தைக் கொண்டுவந்து கொடு.'

குடும்ப காரியங்களை இவ்வாறு ஒழுங்கு செய்துவிட்டு நான் பொது அறைக்கு வந்தேன். காற்றோட்டமுள்ள பெரிய அறை. ஆனால், அங்கு என்னால் இருக்கமுடியவில்லை. கைதிகளின் ஆபாசப் பேச்சுகளும், தூஷணங்களும் மற்றும் கீழ்த்தர நடவடிக்கைகளும் சகிக்க முடியாதபடி போகவே மீண்டும் என் அறைக்குள் தஞ்சம் புகுந்தேன். ஆனால், என் மனம் அவர்களைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தது. அவர்கள் இப்படிச் சண்டையிடவும் அசிங்கமாகப் பேசவும் காரணம் என்ன? அவர்கள் மனத்திலே பகை மண்டிக் கிடக்கிறது. உலகத்திலே எல்லாருமே தங்களுக்கு எதிரிகள் என நினைக்கின்றனர். இந்த மனப்பான்மையால் தங்கள் வாழ்க்கையையே நரகமாக்கிக் கொள்ளுகின்றனர். அவர்களது துயரத்தோடு ஒப்பிடுகையில் என் கஷ்டம் எனக்கு இப்பொழுது அற்பமாகத் தோன்றிற்று. மனித ஜீவன்கள் என்றே சொல்லமுடியாதபடி வெட்கம் மானம் சிறிதும் இன்றித் தோன்றிய அவர்கள்மீது எனக்குக் கருணை பிறந்தது. அவர்களை மீட்பது என்மேல் விழுந்த கடமையென உணர்ந்தேன். ஆகவே, மீண்டும் அவர்கள் நடுவே போகவேண்டும்; அவர்கள் என்னை அசட்டை பண்ணினாலும் அதைப் பொருட்படுத்தாமல் அவர்களிடம் இதமாகப் பேசி, நல்லறிவு புகட்டவேண்டும்; அன்பினாலும் விடாமுயற்சியினாலும் அவர்களை வெல்லவேண்டும் என்று தீர்மானம் பண்ணினேன்.

மீண்டும் பொது அறைக்குள் நுழைந்தேன். முதலில் திரு. ஜென்கின்ஸனிடம் தனியே என் எண்ணத்தை வெளியிட்டேன். அவர் பெரிதாகச் சிரித்தாலும், அதை மற்றவர்களிடம் போய்ச் சொன்னார். திட்டம் மிக அமர்க்களமாக வரவேற்கப்

பட்டது. காரணம் அவர்களுக்கு வேறு எந்தவிதமான பொழுது போக்குமில்லை. பரிகாசம், ஆபாசம் இவற்றிலேயேதாம் நேரத்தைக் கழித்தனர். ஆகவே, இது ஏதோ புது தினுசு தமாஷ் போலிருக்கிறது என்ற எண்ணத்தில் உடன்பட்டனர்.

நான் அவர்கள் நடுவே போய் நின்றுகொண்டு ஆராதனை துதிப்புத்தகத்திலிருந்து ஒரு பகுதியைச் சத்தமாக ஆனால் இயல் பான குரலில் வாசித்தேன். அவர்கள் பெருஞ்சத்தமாய்ச் சிரித்து ஆர்ப்பரித்தனர். அசிங்க ஜோக்கு, கிசுகிசுப்பு, பாவத்துக்கு வருந்தி மன்னிப்புக் கேட்பது போன்று நடிப்பு, கண்ணடிப்பு, கனைப்பு இவைகளினாலுண்டான சிரிப்பு, இந்த லூட்டியை நான் கவனித் தாலும், அதைப் பெரிதாகப் பொருட்படுத்தாமல் என் பாட்டுக்கு பக்தியோடு வாசித்துக்கொண்டே போனேன். ஓரிருவர் திருந்தி னாலும் அதுவே பெரிய வெற்றிதானே எனக்கு!

வாசித்து முடிந்ததும் பிரசங்கத்தைத் தொடங்கினேன். அதன் நோக்கம் அவர்களைக் கண்டிப்பதன்று. அவர்கள் மனங்களை மகிழ்விப்பதே. அந்த நோக்கமேயன்றி வேறு எதுவும் கிடையாது என்பதை முதலில் அவர்களுக்குத் தெளிவுபடுத்தி னேன். நானும் அவர்களைப் போன்றவொரு கைதி. அவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுவதால் எனக்கு ஆதாயமில்லை என்று விளக்கினேன்.

அவர்கள் பேசிய தூஷணங்களும் சாபங்களும் என்னை மிகவும் வருத்தியதாகச் சொன்னேன். இத்தகைய பேச்சினால் யாருக்கு இலாபம்? அனைவருக்கும் நஷ்டம்தான் விளைகிறது என்றும் எடுத்துச் சொன்னேன்.

'நண்பர்களே! ஆம். நீங்கள் என் நண்பர்கள். உலகில் மற்றை யோர் உங்களை நண்பர்களாக ஏற்றுக்கொள்ளக் கூசலாம். ஆனால், நான் உங்கள் நண்பன் என்பதை முதலில் நீங்கள் நம்பவேண்டும். நீங்கள் சதா சாபமிட்டுக்கொண்டும் தூஷணம் பேசிக்கொண்டும் பொழுதைப் போக்குகிறீர்களே. அதனால் உங்களுக்குக் கால் காசுக்கு இலாபமுண்டா? நீங்கள் சாத்தானின் பிடியில் வசமாய் அகப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் இம்மாதிரியான வாழ்க்கை வாழ்வதைக் கண்டு அவன் ஆனந்தப்படுகின்றான். அதற் காகவே அவன் உங்களைச் சிறையில் தள்ளினான். நீங்கள் அவன் பிடியினின்று தப்பவேண்டும். இல்லையேல் மறுமையிலும் அவன் உங்களைப் பயங்கரமான பாவப் படுகுழிக்குள் தள்ளிவிடுவான். உங்களை ஏமாற்றுகின்ற சாத்தானிடமிருந்து நீங்கள் விலகி வாருங்கள். இந்த மோசப் பாதையை விட்டுவிட்டு, எப்போதும் நம்மை விருப்பி அழைக்கின்ற பரமபோதகரின் பாதையில் வந்து

சேருங்கள்.' இவ்வாறெல்லாம் நான் உபதேசித்தேன். சிலர் என்னைப் பாராட்டினார்கள். மகிழ்ச்சியுடன் என் கைகளைப் பிடித்துக் குலுக்கினார்கள். என் நேர்மையை வியந்துவிட்டு, என்னிடம் மேற்கொண்டு பழகவும் விருப்பம் தெரிவித்தனர். எனக்கும் உற்சாகம் உண்டாயிற்று. அவர்களைச் சீர்திருத்திவிடலாம் என்ற நம்பிக்கை தலையெடுத்தது. மறுநாளும் நான் அவர்களுக்கு உரையாற்றுவேன் என்று அவர்களிடம் தெரிவித்தேன். மகா மோசமாய்ச் சீரழிந்து போனவனையும் மனம் நெகிழச் செய்து சீர்திருத்திவிடலாமென்ற நம்பிக்கை எனக்கு எப்போதுமே உண்டு. உற்சாகமாக என் அறைக்குத் திரும்பினேன். அங்கே என் மனைவி எளிமையான உணவு தயாரித்து வைத்துக்கொண்டு காத்திருந்தாள். திரு. ஜென்கின்ஸன் தமது ஆகாரத்தையும் கொணர்ந்து எங்களோடு அமர்ந்து சாப்பிட விரும்பினார். என்னோடு அளவளாவுவது அவருக்குப் பிடித்திருக்கிறதாம்.

சாப்பிடுவதற்காக என் பிள்ளைகளும் என் அறைக்குள் வந்து கூடினர். பொது அறைவழியாய் வருவதைத் தவிர்த்து இருண்ட ஆளோடி வழியே வந்தனர். சோபியாவின் சோகம்கவிந்த முகத்தின் அழகையும், சிறுவர்களின் சுட்டித்தனத்தையும் கவனித்த ஜென்கின்ஸனுக்கு அங்கலாய்ப்பாய் இருந்தது.

'ஐயா, டாக்டர். இந்த அருமையான குழந்தைகள் இந்த இடத்தில் வசிக்கும்படி நேர்ந்துவிட்டதே!'

'அவர்கள் நல்லொழுக்கத்துடன் வளரவேண்டும். வேறு எதைப்பற்றியும் நான் கவலைப்பட்டுக் கொள்வதில்லை' என்றேன்.

'குடும்பத்தினர் அருகே வசித்தால் அதுவே சிறைவாசத்திலும் ஓர் ஆறுதல்.'

'ஆமாம், திரு. ஜென்கின்ஸன். அது பெரும் ஆறுதல்தான். உலகமே ஈடாகக் கிடைப்பதானாலும் நான் அவர்களை இழக்க மாட்டேன். அவர்களுடனிருந்தால் பாதாளக் கிடங்கும் எனக்கு மாடமாளிகையாகத்தான் தோன்றுகிறது. அவர்களில் யாருக்கேனும் ஒரு சிறு கஷ்டம் என்றாலும் என் மனம் பொறாது.'

அப்பொழுது அவர் மோசேயைச் சுட்டிக் காட்டிக்கொண்டு சொன்னார் :

'நான் உங்கள் மகனுக்குக் கஷ்டம் கொடுத்தவன்தான். அவர் என்னை மன்னிக்கவேண்டும்' என்றார்.

என் மகன் அவரைப் பார்த்ததுமே, அவர் குரலையும் முகத்தையும் அடையாளம் தெரிந்துகொண்டான். இதற்கு முன் அவன் அவரைக் கண்டிருந்தது மாறுவேடத்தில்தான். அவன் சிரித்தவாறே அவரது கைகளைப் பிடித்துக் குலுக்கித் தன் மன்னிப்பைத் தெரிவித்தான்.

'ஆனால் ஒன்று தெரியவேண்டும். நான் ஏமாளி என்று நீங்கள் நினைக்கக் காரணம் என்ன? என் முகத்தில் அப்படி ஏதேனும் ஏமாளித்தனம் வெளிப்படையாய்த் தெரிந்ததோ?'

'அதெல்லாம் ஒன்றுமில்லை சார். உங்கள் வெள்ளைக் கால் சராயும், தலையில் சுற்றியிருந்த கறுப்பு ரிப்பனும்தான் என்னைக் கவர்ந்தன. நீங்கள் என்ன, உங்களைவிடவும் பல கில்லாடிகளை நான் முட்டாளாக்கியிருக்கிறேன். முட்டாளாக்கி என்ன பண்ண? இப்பொழுது சிறையில்தானே மாட்டிக்கிடக்கிறேன்?'

மோசே சொன்னான் :

'உங்கள் வரலாற்றை எழுதினால் மிகவும் சுவையான புத்தகமாக அமையும். பிறருக்குப் பயன்படுவதாகக்கூட இருக்கும்.'

'இருக்காது. ஏமாற்று வித்தைகளைப் படித்தால், படித்தவருக்குப் பிறர்மீது எப்போதும் சந்தேகங்கள்தாம் தோன்றிக் கொண்டிருக்கும்; முன்னேறவொட்டாமல் தடுக்கும். அதிகம் தெரிஞ்சவன்தான் பெரிய முட்டாள். நான் குழந்தையாக இருந்தபோதே தந்திரசாலி என்று பெயர் வாங்கிவிட்டேன். ஏழு வயதில் பெண்கள் என்னை ''சின்ன ஆம்பிளை'' என்றார்கள். பதினாலு வயதில் உலகம் தெரிந்துவிட்டது. தொப்பியைச் சாய்த்து வைத்துக்கொண்டு காதல்புரியத் தொடங்கிவிட்டேன். இருபது வயதில் ஏதோ நேர்மையாகத்தான் நடந்துகொண்டிருந்தேன். ஆனால், யார் விட்டார்கள்? தந்திரசாலி என்று பெயர் வந்துவிட்டதால் யாரும் எதற்கும் என்னை நம்பத் தயாராக இல்லை. அதனால் பிறரை ஏமாற்றிப் பிழைப்பதே தொழிலாயிற்று. எப்படி எப்படி ஏமாற்றலாம் என்று என் மனத்தில் விதவிதமான யோசனைகள் சுழன்றுகொண்டிருக்கும். அகப்பட்டுக்கொள்வோமோ என்று நெஞ்சு திக்திக்கென்று அடித்துக் கொள்ளும். உங்கள் அண்டைவீட்டுப் பிளாம்பரோவை நான் வருடாவருடம் ஏமாற்றியிருக்கிறேன். பாவம், அப்பாவி என்று அவரை இளக்காரமாய் நினைப்பதுண்டு. ஆனால், அவருக்குச் செல்வம் அதிகரித்துக்கொண்டு போகிறது. நானோ ஏழையாய் மோசடிக்காரன் என்ற பெயருடன் சிறையில் கிடக்கிறேன். ஏழையாக இருந்து யோக்கியனாக இருந்தாலாவது ஏதோ நல்ல

பெயருடன் காலங்கழிக்கலாம். என் கதை இருக்கட்டும். நீங்கள் இங்கே எப்படி வந்து சேர்ந்தீர்கள்? எனக்கு என்னை இங்கிருந்து விடுவித்துக்கொள்ள முடியாவிட்டாலும், பிறர் விடுதலை பெற ஒருவேளை உதவமுடியுமென நினைக்கிறேன்.'

அவர் விரும்பியதால் நான் ஆதியிலிருந்து நடந்தவற்றை யெல்லாம், எங்கள் முட்டாள்தனங்கள் உட்பட விவரமாய்ச் சொன்னேன்.

கதையைக் கேட்டுவிட்டு அவர் சில நிமிடங்கள் வாளாவிருந் தார், பிறகு, ஏதோ யோசனை உதித்ததுபோல் நெற்றியில் விரலால் தட்டிக்கொண்டார். 'முயற்சிசெய்து பார்ப்போம்' என்று சொல்லி எங்களிடம் விடைபெற்றுக் கொண்டார்.

27

[அதே பொருள் தொடர்கிறது]

சிறைக் கைதிகளைச் சீர்திருத்தும் என் திட்டத்தை நான் என் மனைவிமக்களிடம் சொல்லியபோது அவர்கள் அதை ஆதரிக்கவில்லை. தேவையற்றது, வெற்றி காண முடியாதது என்பது அவர்கள் கருத்து. கைதிகளாவது திருந்துவதாவது. என் குருத்துவப் பணிக்கு என் முயற்சி இழுக்குக் கொண்டுவரும் என்றெல்லாம் சொல்லி என்னைத் தடுக்கப் பார்த்தனர்.

ஆனால் நான் மசியவில்லை.

'மோசமானவர்களானாலும் அவர்கள் மனிதர்களே. எனவே, அவர்களிடம் அன்புகாட்டுவது நமது கடமை. என் ஆலோசனையை அவர்கள் ஏற்காவிட்டால் அது திரும்ப என் மடியிலே வரும். எனக்கு நன்மையே விளையும். தீங்கு உண்டாகப் போவதில்லை. என் குழந்தைகளே, இதே கைதிகள் அரசகுமாரர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்பொழுது இவர்களுக்குப் பணிபுரியப் பலபேர் ஓடோடி வரமாட்டார்களா? அரசனின் ஆத்மாவும் ஏழையின் ஆத்மாவும் ஒரே மதிப்புடையதுதான். அவர்களைச் சீர்திருத்துவது என்மேல் விழுந்த கடமையாக எனக்குத் தோன்றுகிறது. ஒருசிலரேனும் என் சொல் கேட்க மாட்டார்களா? இந்தப் படுகுழியினின்று என் முயற்சியால் ஒரே ஒருவன் மீண்டு வந்தால்கூட, அதுவே எனக்குப் பெரிய சாதனையாகத்தானிருக்கும். மனித ஆத்துமாவைவிடவும் விலையேறப் பெற்றது வேறு எதுவுமே கிடையாது.'

எனவே, நான் இரண்டாம் முறையாகப் பொது அறைக்குச் சென்றேன். அங்கே அவர்கள் என் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். ஒவ்வொருவனும் ஒவ்வொரு விஷமத்தைச் செய்யத் திட்டமிட்டு வைத்திருந்தான்போலும். ஒருவன் என்னருகில் சரேலென்று கடந்து என் தொப்பியை (நான் உணராதபடி) திருகி வைத்துவிட்டுச் சென்றான். இன்னொருவன் எட்ட நின்றுகொண்டு வெகு லாவகமாய்ப் பல்லினூடே துப்ப அது என் புத்தகத்தின்மீது சரமாரியாய்த் தெறித்தது. இன்னொருவன் 'ஆமென்' என்று ஒரு

தினுசாய்ச் சொல்ல அதைக் கேட்டு எல்லாரும் அட்டகாசமாய்ச் சிரித்தனர். வேறொருவன் என் கண்ணாடியை எப்படியோ தந்திரமாய்க் கூட்டோடு நகர்த்திக்கொண்டு போய்விட்டான். மற்றுமொருவன் நான் புத்தகங்களை மேஜைமீது வைத்ததும் அவற்றில் ஒன்றைக் கடத்திவிட்டு அதற்குப்பதில் ஆபாச விகடப் புத்தகமொன்றைப் புகுத்திவிட்டிருந்தான். இந்தக் குறும்புகளைக் கண்டு எல்லாரும் விடாமல் கெக்கலிச் சிரிப்புச் சிரித்துக்கொண்டிருந்தனர். நான் இவற்றையெல்லாம் பொருட்படுத்தவில்லை. இவை தாற்காலிக வேடிக்கைகள். சிறிது நேரத்தில் சலித்துப் போகும். ஆனால், நான் சொல்லவிருக்கும் செய்தியும் செய்யவிருக்கும் தொண்டும் நிலையாக நின்று பயன்தரக்கூடியவை. ஆதலால், அமைதியாக என் நிகழ்ச்சிநிரலைத் தொடர்ந்து நடத்திக்கொண்டு சென்றேன். நான் எதிர்பார்த்தபடியே பலன் இருந்தது. ஒரு வார அளவில் இந்த வேடிக்கைகள் குறைந்தன. என் பேச்சைக் கவனித்துக் கேட்பவர் அதிகமாயினர்.

என் ஆர்வமும் அதிகமாயிற்று. அவர்களிடையே மென்மையான உணர்வுகள் சிறிது தலைகாட்டத் தொடங்கியதும் அதைக் கண்டு மகிழ்ந்தேன். அடுத்தபடியாக அவர்களது பொருளாதார நிலையில் அபிவிருத்தி ஏற்படுத்த முயற்சிகள் எடுத்தேன். பொதுவாகக் கைதிகள் உருப்படியான வேலையைச் செய்வதில் ஆர்வம் காட்டுவதில்லை. கையில் காசு கிடைத்தால் வயிறுமுட்டத் தின்பார்கள்; அது இல்லாதபோது பட்டினி கிடப்பார்கள். அவர்கள் வேலையெல்லாம் சண்டையிடுவதும், சீட்டாடுவதும், புகையிலை டப்பா மூடியை அடித்து ஓசையெழுப்புவதும்தான்.

அவர்கள் புகையிலை டப்பா மூடிகளை அப்படி வெட்டித் தகர்ப்பதும் அடிப்பதுமாயிருந்ததைக் கண்டதும் எனக்கொரு யோசனை உண்டாயிற்று. புகையிலை வியாபாரிகளுக்கும் செருப்புச் செய்கிறவர்களுக்கும் முளைகளும் ஆப்புக்கட்டைகளும் பெருமளவில் தேவைப்பட்டன என்பதை நான் அறிந்திருந்தேன். எனவே, சந்தா சேகரித்து, பொருத்தமான மரக்கட்டைகளை வாங்கி அந்த முளைகளையும் ஆப்புக்கட்டைகளையும் செய்வதற்குக் கற்றுக் கொடுத்தேன். செய்தவற்றை விற்றுக் காசாக்குவதற்கும் வழி செய்தேன். இத் தொழில்மூலம் தினமும் ஒவ்வொருவனுக்கும் ஒரு சிறிய தொகை கிடைக்கலாயிற்று. அதன் பிறகு அவர்கள் பட்டினி கிடக்க நேரிடவில்லை. விசேஷ தொழில்திறமை காட்டுபவர்க்குப் பரிசளிக்க ஏற்பாடு செய்தேன். ஒழுக்கம் தவறி நடப்போருக்கு அபராதம் விதித்தேன். ஆகக்கூடி இரண்டு வாரங்களுக்குள் அஃது ஒரு மனித சமுதாயம் என்று சொல்லக் கூடியபடி மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. மூர்க்கமும் வெறி

யாட்டமும் குறைந்தன. மரியாதையும் பணிவும் தலைகாட்டத் தொடங்கின. கெட்ட வார்த்தைகள் அருகின. நட்புறவு வளர்ந்தது. அவர்களுக்குச் சட்டங்கள் அமைத்துக் கொடுக்கும் தலைவனானேன் நான்.

சட்டம் என்பது கெட்டுப்போகின்ற மனிதனைச் சீர்திருத்த வழிவகுப்பதாய் அமையவேண்டும்; அவனுக்குக் கிடைக்கக்கூடிய தண்டனையை முன்னிறுத்திப் பயமுறுத்துவதாக அமையக்கூடாது. தண்டனை என்பதும் ஓரளவுதான் குற்றவாளியைப் பயமுறுத்துவதாக அமையவேண்டும்; அவன் குற்ற உணர்வை மறக்கச் செய்வதாக இருக்கக்கூடாது. இப்போது நமது சட்டங்களின் தன்மையும் சிறைச்சாலைகளின் நிலையும் பயங்கரமானது. சிறையினுள் நுழையும் குற்றவாளி மேலும் பல குற்றங்கள் புரியக்கூடிய சூழ்நிலை தான் அங்கு உள்ளது. அவன் உயிரோடு வெளியில் வந்தால் பல்லாயிரம் குற்றங்கள் புரியக்கூடிய கசப்பான மனநிலையில்தான் வெளியே வருகின்றான்.

இப்போது ஐரோப்பாவில் சிறைச்சாலைகளின் சூழ்நிலை வெகுவாகத் திருந்திவருகின்றது. குற்றவாளி தன் குற்றத்தை நினைத்து மனம்வருந்தவும், நல்ல நெறியில் மனத்தைச் செலுத்தவும் பல வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கின்றனர். இந்த முறைகளைக் கடைப்பிடித்தால்தான் நாடு முன்னேறும்.

நமது நாட்டிலோ விதவிதமான தண்டனைகள் கொடுக்கப் படுகின்றன. சிறிய களவுக்குக்கூடக் கொலைத்தண்டனை விதிக்கப் பெறுகின்றது. இது மிகவும் கொடியது; அநீதியானது. அண்மையில் ஏற்பட்ட பெரிய சமுதாய-பொருளாதார மாற்றங்களினால் இந் நிலை எப்படியோ உருவாகிவிட்டது. கொலைபுரிந்தவனுக்குக் கொலைத்தண்டனை வழங்குவது நியாயமாகலாம். பிறரது அற்பப் பொருளைத் திருடியவனுக்கும் கொலைத்தண்டனை விதிப்பது பெரிய அதர்மமாகும்.

பழங்குடி மக்களிடையே கொலைகளும் கொலைத்தண்டனைகளும் மிகக் குறைவு. அவர்கள் இயற்கை நியதிகளோடு ஒட்டி வாழ்ந்தது ஒரு காரணமாக இருக்கலாம். ஆதிநாளில் இங்கிலாந்தில் வந்து குடியேறின சாக்ஸானியர் போர்க்களத்தில் மிகுந்த மூர்க்கம் காட்டியபோதும், சமாதான காலங்களில் அமைதியாக வாழ்ந்ததாகத்தான் படிக்கிறோம். இப்பொழுதும் இயற்கை நியதிகளை அனுசரித்து வாழ்கின்ற பல சமுதாயங்களில், கொலைத் தண்டனை தரப்படுவதேயில்லை.

நமது நாட்டிலோ தண்டனைச் சட்டம் இயற்றும் உரிமை, செல்வந்தர்வச மிருக்கிறது. அவர்கள் அதை ஏழைகளுக்கு எதிராகப் பயன்படுத்தி வருகின்றனர். இப்பொழுது நமது நாட்டிலே பொருள்வருவாய் அதிகம். ஆகவே, அதன் மதிப்பும் அதிகமாகின்றதுபோலும். பொருளைக் காப்பாற்றிக்கொள்ளும் பீதி, செல்வந்தருக்கு அதிகமாகிவிட்டது. அதன் காரணமாகத் தான் பல புதிய தண்டனைச் சட்டங்கள் பிறந்துவிட்டன. தூக்கு மரச் சட்டங்களிலே இந்தச் சட்டங்களைத் தொங்கவைப்பது போல வைத்து ஏழைமக்களை அவை குலைநடுங்க வைக்கின்றன.

ஒரு மனிதனது உயிரை எடுப்பதற்கு இன்னொரு மனிதனுக்கு அதிகாரம் கிடையாது.

எந்தப் பொருளும் தனியொருவனுக்குச் சொந்தமில்லை. ஒருவன் குதிரையை இன்னொருவன் எடுத்துக்கொண்டாலும்கூட அது குற்றம் ஆகாது.

ஒருவன் குதிரையை அடுத்தவன் எடுத்துக்கொண்டால் எடுத்தவன் சாகவேண்டும் என்று முதலிலேயே இருவரும் ஒப்பந்தம் பண்ணிக்கொண்டாலன்றி, எடுத்தவனைக் கொல்ல முடியாது இப்படி ஒப்பந்தம் பண்ணிக்கொள்வதற்கு மனிதனுக்கு அதிகாரம் கிடையாது. ஏனெனில், ஒரு மனிதனின் உயிரை எடுப்பதற்கு இன்னொரு மனிதனுக்கு அதிகாரம் இல்லை.

சமுதாயத்தில் ஒருவன் மாத்திரம் குதிரையில் சவாரி செய்து கொண்டிருப்பதற்கு வழிவகுப்பதைவிட, இருவரும் அந்தச் சமுதாயத்தில் உயிர்வாழ்ந்து பிழைத்துக் கொண்டிருப்பதற்கே சமுதாயச் சட்டம் வழிசெய்யவேண்டும்.

நமது நாட்டுச் சட்டங்கள் முற்றிலும் தவறானவை, அவற்றைச் சரி என்று வாதாடப் பலர் கிளம்புகின்றனர். எத்தனை ஆயிரம் பேர் வாதாடினாலும் அவை சரியாகிவிட முடியாது. பத்தாயிரம் வட்டங்கள் சேர்ந்தால் ஒரு சதுரமாகுமா? அதுபோன்றதே இதுவும்.

மனிதன் இயற்கையை ஒட்டி வாழப் படித்துக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் இத்தகைய அநீதிச் சட்டங்கள் உண்டாகா.

நமது நாட்டைப்போல் ஐரோப்பிய நாடுகளில் குற்றவாளி களின் தொகை அதிகமில்லை. இங்கே ஆண்டுக்கு ஆண்டு இத் தொகை அதிகரித்துக்கொண்டு போகின்றது. இதற்குக் காரணம் என்ன? நமது மக்களுக்குக் குற்றம்புரியும் தன்மை அதிகரித்து

விட்டதா? அல்லது நமது தண்டனைச் சட்டங்கள் மிகக் கடுமையாக இருப்பதா? இரண்டுமே காரணங்கள் என்பது என் கருத்து. ஒன்று மற்றதை உருவாக்குகிறது; ஊக்குவிக்கிறது.

தண்டனைச் சட்டங்களில் பாகுபாடு இல்லை என்பதை மக்கள் உணர்ந்துகொண்டுவிட்டனர். சிறிய குற்றங்களுக்கும் பெரிய குற்றங்களுக்கும் ஒரே வகையான தண்டனை வழங்கப்படுகிறது. தண்டனையில் வேறுபாடு இல்லாமல்போகவே, மக்கள் குற்றங்களைத் தரம்பிரித்து, மதிப்பிட்டுப் பார்க்கும் சக்தியையும் இழந்துவிட்டனர். குற்றத்தை ஆராய்ந்து மதிப்பிடும் ஆற்றல் அறம் வளர்வதற்கு அடிப்படைத் தேவையாகும்.

எனவே, நமது சட்டங்கள் புதுப்புது குற்றங்களை உருவாக்குவதற்கே உதவுகின்றன. புதுக் குற்றங்களை அடக்கப் புதுத் தண்டனைகளை உருவாக்குகிறார்கள். தண்டனைகளைக் கடுமையாக்கினால் குற்றங்கள் குறைந்துவிடும் என நமது சட்டவாதிகள் நம்புகின்றனர். உண்மையில் இக் கடுமையான சட்டங்கள் நமது சமுதாய வளர்ச்சியைத் தடுக்கின்றன; சமுதாயத்தை இறுக்கிக் கட்டிச் செயலற்றுப்போகச் செய்கின்றன. இறுக்கம் தாங்காமல் கட்டுகள் வெடிக்கும் நிலையில் அவை இப்போது இருக்கின்றன. இத் தண்டனைகள் குற்றவாளியை அறவே ஒழித்துவிடப் பார்க்கின்றன. கொடிய தண்டனைகளால் அவர்கள் உணர்வு மரத்து, மேலும் கொடிய பாவங்களைச் செய்கின்றனர்; வஞ்சம் தீர்க்கவும் பழிவாங்கவும் அலைகின்றனர். முடிவில் அழிந்தே போகின்றனர். இந்த நிலை மாறவேண்டும். அவர்கள் சீர்திருந்தி, சமுதாயத்துக்குப் பயன்படும் மனிதராக மாற வழிசெய்ய வேண்டும்.

தண்டனை என்பது ஒரு கலை. அரசு இதை உணரவேண்டும்; தண்டனைச் சட்டங்கள் மக்களைப் பாதுகாப்பதற்காக அமைய வேண்டும்; கொடுமையான கொடுங்கோல் சட்டங்களாக இருக்கக் கூடாது. குற்றவாளியின் ஆத்மா, களிம்பும் கசடும் மூடிய உலோகக் கட்டி. அவற்றை அகற்றித் தூய்மையாக்கும் வேலையைத்தான் தண்டனைச் சட்டம் செய்யவேண்டும்.

மனிதனைச் சித்திரவதை செய்தால், அவன் நம்பிக்கையிழந்து போவான். விடுதலை உண்டு என்ற நம்பிக்கைக்கு இடமில்லாமல் நீண்டநாள் சிறைக்குள் அடைத்துவைத்தாலும் அவன் நசிந்து போவான்.

குற்றவாளிகளை நடத்துகிறபடி நடத்தினால், அவர்களை ஆக்கவேலைகளுக்குப் பயன்படுத்தலாம்; ஆபத்துக் காலங்களில்

நாட்டைக் காக்கும் பணிகளில் ஈடுபடுத்தலாம். அவர்களும் நம்மைப்போன்ற மனிதர்களே; நம்மைப்போன்றே அகமும் புறமும் கொண்டவர்கள்.

நன்னெறிப்படுத்த முடியாத அளவு எந்த மனிதனும் சீர்கெட்டுப் போவதில்லை. எனவே, சிறிய குற்றத்துக்காக மரண தண்டனை கொடுத்து அவனை ஒழிப்பது பெரிய அதர்மமாகும். அவனை வாழவிட்டிருந்தால் ஒருவேளை அச் சிறு குற்றமே அவனது கடைசிக் குற்றமாக இருந்திருக்கலாம்.

நமது அற்பப் பொருள்களைப் பாதுகாப்பதற்காக நாம் சிந்தும் இரத்தம் மிக அதிகம்

28

[உலக வாழ்வின் சுகதுக்கங்கள் உலக விவேகத்தின் விளைவுகளே யன்றி ஒழுக்கத்தின் விளைவுகள் அல்லபோலும். இகவாழ்வின் சந்தோஷங்களும் தொல்லைகளும் இறைவன் பார்வையில் சின்ன விஷயங்களாகப் படுவதனாலே அவற்றின் விநியோகத்தைக் குறித்து அவர் அதிகக் கவனம் செலுத்துவதில்லைபோலும்.]

நான் சிறைக்கு வந்து இரண்டு வாரங்களாகிவிட்டன. ஒலிவியாவுக்கு நோய் கடுமையாக இருந்ததால் இன்னும் ஒருமுறை கூட அவள் என்னை வந்து பார்க்கவில்லை. அவளைப் பார்க்க ஆவலாயிருக்கிறது என்று என் மனைவியிடம் சொல்லிக்கொண் டிருந்தேன். மறுநாள் சோபியாவின் கைத்தாங்கலில் ஒலிவியா என் அறைக்குள் நுழைந்தாள். அவளைக் கண்டு நான் திடுக்கிட்டுப் போனேன். ஆள்மாறி அழகுமாறிக் கன்னமெல்லாம் குழி விழுந்து, நெற்றியெல்லாம் இறுகி, வெளிறிப் போயிருந்தாள். சவக்களையோ அது!

'லிவி, என் மகளே, வந்தாயா, அம்மா! ஆமாம் நீ இவ்வளவு துக்கமாக இருக்கவேண்டிய அவசியம் என்ன? காதலில் தோல்வி யடைந்துவிட்டதால் வாழ்க்கையையே வெறுத்துவிட வேண்டுமா என்ன? உயிர் போகுமளவுக்குத் துயரப்படுவது சரியன்று. நீ என் உயிர் போன்றவள். மகளே, சந்தோஷமாயிரு. காலம் மாறும். நமக்கும் சந்தோஷம் வரும்.'

'அப்பா, நீங்கள் என்னிடம் மிகுந்த அன்பு காட்டுகிறீர்கள். சந்தோஷம் வருகின்றபோது அதை உங்களோடு பகிர்ந்துகொள்ள நான் இருக்கமாட்டேன் என்றுதான் தோன்றுகிறது. என்வரை யில் எனக்கு இனி இந்தப் பூமியில் சந்தோஷம் கிடையாது. இங்கே துக்கம்தான் உண்டு. இவ்விடத்தைவிட்டுச் சீக்கிரமே போய் விடுவதே என் விருப்பம். நான் போய்விடுவதால் நமது குடும்பத் துக்கும் நன்மை உண்டு. நீங்கள் திரு. தாரன்ஹில்லுடன் ராசி யாகிப் போய்விடலாம். அவருக்கும் நம்மீது இரக்கம் உண்டாகும்; கொடுமைப்படுத்தமாட்டார்.'

'அது எப்படி முடியும்? நான் அவரோடு ஒப்புரவானால் என் மகளை வேசை என்று ஒப்புக்கொள்ளுவதாகிவிடுமே. உன்

குற்றத்தை நான் பெரிய குற்றமாகக் கருதவில்லையம்மா. நம்பி மோசம் போன ஏமாளித்தனமேயன்றி வேறில்லை. உலகம் உன்னைத் தூற்றினால் அதுபற்றி எனக்குக் கவலையில்லை. இந்தவிடத்தில் வசிப்பதும் எனக்கொன்றும் பெரிய சிரமமாக இல்லை. பார்ப்பதற்குத்தான் சிறை ஏதோ பயங்கரமாகத் தோன்றுகிறது. நீ மாத்திரம் உயிரோடிருக்க முயற்சிபண்ணு. அது ஒன்றே எனக்குத் தெம்பளிக்கப் போதுமானது. வேறு பெண்ணை அவன் மணப்பது அடாத செயல் என்று நான் போராடிக்கொண்டேயிருப்பேன்.'

இதையெல்லாம் திரு. ஜென்கின்ஸனும் அருகிருந்து கேட்டுக்கொண்டேயிருந்தார். அவள் போய்விட்டபின் அவளைப் போலவே அவர் என்னிடம் வாதாடத் தொடங்கிவிட்டார். தாரன் ஹில்லுக்குப் பணிந்துபோவதால் எனக்கு விடுதலை கிடைக்கு மானால் ஏன் அப்படிச் செய்யக்கூடாது? தவறிழைத்தது ஒலிவியா தானே? அவள் ஒருத்தியின் நிமித்தம் மற்றப் பிள்ளைகளின் வாழ்வையும் நான் பாழடிப்பது சரியன்று. வறட்டுப் பிடிவாத மாகும் என்று சர்ச்சையிட்டார்.

அவர் சொன்னார்:

'திரு. தாரன்ஹில்-செல்வி உல்மாட்டு திருமணத்தைக் கொள்கையளவில் நீங்கள் ஒப்புக்கொள்ளவில்லை. அதனால் அந்தத் திருமணம் நின்றுவிடப் போவதில்லை. அதை உங்களால் தடுக்க இயலாது. திருமணம் நடந்தேறிய பிறகும் நீங்கள் இப்படிச் சொல்லிக்கொண்டிருந்தால் அஃது அவ்வளவு அழகாயிருக் காது. தம்பதிகளுக்கு மிகுந்த இடைஞ்சல் விளைவிப்பதாகும்.'

'அது சரிதான். ஆனால், அந்த மனிதன் தாரன்ஹில்லைப் பற்றி நான் அறிந்த அளவு நீங்கள் அறியவில்லை. நான் பணிந்து விட்ட பின்னர்க்கூட அவன் என்னை விடுதலையாக்குவது ஐயமே. இதே அறையிலேயே அவனிடம் கடன்பட்டவன் ஒருவன் சிறைப் பட்டிருந்து இறந்துபோனதாகச் சொல்லுகிறார்கள். அவன் மகா கொடுமைக்காரன். என்னை விடுதலையாக்கமாட்டான் என்பதற்காக நான் அவனுக்குப் பணியாதிருப்பதாக நினைக்க வேண்டா. என்னை விடுதலையாக்கி ஒரு மாளிகையிலே கொண்டு போயிருத்தினாலும் நான் அவனுக்குப் பணிவதாயில்லை. அவனுக்குப் பணிந்தால் நான் விபசாரத்துக்கு உடந்தை என்றாகி விடும். என் மகள் உயிரோடிருக்கும்போது அவன் மறுமணம் செய்து கொண்டால் அது சட்டப்படி செல்லாது. அதற்குப்பின் அவன் திருமணம் செய்துகொள்ளுவதில் எனக்குத் தடையில்லை. பெண்லோலனாக அலைவதைக்காட்டிலும் அப்படிப்பட்டவன்

மணம் செய்துகொள்ளுவதே சரி. நீங்கள் சொல்லுகிறபடி நான் தாரன்ஹில்லுக்குப் பணிவுக் கடிதம் எழுதினால் வேதனை தாங்காமல் என் மகளின் உயிர் பிரிந்துவிடவும்கூடும்.'

அவரும் இதை ஒத்துக்கொண்டார். ஒலிவியாவின் உடல் நிலையைப் பார்க்கிறபோது அவள் முடிவும் சீக்கிரமே இருக்கலாம் என்றும் அவர் என்னிடம் சொன்னார். அதன்பிறகு முற்றிலும் வேறோர் ஆலோசனை சொன்னார்.

'தாரன்ஹில்லுக்குப் பணிய விருப்பமில்லையானால் போகட்டும். அவருடைய மாமா பெரிய பிரபு ஸர் வில்லியம் தாரன்ஹில் தருமர் என்று பெயர் வாங்கியிருக்கிறார். தமக்கை மகன் செய்த அடாவடித்தனங்களை விவரமாய் எழுதி அவருக்குத் தபாலில் அனுப்புங்கள். மூன்றே நாளில் அவர் உங்களுக்குப் பதில் எழுதுவார், பாருங்கள்.'

அதற்கு நான் சம்மதித்தேன். கையில் இருந்த காசு அன்று காலை உணவுக்காகச் செலவழிந்திருந்தது. ஜென்கின்ஸன்தாம் தாளுக்குக் காசு கொடுத்துதவினார்.

எல்லா விவரங்களையும் தெளிவாய் எழுதி அனுப்பினேன். மூன்று நாள்களான பிறகும் பதில் வரவில்லை. ஒலிவியாவின் உடல்நிலை மிகவும் மோசமாயிற்று. 'தாரன்ஹில்லுக்குப் பணிவுக் கடிதம் எழுதுங்கள். சிறையிலிருந்து விடுதலை கிடைக்கும்' என்று என் மனைவி நச்சரிக்கத் தொடங்கினாள். பெரியவருக்குக் கடிதம் எழுதி நான்கு நாள்களுமாயிற்று. சொந்த அக்காள் மகனுக்கு விரோதமாக அயலான் பேச்சைக் கேட்டுக்கொண்டு அவர் நடவடிக்கை எடுக்கவா போகிறார் என்ற எண்ணம் வந்தது. சிறையில் காற்றுச் சுத்தமில்லை, தீப்புண் வேதனையும் அதிக மாயிற்று. என் உடலும் தளரத் தொடங்கியது. வைக்கோல் படுக்கையின்மீது படுத்தே பொழுதைக் கழித்தேன். பிள்ளைகள் எனக்கு வாசித்தார்கள். ஒலிவியாவைப்பற்றி வந்த செய்திகள் தாம் என் நெஞ்சில் ஈட்டியைப் பாய்ச்சியது போலிருந்தன. அவள் நிலைமை கவலைக்கிடமாயிற்று.

ஸர் வில்லியம் தாரன்ஹில்லுக்குக் கடிதம் எழுதி இப்பொழுது ஐந்து நாள்களாயின. ஒலிவியா பேச்சிழந்துவிட்டாள் என்ற செய்தி வந்தது. என் சிறைவாசத்தின் கொடுமையை நான் அப்பொழுதுதான் முழுமையாக உணர்ந்தேன். சிறைச்சுவர் களைத் தகர்த்துக்கொண்டு அவளருகே போய்விடமாட்டோமா என்று ஏக்கம் உண்டாயிற்று. அவள் உயிர் பிரியும்போது அவளருகே

அமர்ந்து அவளைத் தேற்றி அவளது கடைசி விருப்பங்களை நிறைவேற்றி அவள் ஆத்துமாவை வழியனுப்பி வைக்க விரும்பினேன்.

அடுத்த செய்தி அவள் ஆவி பிரிந்துகொண்டிருப்பதாக வந்தது. அவளருகே நின்று கண்ணீர் சிந்தும் பேறுகூடக் கிடைக்காமல் போயிற்று. இறுதிச் செய்தியும் வந்துவிட்டது. ஆம். அவள் இறந்துவிட்டதாகத் திரு. ஜென்கின்ஸன் வந்து தெரிவித்துவிட்டு எனக்கு ஆறுதல் வார்த்தைகளும் சொல்லிவிட்டுப் போனார்.

மறுநாள் காலை சிறுவர்களை என்னிடம் கொண்டுவந்து விட்டார். அவர்களது குழந்தைப் பேச்சு என் மனத்தைத் தேற்றியது. அவர்கள் எனக்கு வாசித்துக் காட்டவும் என்னைத் தேற்றவும் முன்வந்தனர். நான் அழுதபோது—நான் அழுவதற்கு வெட்கப்படவில்லை—அவர்கள் கேட்டார்கள்: 'அழாதீங்க அப்பா, அக்கா இப்போ தேவதையாயிருக்காளாமே! பின்னே ஏன் கவலைப்படவேணும்? எனக்கும் தேவதையாக ஆசையா இருக்கு. தேவதையாயிட்டா இந்த இடத்தைவிட்டு நாம் போயிடலாம். அப்பாவும் எங்ககூட வரணும்.'

சின்னவன் சொன்னான்:

'அக்கா மோட்சத்துக்குத்தான் போயிருக்காளாம். அங்கே எல்லாமே ரொம்ப அழகா இருக்குமாம். மனுஷரும் நல்லவங்களாம். கெட்ட மனுஷரே கிடையாதாம். இங்கேயிருக்கிறவங்க கெட்டவங்க.'

திரு. ஜென்கின்ஸன் பழைய பேச்சை எடுத்தார். ஒலிவியா இறந்துவிட்டாள். இனிக் குடும்பத்தில் மற்றவர்களை வீணே கஷ்டப்படுத்துவானேன்? அவர்கள் நன்மையைக் கருதுவது என் கடமையல்லவா? அவர்களுக்காக நான் என் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளவும், என் உடல்நலனைப் பேணவும் அவசியமாகிறதல்லவா? இந்த இடத்தைவிட்டு வெளியேறுவது முக்கியமல்லவா? இனியும் நான் பெருமை பாராட்டினால் அது வறட்டு வைராக்கியமே அன்றி வேறில்லை. என்னை நம்பியிருக்கும் குடும்பத்தினரை நான் மேலும் இன்னலுக்குட்படுத்தக் கூடாது.

இவ்வாறெல்லாம் எடுத்துச் சொன்னார். அதை மறுத்துரைக்க என்னால் முடியவில்லை.

'இனிச் சொல்ல என்னவிருக்கிறது; இறையருள் முன்னின்று நடத்தட்டும். எனக்கு இனிப் பெருமை இல்லை. எனது எதிரியான

திரு. தாரன்ஹில் எனது சபை உறுப்பினர்தாம். அவர்மீது எனக்கு எந்தவித மனத்தாங்கலும் கிடையாது. எனது ஆன்மா மாசு மறுவின்றித் தூய்மையாக இருப்பது இறைவனுக்குத் தெரியும். மகளை இழந்த சோகத்தால் என் ஆவி தொய்ந்து போயுள்ளது. உடல் சோர்ந்துவிட்டது. உயிரினும் இனிய அவளை இழக்கக் காரணமாக இருந்தவரானாலும் அவர்மீது எனக்கு வெறுப்போ, பழிவாங்கும் எண்ணமோ இல்லை என்பது உண்மை. அவரது திருமணத்தை நான் ஒப்புக்கொள்ளுகின்றேன். என் பணிவு அவருக்கு மகிழ்ச்சியை அளிக்கலாம். நான் அவருக்கு ஏதேனும் குற்றம் இழைத்திருந்தால் நான் அதற்காக வருந்துகின்றேன்.'

நான் இவ்வாறு பேசியதும் திரு. ஜென்கின்ஸன் தாளும் பேனாவும் எடுத்து என் கருத்துப்படியே தாரன்ஹில்லுக்குக் கடிதம் எழுதி, அதில் என் கையெழுத்தை வாங்கினார். மோசேயிடம் கொடுத்து, திரு. தாரன்ஹில்லிடம் அதைச் சேர்ப்பிக்கச் சொன்னோம். அவன் போய் ஆறுமணி நேரம் கழித்துத் திரும்பி வந்தான்.

மாளிகையில் நெடுநேரம் காக்கவைத்து, வேலையாள்கள் அவமரியாதையாக நடந்துகொண்ட பின்னர் அவர் கலியாண காரியமாய் வெளியே போயிருக்கிறார் என்று தெரிவிக்கப் பட்டதாம். அவன் வெளியே வந்ததும் தற்செயலாக அவரை வெளியில் சந்தித்துப் பணிவுடன் கடிதத்தைக் கொடுத்த போது, அவர் அதைப் படித்துவிட்டுக் 'காலம் கடந்த பின்னர் வந்த பயனற்ற கடிதம்' என்று அலட்சியமாய்ச் சொன்னாராம். பெரிய பிரபுவுக்கு நான் எழுதிய விண்ணப்பக் கடிதம்பற்றியும் அவருக்குத் தெரியவந்திருக்கிறது. 'மாமா அதை எல்லாம் லட்சியம் செய்யவில்லை' என்று அலட்சியமாய்க் குறிப் பிட்டிருக்கிறார். இனி, நாங்கள் எந்தக் காரியத்துக்காகவும் அவனிடம் நேர்த்தொடர்பு வைத்துக் கொள்ளக் கூடாதென்றும் வழக்கறிஞர் மூலமாய்ப் பேசிக்கொள்ள வேண்டுமென்றும் மோசே யிடம் உத்தரவு பிறப்பித்துவிட்டு, 'பெண்கள் இருவரும் மிக நல்ல வர்கள், அவர்கள் மூலமாகத் தொடர்புகொள்ளுவதை விட்டு விட்டுக் காரியத்தைக் கெடுத்துக்கொண்டீர்கள்' என்று வேறு பிதற்றினாராம். கலியாணம் நடக்க இன்னும் மூன்று நாள் இருக் கிறது என்று செய்தியைச் சொல்லி முடித்தான் மோசே.

நான் ஜென்கின்ஸனிடம் சொன்னேன் :

'அவன் எப்படிப்பட்ட மனிதன் என்பதை இப்பொழுது பார்த்துக்கொண்டீர்கள் அல்லவா? அகம்பாவம் கொண்ட

மூர்க்கன் என்பதை இப்பொழுது ஒத்துக்கொள்ளுவீர்கள் என நினைக்கிறேன். மேற்கொண்டும் தீங்கு செய்யவே அவன் திட்டமிட்டிருக்கிறான். ஆனால், அவன் எனக்கு எவ்விதத் தீங்கும் செய்ய முடியாதபடி எனக்கு நிரந்தர விடுதலை சீக்கிரமே கிடைத்துவிடுமென்றுதான் தோன்றுகிறது. இவ்விடத்தைவிடப் பிரகாசமானதொரு வீடு என் கண்ணெதிரே தோன்றிக்கொண்டேயிருக்கிறது அஃது எனக்கு ஆனந்தத்தைத் தருகிறது. எனது குடும்பம் அநாதையாகிவிடுமென நீங்கள் நினைக்கலாம். இல்லை அவர்கள் நிராதரவாக நிற்கமாட்டார்கள். என்னிமித்தமும் ஆண்டவனிமித்தமும் அவர்களுக்கு உதவிபுரிய உற்ற மனிதர்கள் கிடைப்பார்கள்.'

அப்பொழுது என் மனைவி அரண்டுமிரண்டு ஓடிவந்தாள். பேச வார்த்தைகள் கிடைக்காமல் ஏதோ குளறினாள். ஒலிவியா இறந்தபின் நான் அவளைப் பார்ப்பது இதுவே முதல்தடவை

'என் அன்பே, என்ன நடந்தது? உங்களைப் பார்த்ததும் அடங்கிக்கிடந்த என் துக்கம் பொங்குகிறதே. மகள் போய்விட்டாளா; போகட்டும். நானும் அவள் போனவழியே சீக்கிரம் போய்விடுவேன். மற்றக் குழந்தைகள் முகத்தைப் பார்த்து நீ...'

'ஒரு மகள்தானா போய்விட்டாள்! அருமை மகள் சோபியாவும் போய்விட்டாளையா! யாரோ முரடர்கள் அவளைப் பலாத்காரமாய்த் தூக்கிட்டுப் போயிட்டா.'

'அம்மணி என்ன நடந்தது? மிஸ் சோபியாவை முரடர்கள் தூக்கிக்கொண்டு போய்விட்டார்களா? என்ன நடந்தது? விவரமாய்ச் சொல்லுங்கள்.'

ஜென்கின்ஸன் கேள்விக்குப் பதில் சொல்லும் நிலையில் அவள் இல்லை. வெறித்துப் பார்த்தாள். பின், மடை திறந்தது போல் கண்ணீர்வெள்ளம் பாய்ந்தது.

அவளுடன் வந்திருந்த ஒரு பெண்—இன்னொரு கைதியின் மனைவி—சம்பவத்தை விவரித்தாள். அவள், என் மனைவி, மகள் சோபியா மூவருமாகக் கிராமத்தை அடுத்திருந்த பெரிய வீதியில் நடந்து போய்க்கொண்டிருந்தார்களாம். அப்பொழுது வேகமாக வந்த சாரட்டுவண்டி யொன்று அவர்கள் அருகே பட்டென்று நின்று, வண்டியிலிருந்து ஒரு வெள்ளைச் சட்டை மனிதன் இறங்கி (தாரன்ஹில் அல்லவாம் அது) என் மகளின் இடுப்பை வளைத்துப் பிடித்து வண்டியினுள் தள்ளி ஏற்றி, வண்டியைச் செலுத்துவிக்க அஃது ஒரு விநாடிக்கெல்லாம் பறந்து மறைந்துவிட்டதாம்.

என் துயரம் முழுமையாயிற்று. இனி நடக்க என்ன இருக்கிறது! இரண்டு பெண்மக்களும் போய்விட்டார்களா! ஒருத்தியாவது இருக்கக்கூடாதா! என் அருமை சோபியாவும் போய்விட்டாளா! அவள் ஒரு பேய்தான் போலும். சோபியாவின் அழகென்ன, அறிவென்ன! தேவதைபோல் அவள் வளைய வந்ததென்ன!... இவளைத் தாங்கிக்கொள்ளுங்கள்... மூர்ச்சையாகி விடுவாள்போல் தெரிகிறது...ஹூம் ஒரு மகளையாவது விட்டு வைக்கக் கூடாதா?'

என் மனைவி என்னைத் தேற்றினாள்.

'ஐயோ, நமக்கு யார் ஆறுதல் சொல்லமுடியும்? நமது துக்கம் பெருந்துக்கம். ஆனால், நீங்கள் ஆறுதல் அடைந்துவிட்டால் எனக்கு இதெல்லாம் பெரிதாகத் தோன்றாது. என் எல்லாக் குழந்தைகளையும் அவர்கள் எடுத்துக்கொள்ளட்டும். உலகத்தையே எடுத்துக் கொள்ளட்டும். ஆனால், நீங்கள் சந்தோஷமாக என்னருகே இருந்தால் அது எனக்குப் போதும். வேறு ஒன்றும் வேண்டாம்.' இவ்வாறு மாறிமாறிப் புலம்பிய எங்களை மோசேயும் தேற்றினான்.

'குழந்தாய், இனி எனக்கு என்ன சந்தோஷம் இருக்கிறது? மகிழ்ச்சியின் மார்க்கமெல்லாம் அடைபட்டுவிட்டது போலல்லவா இருக்கிறது. மறு உலகில்தான் என் சந்தோஷமெல்லாம்.'

'அப்பா, உங்களுக்கு மனநிறைவளிக்கக்கூடிய நல்ல செய்தி ஒன்றிருக்கிறது. இதோ பாருங்கள், ஜார்ஜிடமிருந்து கடிதம்.'

'என்ன எழுதியிருக்கிறான்? நமது துன்பங்களைப்பற்றி ஏதேனும் கேள்விப்பட்டானோ? அவனாவது துன்பமொன்றுமில்லாமல் சந்தோஷமாக இருக்கிறானா?''

'ஆமப்பா. சுகமாய்ச் சந்தோஷமாயிருக்கிறான். நல்ல செய்தி வந்திருக்கிறது. அவனது கர்னலுக்கு அவனைப்பற்றி நல்ல அபிப்பிராயமாம். அடுத்த லெப்டினென்டு பதவி காலியானால் அஃது அவனுக்குத்தான் கிடைக்குமாம்.'

என் மனைவி அவசரமாகக் கேட்டாள்:

'நிச்சயமாகவா? துன்பமொன்றுமில்லையென்றுதானே எழுதியிருக்கிறான்!'

'ஆம் அம்மா. சந்தோஷமாக இருப்பதாகத்தான் எழுதியிருக்கிறான். இதோ நீங்களே வாசித்துப் பாருங்கள்.' அவள் திரும்பவும் அழுத்தமாகக் கேட்டாள்:

'அவன்தான் எழுதியிருக்கிறானா ? அவனுக்குக் கஷ்டமொன்றுமில்லையே ?'

'இல்லையம்மா. அவனேதான் எழுதியிருக்கிறான் நல்ல சுகமாகச் சந்தோஷமாக இருக்கிறான். சீக்கிரமே அவனுக்குப் பதவி உயரலாம். நமக்கும் விடிவுகாலம் தொடங்கிவிட்டது.'

'அப்பாடா! ஆண்டவனுக்குத் தோத்திரம். எனக்கு இப்பொழுது நிம்மதியாக இருக்கிறது. நல்ல காலம், நான் அவனுக்கு எழுதிய கடிதம் அவனுக்குக் கிடைக்காமலே இருந்திருக்கிறது என்று இப்பொழுது தெரிகிறது. கடவுள்தான் காப்பாற்றினார். நான் இனி உள்ளதைச் சொல்லிவிடுகிறேன். அதாவது, நான் உங்களுக்குத் தெரியாமல் முட்டாள்தனமான ஆபத்தான ஒரு கடிதம் அவனுக்கு எழுதிவிட்டேன். தாரன்ஹில் நமது குடும்பத்துக்குப் பயங்கரமான தீங்கு செய்துவிட்டதால், ஜார்ஜ் ஓர் ஆண்மகனானால் அவனை எப்படியும் பழிவாங்கியே தீர வேண்டும் என்று அவசரப்பட்டு அவனுக்கு ஒரு கடிதம் எழுதினேன். அவனும் முன்பின் யோசியாமல் கோபத்தில் ஏதாவது செய்துவிடக் கூடாதே என்று பயந்துகொண்டேயிருந்தேன். ஆண்டவன் கிருபையால் அந்தக் கடிதம் அவனுக்குப் போய்ச் சேரவில்லை என்று தெரிகிறது'

'பெண்ணே, நீ நடந்துகொண்ட முறை சரியன்று. ஆயினும், உன்னைக் கண்டிக்க இது தருணமன்று. இறைவனது பெருங் கருணையால் நீங்கள் இருவருமே நித்திய தண்டனைக்குத் தப்பினீர்கள். போகட்டும். எனக்கு ஆறுதலே இல்லையென்று புலம்பினேனே. இதோ என் மகன் தலையெடுத்துவிட்டான். நான் போய்விட்ட பின்பு அவன் என் குழந்தைகளைத் தந்தைபோல் கவனித்துக்கொள்ளுவான். விதவையாகப் போகும் இவளையும் தம்பி தங்கைமாரையும் அரவணைத்து...தங்கைமார் என்றா சொன்னேன்? இனி அவனுக்கு எந்தத் தங்கை இருக்கிறாள், கவனித்துக்கொள்ள? போயாச்சு, கொள்ளை போயாச்சு. ஐயோ! நான் என்ன செய்வேன்.'

'அப்பா' என்று குறுக்கிட்டான் மோசே. 'இந்தக் கடிதத்தை வாசிக்கிறேன், கேளுங்கள். நீங்கள் நிச்சயம் சந்தோஷப் படுவீர்கள்.'

பின்வருமாறு வாசிக்கத் தொடங்கினான்:

'மதிப்பிற்குரிய அப்பாவுக்கு,

'இங்கு நான் எல்லாச் சுக சௌகரியங்களுடன் நலமாக இருக்கின்றேன். இருப்பினும் நமது கணப்பங்கரைச் சுகத்துக்கு இங்குள்ள

எதுவும் நிகரில்லை. இப்பொழுது இக் கடிதத்தின் ஒவ்வொரு வரியையும் சுவைத்து நீங்களனைவரும் படித்துக்கொண்டிருக்கும் காட்சி என் மனக்கண்முன்னே வருகின்றது.

'போர்முரசம் அழைத்தால் போய் விருப்புவெறுப்பின்றிக் கடமையை ஆற்றிவிட்டு வரவேண்டும். அவ்விதத் தொல்லைகள் ஏதுமில்லாமல் நீங்கள் நிம்மதியாக இருப்பதை நினைத்ததால் நான் மகிழ்ச்சியே அடைகிறேன். இருப்பினும், எனக்கு இங்கே எவ்விதக் குறையுமில்லை. அதையறிந்து நீங்களும் சந்தோஷம் அடைவீர்கள்.

'என் வேலை எனக்கு உயர்வு தருவதாய் அமைந்துள்ளது. இப்பொழுது இங்கிலாந்தைவிட்டு அகலக்கூடாது என்று எங்கள் படைக்கு மாற்று உத்தரவு வந்துள்ளது. கர்னல் என்னிடம் மிகுந்த அன்பு காட்டுகின்றார். தாம் போகுமிடங்களுக்கு என்னை ஒரு நண்பனைப்போல் அழைத்துச் செல்லுகிறார். அவரது நண்பர்களும் என்னிடம் நன்மதிப்புடன் பழகுகின்றனர்.

'நேற்றிரவு நான் ஜி...சீமாட்டியுடன் நடனமாடினேன். எனக்குப் பழைய நினைவுகள் வந்தன. நான் சிலரை நினைக்கிறேனே தவிர, அச் சிலர் என்னை அறவே மறந்துவிட்டதாகவே தோன்றுகிறது.

'அப்பா, நீங்கள்கூடத்தான் என்னை மறந்துவிட்டீர்கள். உங்களிடமிருந்து கடிதத்தை எதிர்பார்த்து ஏமாந்துவிட்டேன். ஒலிவியாவும் சோபியாவும் எனக்கு எழுதுவதாக வாக்களித்தும், அவர்கள் அதைக் காப்பாற்றிக்கொள்ளவில்லை. வார்த்தையைக் காப்பாற்றாத மோசக்காரிகளான அவர்களிடம் நான் கோபமாக இருப்பதை அவர்களுக்குத் தெரிவிக்கவும்.

'அவர்கள் இருவருக்கும், அம்மாவுக்கும், தம்பிமாருக்கும் என் அன்பைத் தெரியப்படுத்தவும்.'

வணக்கம்.

இப்படிக்கு,
உங்கள் கடமை தவறாத மகன்
ஜியார்ஜ்"

'இறைவனருளால் இவனொருவனாவது ஒரு கஷ்டமுமில்லாமல் இருக்கிறான். அவன்தான் இனித் தன் தாயையும் தம்பிகளையும் பொறுப்பாக அரவணைத்துக் கொள்ளவேண்டும். நான் அவனுக்கு விட்டுச்செல்லும் பிதிரார்ஜித சொத்துஅந்தப் பொறுப்பு ஒன்று

தான். அவன் அவர்களை ஒழுக்கத்துடன் வளர்க்க—வறுமையில் மனிதருக்கு வரக்கூடிய சோதனைகளை மேற்கொள்ளும்படியான ஆன்மபலத்துடன் வளர்க்க—மானமான வாழ்க்கை நடத்துவதற்குரிய பயிற்சியுடன் வளர்க்க இறைவன் அருள்புரிவானாக!'

அப்பொழுது சிறைக்கூடத்தின் வெளிப்பகுதியிலிருந்து கூச்சலும், இரைச்சலும் கேட்டது. அஃது அடங்கிச் சில நிமிடங்களுக்கெல்லாம் ஆளோடியிலிருந்து விலங்குச் சங்கிலிகள் தரையில் இழுபடும் கணகணவோசை கேட்கத் தொடங்கியது. சிறைக் காவலர் ஒருவர் என் அறைக்குள் நுழைந்தார். அவர் பின்னால் ஒரு மனிதன் காயமுற்று இரத்தமொழுகக் கனத்த சங்கிலிகளால் பிணைப்புண்டு நின்றான். அந்த அபாக்கியவான் யாரென்று நான் அவன் முகத்தைப் பார்த்தேன். என் மகன் ஜார்ஜு அது!

'ஜார்ஜு, என் மகனே, நீயா? இரத்தக் காயமும் விலங்குமாக நீதானாப்பா? நீ ஒருவனாவது நன்றாயிருக்கிறாய் என்று இப்பொழுதுதானே மனப்பால் குடித்தேன். இந்தக் கோலத்தில் தான் நீ என்னைப் பார்க்க வரவேண்டுமா? இதைப் பார்த்து என் இருதயம் நின்றுபோகாதா! எனக்குச் சாவு வராதா!'

'அப்பா, என்ன இது. உங்கள் தைரியமெல்லாம் இவ்வளவு தானா?' எதற்கும் அஞ்சாத ஓர் உறுதி அவன் குரலில் தொனித்தது.

'இது நான் அனுபவிக்கவேண்டிய துயரம். இப்பொழுது என் உயிர் அவர்கள் கையில் உள்ளது. அவர்கள் அதை எடுத்துக் கொள்ளட்டும்.'

என் உணர்ச்சிகளை அடக்க முயன்றேன். சிறிது நேரம் மௌனமாக இருந்தேன். ஆனால், என் மூச்சே நின்றுவிடும் போலாயிற்று. அழுதுவிட்டேன்.

'என் மகனே! என்னால் அழாமலிருக்க முடியவில்லையே. அப்பா, உன்னை இந்தக் கோலத்தில் பார்க்க என் நெஞ்சு பொறுக்குதில்லையே அப்பா. உன் நலம்கேட்டு உன்னை ஆசீர்வதித்து வாய்மூடுமுன் உன்னை இப்படிப் பார்க்க நேர்ந்துவிட்டதே, விலங்கும் இரத்தக் காயமுமாய். ஆனால், இளமை மரணம் துயரமில்லாதது. என்னைப் பார். இந்த முதுமைக் காலத்தில் என் பிள்ளைகள் அற்பாயுசில் என்னைவிட்டுப் பிரிவதைப் பார்க்க வேண்டுமென்று இருந்திருக்கிறதே. இதையெல்லாம் பார்த்துக் கொண்டு நான் இன்னும் உயிரோடிருக்கிறேனே. அந்தப் பாதகன்

மேல் தெய்வ சாபம் வராமற் போகாது...என்னைப்போல் அவனும்...'

'அப்பா, நிறுத்துங்கள். ஏன் இப்படிப் பேசுகிறீர்கள்? வெட்கப்படவேண்டிய வார்த்தைகள். உங்கள் வயதையும் குருத்துவப் பணியையும் மறந்துவிடுகிறீர்கள். பழிவாங்கு வதும் பதிற்செய்வதும் இறைவனின் உரிமைகள். அதை நீங்களாகவே எடுத்துக்கொள்வதும் சாபமிடுவதும் சரியன்று. அந்தச் சாபங்கள் உங்கள் மேலேயே திரும்பி உங்களை அழித்து விடக்கூடும். இப்பொழுது நான் மரணத்தை எதிர்நோக்கி நிற்கிறேன். நிந்தையான மரணம். அந்தக் கசப்புப் பாத்தி ரத்தை நான் பொறுமையுடன் சுவைக்கவும் மற்றும் நம்பிக்கையும் மனஉறுதியும் பெறவும் என்னை ஆயத்தம்பண்ணுவது உங்கள் கடமை.'

'இல்லை பிள்ளாய், நீ சாகக்கூடாது. மரணதண்டனைக் கேதுவான கடுங்குற்றம் எதையும் நீ செய்திருக்க முடியாது. என் ஜார்ஜு, நம் முன்னோரின் நற்பெயருக்குக் களங்கமுண்டாக்கும் காரியம் எதையும் செய்திருக்கமாட்டான்.'

'அப்பா, நான் செய்திருக்கும் குற்றத்துக்கு நமது நாட்டில் மன்னிப்புக் கிடையாது. அம்மாவின் கடிதம் கிடைத்தவுடன் நான் அவனுடன் துவந்த யுத்தம் செய்ய எண்ணி இங்கு வந்தேன். என்னைச் சந்திக்கச் சொல்லி ஒரு சவால் கடிதமும் எழுதி அனுப் பினேன். அவன் கோழையாதலால் என்னைச் சந்திக்க வராமல் என்னைப் பிடிக்க நான்கு அடியாள்களை அனுப்பினான். அவர்கள் என்னைத் தாக்கினர். நான் ஒருவனை அடித்து வீழ்த்தினேன். மற்ற மூவரும் என்னைப் பிடித்துக் கைதுசெய்ய ஏற்பாடு பண்ணி விட்டனர். சவால் கடிதம் முதலில் அனுப்பியது நான். அஃது அவன் கையில் இருக்கிறது. துவந்த யுத்தம் சட்டவிரோதமாகை யால் அவன் எனக்கு விரோதமாகச் சட்ட நடவடிக்கை எடுத்துவிட்டான். வழக்கு எனக்கு எதிராகத்தான் போகும். தப்பிக்கும் வாய்ப்பு அதிகமில்லை. மரணதண்டனைதான் கிடைக்கும். அப்பா, மன உறுதியைப்பற்றி நீங்கள் அடிக்கடி பேசுவீர்களே, அதை இப்போது வாழ்ந்துகாட்டுங்கள்.'

'காட்டுகிறேன், மகனே. காட்டுகிறேன். இந்த வாழ்க்கையையும் அதன் சுகங்களையும் நான் கடந்து விட்டேன். இந்தப் பூமியோடு நம்மைப் பிணைக்கின்ற கட்டுகள் இனி அற்றுப்போவதாக! நித்திய வாழ்வை நாம் இனி நுகரத் தொடங்குவோம். அதற்கான ஆயத்தங்களைச் செய்வோம் வா.

நான் உனக்கு வழிகாட்டுகிறேன். என் ஆத்துமாவைப் பின்பற்றி உன் ஆத்துமாவும் நித்தியத்தை நோக்கிவரும். நீ செய்த குற்றத்துக்கு உனக்கு இங்கே மன்னிப்புக் கிடைக்காதுதான். கவலையில்லை. நாம் இனிப் பரலோக விசாரணைக்கு உத்தரவு சொல்ல வேண்டியவர்கள்.

'சககைதிகளையும் வரச் சொல்லுங்கள். அவர்கள் எல்லாருக்கும் நான் உபதேசம் ஆற்றவிரும்புகின்றேன். காவலரே அவர்களையும் வரச்சொல்லுங்கள், ஐயா.'

நான் வைக்கோல் படுக்கையினின்று சிரமத்துடன் எழுந்து சுவரில் சாய்ந்தவாறு உட்கார்ந்தேன். கைதிகள் எல்லாரும் வந்து அமரிக்கையாய் உட்கார்ந்தனர். அவர்கள் என் பேச்சைக் கேட்க ஆவலுடனிருந்தனர். என் மனைவியும் என் மகனும் என் இருமருங்கிலும் அமர்ந்து என்னை அணைத்துப் பிடித்துக்கொண்டனர். எல்லாக் கைதிகளும் வந்து குழுமிவிட்டதும் நான் பிரசங்கத்தைத் தொடங்கினேன்.

29

[இன்புறுவோரையும் துன்புறுவோரையும் இறைவன் இம்மையில் சமமாகவே நடத்துகின்றார். மறுமையில் துன்புறுவோரின் துன்பங்கள் ஈடுகட்டப்படும்.]

என் நண்பர்களே, குழந்தைகளே, உடன் துன்புறுவோரே!

நன்றும் தீதும் இப் புவியில் நிரந்துநிற்கும் நிலையை ஆராயப் புகுந்தால் மனிதன் சுகப்படவும் அதைவிட அதிகமாகத் துக்கப்படவும் ஏதுவாகப் பலப்பல நிகழ்கின்றன. பூரணசுகம் அடைந்த மனிதன் எவனும் இல்லை. ஆயினும், பூரணதுக்கம் அடைந்த மனிதர்கள் உண்டு. தற்கொலைகளை நாம் தினமும் பார்க்கிறோமே! எனவே, முழுமையான ஆனந்தம் மனிதனுக்குக் கிட்டாவிடினும் முழுமையான துன்பம் கிட்ட வாய்ப்பு உண்டு என்றே தோன்றுகிறது.

மனித சமுதாயம் சிறிது சிறிதாக மகிழ்ச்சிப் பாதையில் முன்னேற்றம் அடைந்துகொண்டிருக்கிறது என்று வைத்துக் கொண்டால், அந்த முன்னேற்றத்திற்காக ஒருசில மனிதர் பயங்கரமான இந்தத் துன்பங்களைச் சகித்துக்கொள்ள வேண்டியதிருக்கின்றதே, அது ஏன்? முழுத் தொகுதியின் உள்ளடங்கிய கூறுகளும் பூரணமாக இருந்தாலல்லவோ, முழுத் தொகுதியும் பூரணமாகும்? கூறுகளாகிய ஒருசிலர் அபூரணமாகிற துன்பம் அனுபவித்தால்தான் முழுச் சமுதாயத் தொகுதியும் பூரண முன்னேற்றமடையுமோ?

இவைகளுக்கு விடை கண்டுகொள்ளுவது அசாத்தியமும் அநாவசியமும் ஆகும். மனிதனுக்கு அந்த இரகசியம் தெரிய வேண்டா என்பதே இறைவனின் சித்தம்போலும். ஆயினும், ஆறுதலுக்கு அவன் வழிவகுத்திருக்கின்றான்.

தத்துவ விசாரணையினால் அவன் சலித்துப்போன பிறகு சமயத்திலே வந்து தஞ்சம் புகுகின்றான். தத்துவ விசாரணைகள் பெரும்பாலும் மனிதனைத் தவறான திசைகளில் திருப்பி விட்டு விடுகின்றன. தத்துவத்தின் ஒருவகை வாழ்க்கை இன்புறுவதற்கே. முடிந்தவரை இன்பங்களைத் துய்த்துக்கொள்ள வேண்டியதுதான்

அவன் கடமை என்கிறது. இன்னொரு தத்துவம் வாழ்க்கை துன்பமயமானது. ஆயினும், வாழ்க்கையின் காலப்பகுதி குறுகியது. அதன்பின் விடுதலை உண்டு என்கிறது. இவையெல்லாம் ஒன்றுக்கொன்று முரணாகவே வாதிடுகின்றன. உதாரணமாக, வாழ்க்கை இன்பமயமானதானால் அதன் குறுகிய தன்மை வருந்தத்தக்கது துன்பமயமானதானால் அதன் நீண்ட தன்மை மிகவும் வருந்தத்தக்கது. எனவேதான் சமயம் அளிக்கும் ஆறுதல்தான் அவனுக்கு உற்றதாக—மேம்பட்டதாக அமைகின்றது.

இந்தப் புவியில் அவன் வாழ்வு மறுமைக்கு ஓர் ஆயத்தம் என்பதாக அமையவேண்டும். நல்லவன், உடலைவிட்டு நீங்கி மனத்தாலான வாழ்க்கையை அடைகின்றான்; மனோன்மணியாகி விடுகின்றான். வையத்துள் அவன் வாழ்வாங்கு வாழ்ந்ததன் விளைவு அது. பாவங்கள் செய்துவிட்டவனோ தன்னுடலைக் கண்டே அஞ்சுகின்றான்; இறைவனின் தண்டனை, தனக்குண்டு என்ற அச்சத்தால் நிலைகுலைகின்றான்.

எனவே, சமயமே நமக்கு உற்ற புகல். இன்பகாலத்தில் இன்பத்தை நிலைபெறச் செய்யவும், துன்பகாலத்தின் முடிவில் வேறு நல்ல புகலிடம் உண்டு என்ற நம்பிக்கையைத் தரவும் அஃது உதவுகின்றது.

இன்புற்றோருக்கும் துன்புற்றோருக்கும் சமயம் ஓர் ஊன்றுகோல். துன்புற்றோருக்கு அஃது அளிக்கும் ஆறுதல் மிகச் சிறப்பானது. நற்செயலுக்கு மறுமையில் நிச்சயம் பலனுண்டு என்று அது நிச்சயமாய் வாக்களிக்கிறது.

உடல்நலமற்றோர், ஆடையில்லாதோர், வீடிழந்தோர், பாரத்தால் அழுந்துவோர், சிறையிலிருப்போர் இவருக்கெல்லாம் மறுமையில் நற்பேறுகள் உண்டு என்று நமது திருச்சட்டங்கள் வாக்களிக்கின்றன. ஏசுபிரான் தம்மை ஏழைப் பங்காளனாகவே வெளியிட்டுக்கொண்டார்; வாழ்க்கை முழுவதும் துயருறுவோரோடு தம்மைப் பிணைத்துக்கொண்டார். துயருறுவோருக்கு இறைவனின் ஆசிகள் நிச்சயம் உண்டு.

செல்வந்தரைவிடவும் ஏழைகள் மரணத்தைச் சாந்தமாக வரவேற்கின்றனர். ஏழ்மையின் நற்பேறுகளில் இஃது ஒன்று. துன்பங்கள் பல அனுபவித்துவிடுவதால் மரணம் அவர்களை அச்சுறுத்துவதில்லை. உற்றவரைப் பிரிகின்ற துக்கமேயன்றிச் செல்வத்தை விட்டுச்செல்லும் கவலை அவர்களுக்கு இல்லை. உடலில் மரணக்குறிகள் தோன்றிவிட்ட பின்னர் அவர்கள் முடிவு மிக அமைதியாக, இனிதாக நடந்தேறுகிறது.

இம்மையில் துன்பம் அனுபவித்தோர் மறுமையில் பேரானந்தம் அடைகின்றனர். விவிலிய உவமையில் வருகின்ற ஏழை இலாசரு மோட்சத்தில் பேரின்பம் அடைந்தான் என்று கூறப்படுகின்றது. துன்பத்தின் கூறுகளை நன்கு நுகர்ந்த அவன் இப்பொழுது இன்பம் அனுபவிக்கையில் அவ்வின்பம் பன்மடங்காகிறது.

உலகில் இன்புறுவோரும் துன்புறுவோரும் இறைவன் பார்வையில் சமமானவரே. மறுமையின்பம் ஏழைக்கும் செல்வந்தனுக்கும் பொதுவானது. இருவருக்கும் நோக்கம் அதுவேயாக வேண்டும்!

ஏழ்மையிலும் நன்மைகள் உண்டு என்று சொன்னேன். ஆயினும், ஏழ்மையின் கொடுமைகள் தாங்குவதற்கரியன. அவர்கள் படும் துயரங்களை யாரே அளவிட்டுரைக்க முடியும்! அதை அனுபவித்தவரே அஃது இத்தகையது என உணரமுடியும். மெத்தைமீது சொகுசாகச் சாய்ந்துகொண்டு ஏழைகள் தங்கள் துன்பத்தைப் பொறுமையாகச் சகித்துக்கொள்ளவேண்டும் என்று தத்துவம் பேசுவது எனக்கு உடன்பாடன்று. ஏழ்மையில் உழல்வது சித்திரவதைக்கு ஒப்பாகும். அதை நீட்டிப்பதைவிட மரணம் அடைவது மேல்.

எனவேதான், என் நண்பர்களே மோட்சம் நமக்கு மிக இன்பமாகக் காட்சியளிக்கின்றது. நாம் இருப்பது பயங்கரமான சிறை. பெருத்த இந்தச் சுவர்களின் நிழலும் இருளும் நம்மைப் பயமுறுத்துகின்றன. இருக்கும் சிறிது வெளிச்சமும் அதன் அவலங்களைக் காட்டுவதற்கே தெரிகின்றது. கொடுங்கோன்மையின் விலங்குகள், குற்றத்தின் சங்கிலிப் பிணைப்புகள், குழிவிழுந்த பட்டினி முகங்கள், கசப்புக் குமுறல்கள்—இவற்றினின்று விடுதலைபெற்று மோட்சமடைவது எத்தனை இன்பம். அருவமாக அண்டவெளியிலே மிதந்து, பேரின்பச் சுடர் கதகதப்படைந்து, நித்தியமாய் இசை பாடிக்கொண்டு, அவமதிக்கவும் பயமுறுத்தவும் கொடுங்கோலர்கள் இல்லாத பெருவெளியில் உலவி, தர்மம் ஜோதியாகப் பிரகாசிப்பதைத் தரிசித்து இவற்றையெல்லாம் கொண்டுவருகின்ற மரணம் எத்துணை இன்பமானது!

மரணம் என்னைத் தாக்கும் அம்பு அன்று; என்னைத் தாங்கும் கோலும் தடியுமாகும். மேலுலக மகிமையோடு ஒப்பு நோக்குகையில் இப்பூவுலக இன்பம் எனக்குத் துச்சமாகத் தோன்றுகின்றது. பேரரசன் துய்க்கும் இன்பமும் அதற்கு நிகரன்று.

அவ்வின்பம் நமக்கு எவ்வாறு கிட்டும்? நாம் செய்யவேண்டியது என்ன? சோதனைகளை மேற்கொள்ளவேண்டும். பாவங்களை நீக்கவேண்டும். சிறையினுள் அடைபட்டிருப்பதால் நாம் பல சோதனைகளினின்று விலகியே இருக்கின்றோம். அதுவும் ஒரு நன்மையே.

காலம் வேகமாகச் செல்லுகின்றது. அதன் ஒரு பகுதி கழிந்து விட்டது. மற்றப் பகுதியும் முடிந்துகொண்டு வருகின்றது. மோட்சத்துக்கு அருகில் நாம் நெருங்கிக்கொண்டிருக்கிறோம். விரைவில் நமது பயணம் முடியும். மரணம் என்ற நண்பனின் துணையோடு நாம் நமது பாரத்தைச் சீக்கிரமே இறக்கிவைப்போம். மரணத்தைக் கண்டு மனம் ஒருசிறிது அச்சமுறுகின்றது. அகன்று கொண்டே போகின்ற அடிவானத்தைப்போல் மரணம் எட்டி எட்டிப் போகின்றது. ஆயினும், நிரந்தரமாக இளைப்பாறிக் கொள்ளும் அந்த ஓய்வு வந்தே தீரும். இந்த உலகத்தின் மேல் மட்டத்து மனிதர்கள் அப்பொழுது நம்மை ஒன்றும் செய்ய முடியாது. இந்த உலகத்தின் துயரங்களின் நினைவுகள்கூட அப்போது நமக்கு மகிழ்ச்சியே அளிக்கும். நம் உற்ற நண்பர்கள் நம்மைச் சூழ இருப்பார்கள். நமது ஆனந்தம் சொல்லற்கரியதாய் நித்தியமாய் இருக்கும்.

30

[விடிவுகாலம் பிறக்கின்றது. நெறிபிறழாதோர்க்கு எல்லாம் நன்மையாகவே முடியும்.]

உபதேசம் முடிந்ததும் கைதிகள் அவரவர் இடங்களுக்குத் திரும்பினார்கள். ஜார்ஜுவை அழைத்துப் போக வேண்டியது தம் கடமை எனச் சிறைக்காவலர் என்னிடம் மென்மையாய்ச் சொன்னார். ஆனால், தினமும் காலையில் அவன் என்னை வந்து பார்த்துப் போகும்படியாக அனுமதி தரமுடியும் என்றார். அந்த நல்ல மனிதருக்கு நான் மனப்பூர்வமாக நன்றி சொல்லி ஜார்ஜுவின் கைகளைப் பற்றி மனதிடமாயிருக்கும்படி சொல்லி அவனுக்கு விடைகொடுத்து அனுப்பினேன்.

நான் படுத்துக்கொண்டேன். சிறுவர்கள் எனக்கு வாசித்துக் காண்பித்துக்கொண்டிருந்தனர். அப்பொழுது திரு. ஜென்கின்ஸன் ஓடிவந்தார். நல்ல செய்தி ஒன்று சொன்னார். சோபியாவைப் பற்றித் தகவல் கிடைத்திருக்கிறது. பக்கத்து ஊரில் ஒரு கனவானுடன் வண்டியினின்று இறங்கி உணவை முடித்துக்கொண்டு இலண்டன் மார்க்கமாகப் போவதாகக் கேள்விப்பட்டாராம். அவர் அதைச் சொல்லி முடிப்பதற்குள் சிறைக் காவலர் வந்து சோபியா மீட்கப்பட்டுவிட்டாள் என்று செய்தி தெரிவித்தார். அதற்குள்ளாக மோசே ஓடிவந்து சோபியாவும் திரு. பருச்செல்லும் என்னைப் பார்க்கச் சிறைக்கு வந்துகொண்டிருப்பதாகச் சொன்னான். எல்லோர் முகங்களிலும் ஆனந்தம் தாண்டவமாடியது.

சோபியா ஓடோடி வந்தாள். சந்தோஷ மிகுதியால் அவள் கண்கள் அகல விரிந்திருந்தன. என்னை அணைத்து முத்தமிட்டாள். என் மனைவி ஆனந்தக் கண்ணீர் வடித்தாள்.

திரு. பருச்செல்லைக் காட்டிக்கொண்டு சொன்னாள்: 'அப்பா, இவர்தான் என்னை வெகுதீரமாகக் காப்பாற்றினார். நாம் இப்பொழுது மீண்டும் சந்தோஷமாகக் கூடியிருக்கிறோமென்றால் அது இவருடைய வீரச் செயலினால்தான்.'

அவர் முகத்திலும் பெருமகிழ்ச்சி பரவிக் கிடந்தது.

'திரு. பருச்செல் அவர்களே, நீங்கள் எங்களை முன்னால் பார்த்தபோதிருந்த எங்கள் நிலையும், இப்போதைய நிலையும் எத்தனை வேறுபட்டது பாருங்கள்! மிக இழிந்ததொரு நிலைக்கு இறங்கிவிட்டோம். நீங்கள் எங்கள் உண்மை நண்பர் என்பதை உணர்ந்துகொள்ளாமல் போனோம். அதனால் வந்த வினை தான் இது. உங்களைத் தவறாக எண்ணிவிட்டோம். உங்களிடம் அவமரியாதையாக நடந்துகொண்டதற்காக நாங்கள் மிகவும் வருந்தினோம்; வருந்துகின்றோம். உங்கள் முகத்தில் விழிக்கக்கூட எங்களுக்கு வெட்கமாக இருக்கிறது. நண்பன் என்ற வேடத்தில் வந்த ஓர் அற்பனை, மகா அயோக்கியனை நம்பி ஏமாந்தோம். நீங்கள் எங்களை மன்னிக்க வேண்டும்.'

'மன்னிப்பதற்கு நான் உங்களிடம் மனத்தாங்கல் கொண்டிருந்தால்தானே? உங்கள் ஏமாளித்தனத்தை நான் கண்கூடாகக் கண்டும் நான் அதற்குமேல் ஒன்றும் செய்ய இயலாத நிலையில் இருந்தேன்; உங்களைப் பார்த்துப் பரிதவித்துக் கொண்டிருந்தேன்.'

'என் மனத்திலே மாத்திரம் நீங்கள் ஓர் உயர்ந்த மனிதர் என்று ஒரு நிச்சயமான உணர்வு இருந்துகொண்டுதானிருந்தது. அந்த உணர்வுதான் உண்மை என்று இப்பொழுது தெரிகிறது. சரி, இனிச் சோபியா கதைக்கு வருவோம். உன்னைப் பிடித்துக் கொண்டு போனது யார் அம்மா? உன்னை இவர் விடுவித்த சாகசம் என்ன? எல்லாவற்றையும் சொல்லு' என்று கேட்டேன்.

'என்னைக் கடத்திச் சென்றது யாரென்று இன்னும் எனக்குத் தெரியாது. நான் அம்மாவோடு வீதியில் நடந்துகொண்டிருக்கும் போது அவன் பின்னாலிருந்து வந்து, நான் உதவிக்குக் கூச்சலிடும் முன்னரே என்னைப் பிடித்து வண்டிக்குள் தள்ளிவிட்டான். அடுத்த விநாடி வண்டி பறந்துவிட்டது. வண்டிக்குள்ளிருந்து கத்தினேன். வழியில் பலர் அதைக் கேட்டாலும் உதவிக்கு வரவில்லை. நான் கத்தக்கூடாது என்று அவன் என்னிடம் கெஞ்சினான்; பின் மிரட்டினான். நான் கத்தவில்லையானால் எனக்கு ஒரு தீங்கும் விளைவிக்கப்போவதில்லை என்றான். வண்டிச் சன்னலின் முரட்டுத் திரையையும் போட்டான். நான் ஒருமுறை தற்செயலாக வண்டித் திரையை விலக்கிப் பார்த்தபோது, திரு. பருச்செல் கைத்தடியை வீசிக்கொண்டு வேகமாக நடந்து கொண்டிருந்ததைப் பார்த்தேன். அவர் வண்டிக்கு அருகில் வந்த சமயம் பார்த்து, அவர் பெயரைச் சொல்லிக் கூவினேன். அவர் உடனே தாமே வண்டியை நிறுத்துமாறு உத்தரவிட்டார். வண்டிக்காரன் அதைக் சட்டை செய்யாமல் ஓட்டிக்கொண்டு

போனான். இனி, நமக்கு விடுதலை ஏது என்று நான் மனச்சோர் வடைந்தேன். அதற்குள் திரு. பருச்செல் வண்டியின் ஒரு பக்கமாக ஓடியே வந்து தடியைக்கொண்டு வண்டிக்காரப் பையன்மீது சுழற்றி அடித்தார். அவன் விழுந்தான். உடனே குதிரைகள் தாமாகவே நின்றன. உள்ளேயிருந்த முரடன் கத்தியை உருவிக் கொண்டு கீழே குதித்துத் திரு. பருச்செல்லை மிரட்டினான். அவர் அவனது கத்தியைப் பிடுங்கி உடைத்து வீசினார். அவன் பயந்து ஓட இவர் இரண்டு பர்லாங்கு தூரம் அவனை விரட்டிக்கொண்டு ஓடினார். நான் அவருக்கு உதவிசெய்ய இறங்கிக் கீழே வந்தேன். அவர் வெற்றிவீரர்போலத் திரும்பி வந்தார். இதற்குள் வண்டிக் காரப் பையன் மயக்கம் தெளிந்து ஓடப்பார்த்தான். திரு. பருச்செல் வண்டியைத் திருப்பி, வந்த பாதையிலேயே ஓட்டுமாறு அவனுக்கு உத்தரவிட்டார். அவனும் பயந்து ஓட்டிக்கொண்டு வந்தான். ஆனால், வழிநெடுக அவன் காயங்கள் மிகவும் வலி எடுப்பதாகப் புலம்பிக்கொண்டே வந்தான். எனவே, அடுத்து வந்த சத்திரத்தில் அவனை இறக்கி விட்டுவிட்டு வேறு வண்டிக்காரனை அமர்த்திக் கொண்டு இங்கே வந்து சேர்ந்தோம்.'

நான் அவருக்கு மீண்டும் நன்றி சொல்லி வரவேற்றேன்:

'இருப்பது காராக்கிரகமானாலும் நான் இங்கேயும் உங்களை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். என் மகளை ரட்சித்த தீரச் செயலுக்கு நான் உங்களுக்கு என்ன கைம்மாறு இப்போது செய்யமுடியும்? அவளே ஒரு பரிசு என்று நீங்கள் கருதினால் அவளை அளிக்கச் சித்தமாயிருக்கிறேன். எங்கள் எளிய குடும்பத் தில் சம்பந்தம் செய்துகொள்வதில் உங்களுக்குச் சம்மதமானால் சொல்லுங்கள். அவள் விருப்பத்தையும் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். அவள் உங்களை நேசிக்கிறாள் என்றே நினைக் கிறேன். அவளொரு பெருநிதி. அவள் அழகுள்ளவளானாலும் அவள் அழகை வைத்து நான் அதைச் சொல்லவில்லை. அவள் மனத்தால் சிறந்தவள். மனப்பூர்வமாக நான் அவளை உங்க ளுக்கு அளிக்கிறேன்.'

'என் நிலையும் நீங்கள் அறிந்ததே. நான் அத்தனை வசதி படைத்தவனல்லவே?' என்று அவர் பதில் சொன்னார்.

அவர் எதற்காக இப்படிச் சொல்கிறார் என்று எனக்கு நிச்சய மாகத் தெரியவில்லை.

'உங்களுக்குப் பிரியமில்லையானால் நாம் பேச்சை இத்தோடு விட்டுவிடுவோம். அவளுக்குத் தகுந்த புருஷர் நீங்கள் ஒருவரே என்று கருதியதால்தான் நான் பேச்சை எடுத்தேன். நான் பணம்

படைத்தவனாக இருந்து அவளுக்குக் கொடுக்க ஏராளமான சீதனங்கள் வைத்துக் கொண்டிருந்தாலும்கூட, அவளுக்குக் கணவனாக முதலில் உங்களைத்தான் தெரிந்தெடுத்திருப்பேன்' என்றேன்.

அவர் எதுவும் பேசவில்லை. எனக்கு ஒருமாதிரியாயிற்று. மறுப்பைத் தெரிவிக்கத்தான் அப்படியிருக்கிறாரோ?

பின், சற்றுக் கழித்துச் சத்திரத்திலிருந்து உணவு வரவழைக் கலாமா என்று திரு. பருச்செல் கேட்டார். என் மனைவி சம்மதிக்கவே மிக உயர்ந்த உணவுவகைகளுக்கும் சிறந்த மதுவுக்கும் உத்தரவிட்டு அனுப்பினார். என் நோய்க்கு ஏற்ற மதுவகைக்கும் சொல்லியனுப்பினார்.

'சிறைச்சாலையானால் என்ன? மனசுக்கு ஆனந்தமாயிருக்கும் போது செலவழித்துச் சாப்பிடவேண்டியதுதானே! எந்நாளுமா செலவழிக்கிறோம்?' என்று சொல்லிக்கொண்டு மிகக் குதூகல மாகக் காணப்பட்டார்.

சத்திரத்து ஆள் உணவுவகைகளோடு வந்தார். சிறைக் காவலாளர் மேஜை கொடுத்துதவினார். உணவு, மதுவகைகளை எடுத்துவைத்தோம்.

ஜார்ஜுவின் நினைவு என்னைவிட்டு அகலவேயில்லை. ஆயினும் சோபியாவிடம் அவனைப்பற்றிச் சொல்லவும் மனம் வரவில்லை. ஆனால், எல்லோரும் கூடிச் சாப்பிட ஆயத்தங்கள் செய்தபோது என் சோகம் கட்டுக்கடங்காததாயிற்று. அவனும் எங்களோடு கலந்துகொள்ள ஜெயிலரிடம் அனுமதி வாங்க எனக்கு ஆசை. எனவே விஷயத்தைச் சொன்னேன். சோபியாவும் பருச்செல்லும் மிகவும் கலங்கிவிட்டனர். சற்றுநேரம் மௌன மாகவே கழிந்தது. பின் ஜெயிலரிடம் அனுமதி கேட்டோம். திரு. ஜென்கின்ஸனையும் எங்கள் விருந்துக்கு அழைத்துக் கொண்டோம்.

வெளியில் விலங்கோசை கேட்டது. சோபியா அவனைச் சந்திக்க ஓடிச்சென்றாள். 'அவன் பெயர் ஜார்ஜா?' என்று பருச்செல் என்னிடம் கேட்டார். அதுதான் என்று தெரிந்து கொண்டதும் மௌனமாக அசையாமல் உட்கார்ந்திருந்தார். உள்ளே வந்த என் மகன் அவரைப் பார்த்ததும் அவரை அடை யாளம் கண்டுகொண்ட பாவனையாகப் பவ்வியமாக அவரைப் பார்த்தான்.

நான் அவனுக்குத் திரு. பருச்செல்லை அறிமுகம் செய்து வைத்தேன்.

'மகா இக்கட்டான நிலையிலும் சிறிது நேரம் நாம் குடும்ப மாக ஒன்றுகூடி உறவாடி இருக்க இறைவன் வழிசெய்திருக்கிறார். இவர்தாம் உன் தங்கையைக் காப்பாற்றிய தீரர். எனக்கு ஒரு மகளாவது மிஞ்சியது இவரது தயவால்தான். நாம் இவருக்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம். அருகில் வா. இவர் நமது நண்பர்.'

நான் சொன்னதை ஜார்ஜு காதில் போட்டுக்கொண்ட தாகத் தெரியவில்லை. மரியாதையுடன் விலகி நின்றான்.

'அண்ணா, என்னைக் காப்பாற்றிய நமது நண்பருக்கு நீ நன்றிசொல்லக் கடமைப்பட்டவனில்லையா? தீரர்கள் இருவர் சந்தித்தால் உடனே நண்பர்களாகி விடுவதில்லையா?'

அவனோ இன்னும் மௌனமாக வியப்பு மிகுந்தவனாய் ஒன்றும் பேசாமல் எட்ட நின்றுகொண்டிருந்தான். அப்பொழுது திரு. பருச்செல் அவனைத் தம் அருகில் வருமாறு கம்பீரமாக அழைத்தார். அது ஓர் இராஜதோரணை. நான் ஆச்சரியத் துடன் அவரைக் கவனித்தேன்.

'முன் யோசனை இல்லாத இளைஞனே, நீ மீண்டும் அதே குற்றத்தில் அகப்பட்டு...!' என்று தொடங்கினார் அவர்.

அப்பொழுது சிறை வேலையாள் ஒருவன் நுழைந்து அவரிடம் தகவல் ஒன்று சொன்னான். பரிவாரத்தோடு ஒரு பிரபு சாரட்டு வண்டியில் வந்திறங்கி அவரைப் பார்க்க விரும்பிச் சிறைக்கு வெளியே காத்திருக்கிறாராம்.

'காத்திருக்கச் சொல், ஓய்வு கிடைத்ததும் பார்ப்பேன்' என்று உத்தரவிட்டு அனுப்பியதும் மீண்டும் என் மகனிடம் தொடர்ந்து சொன்னார்.

'இதே குற்றத்துக்காக நான் உன்னை முன்னொருமுறை கண்டித்திருக்கிறேன். இப்பொழுது சட்டம் உன்னைத் தண்டிக்கப் போகிறது. உன் உயிர் உனக்கு அலட்சியமாயிருக்கிறது. அதனால்தான் பிறர் உயிரை எடுக்கத் துவந்தயுத்தம் புரிவதை நீ குற்றமாகக் கருதவில்லை போலும். துவந்தயுத்தம் புரிந்து பிறனைக் கொல்கிறவனும் கொலைகாரனே. உயிரைப்

பணயம் வைத்துச் சூதாடுவதுபோல் யுத்தம் புரிவது நல்ல விளையாட்டன்று.'

இவர் யார்? நாம் பருச்செல் என்றழைத்துக் கொண்டிருந்த இவர் யாராக இருப்பினும், இவரிடம் அதிகாரம் இருக்கிறது. நான் என் மகனின் உயிருக்காக மன்றாடத் தொடங்கினேன்:

'ஐயா, நீங்கள் யாராக இருந்தாலும், ஒன்று தெரிந்து கொள்ளவேண்டும். இவன் கருணைக்குரியவன். தாயாரின் ஆணையை நிறைவேற்றவே அப்படிப் புத்தியீனமாக நடந்து கொண்டான். தாயாரோ கசப்பு மிஞ்சியதால் முன்பின் யோசியாமல் அவனுக்கு அப்படி எழுதிவிட்டாள். இதோ இந்தக் கடிதத்தை வாசித்துப் பாருங்கள். எல்லாம் விளங்கும்.'

அவர் அதை வாங்கி வாசித்தார். பின் சொன்னார்: 'இது அவனது குற்றத்தைக் குறைப்பது உண்மையே. மன்னிக்கப்பட வேண்டிய குற்றமாகவே தோன்றுகிறது.' பின்னர் அவனது கைகளைப் பிடித்துக்கொண்டு அவனிடம் சொல்வார்:

'என்னை இந்தச் சிறைக்கூடத்தில் பார்ப்பது உனக்கு ஆச்சரியமாக இருக்கலாம். சிறைக்கூடங்களை அவ்வப்போது பார்வையிடுவது எனது வழக்கமே. இருப்பினும், இம்முறை அநியாயமாகத் துன்பப்படுத்தப்பட்ட ஒரு நல்ல மனிதருக்கு நீதி கிடைக்கச் செய்வதற்காகவே நான் இங்கு வந்தேன். ஆம்; உன் தந்தை எனக்குப் பழக்கமானவரே. மாறுவேடத்தில் நான் அவரது நண்பன். அவரது உதாரகுணத்தை அருகிருந்து கண்டு வியந்தவன். மாய்மாலமற்ற தூய அன்பை அவரது இல்லத்திலே ருசித்தவன். அந்தக் கணப்பங்கரையிலே பல முறைகள் அமர்ந்து நான் நிம்மதியும் சுகமும் அடைந்ததுண்டு. பிரபுக்கள் சபையிலே கிடைக்க இயலாத மனநிறைவை நான் அங்கே பெற்றதுண்டு. இப்பொழுது எனது சகோதரி மகன் நெடுந்தாரன்ஹில் என்னைச் சந்திக்க வெளியில் காத்துக்கொண்டிருக்கிறான். நான் இங்கு வந்திருப்பதை அவன் எப்படியோ அறிந்துகொண்டிருந்திருக்கிறான். தீர விசாரிக்காமல் நான் அவனைக் குற்றஞ்சாட்டுவது முறையாகாது. நஷ்டம் அடைந்த கட்சிக்கு ஈடு செய்யப்படும் என்பதும் உறுதி. சர் வில்லியம் தாரன்ஹில் நீதி வழுவி நடந்தார் என்ற பழிச்சொல் எழக்கூடாது என்பதில் நான் எப்பொழுதும் மிகவும் கவனமாக இருந்து வந்திருக்கிறேன்!'

திரு. பருச்செல்—எங்கள் வீட்டுக்கு வந்து போயிருந்த அந்த சாமானிய எளிய திரு. பருச்செல்! — யாரென்று இப்போது தெரிந்தது. உத்தமர் என்று பலராலும் போற்றப்பட்ட

பெரும்பிரபு சர் வில்லியம் தாரன்ஹில்லே யாவார்! பெருத்த செல்வந்தர்; கல்விமான்; வழக்கு விசாரணைகளில் நீதிவழுவாத வர்; மக்கள் தோழன்; அரசு விசுவாசி.

என் மனைவியின் நிலைதான் சங்கடமானதாயிற்று. பயந்து வேறு போனாள். அவரை அவள் நடத்திய விதம்! அதையெல்லாம் நினைத்துக் குறுகிப்போய் நின்றாள். சோபியாவின் முகமும் களையிழந்து போயிற்று. கண்ணீர்கூட வந்துவிட்டது. நாம் எங்கே, அவர் எங்கே? இடையிலே உள்ள பிளவுதான் எவ்வளவு பெரிது என்று நினைத்தவளாய் ஒடுங்கிப்போய் நின்றாள்.

என் மனைவி அவரிடம் மன்னிப்புக் கேட்கத் தயாராகி விட்டாள் :

'ஐயா, உங்கள் மன்னிப்புக்கு நான் அருகதை யானவள் அல்லள். கடைசியாக நீங்கள் எங்கள் வீட்டுக்கு விஜயம் செய்த போது வேண்டாத விகடங்கள்கூட அடித்துவிட்டேன். என்னை மன்னிக்க வேண்டும்.'

'அம்மணி, நீங்கள் விகடம் அடித்தீர்கள். நானும் அதற்குத் தகுந்த பதில் சொன்னேனே. சரிக்குச் சரியாய்ப்போயிற்று. எனக்கு ஒருவர்மீதும் மனத்தாங்கலே கிடையாது — இவளைத் தூக்கிக் கொண்டு போன முரடனைத் தவிர. அவனை முதலில் கண்டு பிடிக்க வேண்டும். நான் அவனைச் சரியாகப் பார்க்கவில்லை. சோபியா, இப்போது அவனைக் கண்டால் உனக்கு அடையாளம் சொல்ல முடியுமா?'

'ஓரளவு முடியும். புருவத்துக்கு மேலே ஒரு பெரிய மச்ச மிருந்தது அவனுக்கு.'

'அவனது தலைமுடி சிவப்பாயிருந்ததா?' என்று ஜென் கின்ஸன் குறுக்கிட்டுக் கேட்டார். 'ஆம்! அப்படித்தான் நினைவு.'

சர் வில்லியமைப் பார்த்து,

'அவனது கால் நீளமாயிருந்ததா?' என ஜென்கின்ஸன் விசாரித்தார். 'அது நினைவில்லை. ஆனால் அவன் மிக வேகமாக ஓடினான். ஓட்டப்பந்தயத்தில் நான் யாரையும் மிஞ்சக்கூடியவன். ஆனால், அவன் என்னையும் மிஞ்சிவிட்டான்' என்று அவர் சொன்னார். அப்பொழுது ஜென்கின்ஸன் முடிவாகச் சொன்னார்.

'பிரபு, எனக்கு அவன் யாரென்று நிச்சயமாகவே தெரிகிறது. அது தீமோத்தேயு பாக்ஸ்டராகத்தான் இருக்கவேண்டும். நமது

நாட்டில் ஓட்டத்தில் வல்லவன் அவன்தான்; நியூகாசில் பின் வயரைத் தோற்கடித்தவன். அவனது ஒளிப்பிடம்கூட எனக்குத் தெரியும். என்னுடன் இரண்டு ஆள்களை அனுப்ப ஏற்பாடு செய்தால் ஒரு மணி நேரத்திற்குள் நான் அவனை இங்கேயே கொண்டு வரமுடியும்.'

சிறை அதிகாரியை அழைத்து சர் வில்லியம் தாம் யாரென்று சொல்லி எடுக்கவேண்டிய நடவடிக்கைகளையும் விளக்கி, அப்படியே ஏற்பாடு செய்தார்.

கடைசிப் பயல் பில்லு உள்ளே ஓடிவந்து சர் வில்லியமின் கழுத்தை வளைத்து முத்தமிட்டான். நாங்கள் அதை ரசித்தோம். என் மனைவி அதைக் கண்டித்துத் தடுத்தாள். அவரோ அலங் கோலமாயிருந்த அவனை வாரியெடுத்து மடியிலிருத்தி, 'என் னடேட டிக்குப் பயலே, பருச்செல் மாமாவை நினைவுவச்சிருக்கயா? அடுத்த கில்லாடி டிக்குப் பயல் எங்கே? ஒங்க ரெண்டு பேருக்கும் ஞாபகமா நான் ஒண்ணு கொண்டுவந்திருக்கேன்,' என்று சுக்கு ரொட்டித்துண்டுகளைக் கொடுத்தார். சாப்பாடு சரியாய்க் காணாத சிறுவர்கள் பாவம் அதை வேகமாகத் தின்று தீர்த்தனர்.

அவருக்குக் கொஞ்சம் மருத்துவமும் தெரிந்திருந்தது. என் தீப்புண்ணுக்குச் சில மருந்துக் கலவைகள் தருவித்தார். பூசிச் சிறிது நேரத்துக்கெல்லாம் எனக்குக் குணமும் தெரிந்தது.

விருந்து ஆறிக் குளிர்ந்திருந்தது. சிறை அதிகாரி சர் வில்லியமைச் சிறப்பிக்கத் தாமே அருகிருந்து எங்களைக் கவனித்துக்கொண்டார். உணவு முடிவதற்குள் தமக்கை மகன் மீண்டுமொருமுறை ஆளை அனுப்பிவிட்டார். தாம் குற்றவாளி அல்லர் என்பதை உடனே ருசுப்படுத்த வேண்டுமாம். அவரை வரச்சொல்லி அனுமதித்ததும் திரு. தாரன்ஹில் உள்ளே நுழைந்தார்.

31

[முன்னர்ச் செய்த உதவியின் பிரதிபலன்
வட்டியும் முதலுமாய்த் திரும்புகிறது.]

ஒன்றும் நடக்காததுபோல் திரு. தாரன்ஹில் சிரித்தமுகமாய் வந்து மாமாவைத் தழுவச் சென்றார். ஆனால், அவர் அதைத் தடுத்துவிட்டார். சற்றுக் கடுமையாகவே பேசினார்:

'தழுவுவதெல்லாம் இருக்கட்டும். நீ நேர்மையாக நடந்தால் அதுவே எனக்குப் போதும். நான் உனது தகாத செயல்களை எங்குச் சென்றாலும் கேள்விப்படுகின்றேன் — பொய், கோழைத் தனம், அட்டூழியம். இதோ இந்த எளியவரின் வீட்டுக்குள் நண்பன்போல் நுழைந்து, ஏமாற்றி, மகளைக் கெடுத்துப் பின் அவர் தட்டிக்கேட்டதற்காக அவரைப் பிடித்து இங்கே போட்டு... இதெல்லாம் என்ன? அவர் மகனை நேருக்குநேர் சண்டையால் சந்திக்கத் துணிவில்லாமல்......'

திரு. தாரன்ஹில் குறுக்கிட்டார் :

'ஐயா, இப்படிப்பட்ட சண்டைகளைத் தவிர்க்க வேணுமென நீங்களே எனக்குப் பலமுறை போதித்திருக்கிறீர்கள். இப்பொழுது அதையே என்மீது குற்றமாகத் திருப்புகிறீர்கள்.'

'துவந்தப் போரைத் தவிர்த்தது சரியே. ஆயினும், நீ நடந்து கொண்டது கோழைத்தனம் என்பதையும் மறுக்கமுடியாது. இப்படியொரு சந்தர்ப்பத்தில் உன் தந்தை இவ்வாறு நடந்து கொண்டிருக்கமாட்டார். அவர், என் மைத்துனர்; மானத்தை மதித்தவர்.'

'எனது மற்றைய நடவடிக்கைகளும் குற்றங்கள் அல்ல. இந்தக் கனவானின் மகளுடன் நான் சில பொழுதுபோக்கு இடங் களில் காணப்பட்டது வாஸ்தவமே. நாங்கள் உல்லாசமாகத் தோற்றமளித்ததை வைத்துக்கொண்டு நான் அவளைக் கெடுத்து விட்டதாகப் புரளி கிளப்பிவிட்டார்கள். நான் இவரைச் சிறைத் தண்டனையினின்று தப்புவிக்க என்னாலானதைச் செய்வதாக அவரிடம் சொன்னேன். அவர்தாம் என்னை ஏசி அவமதித்து

அனுப்பினார். அதன்பின் நடந்தவற்றை நமது வழக்குரைஞரும் காரியஸ்தரும் உங்களுக்கு விவரமாகத் தெரிவிப்பார்கள். நான் இந்தக் காரியங்களை அவர்களிடமே பொறுப்பாக விட்டிருக்கிறேன். கடன்பட்டவர் கடனைத் தீர்க்க வழியில்லாமல் இருந்தால் அல்லது மறுத்தால் இப்படிப்பட்ட நடவடிக்கை எடுப்பது வழக்கம்தானே. கடனை வசூலிக்கச் சட்டப்படிதான் நடவடிக்கை எடுத்திருக்கிறேன். இது அநியாயமன்று; கொடுமையும் அன்று.'

'நீ சொல்லுவது உண்மையானால் நீ செய்தது குற்றமாகாது. நடுநிலை நின்றுபார்த்தால் அநியாயமாகாது. ஆயினும், இவர் போன்ற மனிதரைச் சிறையிலிடுவதை நீ தவிர்த்திருக்க வேண்டுமென்றே தோன்றுகிறது.'

'நான் சொல்லும் எந்த விவரத்தையும் அவரால் மறுக்கவியலாது. அவரிடமே நேரில் இதைக் கேட்கிறேன்—மறுக்க முடியுமாவென்று. எனது வேலையாள்கள் பலரும் நான் சொல்லுவது உண்மையென ஒத்துக்கொள்ளுவார்கள்' என்று என்னைப் பார்த்துப் பேசினார்.

அவரை மடக்க எனக்குத் தெரியவில்லை. நான் மௌனமாகவே இருந்தேன். எனவே, அவர் மேலும் என்னைக் குற்றஞ் சாட்டிக்கொண்டே போனார்.

'நான் ஒரு பாவமுமறியாதவன். நீங்கள் சொன்னால் நான் இந்தக் கனவானை மன்னித்துவிடவும் தயாராயிருக்கிறேன். ஆயினும், அவர் உங்களிடம் என்னைப்பற்றிப் புகார்க் கடிதம் எழுதியதைத்தான் என்னால் எளிதில் மறக்கமுடியவில்லை. அதுவும் அவர் மகன் என்னைக் கொல்லத் தருணம் பார்த்துக் கொண்டிருந்தபோது. அவன் செய்த குற்றமோ மிகப் பயங்கரமானது. துவந்தயுத்தத்திற்கு அழைத்துச் சவால் கடிதம் எழுதினான். அது இதோ இருக்கிறது. எனது வேலையாள் ஒருவனையும் அவன் படுகாயப்படுத்திவிட்டான். அவனுக்கும் நாம் நியாயஞ்செய்தாக வேண்டும். மாமா அதற்குக் குறுக்கே நிற்கமாட்டீர்கள் என்பது எனக்குத் தெரியும்.'

என் மனைவி கோபத்தில் குமுறிக்கொண்டு பேசினாள் :

'ஏ பிசாசே, நீ இதுவரை பழியெடுத்தது போதாதா? என் மகனையுமல்லவா கொல்லத் துணிஞ்சுட்டே! அவன் ஒரு பாவமுமறியாத பச்சைக் குழந்தை போன்றவன். சர் வில்லியம்தான்

இதைக் கவனித்து எங்களைக் காப்பாற்றவேணும். அவர் தருமசீலர்; யாருக்கும் அநியாயஞ் செய்கிறவரில்லை.'

'அம்மணி, அவன் தப்புவிக்கப்படுவதை விரும்புகின்றவன் நான். ஆனால், அவன் குற்றம் மிகப் பட்டவர்த்தனமாக இருக்கிறதே? அதை ருசிப்பிக்கும்...'

அப்பொழுது ஜென்கின்ஸன் உள்ளே நுழைந்தார். அவர் பின்னே இரு காவலாளிகளும் ஒரு மனிதனைப் பிடித்துக்கொண்டு நுழைந்தனர். நெட்டை மனிதன் — கனவானைப்போல் சட்டைகளும் அணிந்திருந்தான்.

'கடைசியில் அகப்பட்டுவிட்டான். தைபரனில் தூக்கிலிடப் படவேண்டிய கேஸ் இவன்' என்றார் ஜென்கின்ஸன். அவனையும் ஜென்கின்ஸனையும் கண்டதும் நெடுந்தாரன்ஹில்லின் முகம் விகாரமாயிற்று. பயத்தில் பின்வாங்கினார். முகம் வெளிறி விட்டது. அங்கிருந்து ஓடிவிட எத்தனிப்பதுபோல் அங்குமிங்கும் பார்த்தார். அதைக் கண்டதும் ஜென்கின்ஸன் அவரைப் பிடித்துத் தம் பிடியிலேயே வைத்துக்கொண்டு சொன்னார்:

'என்ன பிரபு அவர்களே, உங்கள் பழைய நண்பர்களைக் கண்டால் வெட்கமாக இருக்கிறதோ? நானும் பாக்ஸ்டரும் உங்களுக்கு இன்று நேற்றுப் பழக்கமா? நெடுநாள் நண்பர் களல்லவா? பெரிய மனிதர்கள் தங்கள் பழைய நண்பர்களை மறப்பது சகஜம்தான். ஆனால், நீங்கள் எங்களை மறந்தாலும் நாங்கள் உங்களை மறப்பதில்லை என்று தீர்மானம் பண்ணிக் கொண்டிருக்கிறோம்!'

பிறகு, சர் வில்லியம் தாரன்ஹில்லைப் பார்த்து எல்லாம் விவரமாகச் சொன்னார் :

'இவன் எல்லாவற்றையும் கக்கிவிட்டான். காயப்பட்டதாக அவர் சொல்லிய வேலையாள் இவன்தான். கனவான் வேடத்தில் வேலை நடத்தினால் நல்லது என்று அவர்தான் தமது உடைகளைக் கொடுத்து இவனை இந்த விவகாரங்களில் ஈடுபடுத்தியது.'

அவன் போட்டிருந்த கோட்டு தமது மருமகனுடையது என்று சர் வில்லியமும் அடையாளம் கண்டுகொண்டார்.

ஜென்கின்ஸன் அவர்கள் போட்டிருந்த திட்டத்தை விளக்கினார்:

'இவன் சோபியாவைக் கடத்திக் கொண்டுபோய்த் தனியிடத்தில் வைத்து மிரட்டிக்கொண்டிருக்கிற சமயத்திலே தாரன்ஹில் தற்செயலாய் வருவதுபோல் வந்து அவளை அவனிடமிருந்து ரட்சிக்க வேண்டியது. அப்பொழுது அவள் அவரிடம் பிரியம் காட்டுவாள் என்று எதிர்பார்த்திருந்தனர்.'

பாக்ஸ்டரும் உடைத்துச் சொல்லிவிட்டான். தாரன்ஹில்லுக்கு இரு சகோதரிகள்மீதும் கண் இருந்ததாம். அவரே அடிக்கடி அதை இவனிடம் சொல்லியிருக்கிறாராம்.

'விரியன்பாம்புக் குட்டியை மார்பிலே போட்டு வளர்த்த கதையாகவல்லவா இருக்கிறது. இவன் நீதி, நியாயம் என்று வேறு பேசிக்கொள்ளுகிறான். அவனுக்கு நிச்சயம் அது கிடைக்கும். காவலரே அவனைப் பிடியுங்கள்—சற்று இருங்கள். சட்டபூர்வமான சாட்சியங்களை முதலில் சேகரித்துக்கொள்ளுவது நல்லது.'

இதற்கிடையில் தாரன்ஹில் கெஞ்சத் தொடங்கிவிட்டார்.

'இந்த ஜென்கின்ஸனும் பாக்ஸ்டரும் பெயர்வாங்கிய கேடிகள்; அயோக்கியர்கள். அவர்கள் சொல்லைக் கேட்டுக்கொண்டு எதுவும் செய்யாதீர்கள். என் வேலைக்காரரிடமும் விசாரித்துப் பாருங்கள்...'

'உன் வேலைக்காரரா? அவர்கள் இனி உன் வேலைக்காரர் அல்லர். இருப்பினும் அவர்களிடமும் கேட்டுவிடுகிறேன். முதலில் பட்லரைக் கூப்பிடுங்கள்.'

பட்லர் வந்து ஒரே பார்வையில் விஷயத்தைக் கிரகித்துவிட்டான். தன் எஜமானனுக்கு அதிகாரம் முடிந்துபோயிற்று என்று புரிந்துவிட்டது.

'இந்த நபர் உனது எஜமானனின் ஆடைகளை அணிந்து வெளியில் சென்றதை நீ எப்போதேனும் கண்டிருக்கிறாயா?' என்று சர் வில்லியம் கேட்டதும் அவன் உண்மையைச் சொல்லிவிட்டான்:

'பலமுறை கண்டிருக்கிறேன், ஐயா! அவருக்குப் பெண்கள் கொணர்வது அவர்தான்.'

தாரன்ஹில் அவனைப் பார்த்துக் கத்தினார்:

'என் முகத்துக்கெதிரே இபபடிப் பேச உனக்குத் தைரியம் வந்துவிட்டதா?'

'யார் எதிரேயும் பேச நான் தயார். உங்கள் நடவடிக்கைகள் எனக்கு ஒரு நாளுமே பிடித்ததில்லை. இன்று உடைத்துச் சொல்லவேண்டிய சந்தர்ப்பம் வந்துவிட்டது. அவ்வளவுதான்.'

ஜென்கின்ஸன் வலியச் சொன்னார்: 'சரி, இப்பொழுது என்னைப்பற்றி உங்களுக்குத் தெரிந்தவற்றையும் சொல்லிவிடுங்கள்.'

'உங்களைப்பற்றிச் சொல்றதுக்கு நல்லது என்ன இருக்கு? இந்த ஐயாவுடைய பெரிய மகளைக் கடத்திக்கிட்டு வந்த ஆளுங்களில் நீங்க ஒருத்தர்.'

'உன் வேலையாள்களைச் சாட்சிக்கு அழைக்கவேணும் என்று கேட்டாயே. அவர்கள் என்ன சொன்னார்கள் என்று பார்த்துக் கொண்டாயல்லவா?'

பின், தொடர்ந்து சமையல்காரரிடம் கேட்டார்:

'அப்படியானால் பெரிய மகளை இவர்தான் கூட்டிக் கொண்டு வந்தாராக்கும்?'

'இல்லை ஐயா, அந்தப் பொண்ணைக் கடத்தின வேலையைச் சின்னப்பிரபுவே கவனிச்சுக்கிட்டாரு. அவங்களைக் கலியாணம் கட்டிவைக்க குருவானவரை அழைச்சுவந்தது இவரு.'

ஜென்கின்ஸன் ஒத்துக்கொண்டார்:

'உண்மைதான். அந்த வேலை என்னிடம்தான் ஒப்படைக்கப்பட்டிருந்தது. நான் அதைச் செய்தேன்.'

சர் வில்லியம் ஆச்சரியப்பட்டுப்போனார். ஜார்ஜுவைக் கைதுசெய்ய உத்தரவிட்ட மாஜிஸ்திரேட்டிடம் தொடர்பு கொண்டு அவனை விடுவிக்கும் ஏற்பாடுகளையும் தொடங்கினார். சிறை அதிகாரியுடன் உத்தரவாதமாகப் பேசி அவனது விலங்குகளை அப்பொழுதே அகற்றவும் சொன்னார்.

பிறகு கேட்டார் :

'அந்தப் பெண் இப்பொழுது எங்கே இருக்கிறாள்? அவளை இவன் நயவஞ்சகமாகக் கடத்தியதை அவள் வாய்மூலமாகவே கேட்பது நல்லது. அவள் எங்கே இருக்கிறாள்?'

எனக்குத் துக்கம் பீறிட்டுக்கொண்டு வந்தது. 'அவள் போய்விட்டாளையா, இந்தத் துன்பங்களை எல்லாம் தாங்கிக் கொள்ள இயலாமல்—'

நான் பேசி முடிப்பதற்குள் சிறைக்குள் ஒரு புதிய நபர் நுழைந்தார். செல்வி அரபெல்லா உல்மாட்டு! மறுநாள் விடிந்தால் இவளுக்கும் திரு. தாரன்ஹில்லுக்கும் கலியாணம். இவள் இப்பொழுது இங்கே எப்படி வந்தாள்? அவளும் அதுபோல சர் வில்லியமையும், திரு. தாரன்ஹில்லையும் அங்கே அப்பொழுது எதிர்பார்க்கவில்லை.

அவள் அங்கே வந்த சந்தர்ப்பத்தை விளக்கினாள். கலியாண வைபவம் அவளது மாமா திரு. ஆர்னால்டு இல்லத்தில்தானாம். எனவே, அவளும் அவள் தந்தையும் அங்கே பயணம் போகிறவழியில் இந்த ஊர்ப்புறத்திலேயுள்ள சத்திரத்தில் தங்கியிருந்தபோது வெளியே என் சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்ததைச் சன்னல் வழியே கண்டு, கூப்பிட்டு விசாரித்ததில் நாங்கள் இங்கே இருப்பது தெரிந்து தகப்பனார் தடுத்தும் கேளாமல் சிறைக்கு வந்து என்னைப் பார்த்துவிட்டுப் போக வந்தவள் அவள். எங்கள் துன்பங்களுக்கெல்லாம் மூலகர்த்தா நாளைய மாப்பிள்ளைதான் என்பது அவளுக்கு இன்னும் தெரியாது.

(வாழ்க்கையிலே பல நிகழ்ச்சிகள் இப்படித் தற்செயலாய் எதிர் பாராதவிதமாய் நடந்துகொண்டிருக்கின்றன. விசேஷ சந்தர்ப் பங்களானால் மாத்திரமே நாம் அவற்றைக் கவனித்து வியக்கிறோம். மற்றபடி அலட்சியமாயிருந்து விடுகிறோம். ஆராய்ந்து பார்த்தால் நமது இன்பங்கள் அனைத்தும் இத்தகைய எதிர்பாராத தற்செயல் நிகழ்ச்சிகளின் விளைவுகளேயன்றி வேறில்லை. நமக்கு உண்ண உணவும் உடுக்க உடையும் தினமும் கிடைக்கிறதென்றால், பல காரியங்கள் இப்படி இயல்பாய்க் கூடிவந்திருக்க வேண்டும். விவசாயிக்கு உழுவதற்கு மனம் வரவேண்டும்; கடலிலே காற்று கப்பலுக்கு அனுகூலமாய் வீசவேண்டும்; இவையெல்லாம் தற்செயலாய்ச் சேர்ந்து நடந்தால்தான் நமக்கு வயிறு நிறையும். ஆடை உடலை மூடும்.)

சற்று நேரம் அமைதியாய்க் கழிந்தது. என் மாணவி—அவளை அப்படி அழைப்பதுதான் எனக்குப் பிரியமாயிருக்கிறது—அரபெல்லா பரிவுடன் என்னைப் பார்த்துக்கொண்டு நின்றாள். திரு. தாரன்ஹில் என் விடுதலைக்காக உதவி செய்வதற்காக அங்கு வந்திருக்கிறாராக்கும் என்று அவளாக அனுமானம் செய்து கொண்டு அவரைப் பார்த்துச் சொல்லுவாள் :

'ஆமாம், இதையெல்லாம் நீங்கள் என்னிடம் சொல்லவேயில்லையே ! இந்தக் குடும்பம் நம்மிருவருக்கும் எத்தனை நெருக்கமானது! இவர் எனது பெருமதிப்பிற்குரிய குரு. இவருக்கு ஒரு

கஷ்டம் என்றால் அதைக் களைய நானும் எதுவேண்டுமானாலும் செய்வேனே. இப்பொழுதுகூட நீங்கள் என்னிடம் சொல்லாமல் இங்கே தனியாக வந்து நிற்கிறீர்கள். ரகசியமாக உபகாரம் செய்வதில் நீங்களும் உங்கள் மாமாவைப்போல்தான்.'

சர் வில்லியமால் குறுக்கிடாமல் இருக்க முடியவில்லை. 'உபகாரமா? இல்லையம்மா. இவன் அபகாரம்தான் செய்து கொண்டு திரிகிறான். இவன் நடவடிக்கைகளை விவரிக்கப் போனால்—மனிதகுலத்துக்கே கேவலம் அம்மா! பாவம் இந்த எளியவரின் ஒரு மகளைக் கெடுத்து, அடுத்தவளைக் கடத்திச் சென்று, அப்பாவைச் சிறையில் தள்ளி, மகனுக்கு விலங்கு பூட்டி ஒன்றா இரண்டா அவன் செய்த கொடுமை! நல்லகாலம் உனக்கு இன்னும் திருமணம் நடக்கவில்லை. தப்பித்துக்கொண்டாயென நினைக்கிறேன்!'

'அம்மாடியோவ்! இதுவா கதை? இவருடைய மகன் காப்டன் ஜார்ஜு பிரிம்ரோஸு ஒரு சீமாட்டியை மணந்துகொண்டு அமெரிக்காவுக்குக் கிளம்பிவிட்டார் என்று என்னிடம் சொன்னாரே, அது என்ன?'

என் மனைவி ஓர் உரையாற்றவே தொடங்கிவிட்டாள். 'என் அழகு பெண்ணே! அவர் சொன்னதெல்லாம் சுத்தப் பொய்யாக்கும். என் மகனுக்குக் கலியாணம் ஆகவுமில்லை. அவன் அமெரிக்காவுக்குப் போகவுமில்லை. நீதான் அவனை மறந்துட்டியே தவிர அவன் வேறு யார்பேரிலும் பிரியம் வச்சதே இல்லை. உன்னிமித்தம் பிரம்மச்சாரியா இருக்கவும் தயாரென்று உன்னிடம்கூட அவன் அடிக்கடி சொல்லியிருப்பானே?'

தன் மகனின் உண்மைக் காதல்பற்றி அவள் மேலும் எடுத்துரைத்துவிட்டு, தாரன்ஹில்லுடன் அவன் துவந்தயுத்தச் சவால் விட்டதையும் நியாயப்படுத்திக்கொண்டு வந்தவள், திடீரெனத் திசைவிலகி, பிரபுவின் பெண்லோலங்களையும் பொய்க் கலியாணங்களையும்பற்றி விவரிக்கப் புகுந்துவிட்டாள். அது முடிந்ததும் அவரது கோழைத்தனங்களை உதாரணங்களோடு அம்பலப் படுத்தி உரையை முடித்துவைத்தாள்.

செல்வி உல்மாட்டுக்கு ஆச்சரியம் :—

'நான் தப்பியது பேரதிசயம்தான்! படுகுழியில் விழவிருந்தேனே! ஜார்ஜு வேறு பெண்ணைக் காதலிப்பதாக முதலில் சால்லி எனக்கு அவர்மீது வெறுப்பு ஏற்படச் செய்தார். என்ன

ஜோடனையான பொய்க்கதைகளை அவிழ்த்துவிட்டார்! என்னை ஏமாற்றினார்.'

பாக்ஸ்டருக்குக் காயம் அதிகமில்லாததாலும், சர் வில்லியம் தமது மாஜிஸ்திரேட்டுப் பதவி அதிகாரத்தைக்கொண்டு உத்தரவாதம் அளித்ததாலும் ஜார்ஜுவின் விலங்கு அகற்றப்பட்டிருந்தது. ஜென்கின்ஸன் அவனை வெளியே அழைத்துச் சென்று அலங்கோலமாக இருந்த அவனது முடியைத் திருத்தியிருந்தார். அவனது படைவீரச் சீருடைகளைத் தரித்துக்கொண்டு அவன் மிகக் கம்பீரமாக உள்ளே நுழைந்தான். என் தந்தையுள்ளம் அவனைக் கண்டு பெருமிதம் கொண்டது. செல்வி உல்மாட்டைக் கண்டதும் எட்ட நின்றே தலைகுனிந்து மரியாதை தெரிவித்துக்கொண்டான். அவன் இல்லாதபோது நிகழ்ந்த மாற்றங்கள் அவனுக்குத் தெரியாதே.

ஆனால், செல்வி உல்மாட்டோ நாலுபேர் முன்னிலையில் இருக்கிறோமே என்பதையும் மறந்துவிட்டாள். அவள் கண்களில் நீர் முட்டிவிட்டது. அவனிடம் ஓடோடிச் சென்று மன்னிப்புக் கேட்க விரும்பினாள் போலும். கன்னங்கள் சிவந்தன. அகத்தில் உண்டான எழுச்சி முகத்தில் தெரிந்தது. அவள் மிகவும் வெட்கமும் வருத்தமும் கொண்டாள் என்பது வெளிப்படையாயிற்று.

அவளைக் கவனித்த என் மகன் மிகவும் குழப்பமடைந்தான். வியப்புற்றவனாய், ஆனால் நம்ப இயலாதவனாய், மனம்நெகிழ்ந்து மலைத்துப்போய் நின்றான். பின்னர் 'இது உண்மைதானா? இது நான் சற்றும் எதிர்பார்க்காதது! எனக்குக் கிடைத்த பெரும் பேறு!' என்றான்.

அவளும் நெகிழ்ந்துபோய்விட்டாள் :

'நான் ஏமாந்துட்டேன். அல்லது உங்களுக்குக் கொடுத்த வாக்கை ஒருகாலும் மீறியிருக்கமாட்டேன். இஃது சத்தியம்! நீங்கள் நம்பவேண்டும். இனி, அரபெல்லா மணந்தால் உங்களை மணப்பாள். அது இல்லையேல் வேறு யாரையுமே மணக்க மாட்டாள்.'

'வேறு யாரையும் நான் மணக்கவிட மாட்டேன்' என்றான் ஜார்ஜு.

இது போதுமானதாகவிருந்தது என் மகன் மோசேக்கு. திரு. உல்மாட்டை அழைத்துவரச் சத்திரத்துக்குக் கிளம்பினான் அவன்.

சின்னப்பிரபு நன்றாக மாட்டிக்கொண்டார். இனித் தப்பிக்க வழியில்லை என்று தெரிந்ததும் குழைவது கெஞ்சுவது எல்லா வற்றையும் மூட்டைகட்டி வைத்துவிட்டுத் தன் சுயரூபத்தைக் காட்டத் தொடங்கினார்.

சர் வில்லியமைப் பார்த்துச் சொன்னார்:

'எனக்கு இங்கே நீதி கிடைக்க வழியில்லை. ஆனால், நான் எதற்கும் சளைத்தவனல்லன். பணத்திற்காக நான் இனி உங்க ளைத் தொங்கவேண்டிய அவசியம் எனக்கு இல்லை. செல்வி உல்மாட்டு—அவள் அப்பாவுக்கு அவள் ஒரே குழந்தை—அவள் செல்வமனைத்தும் என்பேரில் எழுதப்பட்டுப் பத்திரம் முடிந்து விட்டது. அவளை இழப்பதைப்பற்றி இனி எனக்குக் கவலை யில்லை. அவள் பணத்துக்காகத்தான் நான் அவளைக் கலியாணம் பண்ண நினைத்தேன். அது கிடைத்துவிட்டது. போதுமே' என்றான்.

சட்டப்படி இனிச் செல்வி உல்மாட்டின் பெருஞ்செல்வத்துக்கு அவன்தான் அதிகாரி. பத்திரங்கள் எழுதிப் பதிவுசெய்வதற்கு சர் வில்லியமும்கூடத் துணை செய்திருந்தார். கலியாணத்துக்கு முன் பெண்ணின் செல்வத்தை வரப்போகும் கணவனுக்கு உடைமை யாக்குவது மரபுதான். அதன் பிரகாரம்தான் நடந்திருந்தது. இனி என்ன செய்ய முடியும்? சர் வில்லியமுக்கு இன்னொரு கவலை யும் முளைத்தது. அரபெல்லா பணத்தை இழந்துவிட்டதால் ஒருவேளை ஜார்ஜுவின் அன்பும் மாறிவிடுமோ என்பதுதான்.

அப்பொழுது அவளே ஜார்ஜுவைப் பார்த்துச் சொல்லுவாள்:

'என்னைத் தவிர இனி நான் வேறு எதையும் கொணர முடியாது.'

அவன் சொன்னான்:

'அது ஒன்றைத் தவிர நான் வேறு எதையும் விரும்பவில்லை. உன்னைவிட உன் செல்வம் உயர்ந்ததில்லை. அதை நீ இழந்தது குறித்து ஒருவகையில் எனக்கு மகிழ்ச்சியே. ஏனெனில், எங்க ளிருவரில் யார்பேரில் உனக்கு உண்மை அன்பு என்பது இப் பொழுது தெளிவாகிவிட்டது.

திரு. உல்மாட்டு வந்துசேர்ந்து தாரன்ஹில் வண்டவாளத்தை அறிந்து மகள் தப்பித்துக்கொண்டாள் என்று மகிழ்ச்சியடைந் தார். ஆனால், பத்திரத்தை இனி மாற்றமுடியாது என்று அறிந் ததும் அவர் பட்டபாடு கொஞ்சநஞ்சமன்று. யார் சொத்து

யாருக்குப் போகிறது? கல்லாய்ச் சமைந்துதான் போனார்! சர் வில்லியம் அவரைத் தேற்றினார்.

'இதற்குத்தான் பணத்தின்மீது அளவுமீறி நம்பிக்கை வைக்கக்கூடாது என்கிறது. உங்கள் மகளுக்கு இனி என்ன குறை? படையிலே பெரிய உத்தியோகம் வகிக்கிற நேர்த்தியான மாப்பிள்ளை கிடைத்திருக்கிறானே! அவன் மேலும் முன்னுக்கு வர நான் முயல்கிறேன். கவலை கூடாது. மகிழ்ச்சி என்பது மனத்திலேதான் உள்ளது.'

அப்பொழுது அந்த மனிதர் சொன்னார்:

'சர் வில்லியம், திருமண விஷயத்தில் பெண்ணின் விருப்பத்துக்கு மாறாக நான் எதுவும் செய்யமாட்டேன். அவள் ஜார்ஜூவை இன்னும் காதலித்தால் அவனைத் திருமணம் செய்துகொள்ளுவது எனக்குச் சம்மதமே. என்னிடமும் இன்னும் கொஞ்சம் ஆஸ்தி மீதமிருக்கிறது. அதுபோக, ஒருகால், டாக்டர் பிரிம்ரோஸூ இழந்துபோனசொத்து அவருக்குத் திரும்பக் கிடைக்குமானால் அதில் ஆறாயிரம் பவுன்களை அவர் என் மகள்பேரில் எழுதிவைக்க ஒப்புக்கொள்ள வேண்டும். அப்படியானால், இன்று இரவே கலியாணம் முடிப்பதானாலும் எனக்கு உடன்பாடுதான்.'

அந்தப் பணமாவது திரும்பி வருவதாவது. ஆனால் என்ன? கலியாணம் முடிவதற்கு அந்த வாக்குத்தானே வேண்டும்?

நான் சந்தோஷமாக அதைக் கொடுத்தேன். திருமணமும் உறுதியாயிற்று. பெண்ணும் பையனும் வழக்கப்படி ஒருவரையொருவர் தழுவிக்கொண்டனர்.

அப்பொழுது திடீரென ஜென்கின்ஸன், வில்லியம் பிரபுவைப் பார்த்து ஒரு கேள்வியைப் போட்டார்:

'ஐயா, சின்னப்பிரபுவுக்கு வேறு பெண்ணுடன் திருமணம் முடிந்திருந்தால் அவருக்கு இந்தப் பத்திரம் செல்லுமோ?'

'இதில் சந்தேகம் என்ன? செல்லாது.'

'சரி, இப்பொழுது சொல்லிவிடுகிறேன். அவர் என் நண்பர் தான். இருப்பினும் இப்பொழுது இதைச் சொல்லவேண்டியதாயிருக்கிறது. அவருக்கு இன்னொரு பெண்ணுடன் திருமணமாகியுள்ளது.'

சின்னவர் வெகு கோபமாகக் கத்தினார்:

'ராஸ்கல், பொய் சொல்லுகிறாய். நான் சட்டப்படி எந்தப் பெண்ணையும் திருமணம் செய்துகொண்டது கிடையாது.'

'மன்னிக்கவேண்டும். நான் சொல்லுவது உண்மையே. சற்றுப் பொறுமையாக இருந்தால் நீங்கள் எல்லாருமே அவளைக் கண்டுகொள்ளும்படியாக நான் அவளை இங்கே அழைத்துவர முடியும்.'

விர்ரென்று வெளியே நடந்தார் ஜென்கின்ஸன். அவர் என்ன செய்யப்போகிறாரென்று நாங்கள் ஆளாளுக்கு யூகம் செய்து கொண்டிருந்தோம்.

'இவன் பூச்சாண்டி என்னிடம் பலிக்காது. இந்த ஒரு விஷயத்தில் மாத்திரம் நான் மிக எச்சரிக்கையாக இருந்தவனாச்சே' என்றார் சின்னப்பிரபு.

'ஆசாமி யாரைக் கூட்டிவரப்போகிறாரோ, தெரியவில்லையே. ஏதேனும்கீழ்த் தரவிகடமாக இருக்கப்போகிறது' என்று பயந்தார் பெரிய பிரபு.

'இருக்காது' என்றேன் நான்.

'இந்த மனிதர் எத்தனையோ ஏழைப் பெண்களை ஏமாற்றியிருக்கிறார். அவர்களில் ஒருத்தி இப்ப இவரையே ஏமாற்றிவிட்டாளோ என்னவோ.........'

'ஆங்...என்ன இது? என் மகளா! என் ஒலிவியாவா! ஆம். இது உண்மைதான். என் கரங்களிலே அணைப்புண்டு கிடப்பது அவளேதான். நான் இறந்துவிட்டதாக நினைத்த என் அருமந்த மகளேதான்! நீ தீர்க்காயுசாக இருக்கவேண்டும் மகளே.'

என் ஆனந்தம் கட்டுக்கு அடங்கவில்லை. அவளை அணைத்து ஏதேதோ சொல்லியவண்ணமிருந்தேன். இழந்த காதலியைத் திரும்பப் பெற்ற என் மகனின் ஆனந்தத்தைவிட இறந்த மகளை மீண்டும் அடைந்த என் பேரானந்தம் மிக அதிகமன்றோ!

'என் முதுமைக்காலத்தில் என்னைத் தாங்க வந்துவிட்டாயே, என் மகளே.'

இப்பொழுது ஜென்கின்ஸன் முன்வந்து அழுத்தந்திருத்தமாய்ச் சொன்னார்:

'உங்கள் மகள்தான். இங்கிருக்கும் எந்தக் குலமகளைவிடவும் கௌரவத்தில் தாழ்ந்தவளும் அல்லள். இவள் சட்டப்படி

திரு. தாரன்ஹில்லின் மனைவியாவாள். அவர்கள் திருமண உரிமம் இதோ', என்று அதைச் சர் வில்லியமின் கையில் வைத்துவிட்டு மேலும் தொடர்ந்தார் :

'உங்கள் சந்தேகங்களை எல்லாம் தீர்த்துவைக்கிறேன். சின்னப் பிரபுவும் நானும் பலகாலமாக நண்பர்கள். அவரிடம் பணம் வாங்கிக்கொண்டு நான் அவருக்குப் பற்பல வேலைகள் செய்து கொடுத்திருக்கிறேன். இந்தப்பெண்ணோடு ஒரு போலித்திருமணம் செய்துகொள்ளப் போலிக் குரு கொண்டுவந்து போலி லைசென்சு தயாரிப்பதும், அவர் எனக்கு இட்ட வேலைகளில் ஒன்று. ஆனால், இந்த வழக்கில் நான் உண்மைக் குருவையே அழைத்து வந்திருந்தேன். எனக்கு இந்தப் பெண்ணின்மேல் இரக்கம் பிறந்து விட்டது என்று நீங்கள் நினைத்தால் அது தவறு. உண்மை லைசென்சைக் காட்டிச் சமயம் வருகிறபோது அவரிடம் பணம் கறக்கவேண்டுமென்பதே என் நோக்கம்.'

நாங்கள் எல்லாரும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தோம். பொது அறையிலிருந்த கைதிகள் அதன் காரணத்தைக் கேட்டு அறிந்து அவர்களும் தங்கள் விலங்குகளை ஆட்டி இசை எழுப்பித் தங்கள் சந்தோஷத்தைத் தெரிவித்தார்கள்.

ஒலிவியாவின் முகம் மலர்ந்திருந்தது. தேய்ந்து ஒளிமங்கிக் கிடந்த அந்த அழகு முகத்தில் பொலிவுவரத் தொடங்கிவிட்டது. அவப்பெயர் மறைந்துவிட்டது. திருமணம் அங்கீகாரம் பெற்றுச் சமுதாயத்தில் அவள் கண்ணியமான நபராகிவிட்டாள். வசதி படைத்த கணவன். முகம் பிரகாசிக்காமல் இருக்குமா?

எனக்கு ஒரு கேள்வி மனத்தில் உறுத்திக்கொண்டேயிருந்தது. ஜென்கின்ஸனிடம் கேட்டுவைத்தேன் :

'ஆமாம், நான்தான் ஏற்கெனவே நொந்துபோய்க் கிடந்தேனே? அத்தோடு என் மகள் இறந்துவிட்டாள் என்று ஏன் என்னிடம் சொல்லிவைத்தீர்? ஆயினும், இழந்து பெற்ற இந்த அனுபவம் இரட்டிப்புச் சந்தோஷம் கொடுத்தது என்பதும் உண்மையே.'

'சொல்லுகிறேன், கேளுங்கள். நீங்கள் சின்னப்பிரபு தாரன்ஹில்லுக்குப் பணிந்துபோனால் அவர் உங்களை விடுதலையாக்கிவிட வாய்ப்பிருந்தது என நினைத்தேன். அவள் உயிரோடு இருந்தால் நீங்கள் பணிவுக் கடிதம் எழுதச் சம்மதிக்கவே மாட்டீர்கள் என்பதும் எங்களுக்குத் தெரியும். ஆகவேதான் நானும் உங்கள் வீட்டம்மையாருமாகச் சேர்ந்து இந்தச் சூழ்ச்சியைச் செய்தோம்.

மேற்கண்ட விளக்கப் பேச்சுகள் நடக்கையிலே திரு. தாரன் ஹில்லின் முகம் இருண்டுபோய்க் கிடந்தது.

பின், திடீரென என்னவோ நினைத்துக்கொண்டவராய் மாமாவின் காலடியில் தடாலென முழங்காலிட்டார். கல்லுங் கரையும் குரலிலே ஏதேதோ சொல்லி மன்னிப்புக் கேட்டார். சர் வில்லியம், மனம் கரையாதவராய் நின்றுகொண்டிருந்தார். அப்பொழுது நான் திரு. தாரன்ஹில் சார்பில் பரிந்து பேசினேன். பெரியவரும் அவரைத் தூக்கி அணைத்துப் புத்திமதிகள் சொன்னார்:

'உன் நடவடிக்கைகள் எளிதில் மன்னித்து மறக்கும்படியானவை அல்ல. அதற்காக உன்னை முற்றிலும் ஒதுக்கிவிடப் போகுமா? ஆனால், இனி நீ ஆடம்பரச் செலவுகள் பண்ணமுடியாதவாறு நான் கண்டிப்புச் செய்வது அவசியமாகிறது. உன் இன்றியமையாத தேவைகளுக்கு உனக்கு ஏற்பாடு பண்ணுவேன். நீ இதுவரை அனுபவித்து வந்த செல்வத்தில் மூன்றில் ஒரு பகுதியை உன் மனைவியின்பேரில் எழுதிவைக்கவும் உத்தேசித்துள்ளேன். அதிகப்படி செலவுகளுக்கு உனக்குப் பணம் தேவையானால், நீ அவளிடம் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம். பழைய வேலையாள்களில் ஒருவனை மாத்திரமே நீ இனி வைத்துக்கொள்ளுவது நல்லது.'

அதன்பின் ஒலிவியாவை அழைத்து நல்வாழ்த்துக் கூறினார். அதைத் தொடர்ந்து நாங்கள் அனைவரும் அவளை முறையே வாழ்த்தி முத்தமிட்டோம்.

சர் வில்லியம் சுற்றும்முற்றும் பார்த்தார். எல்லோரும் முகம் மலர்ந்தவர்களாக இருந்தபோது சோபியாவின் முகம் மட்டும் கூம்பிக்கிடக்கக் கண்டார்..

'பல பிரச்சினைகளை இன்று தீர்க்கிறோம். இன்னும் ஒன்று பாக்கியுள்ளது. திரு. ஜென்கின்ஸன் நமக்குப் பல உதவிகளைச் செய்துள்ளார். நாம் இருவருமே அவருக்குக் கடமைப்பட்டுள்ளோம். நல்ல கைம்மாறு செய்யவேண்டும். செல்வி சோபியாவை அவருக்கு மணம்முடித்து வைப்பதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அவர்பேரில் ஐந்நூறு பவுன்கள் நான் எழுதி வைக்கிறேன். சோபியா உன் விருப்பத்தையும் தெரிந்துகொள்ளலாமா?' என்று கேட்டு அவளைப் பார்த்தார்.

சோபியா திடுக்கிட்டு அதிர்ச்சி அடைந்தவளாய்த் தாயிடம் போய்ப் பதுங்கினாள். அவள் பதிலை எதிர்பார்த்து எல்லாரும் அவள் முகத்தை நோக்கினோம்.

'வேண்டாம். முடியாது, முடியவே முடியாது' என்று அழுவாரைப்போல முனகினாள்.

'அவரல்லவோ உன்னைக் காப்பாற்றியது! நல்ல அழகான இளைஞர்தானே! இந்த ஐந்நூறு போக மேற்கொண்டும் பண வருவாய்க்கு வாய்ப்பு இருக்கிறது.'

சோபியாவுக்கு குரலே எழும்பவில்லை. மிகுந்த சிரமத்துடன், 'தயைபுரிந்து இந்தப் பேச்சை விட்டுவிடுங்கள்' என்றாள். 'என்னை ஏன் இவ்வாறு கொடுமைப்படுத்த வேண்டும்?' அவரோ விடவில்லை ;

'ஆமாம், நீ ஏன் பிடிவாதம் பிடிக்கிறாய்? அவருக்கு என்ன குறை? அவர் நமக்கு எத்தனையோ உதவிகள் செய்தவர்.'

சோபியா இப்பொழுது கோபம் கொண்டாள். 'என்னால் முடியாது. அதைவிட நான் செத்துப்போவது மேல்.'

'அப்படியானால் சரி. நீ அவரை மணந்துகொள்ளவில்லையானால், நானே உன்னைக் கலியாணம் செய்துகொள்ள வேண்டியதுதான்' என்று கூறி அவளை அணைத்துக்கொண்டார்.

'நீ எனது பெருநிதி. உன் பருச்செல் உன்னை விட்டுவிடுவார் என்று நீ நினைத்தது எங்ஙனம்? சர் வில்லியம் தாரன்ஹில் பலஆண்டுகளாகத் தேடியலைந்து தனக்கென்று தெரிந்தெடுத்து வைத்த காதல் பொக்கிஷம் நீ! என் பணத்துக்காக அல்லாமல், எனக்காக, என்னை ஒரு மனிதனாக மாத்திரமே ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு பெண்ணைக் கண்டுபிடிக்க நான் பலகாலமாக அலைந்து திரிந்தேன். அழகை நான் தேடவில்லை. ஆனால் உன்னிடம் அறிவோடு குணத்தோடு பேரழகும் சேர்ந்துவிட்டது. உன்னைச் சந்தித்தபோது நான் ஆனந்தம் அடைந்தேன். நீயும் என்னைவிரும்புவதை உணர்ந்ததும் பேரானந்தம் கொண்டேன்.' பின் ஜென்கின்ஸனிடம் திரும்பி— 'ஐயா, இந்தப் பெண்ணுக்கு என் முகக்கட்டு பிடித்துவிட்டதாம். நான் அவளைப் பிரிவதாயில்லை. எனவே, அந்த ஐந்நூறு பவுன் என்ற கைம்மாறோடு நிறுத்திக்கொள்ள வேண்டியதுதான் போலும்.'

அக்காளை வாழ்த்தியபடியே தங்கையை வாழ்த்தும் சடங்கையும் வரிசைக்கிரமமாகச் செய்து முடித்தோம். இனி அவள், சீரான்ஹில் சீமாட்டி !

நாங்கள் சிறையைவிட்டுச் சத்திரத்துக்குச் செல்ல வண்டிகள் தயாராயின. இருளும் துயரும் கப்பிய அந்தப் பெருங்கட்டடத்தை விட்டு நீங்கும் நேரமும் வந்தது. கைதிகளிடம் விடைபெற்றுக் கொண்டோம். அவர்களுக்கு வழங்க சர் வில்லியம் பிரபு நாற்பது பவுன்களும், அதைப் பார்த்த திரு. உல்மாட்டு இருபது பவுன்களும் வழங்கினார்கள். சிறையைவிட்டு வெளியே வந்ததும் ஊர்மக்கள் எங்களைச் சூழ்ந்துகொண்டு ஆரவாரித்தனர். என் சபை உறுப்பினர் பலரை நான் அக் கூட்டத்திடையே கண்டு மகிழ்ந்தேன். சத்திரத்தில் நடக்கவிருக்கும் விருந்தில் அனைவரும் கலந்து கொள்ளும்படியாக அழைத்தோம்.

இன்பமும் துன்பமும் மாறிமாறி வரும் உலகம்தான் இது ஆனாலும் ஒரேநாளில் பல நிகழ்ச்சிகளைக் கண்டுவிட்ட என் மனம் ஓய்வை விரும்பியது. எல்லாரும் ஆரவாரமாய்ப் பேசிச் சிரித்துக் கொண்டிருந்தனர். நான் அவர்களிடம் சொல்லிக்கொண்டு படுக்கச் சென்றேன். சுகமும் துக்கமும் எல்லாருக்கும் பகிர்ந்தளிக்கிறவன் அவனல்லனோ! ஜெபித்துவிட்டு நிம்மதியாய் அயர்ந்து தூங்கினேன்.

32

[முடிவு]

மறுநாள் காலை கண்விழித்தபோது என் மூத்த மகன் ஜார்ஜு என் அருகே அமர்ந்திருந்தான். இலண்டன் வணிகத்தில் இழந்த சொத்து திரும்பக் கிடைக்குமானால் அதிலொரு பகுதியை அவனுக்குக் கொடுக்குமாறு திரு. உல்மாட்டு என்னிடம் வாக்கு வாங்கியிருந்தாரல்லவா? இப்பொழுது தாரன்ஹில் கைப்பற்றி யிருந்த செல்வம் அரபெல்லாவுக்கு மீண்டுவிடுவதால், அவன் இனித் தனக்கு என் செல்வத்தின் ஒரு பகுதி தேவையிருக்காது என்று சொன்னான். நான் வாக்குக் கொடுத்துவிட்டதால் இனி மீற மாட்டேன் என்று நான் சொன்னபோது அவன் ஒரு நல்ல செய்தி யைச் சொன்னான்.

இலண்டன் வணிகனைப் பிடித்தாயிற்றாம். எல்லாருக்கும் கொடுத்துத் தீர்க்க அவனிடம் ஏகப்பட்ட பணம் இருக்கிறதாம். அவ்வமயம் உள்ளே வந்த சர் வில்லியமிடமும் அதுபற்றிக் கலந் தாலோசித்தோம். திருமணத்தின் மூலம் ஜார்ஜுக்கு மிகப் பெரிய செல்வம் வரவிருப்பதால் அவன் என் பணத்தில் பெரும்பகுதியை எனக்கு விட்டுவிடுமாறு கருத்துத் தெரிவித்தார். திருமண உரிமங் களுக்கு ஏற்பாடு செய்துவிட்டு வந்திருந்தார் சர் வில்லியம்.

சத்திரத்துப் பொது அறையில் எல்லாரும் கூடினோம். திருமண ஜோடிகளைக் கண்டது மனசுக்கு மகிழ்ச்சியாயிருந்தது. சீரும் செல்வமும் நிறைந்தால் மகிழ்ச்சியும் கூடவே வந்துவிடுகிறது.

திருமண ஆராதனையின்போது தேவையற்ற ஆடம்பரம் ஆரவாரமெல்லாம் கூடாது என்று நான் கண்டிப்பாகச் சொல்லி விட்டேன். அந்தச் சடங்கைக் கருத்துடன் அமைதியாக நிறை வேற்றி வைக்க நான் விரும்பினேன். திருமணம் என்பது தெய்வ ரகசியம். அதைப் பயபக்தியுடன் அணுகினால் சிறிது புரிந்து கொள்ளலாம். ஆராதனைக்கு ஆயத்தமாக எனது பிரசுரங் களில் சிலவற்றை வாசித்துக் காண்பித்து சிறுபிரசங்கமும் நிகழ்த்தி னேன். ஆயினும், அவர்கள் இருந்த நிலையில் அவர்களையும் மீறிச் சிரிப்பும் விளையாட்டும் பொங்கிக்கொண்டிருந்தது.

பின்னர்க் கோயிலுக்குச் சென்றோம். அமைதியாகப் பக்தி வினயமாக நடந்து செல்லவேண்டுமென்று மீண்டும் மீண்டும் வற்புறுத்திச் சொல்ல வேண்டியதாயிற்று. கோயிலினுள் சென்றது இன்னொரு பிரச்சினை முளைத்தது. எந்த ஜோடிக்கு முதலில் மணமுடிப்பது என்பதுதான் அது. சர் வில்லியம் தாரன்ஹில் பெரும் பிரபுவாயிற்றே. எனவே சோபியா - சர் வில்லியம் ஜோடிக்கு முதலில் நடக்கட்டும் என்றாள் அரபெல்லா. ஜார்ஜு தனக்கு மூத்தவனல்லவா; அதனால் அரபெல்லா - ஜார்ஜு ஜோடிக்குத்தான் முதலில் நடக்கவேண்டும் என்றாள் சோபியா. சிறிது நேரம் வாதம் நடந்தது.

நான் வேதாகமத்தைத் திறந்து வைத்துக்கொண்டு தயாராய் நின்றேன். காத்துக் காத்துப் பொறுமையிழந்தேன்.

'உங்களுக்குக் கலியாணம் பண்ணிக்கொள்ளப் பிடிக்கவில்லையானால் சொல்லுங்கள், போய்விடுவோம்' என்றதும் ஒருவழியாய் முடிவு செய்தார்கள்.

சோபியா - பெரிய பிரபு ஜோடிக்கு முதலில் என்று நிச்சயமாகி இரு திருமணமும் முறையே நடந்தேறின.

பிளாம்பரோ குடும்பத்தினரும் மணவிழாவில் கலந்துகொள்ளும் படியாக நான் அதிகாலையிலேயே அவர்களுக்குக் கோச்சுவண்டி அனுப்பியிருந்தேன். நாங்கள் சத்திரம் சேரவும் அவர்கள் வண்டி அங்கு வந்து சேரவும் சரியாயிருந்தது. அவரது பெரியபெண் வண்டியிலிருந்து இறங்குகையில் திரு. ஜென்கின்ஸன்தான் கையைப் பிடித்து இறக்கிவிட்டார். சின்னவளுக்கு மோசே உதவிசெய்தான் மோசேக்கு அவள்மீது தனிப் பிரியம் இருந்ததை நாங்கள் ஒன்றும் கவனியாதவர்களல்லர். அவளைத் திருமணம் புரிய அவன் எங்கள் சம்மதம் கேட்கிற நாளில் நாங்கள் உடன்பட்டு அவன்பேரில் போதுமான தொகையும் எழுதிவைப்பதாகத்தான் இருக்கிறோம்.

சத்திரத்திலே என் சபை உறுப்பினர் பலர் என்னைப் பார்க்க வந்திருந்தனர். திரு. தாரன்ஹில்லின் சமையற்காரர் பிரமாதமானதொரு விருந்து தயாரித்துப் படைத்தார். மீண்டும் சடங்குகளைப்பற்றிச் சர்ச்சை உண்டாயிற்று. ஒலிவியா பெரியவளாதலாலும் ஏற்கெனவே கலியாணம் ஆனவளாதலாலும் அவளே முதலிடத்தில் உட்கார வேண்டுமென்றனர். அவரவர் பிரியப்பட்ட இடத்தில் உட்கார்ந்துகொள்ளட்டும் என்று ஜார்ஜு சர்ச்சையை முடித்தான். இதனால் எனது மனைவிக்கு அசௌகரியம். தலைமைப் பீடத்தில் அமர்ந்து இறைச்சிப் பொருள்களைப் பகிர்ந்து கொடுக்கும் அவளது உரிமையையும் அவள் அன்றுவிட்டுக்

கொடுக்க வேண்டியதாயிற்று. ஆனால், அதனாலொன்றும் எங்கள் கொண்டாட்டம் குறைந்து போய்விடவில்லை. சின்னச் சின்ன ஜோக்குகளுக்குக்கூடப் பெரிதாய்ச் சிரித்தோம். ஒரு ஜோக்குதான் எனக்கு இப்போது நினைவுக்கு வருகிறது. கிழவர் உல்மாட்டு மோசேயை வாழ்த்தி மது அருந்தியபோது மறுபுறம் திரும்பிக் கொண்டிருந்த மோசே, 'நன்றி அம்மணி' என்று சொல்லி விட்டான். கிழவர் எங்களைப் பார்த்துக் கண்ணடித்துக்கொண்டு 'ஐயாவின் நினைவு எங்கேயோ இருக்கிறது!' என்றார். உடனே பிளாம்பரோ செல்விகள் இருவரும் விழுந்துவிழுந்து சிரித்தனர்.

விருந்து முடிந்ததும் நான் என் பழைய வழக்கப்படி மேஜையை அகற்றச் சொன்னேன். அப்பொழுதுதான் எல்லாரும் சேர்ந்தாற் போல் கணப்பங்கரையில் உட்கார முடியும். என் கடைசிச் செல்வங்கள் இருவரும் என் இருமருங்கிலும் இருந்தனர். மற்றவர்களும் அவரவர் வாழ்க்கைத் துணையருகே அகமும் முகமும் மலர்ந்தவர்களாய் அமர்ந்திருந்தனர். என் மனம் நிறைவுற்றிருந்தது. இனி நான் வாழ்க்கையில் வேண்டுவது அதிகமில்லை.

மணவிழாக் கொண்டாட்டத்தின் நடுவே உற்றார் உறவினர் சூழ உட்கார்ந்திருந்த எனக்கு என் மகிழ்ச்சியை விவரிக்கச் சொற்கள் இல்லை. எல்லாம் அவன் அருளே!

கெட்டது வருகின்றபோது மனிதனுக்குப் பணிவுவேண்டும். நல்லது வருகின்றபோது 'எல்லாம் அவன் தந்தது' என்ற உணர்வு வேண்டும்.

தமிழ்நாட்டு அரசின் சிறப்பிலக்கிய
மொழிபெயர்ப்பு வெளியீடு :

1. சோவியத்துக் கவிஞர் நூற்றுவர்
2. சிவானந்த நடனம்
3. தீர்க்கதரிசி
4. The Squirrel in the Courtyard
5. The Ten Decade (Patirruppattu)
6. Jnanaratham
7. பேரரசன் ஜோன்ஸ்
8. வேக்குபீல்டு பாதிரியார்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

கல்லூரிச் சாலை,

நுங்கம்பாக்கம்,

சென்னை - 600 006.

Printed at :

Print House (Makkal Kural), Madras - 600 024